2923

T. N. L. A. Debates

Official Report

Vol 21 No 2

8, April 1986

Ed 1
211,31 N86
N86.21.2
J 35465

வெளியீடு 28–11–1986 | Issued 28-11-1986

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 8, 1986-தொகுதி 21 எண். 2
Tuesday the April 8, 1986-Volume 21 No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009
**Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras-600009**

விலை ரூ. 3] [Price Rs. 3

136462
★ சென்னை 600 008 ★

உள்ளடக்கம்

8—4—1986

| | | பக்கங்கள். |
|---|---|---|
| 1. | இரங்கல் குறிப்பு : | |
| | பேரவை முன்னாள் உறுப்பினர் டாக்டர் ஹபிபுல்லா பேக் மறைவு குறித்து. | 267 |
| 2. | வினாக்கள்—விடைகள் : | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள். | 268 |
| 3. | தகவல் கோரல் : | |
| | நீதிமன்றங்களின் தீர்ப்பின்மேல் சட்டமன்றம் தலையிடுவதற்குள்ள உரிமை. | 308—316 |
| 4. | கவன ஈர்ப்புகள் : | |
| | (அ) செங்கற்பட்டு மாவட்டம் பாலு செட்டிசத்திரம் காவல் நிலையத்தில் ஒரு காவல் கைதியை கொலை செய்ய முயற்சித்ததாகக் கூறப்படுவது. | 317—320 |
| | (ஆ) திண்டுக்கல் சிறுமலைப் பகுதியில் காட்டு விலங்குகளின் தொல்லை. | 320—322 |
| 5. | அரசினர் சட்ட முன்வடிவு : | |
| | நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்டமுன்வடிவு 1986. | 322 |
| 6. | வரவு-செலவுத் திட்டம் 1986-87 வாக்கெடுப்பு (தொடர்ச்சி) | 323—394 |
| | (அ) கோரிக்கை எண். 5—முத்திரைத்தாள்—நிர்வாகம் | |
| | (ஆ) கோரிக்கை எண். 6—பத்திரப்பதிவு | |
| | (இ) கோரிக்கை எண். 10—பால்வழங்கு திட்டங்கள் | |
| | (ஈ) கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு | |

| | |
|---|---|
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 324—327 |
| திரு. மா. கதிர்வேலு | 327—331 |
| திரு. கோ. இரகுபதி | 331—337 |
| திரு. சு. பாலன் | 337—342 |
| திரு. செ. செம்மலை | 342—347 |
| திரு. துரை கிருஷ்ணமூர்த்தி | 347—352 |
| திரு. பு. கோ. நாராயணன் | 352—355 |
| திரு. வி. தங்கவேலு | 355—360 |
| டாக்டர் கே. பி. இராமலிங்கம் | 360—369 |
| திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் | 369—373 |
| திரு. பொ. உத்திராபதி | 373—378 |
| திரு. கு. ரமணி | 378—383 |
| திரு. குமரி அனந்தன் | 383—391 |
| திரு. த. பழனி | 391—394 |

7. அரசினர் தீர்மானம் :

| | |
|---|---|
| விதி 32-யைத் தளர்த்தல் | 395 |

| | |
|---|---|
| 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். | 395 |


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1986, ஏப்ரல் 8, செவ்வாய்க்கிழமை

பங்குனி 25, குரோதன, திருவள்ளுவர் ஆண்டு 2017

2923

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை"

கிடைத்ததைப் பகுத்துக் கொடுத்துத் தானும் உண்டு பல உயிர்களையும் காப்பாற்றுதல், அறநூலார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையான அறமாகும்.

## 1. இரங்கல் குறிப்பு

### பேரவை முன்னாள் உறுப்பினர் டாக்டர் ஹபிபுல்லா பேக் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான டாக்டர் ஹபிபுல்லா பேக் அவர்கள் 4-4-1986-ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். முன்னாள் சட்டமன்ற பேரவை உறுப்பினரான டாக்டர் ஹபிபுல்லா பேக் அவர்கள் 1967-ஆம் ஆண்டிலிருந்து 1971-ஆம் ஆண்டு வரை சென்னை மாநகரத்தின் துறைமுகம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பெற்று, நல்ல முறையில் பணியாற்றி உள்ளார். தமிழக முஸ்லீம் லீகின் துணைத் தலைவராகவும் பதவி வகித்துள்ளார். சென்னை மாநகராட்சியின் துணை மேயராகவும் சிறந்த முறையில் பணியாற்றி உள்ளார். அன்னாரது மறைவு குறித்து, அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### கொன்னையூர் மாரியம்மன் ஆலயம்

420—(*வினா எண். 5028) - திரு. த. புஷ்பராஜ: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் கொன்னையூர் மாரியம்மன் ஆலயத்தில் தங்கும் விடுதி கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) புதுக்கோட்டை மாவட்டம், கொன்னையூர், அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயத்தில் தங்கும் விடுதி ஒன்று கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) திருப்பணிகள் செய்வதற்கு, திருப்பணிக் குழு ஒன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது. திருப்பணி வேலைகளுடன், ரூ. 1,50,000 மதிப்பீட்டில் தங்கும் விடுதி ஒன்றும் கட்டுவதற்கு திருப்பணிக் குழுவினரால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்பாக வரப்பெற்ற கருத்துக்கள் ஆணையரால் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன.

திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களில் கட்டப்படுகிற தங்கும் விடுதிகள் மற்றும் திருமண மண்டபங்கள் அந்தந்த ஆலயங்களில் இருந்து வருகிற நிதியிலே இருந்து கட்டப்படுகின்றனவா? அல்லது வேறு ஆலயங்களின் நிதியிலிருந்து கட்டப்படுகின்றனவா? அரசினுடைய நிதியிலியிருந்து கட்டப்படுகின்றனவா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கும் விடுதிகள் அந்தந்த ஆலயங்களினுடைய வருமானங்களில் இருந்துதான் கட்டப்படுகின்றன. ஆனால் திருமண மண்டபங்களைப் பொறுத்த வரையில், பல கிராமப்புறங்களிலும், அல்லது சிறிய நகரங்களிலும் உள்ள ஆலயங்களின் சார்பில் திருமண மண்டபங்கள் வேண்டும் என்று கேட்கப்படுகின்றன. ஆகவே அந்த பொதுமக்களுடைய நன்மையை முன்னிட்டு அந்த ஆலயத்திலே நிதி வசதி இல்லை என்றால், வேறு வசதியான ஆலயங்களிலிருந்து உதவியாகவோ, அல்லது கடனாகவோ பெற்று, மண்டபங்களைக் கட்டலாம் என்ற கொள்கையை அரசு அறிவித்து இருக்கிறது. அதையும் தாண்டி, கடனாகப் பெற்று கட்ட முடியவில்லை என்கிற ஒரு சூழ்நிலை



இருந்தால், எந்த ஆலயத்தினுடைய நிதியிலிருந்து திருமண மண்டபம் கட்டப்படுகிறதோ அந்த ஆலயத்தினுடைய சொத்தாக, அந்த ஆலயத்தினுடைய பெயராலே, அந்த திருமண மண்டபம் கூடி நிர்வகிக்கலாம் என்கிற கொள்கையை அரசு அறிவித்து இருக்கிறது.

### முதலைப் பண்ணைகள்

421—(*வினா எண். 6967)—திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு செய்தி மற்றும் அற நிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் முதலைப் பண்ணைகள் எங்கெங்கு உள்ளன?

(ஆ) தமிழ்நாட்டிலிருந்து ஆண்டொன்றுக்கு எவ்வளவு முதலைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) தமிழ்நாட்டில் அரசு வனத்துறையின் பராமரிப்பில், சாத்தனூர், ஹொகனேசல் மற்றும் அமராவதி ஆகிய இடங்களில் முதலைப் பண்ணைகள் உள்ளன. சென்னைக்கு அருகாமையில் ஒரு தனியார் முதலைப் பண்ணை இருக்கிறது.

(ஆ) தமிழ்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு முதலைகள் ஏற்றுமதி செய்யப்படுவதில்லை.

திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முதலைப் பண்ணைகள் வைப்பதால், அரசுக்கு எந்த அளவிற்கு லாபம் கிடைத்திருக்கிறது என்பதை அறிவதிலே ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இது லாபம் கருதி இந்தப் பாதுகாப்புக்காக முதலைப் பண்ணைகள் வைக்கப்படுவது இல்லை. பொதுவாக உயிர் பிராணிகளை பாதுகாக்கவேண்டுமென்பது இன்றைக்கு மனித நியதி, சமுதாய நியதி. ஆகவேதான் அப்படிப்பட்ட உயிர் பிராணிகளை பாதுகாத்து அவைகளை வளர்க்கின்ற அந்தப் பொறுப்பை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலை இன்றைக்குக் கொடிய விலங்கா அல்லது மனிதர்களுக்கு பாதுகாப்பாக இருக்கக்கூடிய ஒரு விலங்கா, இதற்கு இந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்து வளர்த்துக்கொண்டு வருகிறதே, வேறு வகையிலே இந்த முதலைகளை பயன்படுத்து வதற்கு அரசு ஏதாவது பரிசீலனை செய்து கொண்டிருக்கிறதா என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மனிதர்களோடு ஒப்பிடுகிறதுபோது, சில மனிதர்களைவிட மற்ற விலங்கினங்கள் எல்லாமே நல்ல விலங்கினங்கள்தான், முதலை என்பது இந்த உலகத்திலே படைக்கப்பெற்றிருக்கின்ற உயிரினங்களிலே ஒன்று. இந்த முதலைகளுடைய செயல்கள் பல நேரத்திலே மனிதனுக்கு தேவையான சில நன்மையான காரியங்களை தம்மையும் அறியாமல் அவைகள் செய்துகொண்டிருக்கின்றன. ஆகவே முதலைகளைக்கொன்று, அதனுடையத் தோலைப்பயன்படுத்தி அல்லது வேறு சில காரணங்களுக்காக அவைகளைக் கொல்வதென்பது ஏற்றுக்கோள்ள முடியாத ஒன்று. ஆகவே உலகத்திலே படைக்கப்பெற்றுருக்கின்ற, தோற்றுவிக்கப்பெற்றிருக்கின்ற உயிர்கள் அனைத்தும் இந்த உலகச் சூழ்நிலையை ஒழுங்காக பராமரித்து வருவதற்காக இயற்கையால், இறைவனால் படைக்கப் பெற்றவை என்கிற உணர்வினால்தான் அந்த உயிர் இனங்களுக்குத் தொல்லை கொடுக்காமல் பாதுகாக்கின்ற முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது.

**திரு. தி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில மாநிலங்களில் முதலைகளைக்கொல்லக் கூடாது என்று தடை விதித்திருப்பதைப்போல, தமிழகத்திலும் அப்படிப்பட்ட தடை விதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, சில மாநிலங்களில் மாத்திரமல்ல, அகில இந்தியாவிலும் 72ஆம் வருட வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின்படி முதலைகளைக் கொல்லக்கூடாது, வெளிநாடுகளுக்கு அனுப்பக்கூடாது, வியாபாரம் செய்யக்கூடாது என்கின்ற வகையில் பாதுகாப்புச் சட்டத்தினுடைய பட்டியல் 1-லே இந்த முதலைகள் இந்திய அரசாலே சேர்க்கப்பட்டிருக்கின்றன.

**டாக்டர் கே. சமரசம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி அணையில் இந்த முதலைப் பண்ணை ஒன்று ஏற்படுத்துவதாக நம்முடைய அரசு ஏற்கனவே அறிவிப்பு கொடுத்திருந்தது. ஆனால் இதுவரையிலும் அந்தப் பண்ணை ஏற்படுத்தப்படவில்லை. இனியாகிலும் அந்த முதலைப்பண்ணையை கிருஷ்ணகிரி அணையிலே எற்படுத்துவதற்கு அரசு முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் முன்னாலே தெரிவித்ததுபோன்று 3 இடங்களில் இப்போது அரசின் சார்பிலே முதலைப் பண்ணைகள் இருக்கின்றன. அதிலே பல இடங்களிலே இட அகலத்திற்கு அதிகமான முதலைகள் வளர்க்கப்படுகின்றன. அவற்றை அரசின் சார்பில் டேராடூனிலுள்ள வன விலங்கு ஆராய்ச்சி நிறுவனத்துக்குத் தெரிவித்து அதனுடைய கருத்துக்களைக் கண்டறிந்து அது தேர்ந்தெடுத்து





கூறுகின்ற இடங்களிலே முதலைப் பண்ணைகள் அமைக்கப்பெற்று இந்த முதலைகளை அங்கே அனுப்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அப்படிப்பட்ட கருத்துருக்கள் வருகிறபோது அதிலே கிருஷ்ணகிரி சேருமா என்பது பின்னாலே தெரியும்.

**திரு. எ.எஸ்.ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, முதலைகள் தம்மை அறியாமலே சில நன்மைகளை மக்களுக்குச் செய்வதாகச் சொன்னார்கள். அவைகள் என்னென்ன நன்மைகள் என்று அறிய விரும்புகிறேன். புராணகாலந்தொட்டு, முதலைகள் காலைக் கவ்வுகின்றன, கையைக் கவ்வுகின்றன என்று நாம் படித்துவருகிறோம். எனவே முதலைகள் என்ன நன்மைகள் செய்கின்றன என்பதை அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அதைத்தான் நான் முன்னாலே சொன்னேன். முதலைகள் நம்மிடத்திலே சொல்லிவிட்டுச் செய்வதில்லை. ஆனால் நமக்குத்தான் அந்தப் பழக்கம். நல்லது செய்வதானால் சொல்லாமல் செய்யவேண்டுமென்பது பழமொழி, ஆனால் அதை சொல்லிவிட்டு செய்வோம். தீயவற்றைச் செய்கிறபோது, பக்கத்திலே இருந்து பள்ளம் பறிக்கிற, குழி பறிக்கிற, கழுத்தை நெறிக்கிற வேலையையும் மனிதன்தான் செய்கிறான். முதலைகள் எப்படிப்பட்ட பணிகளிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறதென்பது அதனுடைய உடற்கூறு உயிரியல் வல்லுநர்களைக் கேட்டு தெரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கோட்டையைச் சுற்றிலும் இருக்கிற அகழிகளில் நிறைந்த அளவு தண்ணீர் இருக்கிறது; நல்ல ஆழமாகவும் இருக்கிறது. மன்னர் காலத்திலே அகழிகளில் முதலைகளை வளர்த்ததைப்போல இந்த அகழிகளைப் பயன்படுத்தி சுற்றுலா பயணிகளைக் கவருகின்ற வகையில் முதலைகளை வளர்ப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் முன்னாலே சொன்னதைப்போல எங்கெங்கே முதலைப் பண்ணைகளை வைத்து வளர்க்கவேண்டுமென்கிற அந்த ஆலோசனைகள், டேராடூன் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து தெரிவிக்கப்படவேண்டும். அதற்குப் பிறகு அதுபற்றி முடிவு எடுக்க இயலும்.

## அண்டை மாநிலங்களில் சுற்றுலா விடுதிகள்

422—(*வினா எண். 8715)—திரு சைதை சா. துரைசாமி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அண்டை மாநிலங்களில் ''தமிழக சுற்றுலா வளர்ச்சித் துறை'' சார்பில் தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள் அமைக்கின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தற்சமயம் இல்லை.

(முற்பகல் 9-10)

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் இல்லை என்றார்கள். எதிர்காலத்திலாவது இந்த முறையைப் பரிசீலனை செய்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும், தமிழகத்தில் சுற்றுலாத் துறையின் வாயிலாக எத்தனை தங்கும் விடுதிகளும், உணவு விடுதிகளும் புதியதாக கட்டப்பட இருக்கிறது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, எதிர்காலத்தில் தேவையானால் அப்போது பரிசீலிக்கப்படும். அதற்கு இப்போதே உறுதியளிக்க இயலாது. தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் சிதம்பரம், மதுரை, கன்னியாகுமரி, ஹொகனேக்கல், இராமேஸ்வரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருச்செந்தூர் ஆகிய இடங்களில் நடுத்தர உணவு விடுதிகள் இருக்கின்றன. மதுரை, கோவையில் நட்சத்திர உணவு விடுதிகள் இருக்கின்றன. கன்னியாகுமரி, இராமேஸ்வரத்தில் கடற்கரை வளாக உணவு விடுதிகள் இருக்கின்றன. மலைவாசஸ்தலம் என்ற வகையில் இன்றைக்கு உதகை, கொடைக்கானல், ஏற்காடு ஆகிய இடங்களில், மலைவாசஸ்தலங்களுக்குச் செல்கின்ற மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில் குறிஞ்சி இல்லங்கள் இருக்கின்றன. அதைத் தவிர பயண வழிகளில் மோட்டல் என்ற வகையில், இராணிப்பேட்டை, உளுந்தூர்ப் பேட்டை, கிருஷ்ணகிரி போன்ற இடங்களில் இருக்கின்றன.

சென்னைத் தீவுத் திடலில் டிரைவ்இன் ரெஸ்டாரெண்ட்டும், காப்டிங் சைட் என்று சொல்லக் கூடிய இளைப்பாறுகின்ற இளைஞர் வளாகம் ஒன்று மாமல்லபுரத்திலும் இருக்கின்றன. இளைஞர் விடுதிகள் நம்முடைய ஹொகனேக்கல், முதுமலை, கன்னியாகுமரி, மண்டபம், இராமேஸ்வரம், பிச்சாவரம், கொடைக்கானல் என்கின்ற இடங்களில் சிறப்பாக பணிபுரிந்து வருகின்றன.



திரு. சைதை சா. துரைசாமி : தலைவர் அவர்களே, தமிழகத்தில் தலைநகரங்களில் எல்லா இடங்களிலும், சுற்றுலாத் துறையின் வாயிலாக தங்கும் விடுதிகளும், உணவு விடுதிகளும் அமைக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் தலைநகரான சென்னையில் இதுவரையில் இப்படிப்பட்ட சிறப்பான தங்கும் விடுதி கோவையிலும் மதுரையிலும் இருப்பதைப் போன்று இல்லாமல் இருப்பது ஒரு குறையாக இருக்கிறது. அந்தக் குறையை நிவர்த்தி செய்கின்ற வகையில் தலைநகரில் ஒரு சிறந்த தங்கும் விடுதியை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய தலைநகரில் அதிக வசதி படைத்தவர்கள், அதிகக் கட்டணம் செலுத்தி தங்குவதற்கு தனியார் விடுதிகளை, ஹோட்டல்களை நடத்திக்கொண்டிக்கிறார்கள். ஆனால் நடுத்தர மக்கள், ஏழை எளிய மக்கள் வியாபாரத்திற்காக, அல்லது தொழிலுக்காக வந்து தங்குகின்ற வகையில் ஒரு விடுதியைக் கட்டவேண்டுமென்ற வகையில் ஒரு திட்டம் 3, 4 ஆண்டுகளுக்கு முன்பு மத்திய அரசினுடைய சுற்றுலாத் துறையோடு இணைந்து, சுமார் ரூ. 5 கோடி செலவில் கட்டுவது என்று திட்டமிடப்பட்டது. ஆனால் பின்னர் சில கருத்துவேறுபாடுகள் தோன்றி, யாருடைய நிர்வாகப் பொறுப்பிலே அது இருப்பது என்ற அடிப்படையிலும், நாம் அவர்களுக்கு வழங்கிய அந்த இடத்தை அவர்கள் ஒத்துக் கொள்ளாத சூழ்நிலையிலும் அந்தத் திட்டம் இப்போது கைவிடப் பட்டது.

வெளி நாட்டிலே வாழ்கின்ற இந்தியர்கள் முதலீடு செய்து, தமிழகத்தில் சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கான திட்டத்தை நிறைவேற்ற முன் வந்திருக்கிறார்கள். அதைக் கொள்கையளவிலே அரசு அங்கீகரித்திருக்கிறது. அப்படிப்பட்ட திட்டங்களில் சென்னையில் நம்முடைய நேரு விளையாட்டு அரங்கத்திற்குப் பின்னாலே, பழைய மிருகக் காட்சிச் சாலையிருந்த இடத்திலே, கண்ணப்பர் திடலுக்கு அருகே இருக்கின்ற இடத்தையும் இணைத்து, நடுத்தர மக்கள் தங்குவதற்கான ஒரு மிகப் பெரிய உணவு விடுதியையும், அதையொட்டி பொழுது போக்குக்காக ஒரு அருமையான பூங்கா வசதியையும், சுமார் ரூ. 6, 7 கோடி செலவில் அமைப்பதற்கு, இன்றைக்கு வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதைத் தவிர, "வள்ளுவர் கோட்டத்திற்கு அருகிலே நடுத்தர மக்கள் தங்குவதற்கு ஒரு வசதியான விடுதியைக் கட்டலாமா, அல்லது நட்சத்திர ஹோட்டல் கட்ட இயலுமா என்பதைப் பற்றியும் அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. இதுபோன்ற பல்வேறு திட்டங்கள் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. சென்னை நகர மக்கள் வசதியாகத் தங்குவதற்கான ஒரு விடுதியை உருவாக்கவேண்டுமென்பதற்காக.

### சிலிகான் தயாரிப்பு

423—(*வினா எண் 3049)— திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தனியார் யாரேனும் சிலிகான் தயாரிப்பில் ஈடுபட்டிருக்கின்றனரா?

(ஆ) ஆம் எனில், தமிழக தேவை இதன்மூலம் பூர்த்தியாகிறதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) தமிழ்நாட்டில் தனியார் யாரும் சிலிகான் தயாரிப்பில் தற்போது ஈடுபடவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தனியார்கள் யாராவது இது போன்ற சிலிகான் தொழில் செய்ய முன் வந்தால் அரசு அவர்களுக்கு ஊக்கம் தர முன் வருமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊக்கம் தர இந்த அரசு தயாராக இருக்கிறது. ஆனால் சில சலுகைகள் அளிப்பதில் மட்டும் சங்கடங்கள் இருக்கின்றன.

திரு. என்.எஸ்.வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிலிகான் என்பது ஒரு முக்கியமான மூலப் பொருளாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது தனியார்கள் யாரேனும் இதில் ஈடுபட்டு இருக்கிறார்களா என்ற கேள்விக்கு இல்லை என்ற பதிலைச் சொன்னார்கள். தனியார் இல்லை என்றால் கூட்டுத் துறையிலோ கூட்டுறவுத் துறையிலோ யாராவது தயாரிக்கிறார்களா? தற்போது தமிழகத்திற்குத் தேவையான சிலிகான் எங்கிருந்து தருவிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் கெமிக்கல்ஸில் பாலி சிலிகான்—இந்த சிலிகான் வேறு, பாலி சிலிகான் வேறு இரண்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது— தயாரிக்கப்படுகிறது. அதற்கான முன்னோடித் திட்டங்களைத் தீட்டி அவர்கள் மட்டும் வெற்றிகரமாக நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். சிலிகான் தேவையை எப்படி சமாளிக்கிறீர்கள் என்பதற்கு தனியாக கேள்வி போட்டால் நான் பதில் சொல்ல தயாராக இருக்கிறேன்.



### புகளூர் காகித ஆலை

424—(*வினா எண்.4775)—திரு ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புகளூரில் அமைக்கப்படும் காகித ஆலைக்கான இயந்திரங்கள் மற்றும் சாதனங்களுக்கு இறக்குமதி வரி விலக்கு கோரி மாநில அரசு, மத்திய அரசுக்கு எழுதி உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு க. இராசாராம் : (அ) ஆம்.

(ஆ) 1983 ஆகஸ்டில், டி. என். பி. எல். நிறுவனத்திற்காக இறக்குமதி செய்யப்படும் இயந்திரங்கள் மீதான இறக்குமதிக்கான துணை வரியிலிருந்து விலக்கு அளிக்குமாறு மாநில அரசு மைய அரசைக் கேட்டுக்கொண்டது. ஆனால் மத்திய அரசு, திட்டம் தீட்டும் பொழுதே இறக்குமதி செய்யப்படும் இயந்திரங்கள் மீது 50% இறக்குமதி வரி விலக்கு அளித்தே கணக்கிடப்பட்டுள்ளது. இந்த சலுகை தொடர்ந்து கிடைத்து வருகிறது. எனவே இறக்குமதி வரியின் மீதான துணை வரியிலிருந்து விலக்கு அளிக்க இயலாதென மத்திய அரசு தெரிவித்தது.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது 50 சதவீத விலக்கை திட்டங்கள் தீட்டுகிற போதே அளிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். மற்ற வகையில் மத்திய அரசு விலக்கு அளிக்க இடம் இல்லை என்று சொல்லியிருப்பதாக சொன்னார்கள். மீண்டும் மத்திய அரசு இப்படிப்பட்ட நிறுவனங்களுக்கு இயந்திரங்கள் வாங்குகின்ற போது அவர்களுக்கு சலுகை அளித்தால் இன்னும் இந்தமாதிரி தொழிற்சாலைகள் அதிகம் உற்பத்தி ஆவதற்கு வழிவகை ஏற்படும் என்ற வகையில் அரசு அதனை பரிசீலனைச் செய்யுமா? மீண்டும் மத்திய அரசை எழுதிக் கேட்குமா என்று அறிய விரும்புகிறேன்?

அதேபோல் 2 தினங்களுக்கு முன்னால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு தகவலில் சொல்லியிருக்கிறார்கள், தமிழகத்தில் மேலும் புதிய காகித தொழிற்சாலைகள் உருவாக்கப்படும் என்றும் அப்படி என்றால் இந்த ஆண்டு அல்லது அடுத்த ஆண்டு எத்தனை புதிய காகித தொழிற்சாலைகள் இந்த அரசால் உருவாக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறக்குமதி வரியின் மீதான துணை வரியிலிருந்து விலக்கு அளிக்க இயலாது என்று மத்திய அரசு தெரிவித்து

விட்டது. ஆகவே இதிலே தொடர்ந்து நம்முடைய அரசு வலியுறுத்த வேண்டியது இல்லை என்பதை முடிவு எடுத்து இருக்கிறது.

புதிதாக காகித தொழிற்சாலை பற்றி கேட்டு இருக்கிறார்கள். புதிதாக சர்க்கரை ஆலைகளை உருவாக்குவதற்கு நாம் முயற்சிகளை எடுத்துக்கொண்டு இருக்கிறோம். 5 சர்க்கரை ஆலைகள் பக்கம் பக்கம் உருவாக்கப்படுமானால் அதிலிருந்து வருகிற கரும்பு சக்கையைக் கொண்டு காகித தொழிற்சாலை மேலும் ஒன்று போடலாம் என்று இன்றைக்கு அரசு உத்தேசித்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30 புதிய சர்க்கரை தொழிற்சாலைகள் உருவாக்க இருப்பதாகவும் அந்த அடிப்படையில் அதிலிருந்து கிடைக்கின்ற சக்கை மூலம் காகித தொழிற்சாலை உருவாக்கப்படும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் புதுக்கோட்டை அறந்தாங்கிக்கு இடையில் 2 ஆண்டுகளுக்கு முன்னால் இடம் பார்த்து, சர்வே செய்தார்கள். அங்கே ஒரு காகித தொழிற்சாலையை தமிழக அரசு உருவாக்கித் தருமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு நடவடிக்கை எடுப்பார்களா? உதவுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. முதலிலே சர்க்கரை ஆலை வரட்டும். அதற்குப் பிறகு அதைப்பற்றிச் சிந்திக்கலாம்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்தப் புகளூர் காகிதத் தொழிற்சாலைக்கு மொத்தம் எவ்வளவு பெறுமான முள்ள மெஷினரிஸ் இறக்குமதி செய்யப்பட்டது? அந்த இயந்திரங்களிலே இந்தியாவிலே உற்பத்தி செய்யப்பட்ட, அதுவும் தமிழ்நாட்டிலே உற்பத்தி செய்யப்படக் கூடிய இயந்திரங்கள் எத்தனை சதவீதம் இருக்கும்? வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற இயந்திரங்கள் எத்தனை சதவீதம் இருக்கும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கான விடை தற்போது என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விடையளிக்கலாம்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, புதிய காகிதத் தொழிற்சாலை வேண்டுமென்றால் அடுத்தடுத்து 5 சர்க்கரை ஆலைகள் இருக்கவேண்டுமென்று பதிலில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு காகிதத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு



ஒரு நாளைக்கு எவ்வளவு டன் அரைக்கக் கூடிய கரும்பு ஆலை தேவை? சாதாரணமாக நமக்கு ஒரு நாளைக்கு ஆயிரம் டன் அரைக்கக்கூடிய சர்க்கரை ஆலைகள்தான் இருக்கின்றன, அதை வைத்துக் கொண்டு நாம் காகிதத் தொழிற்சாலையைத் துவங்குவது உதவியாக இருக்குமா? அப்படியென்றால் காகிதத் தொழிற்சாலையை மினி பிளான்ட்டாக ஆரம்பிப்பதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா? அதற்கான திட்டங்கள் இருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. மினி பிளான்ட் ஆரம்பிப்பதை விட—இப்போது காகிதத் தேவை நாட்டில் இருப்பதால் பெரிய தொழிற்சாலையை ஆரம்பிப்பது தான் நல்லது—5 சர்க்கரை ஆலைகள் இருக்கவேண்டுமென்று நான் சொன்னதற்குக் காரணம், ஒரு சர்க்கரை ஆலையிலே 1250 டன் கரும்பு பிழியப்படுகிறது. 5 சர்க்கரை ஆலைகளில் அந்த அளவுக்குக் கரும்பு பிழியப்படுமானால் அதிலே வருகிற கரும்புச் சக்கை போதுமானது என்பதுதான் புகளூர் ஆலையின் மூலமாக நாம் தெரிந்துகொள்கிறோம்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், சர்க்கரை ஆலை வந்தால் அதற்குப் பிறகு காகித ஆலையைத் துவக்கலாம் என்று. சர்க்கரை ஆலைகளை விரைவாகத் துவக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அது சம்பந்தமாக மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் உள்ள தொடர்பு எந்த வகையில் உள்ளது? சர்க்கரை ஆலை இந்த மாநிலத்திற்கு எப்போது வரும்? பிற்பட்ட பகுதியாக இருக்கிற தர்மபுரி மாவட்டத்திற்கு சர்க்கரை ஆலை கிடைக்குமா? அந்தப் பகுதியைப் பற்றி அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். மத்திய சர்க்காருடைய நிலை என்ன என்பதையும் அதற்கு இங்கே உண்டான நடவடிக்கை என்ன என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, சமீபத்திலேகூட பாராளுமன்றத்திலே சர்க்கரைத் தொழில் சம்பந்தப்பட்ட அமைச்சர் சர்க்கரைக் கொள்கை இந்தியாவில் இன்னும் வகுத்து முடியவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் முடிவுசெய்த பிறகுதான் நமக்கு எவ்வளவு கிடைக்கும்? எங்கே அதைப் போடுவது என்பதுபற்றி நாம் முடிவு செய்யமுடியும். எப்படியும் தர்மபுரி பகுதியிலே அரூர் பகுதியிலே ஒரு சர்க்கரை ஆலை வரும்.

திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலே சர்க்கரை ஆலை ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. பின்தங்கிய மாவட்டமான புதுக் கோட்டை மாவட்டத்தில் ஒரு காகிதத் தொழிற்சாலையை ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொரு ஊருக்கும் கேட்டுக் கொண்டிருந்தால் எப்படிச் சரியாகும் ? நான்கூட என்னுடைய தொகுதிக்கு வேண்டுமென்று கேட்கலாம்.

திரு. ஈ.வே.கி.ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறக்குமதி செய்யப்பட்ட சாதனங்களுக்குத் துணை வரி விலக்கு அளிக்க மத்திய அரசு மறுத்துவிட்டது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த இயந்திரங் களை நாம் ஆர்டர் செய்யும்போது அதுபோன்று வரி விதிக்கப் படும் என்று அரசுக்குத் தெரியுமா ? அப்படித் தெரிந்திருந்தால் அதை முதலிலேயே மத்திய அரசிடம் சொல்லி அரசு வரிவிலக்கு அனுமதியை வாங்காதது ஏன் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இறக்குமதி செய்கின்ற பொருள்களின்மீது 50சதவீதம் வரிவிலக்கை மத்திய அரசு அளித்து வருகிறது. மேலும் துணை வரிகளை விலக்கு அளிக்கவேண்டும் என்று நாம் கேட்டோம். அவர்கள் எதிர்காலத்திலே அது லாபமாக நடக்கக்கூடிய தொழில். ஆகவே தேவையில்லை என்று சொல்லிவிட்டார்கள். நாம் எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொண்டோம். ஆனால் அவர்களிடம் இருந்து அதேமாதிரியான பதில்தான் வந்திருக்கிறது என்ற கார ணத்தினால் நாம் வலியுறுத்தவேண்டியதில்லை என்று முடிவு எடுத்திருக்கிறோம்.

திரு. ஏ எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலை இருக்கும் இடங்களில் காகிதத் தொழிற்சாலை ஆரம்பிப்பது உசிதம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். திருவண்ணாமலைக்கு அருகே மூங்சில்துரைப்பட்டு என்ற இடத்தில் ஒரு சர்க்கரை ஆலை நீண்ட நெடும்நாட்களாக இயங்கி வருகிறது. ஆகவே அங்கே ஒரு காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்கும் எண்ணம் உண்டா ? இல்லாவிட்டில் அதைப்பற்றி அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர் களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. இருந் தாலும், ஐந்து சர்க்கரை ஆலைகள் பக்கத்தில் பக்கத்தில் இருந் தால்தான் இந்தக் கரும்புச் சக்கையை எடுத்துக்கொண்டு வருவ தற்கான செலவு குறையும். ஒரு சர்க்கரை ஆலையை வைத்துக்



கொண்டு காகித ஆலையைப்போட முடியாது. ஆகவே நாலைந்து சர்க்கரை ஆலைகள் பக்கத்திற்கு பக்கமாக ஏற்பாடு செய்து அதற்குப் பிறகு அந்தத் தொழிற்சாலையைப் போட்டால்தான் காகிதத்தையும் உருவாக்க முடியும், இலாபகரமாகவும் விற்க முடியும். ஒரே சர்க்கரை ஆலையை வைத்துக்கொண்டு காகிதம் செய்யலாம், அதைச்செய்தால் இலாபகரமாக இருக்காது.

### அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலை.

425—(*வினா எண். 5149)—திரு. அ. மலர்மன்னன்: மாண்பு மிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலை நஷ்டத்தில் இயங்குவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம். (ஆ) பயன் படுத்தப்படும் சுண்ணாம்புக்கல்லின் அதிகமான ஈரப்பதம் மற்றும் பிசுபிசுப்பு தன்மைகளினால் நிறுவப்பட்ட உற்பத்தித்திறனை எய்த முடியாததுதான் இத்தொழிற்சாலை நட்டத்தில் இயங்கு வதற்கான முக்கிய காரணமாகும்.

திரு. எம். அண்ணாதாசன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் அமைந்திருக்கிற டால்மியாபுரம் சிமெண்ட் தொழிற்சாலைப் பக்கத்திலே மூலப்பொருள் கிடைக்கிறது. அந்த மூலப்பொருளில் ஈரப்பதம் மற்றும் இல்லாதது போல் தெரிகிறது. ஆகவே அரசாங்கத்துறையில் அமைக்கப்பட்டிருக்கிற இந்த சிமெண்ட் தொழிற்சாலைக்கு அங்கிருந்து மூலப்பொருளைக் கொண்டு சென்று அங்கு இயக்கினால் பாக்டரி இலாபகரமாக இயங்கும் என்று கருதப்படுகிறது. ஆகவே அரசாங்கம் அதைப் பற்றி பரிசீலனை செய்து அந்த மூலப்பொருளை அங்கே எடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய் வார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர் களே, அது நல்ல யோசனை. டால்மியா சிமெண்ட்க்கு நிறைய சுண்ணாம்புக்கல் இருக்கிறது. ஆகவே அதிலிருந்து கொஞ்சம் எடுத்து இந்தப் பகுதிக்குப் பயன்படுத்தலாம் என்பதும் அரசின் யோசனையில் இருக்கிறது.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் சிமெண்ட் ஆலையில் அந்தச் சுண்ணாம்புக்கல்லில் ஈரப் பதம் இருப்பதால் உற்பத்தித் திறன் பாதிக்கப்பட்டிருக்கிறது

என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அதே பகுதியில் தனியார் துறையில் தொடங்கி நடத்தப்படக்கூடிய ஆலைகள் இலாபகரமாகவும், அது பாதிக்காத நிலையிலும் இருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். அரியலூர் தொழிற்சாலையில் ஆண்டு ஒன்றுக்கு நிர்ணயம் செய்யப் பட்டிருக்கிற உற்பத்தி அளவு எவ்வளவு? தற்போது எவ்வளவு உற்பத்தி செய்யப்படுகிறது? இந்தக் குறைபாட்டை நீக்கி எய்த நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவை எய்துவதற்கு அரசு மேற்கொண் டிருக்கிற நடவடிக்கை என்ன? தனியார் துறைக்கு வாய்ப்பான நிலை இருக்கும்போது அரசாங்கத் துறையில் உள்ளதற்கு மட்டும் இந்த பாதிப்பு வருவதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர் களே, அரியலூரில் அந்த இயந்திரங்களை பொருத்தியபோது அங்கிருக்கிற கற்களை எடுத்துப்பார்க்கிறபோது ஈரம் 8% இருப்பதாகத் தெரிய வந்தது. அது, மழை காலத்தில் 14% ஆக அதிகமாக ஆகி விடும். அதில் ஆரம்ப நாளிலிருந்து இன்றுவரை அது அந்த இலக்கை எய்தவில்லை. இன்னும் சொல்லப்போனால் பல ஆண்டுகளாக அது நட்டத்திலேதான் நடக்கிறது. ஆகவே அதில் இப்போது ஒரு பெரிய முயற்சி எடுத்து வெளிநாட்டிலிருந்து ஆலோசகர்களை வரவழைத்து அந்த ஆலோசனையைக் கேட்டு— இப்போது ஸ்விட்சர்லாந்த் நாட்டைச் சேர்ந்த 'கோல்டன் பார்ம் கன்ஸெல்டென்ட்ஸ் லிமிடெட்' என்ற நிறுவனத்தைச் சார்ந்த வர்கள் 1986-ல் வந்து அதைப் பார்வையிட்டு அதைச் சரிசெய்து எப்படி இலாபகரமாக இயக்குவது என்பதைப் பற்றியும் அதில் குறிப்பிட்ட இலக்கை அடைவது எப்படி என்பதைப் பற்றியும் அவர்கள் ஆலோசனை சொல்ல இருக்கிறார்கள். அவர்கள் ஆலோசனை கிடைத்ததும் அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. எ.எஸ்.ஏ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலை நஷ்டத்தில் ஓடுவதாக இங்கே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தனியார் துறையில் சிமெண்ட் பாக்டரிகள் இலாபத்தில் ஓடி வேறு மாநிலங்களில் சிமென்ட் பாக்டரிகள் அமைக்கும் சூழ்நிலை எல்லாம் இருந்து வருகிறது. ஆகவே நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, அவர்கள் தயாரிக்கக் கூடிய சிமென்டை லெவியில் எடுத்துக்கொள்கிறீர்களா? வெளி மாநில சிமெண்ட் பாக்டரிகளுக்கு விற்கிறீர்களா? இதில் நிர்வாகக் கோளாறு இருக்கிறதா என்ற விவரத்தையும் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர் களே, நிர்வாகக் கோளாறு ஒன்றும் இல்லை. லெவி சிமெண்ட் விலைக்கு விற்பதால் மட்டும் இந்த நஷ்டம் வந்துவிடுவதாக கருத வில்லை. ஈரப்பதம் அங்கிருக்கிற சுண்ணாம்புக்கற்களுக்கு, நமக்கு ஒதுக்கப்பட்ட சுரங்கங்களுக்கு அமைந்துவிட்டது. ஆகவே நான்



ஏற்கனவே எடுத்துச் சொல்லியதைப்போல் டால்மியாபுரத்தில் இருக்கிற அதிகமான சுண்ணாம்புக் கற்களைக் எடுத்து அதற்குக் கொடுத்தாவது அந்தக் குறைபாட்டைப் போக்கலாமா என்ற முயற்சியை எடுக்கிறோம். வெளிநாட்டு, சுவிட்ஸர்லாந்த் நாட்டு ஆலோசகர்கள் வந்து அவர்கள் பார்த்துவிட்டுப்போயிருக்கிறார் கள். அந்த ஆலோசனை பெற்ற பிறகு இலாபத்தில் நடக்கும் என்று தற்போது நிர்வாகத்தில் உள்ளவர்கள் அறிவிக்கிறார்கள்.

(முற்பகல் 9-30)

திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுண்ணாம்புக்கல் ஈரமானது என்பதால் மட்டும் நஷ்டம் ஏற்பட்டு விடாது. அந்த ஆலை நஷ்டமாக ஓடுவதற்குப் பல காரணங்கள் உண்டு. டெக்னிக்கல் ஸ்டாப் சரியாக இல்லை. அவர்கள் ஒழுங்காக வேலை பார்ப்பதில்லை. நிர்வாகத்திற்கும், அவர்களுக்கும் இடையே சண்டை நடந்து கொண்டிருக்கிறது. எந்த தொழிலாளியும் அங்கே வேலை பார்ப்பதில்லை. ஆகவே நிர்வா கத்தை ஒழுங்குபடுத்தி தொழிற்சாலையை இயக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் என்னிடத்தில் தற்போது இல்லை. இருந்தாலும், அந்த நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருக்கின்ற அதிகாரிகள் அதை சரி செய்து கொண்டிருக் கிறோம் என்று என்னிடத்தில் அடிக்கடி சொல்லிக் கொண்டிருக் கிறார்கள். நான் உங்களைப்போல் தனியார் துறையில் லாபம் வருகின்றபோது, பொதுத் துறையில் ஏன் வரவில்லை என்று நான் வந்ததிலிருந்து கேட்டுக் கொண்டிருக்கிறேன். நல்ல வேளை, சர்க்கரை ஆலைகள் இலாபத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன. சிமெண்ட் ஆலைகளையும் அதே மாதிரி லாபத்தில் ஓடுகின்ற அளவுக்கு கொண்டு வந்து விடுவேன்.

திரு. செ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் சிமெண்ட் ஆலையில் நிரந்தரமான தொழி லாளர்கள் எத்தனை பேர் பணியாற்றுகின்றார்கள்? அதேபோல், தற்காலிகமாக எத்தனை பேர் பணியாற்றுகின்றார்கள்? என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போட்டால், பதிலளிக்க முடியும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது இந்த சிமெண்ட் ஆலையில் நஷ்டமேற்பட்டதற்கு முக்கியக்காரணம்

கற்களில் ஈரப் பசை அதிகமாக இருப்பதால்தான் என்று சொன்னார்கள். அப்படியென்றால் இதுபோன்ற மிகப் பெரிய திட்டங்களைத் தொடங்குகின்றபோது 'பீசிபிலிடி ரிப்போர்ட்', 'புராஜெக்ட் ரிப்போர்ட்' என்ற ரிப்போர்டுகளை இன்வெஸ்டிகேட் செய்த பிறகுதான் ஆலைகளை ஏற்படுத்துகிறார்கள். அப்படியென்றால் பீசிபிலிடி ரிப்போர்ட் கொடுத்தது யார்? தவறாக கொடுத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? அந்த இயந்திரங்களை உற்பத்தி செய்து கொடுத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த தொழிற்சாலை 10 ஆண்டுகளுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுதே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். இப்போது யார் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுதான் கேள்விக்குறி.

### பற்களில் காவி படிவதைத் தடுப்பது குறித்த ஆய்வு.

426—(*வினா எண். 3987)—திரு. செ. செம்மலை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பற்களில் ஏற்படும் காவி நிறத்திற்குண்டான காரணத்தையும் நோய் உருவாவதையும் கண்டறிய ( Etiopathogenises ) ஆராய்ச்சித் திட்டம் ஒன்று சென்னை பல் மருத்துவக் கல்லூரியில் ஆரம்பிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) & (ஆ) குடிநீரில் உள்ள புளூரைடால் பற்களில் ஏற்படும் காவி நிறத்திற்குண்டான காரணத்தையும் நோய் உருவாவதையும் கண்டறிய 'ஆராய்ச்சித் திட்டம்' ஒன்று சென்னை பல் மருத்துவக் கல்லூரியில் தமிழக அரசின் அனுமதியின் பேரில் மத்திய அரசு ஆரம்பித்துள்ளது. இந்த ஆராய்ச்சித் திட்டத்திற்கு மத்திய அரசின் சுற்றுபுறச் சூழல் துறை ரூ. 7.49 இலட்சம் நிதி வழங்கியுள்ளது.

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சித் திட்டத்திற்கான மதிப்பீடு எவ்வளவு? அந்த ஆராய்ச்சியினுடைய நோக்கம் என்ன? என்ற அந்த விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?



**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சித் திட்டத்தைப் பொறுத்த வரையில் The Government of India h?s s?nctioned a Research Project on human and animal to identi?y etiopathogenises of dental flurosis and sanctioned a sum of Rs. 7.49 lakhs to the Madras Dental College.

அதிலே வந்து, மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும்—

'flurosis in conjunctivitis'

வியாதியினுடைய காரணங்கள் என்ன என்பதைக் கண்டறிவதற்காக இந்தத் தொகை அதற்காக கொடுக்கப்பட்டிருக்கிறது. முதல் தவணையாக ரூ 3,16,500 அதற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீரில் புளூரைட் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருப்பதினால், இந்தப் பற்கள் வியாதி அதிகமாக வருவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்படி குறிப்பிட்ட ஒருசில மாவட்டங்களில் இந்த புளூரைட் பற்றாக்குறையினால் அங்குள்ள மக்களுக்கு இந்த வியாதி அதிகமாக வருகிறது. எனவே, அந்த ஆராய்ச்சித் திட்டப் பணியை மேற்கொள்கிறபோது, எந்தெந்த மாவட்டங்கள் இந்த ஆராய்ச்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன என்ற அந்த விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சித் திட்டத்தைப் பொறுத்தவரையில். குடிப்பதற்குப் பயன்படுத்துகின்ற தண்ணீரை நல்ல வகையில் கெமிகல் அனாலிசஸ் செய்து, அதில் எவ்வளவு குளோரின் கன்டென்ட் இருக்கிறது என்று பார்த்து, அதிகமாக இருந்தால் அந்தக் குளோரின் கன்டெண்டைக் குறைப்பதற்கான சில திட்டங்களைப்பற்றி அவர்கள் பரிந்துரை செய்வார்கள். குறிப்பாக, சேலம் மாவட்டம், தர்மபுரி மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் ஜாஸ்தியாக இருக்கின்ற அந்த நிலையைக் கண்டு அறிந்திருக்கிறார்கள். இந்த இரண்டு மாவட்டங்களில் டிஸ்கலரிசேஷன்—ப்ரவுன் கலர் குழந்தைகளுக்கு வரும் நிலைமைகளைப் பார்த்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பெயரால் இயங்கும் குழந்தைகள் சத்துணவு திட்ட மையங்களுக்கு மருத்துவர்கள் சென்று குழந்தைகளைப் பரிசோதிக்கின்ற நேரத்தில், எத்தனை குழந்தைகளுக்கு வியாதி இருக்கிறது என்று கண்டு பிடிக்கிறார்கள். அந்தக் காரணங்களை ரிசர்ச் ப்ராஜக்டிலே கொடுக்கிறார்கள்.

About conjunctivitis flurosis.

சத்துணவுத் திட்டம் நடக்கும் மையங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்களில் உள்ள டாக்டர்களும் பற்களைப் பரிசோதிப்பதற்காக—டெண்டல் ஸ்பெஷலிஸ்ட் அவர்கள், மருத்துவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒருங்கிணைந்த திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். அந்த வகையில் இரண்டு மாவட்டங்களில் இது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

**திருச்சி மாவட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள்.**

427—(*வினா எண். 4495)—**டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி சுகாதார மாவட்டத்தில எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன?

(ஆ) எத்தனை உதவி மருத்துவர்கள் பணிபுரிகிறார்கள்?

(இ) உதவி மருத்துவர் பதவி காலியாக உள்ள இடங்கள் எத்தனை?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** (அ) திருச்சிராப்பள்ளி சுகாதார மாவட்டத்தில் மொத்தம் 19 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) அங்கு 47 உதவி மருத்துவர்கள் பணிபுரிகிறார்கள்.

(இ) 4 உதவி மருத்துவர் பதவிகள் காலியாக உள்ளன.

**திரு. கூடலூர் ஏ.வி. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் எந்த அடிப்படையில் துவக்கப்படுகின்றன? அப்படி முறைப்படி துவக்கப்படுகிறது என்றால், தொகுதியின் தலைநகரமாக இருக்கின்ற மக்கள் அதிகமாக வாழும் இடங்களில் துவக்கப்படுகிறதா? இதுவரையில் தொகுதியின் தலைமையிடங்களாக இருக்கின்ற தண்டராம்பட்டு, கலசப்பாக்கம், பெரணமல்லூர் ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் துவக்கப்படவில்லை. என்னுடைய தொகுதியான தண்டராம்பட்டில் துவக்கப்பட இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனியாக, தன்னுடைய தொகுதி பற்றியோ, அல்லது மாவட்டத்தைப் பற்றியோ கேள்வி கேட்டிருந்தால் முழு விவரங்களையும் கொடுத்திருக்க முடியும். பொதுவாக ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள், எந்த அடிப்படையில் என்று. நாம் இப்பொழுது ஏறத்தாழ 50,000



ஜனத்தொகை இருக்கும் பகுதிகளுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்றும், ஏழாவது ஐந்தாண்டு முடிந்த பிறகு, முடிக்கின்ற அந்த நேரத்தில்.

last phase of the seventh plan

30,000 ஜனத்தொகை கொண்ட பகுதிக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்றும் திட்டமிட்டிருக்கிறோம். நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில் அந்த இலக்கை எட்டும் சூழ் நிலை இருக்கிறது. இது பொதுவாகக் கேட்கும் கேள்வியாக இருக்கிற காரணத்தால் இந்த அளவிற்குத்தான் பதில் அளிக்க இயலும். தொகுதியைப் பொறுத்தவரையில், மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் கொஞ்சம் முன் கூட்டியே கேட்டிருந்தால்— இப்பொழுது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைப் பற்றிக் கொடுத்திருப்பது மாதிரி— இந்தத் தகவலை நான் அவருக்குக் கொடுத்திருக்க முடியும்.

**திரு. எம். அண்ணாதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், திருவரம்பூர் தொகுதி, துவாக்குடியில் ஆரம்ப சுகாதார நிலையம் நமது அரசால் நிறுவி மூன்றாண்டுகள் ஆகின்றன. இதற்கான மருத்துவமனை கட்டுமான பணிக்காக நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. மருத்துவமனை கட்டுவதற்காக ஆர். இ. சி. யிலிம், அதன் பக்கத்திலும் அரசு இடம் உள்ளது. அந்த இடத்தில் சீக்கிரமாக மருத்துவமனை கட்டுவதற்கு மாவட்ட சுகாதகர அதிகாரி மூலம் சம்பந்தப்பட்ட பொதுப்பணித்துறை கட்டுமானப் பணித்துறையை வலியுறுத்த மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆணை பிறப்பிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோரிக்கை நியாயமான காரணத்தின் அடிப்படையில் இருக்கக்கூடிய காரணத்தினாலே வெகுவிரைவில் அதற்காக ஆணை பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். சிவராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நான்கு உதவி மருத்துவர் பதவிகள் காலியாக இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இதுபோன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் நிறைய இடங்கள் காலியாக இருந்து கொண்டிருக்கின்றன. எந்தெந்த மாவட்டங்களில் எவ்வளவு காலியாக இருந்து கொண்டு இருக்கின்றன? ஏன் அவை நிரப்படவில்லை என்பதையும் அறிய விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகத தாய்சேய் நல விடுதி—மெட்டர்னிட்டி சென்டர்—என்று சொல்லி அங்கேயும் சில அதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள். கட்டி முடித்திருக்கிறார்கள். அந்த ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கும் தாய் சேய் நல விடுதி இருக்கின்ற அங்கே மருத்துவர்கள் தங்குவது கிடையாது.

இதுபோன்ற சம்பவங்கள் இருக்கிற காரணத்தினால், இதன் மீது அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்து, காலி இடத்தை நிரப்புவதற்கும் ஊராட்சி ஒன்றியங்களிலே கட்டப் பட்டிருக்கிற மெட்டர்னிட்டி சென்டர்களிலே ஆட்களை நியமிக் கவும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 3 கேள்வி களை இணைத்துக் கேட்டிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத் தைப் பொறுத்தவரையிலே புள்ளி விவரங்களைப் பார்த்தாலே நன்கு தெரியும், 47 இடங்களில் 4 இடங்கள் தான் காலியாக இருக்கின்றன. சாதாரணமாக, எந்தத் துறையாக இருந்தாலும் ஏறத்தாழ 2, 3 சதவீதம் காலியாக இருப்பது இயற்கை. அவர்கள் ஏதாவது மெடிக்கல் லீவில், மெட்டர்னிட்டி லீவில் போயிருப்பார் கள். இந்த 4 இடங்களுக்கு, சர்வீஸ் கமிஷன் மூலமாக டாக்டர் களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். அந்த டாக்டர்களை நியமிக்க இருக்கிறோம். அகில இந்திய மாநாட்டில் ஒத்துக்கொண்டிருக் கிறார்கள், நம்முடைய மாநிலத்தில்தான் Lowest number of vacancies in Tamil Nadu. இந்நிலையை எப்படி ஏற்படுத்தியிருக் கிறோம் என்ற விவரங்களை அறிய, மற்ற மாநிலங்களிலேயிருந்து சில அதிகாரிகள் நம்முடைய மாநிலத்திற்கு வந்திருக்கிறார்கள்.

தாய் சேய் நல விடுதிகளைப் பொறுத்தவரையில், அங்கே டாக்டர்களை அமர்த்துவது கிடையாது. ஆரம்பச் சுகாதார நிலையத்தைச் சுற்றி, சுற்றுப் புறத்திலே 8, 10 மெட்டர்னிட்டி சென்டர்கள் இருக்கும் டாக்டர்கள் அங்கே சென்று யோசனை சொல்வார்கள். தாய்சேய் நல விடுதிகளிலே, Multi-purpose Health Worker—என்று ஒருவரை அங்கேயே அமர்த்தி யிருக்கிறோம். அதிலே ஏதாவது குறைபாடு இருக்குமானால், அதைத் தெரிவிப்பாரானால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நக்கம்பாடியில் ஆரம்ப சுகாதார நிலையம்.**

428—(*வினா எண். 7553)—**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், நக்கம்பாடியில் புதிதாக ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் துவக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தஞ்சை மாவட்டம், குத்தாலம் ஒன்றியம் நக்கம்பாடியில் (நற்கம்பாடி) நடப்பு 1985-86ம் ஆண்டில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் நிறுவ ஆணையிடப்பட்டிருக்கிறது.

**போலி பங்கீட்டு அட்டைகள்.**

429—(*வினா எண். 1638)—**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போலி ரேஷன் கார்டுகளை ஒழிக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை யாது?

(ஆ) 1980 முதல் 1984 வரை எத்தனை போலி ரேஷன் கார்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** (அ) போலி குடும்ப அட்டைகளை ஒழிக்க மாவட்டங்கள் தோறும் பறக்கும் படைகள் அமைக்கப்பட்டு தீவிர தணிக்கைகள் மேற்கொள்ளப்படு கின்றன. உணவுப்பொருட்கள் வழங்கு துறையில் பணிபுரியும் இதர தணிக்கை அலுவலர்களும் தணிக்கைகள் செய்து போலி குடும்ப அட்டைகளை கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கின்றனர்.

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1980-ல் | — | 1,06,523 | குடும்ப அட்டைகள் |
| | 1981-ல் | — | 4,66,891 | ,, |
| | 1982-ல் | — | 6,129 | ,, |
| | 1983-ல் | — | 9,191 | ,, |
| | 1984-ல் | — | 41,642 | ,, |
| | 1985-ல் | — | 38,151 | ,, |

கண்டுபிடிக்கப்பட்டு ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. சு. பாலன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் சென்னையிலே பல உணவுப் பங்கீட்டுக் கடை களில், பொருட்களை எடை போட்டதிலே, அரசு முத்திரை யிடப் படாத, போலி எடைக்கற்கள் உபயோகப்படுத்தப்பட்டு, குறைவான அளவுள்ள பொருட்களை மக்களுக்கு விநியோகம் செய்ததாக, எடைகள் சரிபார்க்கும் அதிகாரிகள் கண்டு பிடித் திருக்கிறார்கள். ஆகவே, எல்லாக் கடைகளிலும் முத்திரையிட்ட எடைக் கற்களையே உபயோகிக்க வேண்டுமென்று அரசு உத்தர விடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி போலிக் குடும்ப அட்டைகள் கண்டு பிடிக்கப்பட்டு ரத்து செய்யப்படுவது பற்றியதாகும். இருந்தாலும், முத்திரையிடாத எடைக் கற்கள் சென்னை நகரிலே பல கடைகளிலே பயன்படுத்தப்பட்டதாக இங்கே சொன்னார்கள். ச்சயமாக சென்னை நகரம் முழுவதும் இப்படி நடந்திருக்க ரய்ப்பில்லை. அப்படி இருந்தால் அதற்கு முன்னாலே தகவல்கள் அரசுக்கு வந்திருக்கும். மானியக் கோரிக்கையில் கூட யாரும் இதைப் பற்றி குறிப்பிடவும் இல்லை. வெளியேயும் எனக்கு இதுபற்றி எந்தத் தகவலும் இல்லை. இருந்தாலும் உறுப்பினர் தந்த தகவலின் அடிப்படையில் விசாரிக்கப்படும், அவரும் தனக்கு வந்த தகவலை, எந்தக் கடையிலே இப்படி நடைபெற்றது, எப்பொழுது நடைபெற்றது என்று குறிப்பிட்டுச் சொன்னால், உடனடியாக அதுபற்றி, சொல்லி, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. வைகை சா. துரைசாமி :** தலைவரவர்களே, போலி ரேஷன் கார்டுகளை ஒழிக்கின்ற வகையில் இனிமேல் புதிதாக வழங்கப்படுகிற ரேஷன் கார்டுகளில் புகைப்படம் ஒட்டி, வழங்கப்படுமா? அந்தமுறையில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவரவர்களே, குடும்ப அட்டைகளிலே புகைப்படங்களை ஒட்டி வழங்குவது என்பது சாதாரண ஏழை எளிய மக்களுக்கு சுமையாக, கஷ்டமாக அமையும். இதுவரையில் இதைப்போன்ற எண்ணம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. இப்போதும் இல்லை.

**திரு. கே. உச்சி :** தலைவரவர்களே, பல ஆயிரக்கணக்கான போலி அட்டைகளைக் கண்டுபிடித்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த போலி அட்டைகளை வழங்கிய அதிகாரிகள்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவரவர்களே, 1982–ம் ஆண்டிலேதான் தமிழ்நாடு முழுவதும் பொதுமக்கள் நலனை முன்னிட்டு, போலி அட்டைகளைக் களைகின்ற வகையில், புதிய குடும்ப அட்டைகள் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் ஆகியோர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டு, வழங்கப்பட்டன. இதிலே ஒட்டுமொத்தமாக ஒரு அதிகாரி வேண்டுமென்றே எங்காவது நூற்றுக்கணக்கான அல்லது ஒரு குறிப்பிட்ட அளவுக்கு குடும்ப அட்டைகளை வழங்கியிருந்தால் அவர்மீது நடவடிக்கை எடுக்கலாம். ஒரே குடும்பத்தில் தந்தை, 4 மகன்கள் இப்படி இருந்தால் குடும்பத்தில் இருக்கிற ஒவ்வொருவரும் தனிக் குடும்பம் என்று சொல்லி, கணக்கு எடுக்கின்ற அதிகாரிகள் போகும்





போது தவறான புள்ளிவிவரங்களைத் தந்து, போகின்ற அதிகாரிகள் அது உண்மை என்று ஏற்றுக்கொண்டு, அத்தனை குடும்ப அட்டைகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. அதன் பின்னால் மறு ஆய்வு செய்யும் போது அல்லது கண்காணிப்புப் படை போகும்போது இந்தத் தவறுகளைக் கண்டுபிடித்து களைகின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல் வேண்டுமென்றே எந்த அதிகாரியாவது தவறு செய்திருந்தால் அப்படிப்பட்டவர்கள்மீது நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வி. பி. சிந்தன் :** தலைவரவர்களே, பல ஆயிரக்கணக்கான ஏழை எளிய மக்களுக்கு ரேஷன் கார்டுகளே கிடையாது. ரேஷன் கார்டு பெறுவதற்கு மனு போட்டாலும், சட்டமன்ற உறுப்பினர்கள் ''இவர் இந்தப் பகுதியைச் சேர்ந்தவர், வாக்காளர் பட்டியலில் இவருடைய பெயர் இருக்கிறது'' என்று எழுதிக் கொடுத்தாலும், ரேஷன் கார்டு கொடுக்கப்படுவதில்லை. போலி கார்டுகள் நிச்சயமாக ஒழிக்கப்பட வேண்டியவைதான். ஆனால் ரேஷன் கார்டு கொடுக்கப்படாமல் விடுபட்டுப்போன ஏழை எளிய மக்களுக்கு ரேஷன் கொடுக்க என்ன நடவடிக்கை என்று நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவரவர்களே, இப்போதே தமிழ்நாட்டில் ஏறத்தாழ 1,18,88,000 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. எனக்குத் தெரிந்தவரையில் குடும்ப அட்டைகள் இல்லாமல் ஏழை எளிய மக்கள் நிரம்ப கஷ்டப்படுகிறார்கள் என்கின்ற கருத்தில் அதிக அளவுக்கு வலு இருக்க முடியாது. ஏனென்றால் நான் ஏற்கெனவே சொன்னதைப் போல இப்போது ஏறத்தாழ 119 இலட்சம் குடும்ப அட்டைகள் இருக்கின்றன. ஒரு குடும்பத்திற்கு சுமார் 4 பேர்கள் என்று எடுத்துக் கொண்டால் கூட தேவையான அளவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒட்டு மொத்தமாக தமிழ்நாட்டில் 5 கோடி மக்கள் தொகைதான் இருக்கிறது. ஏற்கெனவே வழங்கப்பட்டவைகளில் தான் தவறு கண்டுபிடிக்கப்பட்டு சுமார் 38,000 குடும்ப அட்டைகள் நீக்கப்பட்டிருக்கின்றன. இருப்பினும் எங்காவது உண்மையிலேயே விடுபட்டிருந்தால், அவர்களுக்கு நிச்சயமாக குடும்ப அட்டைகள் வழங்கப்படும். அந்தப் பகுதியிலுள்ள டி. எஸ். ஓ. லெவலில் கொடுக்கலாம். ஆகவே உண்மையிலேயே 'மிஸ்' ஆகியிருந்தால், விடுபட்டிருந்தால் நிச்சயமாக வழங்கப்படும்.

**திரு. எம். இராசரத்தினம் :** தலைவரவர்களே, தனியார் சிலரும் சமூக விரோதிகளும் ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற குடும்ப அட்டைகளை, அவர்களுடைய வறுமையைப் பயன்படுத்திக்கொண்டு, விலைக்கு வாங்கி அவற்றின் மூலமாக நியாயவிலைக் கடைகளுக்குச் சென்று பொருள்களை வாங்கி,

[1986 ஏப்ரல் 8

வெளியே அதிக இலாபத்திற்கு விற்பனை செய்கிறார்கள். இப்படிப்பட்ட [illegible]லியார்கள் மீதும், சமூக விரோதிகள் மீதும் கடுமையான முறையில் கிரிமினல் குற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—50)

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குடும்பத்திற்கு இவ்வளவு என்று நிர்ணயம் செய்யப்பட்டு ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் ரேஷன் பொருட்கள் அதாவது அரிசி, சர்க்கரை போன்ற அத்தியாவசிய உணவுப் பண்டங்கள் வழங்கப்படுகின்றன. உதாரணமாக ஒரு குடும்பத்திற்கு 12 கிலோ அரிசி வழங்கப்படுகிறது என்று சொன்னால் அந்தக் குடுப்பத்திலே இருந்து ஒருவர் வந்து வாங்கிக் கொண்டு போகிறார். அவ்வாறு வாங்கிக் கொண்டு போனதற்குப் பிறகு அவற்றை வீட்டிற்குக் கொண்டுபோய் சமைக்கிறார்களா அல்லது வெளியே விற்கிறார்களா என்றெல்லாம் ஒரு கோடியே பத்தொன்பது இலட்சம் குடும்ப அட்டைகள் இருக்கின்ற நிலைமையில் கவனிப்பது என்பது நடைமுறை சாத்தியமாகாது. ஆனாலும் ஒட்டுமொத்தமாக ரேஷன் பொருட்கள் கடைகளிலே அதிகமாக இருக்கிறபோது உணவுத்துறையிலே இருக்கிற அதிகாரிகள் மற்ற பல்வேறு துறைகளிலே இருக்கிற அதிகாரிகள் அவற்றைக் கண்டுபிடித்து உரிய நடவடிக்கை பல்வேறிடங்களில் எடுத்திருக்கிறார்கள். அப்படி கடுமையான முறையில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதாவது தவறாகப் பயன்படுத்துகிற நிலைமையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுத்தான் வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதில் ஒரு சின்ன திருத்தம். ரேஷன் கார்டுகளை வசதி படைத்தவர்கள் வாங்கி வைத்துக்கொள்கிறார்கள். அப்படி 20, 30 கார்டுகளை ஒன்றாகச் சேர்த்துக் கொண்டுபோய் முதலிலேயே பொருட்களை எல்லாம் வாங்கிக் கொண்டு சென்றுவிடுகிறார்கள். ஏழை எளியவர்கள் பணத்தைச் சேர்த்து குடும்ப அட்டைக்கான பொருட்களை வாங்குவதற்காகச் செல்லும்போது, அதாவது கடைசியில் செல்லும்போது, அவர்களுக்குப் பொருட்கள் கிடைப்பதில்லை என்ற நிலைமை இருக்கிறது. வசதி படைத்தவர்கள் 20, 30 கார்டுகளை வாங்கி வைத்துக்கொள்கிறார்கள். ஏழை எளியவர்கள் தாமதமாகச் செல்லும்போது பொருட்கள் கிடைப்பதில்லை. ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகளைத் தடுக்கின்ற வகையில் இந்த அரசு கண்டிப்பான நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.



1986 ஏப்ரல் 8]

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக குடும்ப அட்டை கொடுக்கப்படுகிறது என்றால் யார் பெயரிலே அட்டை இருக்கிறதோ அவர்களேதான் சென்று பொருட்களை வாங்கவேண்டுமென்று நிர்ப்பந்திக்க முடியாது. குடும்பத்திலே யாராவது ஒருவர் சென்று வாங்கிக்கொண்டு வருவார். அல்லது பக்கத்து வீட்டுக்காரர் போகும்போது அவரிடத்திலே கொடுத்து அந்த ஒரு கார்டுக்கும் சேர்த்து பொருட்களை வாங்கிக்கொண்டு வரச் சொல்லுவார்கள். ஆனால் அப்படிச் செல்கிறபோது எப்போதுமே அவர்களே செல்வார்கள் என்று சொல்ல முடியாது. எனவே பொதுவாக ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்களுக்குப் பொருட்கள் வழங்கக்கூடாது என்று இருக்கிறது. இருந்தாலும் இப்போது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும் மற்றும் எல்லோருக்கும் இந்த சட்டமன்றத்தின் மூலமாக நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு குடும்ப அட்டைக்கு மேலே கொண்டு வந்தால் அது உண்மையிலே அடுத்த வீட்டுக்காரர் அட்டைதானா என்று பார்க்க வேண்டும். ஒருவரே தொடர்ந்து அவ்வாறு வாங்குவாரேயானால், அதாவது, அரிசி மற்ற பொருட்களை அவ்வாறு வாங்குவார்களேயானால், ஒரு குடும்ப அட்டைக்குமேல் கார்டுகள் கொண்டுவருகிறபோது பொருட்களைக் கொடுப்பது கிடையாது. ஒருவர் எத்தனை கார்டுகளுக்கு வாங்கிக்கொள்ளலாம் என்ற வகையில் இப்போது குறிப்பு இல்லை. ஆனால் நான் மன்றத்தின் மூலமாகச் சொல்வது அரசு அதிகாரிகளுக்கும் ஒரு உத்தரவாகும். ஒரு குடும்பத்திலே இருந்து ஒருவர் ஒரே கடையிலே ஒரு குடும்ப அட்டைக்கு மேலே கொண்டு வருகிறபோது அவர்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கப்பட மாட்டாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### குமரி மாவட்டத்திற்கு அரிசி வழங்கல்

430—(*வினா எண். 4517)—**திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் அரிசி பற்றாக்குறை இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், வாரத்திற்கு ஒரு நபருக்கு 2 கிலோ வீதம் அரிசி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** (அ) இல்லை (ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்தில் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் சிறை சென்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் ஒரு நபருக்கு 2 கிலோ அரிசி என்று விதிக்கப்பட்டது. அது பின்னர் 30 கிலோவாக ஆகி 20 கிலோவாகக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது அதை மாற்றி 5 கிலோ, 12 கிலோ என்றுதான் கொடுக்கிறார்கள் பின்னாலே கொடுக்கப்பட்டது போல் ஒரு நபருக்கு 2 கிலோ அரிசி என்று அந்த வீதத்தில் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பல தடவை கூறியிருப்பதுப்போல் 15-9- 4—க்கு முன்னாலே தமிழகம் முழுவதும், கிராமப்புறங்களிலும் 6 கிலோ தான் அரிசி தரப்பட்டது ஒரு குடும்ப அட்டைக்கு 15-9-84-க்கு பிறகு அப்போது இருந்த கையிருப்பினை மனதிலே கொண்டு 20 கிலோவாக வழங்கப்பட்டது. அதன் பின்னர் 1-11-85க்கு பின்னால் 12 கிலோ, 6 கிலோ என்று வழங்கப்படுகிறது. 20கிலோவுக்குக் குறைவாகக் கொடுக்கிறபோது 13 இலட்சம் பேர்தான் தமிழகம் முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கறார்கள். கன்னியாகுமரி, நீலகிரி போன்ற மாவட்டங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் கிராமர்றறப் பகுதிகளிலே சற்று கூடுதலாக 30 கிலோ என்றும் அதற்கு பின்னால் 20 கிலோ என்றும் வழங்சப்பட்டு வந்தது உண்மைதான். ஆக இப்போது தமிழகம் முழுவதும் எல்லாப் பகுதிகளுக்கும் 12 கிலோ அரிசி தான் அதிகபட்சமாக வழங்குகிறோம். நிலைமை சீர் அடைந்த தற்குப் பின்னாலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோள பரீசீலிக்கப்படும்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்காடு தாலுக்காவைப் பொறுத்தவரையில் அரிசியே விளைச்சல் இல்லை. அதற்கு பக்கத்தில் இருக்கிற நாஞ்சில் நாடு எங்கள் மாவட்டத்தைச் சார்ந்தது, அங்கே இருந்து கொள்முதல் செய்து குறைந்த பட்சம் 20 கிலோ அரிசியையாவது ஒரு குடும்பத்திற்கு கொடுபபதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், நீலகிரி மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களிலேயும் அதிகமாக நெல் விளைச்சல் இல்லாததைக் கவனத்திலே கொண்டுதான் எற்கனவே அப்படி வழங்கப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் நீங்கள் சொல்வது போல ஒரு தாலுக்கவிற்கு மட்டும் கொள்முதல் செய்து கொடுக்க முடியாது. கொடுத்தால் எல்லா தாலுக்காக்களுக்கும், மாநிலம்



முழுவதும் சேர்த்துத்தான் செய்தாக வேண்டும். நான் ஏற்கெனவே சொன்னது போல மத்திய அரசிடம் இருந்து ஏறக்குறைய 90 ஆயிரம் டன் அரிசியை, மத்திய தொகுப்பிலேயிருந்து வாங்கிக் கொண்டு வந்துதான் தந்தார்கள். கடந்த 3 மாதங்களில் மாதத்திற்கு 40,000 டன் அரிசி வீதம் மொத்தம் 1,20,000 டன் அரிசிதான் மத்திய தொகுப்பிலிருந்து தரப்பட்டிருக்கிறது. இப்போதே ஏறக்குறைய 80 ஆயிரம் டன் அரிசி குடும்ப அட்டைகளுக்கு பொது வினியோக முறையில் தேவைப் படுகிறது. இந்த ஆண்டு உற்பத்தி குறைவு என்பது பற்றிய விவரங்களையெல்லாம் நான் மானியக் கோரிக்கையிலேயே சுட்டிக் காட்டி பேசியிருக்கிறேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் முன்பே பதில் சொன்னது போல, நீங்கள் கேட்ட அளவு 20 கிலோவும் கொடுக்க முடியுமா, அல்லது எவ்வளவு கொடுக்க முடியும் என்பதைப் பற்றி இப்போது முடிவாக சொல்ல முடியாது. இப்போது கொடுக்கின்ற இந்த 12 கிலோ அரிசியை சற்று அதிகமாக்கிதர முடியுமா என்பதைப் பற்றி அரசு பரிசீலிக்கும், நிலைமை சீரான உடனே.

## வெளி மாநிலங்களில் நெல் கொள்முதல்.

431 — (*வினா எண். 7203)— திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1982-83, 1983-84 ஆகிய ஆண்டுகளில் வெளி மாநிலங்களில் நெல், அரிசி கொள்முதல் செய்ததில் ஒரு குவிண்டால் என்ன விலை ஆகிறது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை. 1982-83, 1983-84 ஆகிய ஆண்டுகளில் வெளி மாநிலங்களில் இருந்து வாங்கிய அரிசியுடைய விலை அளவு ஆகிய விவரங்கள் விவர அறிக்கையில் *தனியே தரப்பட்டுள்ளன.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசியினுடைய விலை மட்டும் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அரிசி வாங்கச் சென்றபோது அதிகாரிகளின் பயணப்படி, போக்குவரத்துப்படி, டிரான்ஸ்போர்ட்செலவு இவைகளையெல்லாம் சேர்த்து ஒரு குவிண்டாலுக்கு என்ன விலை வருகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

---

*130ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தமாக ஒரு குவிண்டாலுக்கு என்ன விலை ஆகிறது என்ற விவரத்தைத்தான் இங்கே விவர அறிக்கையிலே கொடுத்து இருக்கிறோம். 1982–83, 1983-84 இல் வாங்கியது. ஒரு குவிண்டாலுக்கு என்ன விலை என்று கேட்டார்கள், அதைக் கொடுத்து இருக்கிறேன். அதிகாரிகள் டிரெயினிலே போனார்களா, காரிலே போனார்களா, பயணப்படி என்ன, இவைகளையெல்லாம் சேர்த்து சொல்ல வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால் தனியாக அவருக்கு அனுப்பி வைக்கப்படும்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவுப்பொருள் வழங்கல் கார்ப்பொரேஷனைப் பொறுத்தவரையில், அது வியாபார ரீதியாக லாப நட்டத்தை அடைப்படையாக வைத்து நடத்தப்படுகிற ஒரு நிறுவனம். அதிலே ஒரு குவிண்டாலுக்கு இவ்வளவு விலை என்று நிர்ணயித்தால், அதற்கு ஆகின்ற எல்லாச் செலவையும் கணக்கிட்டுத்தான் சொல்வது நியாயமாக இருக்குமே தவிர, விலையை மட்டும் சொன்னால், அந்தச் செலவினங்களை யார் ஏற்றுக் கொள்வது? எனவே எல்லாச் செலவையும் சேர்த்து ஒட்டு மொத்தமாக ஒரு குவிண்டாலின் விலை இவ்வளவு என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும் என்று வேண்டுகிறேன், அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நான் ஒரு குவிண்டாலுக்கு ஆகின்ற மொத்த விலையைத்தான் சொல்லியிருக்கிறேன். அவர் சொன்னது போல எல்லாவற்றையும் உள்ளடக்கிய அதிகாரிகள் டிக்கெட் செலவு, அல்லது வேன் செலவு, அவர்கள் தங்கிய செலவுகள் எல்லாவற்றையும் கணக்குப் பார்த்து, பின்னாலே அவருக்கு வேண்டும் என்றால், தனியாக அனுப்புகிறேன்.

## நிலக்கோட்டையில் நூற்பாலை.

432—(*வினா எண். 2780)—திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டையில் அதிக அளவில் பயிராகும் பருத்தியை உபயோகப்படுத்தும் வகையில் கூட்டுறவு நூற்பு ஆலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?





மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (அ & ஆ) மதுரை மாவட்டம் மேலூரில் 24,528 கதிர்கள் உற்பத்தித் திறனுடன் ஒரு கூட்டுறவு நூற்பாலை ஏற்கனவே இயங்கி வருகிறது. மேலும் கடந்த ஆறாவது ஐந்தாண்டு திட்டகாலத்தில், இம்மாவட்டத்தில், தேனீயில், பருத்தி பயிரிடுவோருக்காக, அண்ணா கூட்டுறவு நூற்பாலை என்ற புதிய கூட்டுறவு நூற்பாலை ஒன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் 2 ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்டு இயங்கி வருகிறது. இதைத்தவிர இம்மாவட்டத்தில் நிலக்கோட்டையில் புதிய கூட்டுறவு நூற்பாலை நிறுவும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(முற்பகல் 10–00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. அ. பாலுசாமி : தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் கூட்டுறவு நூற்பாலை நிறுவுவதற்கு பரிசீலனை எதுவுமில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பகுதியில் வாழ்கிற மக்கள் எந்தத் தொழிலும் இல்லாமல் இருக்கிறார்கள். விவசாயத்திற்கு ஏற்ற நிலப்பரப்பு கூட அவர்களுக்கு இல்லாமல் இருப்பதால், அந்தப் பகுதி மக்களின் நலன் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையோடு எப்படியாவது அந்தப் பகுதியில் விளையக் கூடிய பருத்தியை வைத்து நடத்துகிற வகையில் அங்கே ஒரு நூற்பாலையை நிறுவுவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் புதியதாக நூற்பாலைகள் கூட்டுறவுத் துறையிலோ அல்லது தனியார் துறையிலோ அனுமதிக்க இயலாதென்று மத்திய அரசு கொள்கையை வகுத்திருக்கிறது. அந்தக் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டால் இது மறு பரிசீலனை செய்யப்படும்.

திரு. அ. பாலுசாமி : தலைவர் அவர்களே, மத்திய அரசு அனுமதித்தால் அந்தப் பகுதியில் கூட்டுறவு நூற்பாலை நிறுவுவதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தப் பகுதி மக்களின் நலன் கருதி இதற்கு முன்னுரிமை அளித்து அங்கே கூட்டுறவு நூற்பாலையை நிறுவுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே விடையளித்ததைப் போல மத்திய அரசு இதில் தங்களுடைய கொள்கையை தளர்த்தினால் நாம் அதுபற்றி பரிசீலிக்கலாம்.

மொடக்குறிச்சி பகுதியில் நூற்பாலை.

433—(*வினா எண். 6622)—திரு. ச. பாலகிருஷ்ணன் மற்றும் திரு. கா. செ. பழனிச்சாமி : மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம் காங்கேயம், மொடக்குறிச்சி பகுதியில் ஓர் கூட்டுறவு நூற்பு ஆலை நிறுவ அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பெரியார் மாவட்டம் காங்கேயம் மொடக்குறிச்சி பகுதியில் புதிய கூட்டுறவு நூற்பாலை நிறுவும் உத்தேசம் தற்போது அரசிடம் இல்லை.

திரு. ச. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதியைப் பொறுத்தவரையில் முழுவதும் விவசாயத்தை நம்பியிருக்கிற மக்கள் வாழ்கிற பகுதி. தற்போது அங்கே கடுமையான வறட்சி நிலவிக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நேரங்களில் அவர்கள் மாற்றுத் தொழில் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மேலும் அங்கே நெசவாளர்கள் ஏராளமாக வசிக்கிறார்கள். ஏறத்தாழ 20-க்கு மேற்பட்ட சங்கங்கள் அங்கே இருக்கின்றன. ஆகவே அங்கேயிருக்கிற மக்கள் வேலை வாய்ப்பு பெறுகிற வகையிலே அங்கே ஒரு கூட்டுறவு நூற்பாலையை அமைப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, காங்கேயத்திலிருந்து சுமார் 30 மைல் தூரத்தில் தாராபுரத்தில் ஒரு கூட்டுறவு நூற்பாலை ஏற்கனவே அங்கே இருக்கிறது. நான் ஏற்கனவே சொன்னதைப் போல மத்திய அரசு நூற்பாலைகளுக்கு அனுமதி வழங்குவதை தற்போது நிறுத்தி வைத்திருக்கிறது. மத்திய அரசு சொன்னால்தான் ஐ.டி.பி.ஐ. போன்ற நிறுவனங்கள் கடனுதவியைச் செய்வார்கள். மத்திய அரசு தன்னுடைய கொள்கையில் ஏதாவது மாற்றம் செய்தால் நாம் இதுபற்றி பரிசீலனை செய்யலாம்.

திரு. கா. செ. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி, சென்னிமலை பகுதிகளில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அதிகமாக இருக்கின்றன. அந்தப் பகுதியில் ஒரு கூட்டுறவு நூற்பாலை நிறுவ வேண்டுமென்று கோரிக்கை நீண்ட நாட்களாக இருக்கிறது. புதிய கூட்டுறவு நூற்பாலைகளை நிறுவுவதற்கு மத்திய அரசு அனுமதிப்பது இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தப் பகுதியில் மக்கள் வேலை வாய்ப்பு பெறுகிற வகையில் அருகிலே இருக்கிற தாராபுரம் கூட்டுறவு நூற்பாலையின் கிளை ஒன்றைத் துவக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பாலகிருஷ்ணன், பழனிச்சாமி போன்றவர்கள் என்னிடத்தில் ஏற்கனவே இதுபற்றி மனு கொடுத்திருக்கிறார்கள். ஏற்கனவே தாராபுரத்தில் உள்ள ஆலையின் கிளை ஆலை ஒன்றை 'பி' நிறுவனமாக ஏற்படுத்துவதற்கு கூட மத்திய அரசு அனுமதி கொடுக்க வேண்டும். அதுபற்றி எழுதியிருக்கிறோம்.

கோ-ஆப்டெக்ஸ் கிளைகள்.

434—(*வினா எண். 4012)—டாக்டர் அ. பொன்னுசாமி, திரு. ச. பாலகிருஷ்ணன், திரு. அ. பெரியசாமி, மற்றும் திரு. யு. பி. மாதையன் : மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் எந்தெந்த வெளி மாநிலத்திலும், வெளி நாட்டிலும் விற்பனை நிலையங்களை அமைத்துள்ளது ?

(ஆ) அதன் மூலம் விற்பனை செய்த துணியின் மதிப்பும் ஈட்டிய லாபமும் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (அ) வெளி மாநிலங்களில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் 252 விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. வெளிநாட்டில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் ஏதும் இல்லை.

(ஆ) வெளி மாநிலங்களில் இயங்கிவரும் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலம் 1983–84ம் ஆண்டில் ரூ. 2159 இலட்சம் மதிப்புள்ள துணிகளும், 1984–85ம் ஆண்டில் ரூ. 2400 இலட்சம் மதிப்புள்ள துணிகளும் விற்பனையாகியுள்ளன. 1983–84ம் ஆண்டில் 46 விற்பனை நிலையங்கள் இலாபத்தில் இயங்கின. அவற்றின் மூலம் ரூ. 13.96 இலட்சம் இலாபம் ஈட்டப்பட்டது.

டாக்டர் அ. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் குறிப்பாக, சிங்கப்பூர், மலேசியா, பிஜித் தீவுகள் மற்றும் மொரிசியஸ் போன்ற நாடுகளிலும் மற்றும் இந்தியர்கள் அதிலும் குறிப்பாக தமிழர்கள் வாழுகின்ற நாடுகளில் பட்டுப் புடவைகளுக்கு நல்ல வரவேற்பு இருக்கின்ற காரணத்தாலும், அங்கேயெல்லாம் நம்முடைய காஞ்சிப் பட்டினுடைய பெருமையை நிலைநாட்டவும், திரைகடல் ஓடியும் திரவியம் தேடவும், what I mean is 'foreign exchange' அந்த நாடுகளில் எல்லாம் விற்பனை நிலையங்களை ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இதுமாதிரி சோதனை விற்பனை நிலையங்கள் ஏற்பாடு செய்து, நஷ்டம் ஏற்பட்டதால், அவைகளை மூடி இருக்கிறோம். அங்குள்ள தனியார்கள், மிகவும் வெற்றிகரமாக உள்ள விற்பனையாளர்களிடம் கோ-ஆப்டெக்ஸ் ஏஜென்டாக இருந்து விற்பனை செய்ய முடியுமா என்று கேட்பதைப் பற்றி இப்போது யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தினுடைய விற்பனை நிலையங்கள் ஏதும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். இங்கே இருந்து பல தனியார்கள், வெளி நாடுகளுக்கு இந்தக் கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்து மிகவும் அதிக லாபத்தை ஈட்டி வருவதை அரசு அறியுமா? அப்படி இருக்கும்போது ஏன் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் கிளை நிலையங்களை அங்கே அமைக்கக்கூடாது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள் நடத்தினால் அவர்களுக்கு வேண்டிய சுதந்திரம் இருக்கிறது. ஒரு மாதம் அவர்கள் ஏற்றி விற்கலாம், அல்லது ஒரு மாதம் குறைத்துக் கூட விற்கலாம். ஆனால் கோ-ஆப்டெக்ஸ் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடக்க வேண்டும். வெற்றிகரமாக வெளிநாடுகளில் உள்ள விற்பனையாளர்களிடம் நாம் ரிசர்வ் பேங்க் மூலம் தொடர்பு கொண்டு அவர்கள் பொருளாதார காரண்டி சர்ட்டிபிகேட் மீது நாம் பட்டுப் புடவையை விற்பனை செய்வதுதான் நல்லதாக இருக்கும்.

திரு. அ. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் இல்லாத மற்ற மாநிலங்களில் விற்பனை நிலையங்களை நிறுவுவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட எல்லா மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும் இருக்கிறது. எனவே இதைப்பற்றி வினா எழவில்லை.

திரு. யு. பி. மாதையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை விற்பனை நிலையங்கள் நஷ்டத்தில் இயங்குகின்றன. அவைகளை லாபத்தில் இயக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே இதற்கு விடை அளித்து இருக்கிறேன். 252 மொத்த விற்பனை நிலையங்களில் 46 விற்பனை நிலையங்கள் லாபத்தில் இயங்குகின்றன. மற்றவை லாபத்தில் இயங்கவில்லை.





### சென்னை மாநகராட்சிப் பகுதியிலுள்ள திரையரங்குகள்.

435—(*வினா எண். 2828)—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சி எல்லைக்குள் உள்ள திரை அரங்குகள் எத்தனை?

(ஆ) 1983–84-ம் ஆண்டு அவைகளின் மூலம் அரசுக்கு கிடைத்த கேளிக்கை வரி எவ்வளவு?

(இ) சென்னை மாநகராட்சிக்கு கிடைத்த வருமானம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : (அ) சென்னை மாநகராட்சி எல்லைக்குள் மொத்தம் 95 திரையரங்குகள் உள்ளன.

(ஆ) 1983–84 ஆம் ஆண்டு, அவைகளின் மூலம் கேளிக்கை வரியாக அரசிற்கு கிடைத்த வருவாய் ரூ. 516.92 இலட்சம்.

(இ) சென்னை மாநகராட்சிக்கு கிடைத்த வருவாய் ரூபாய் 282.18 இலட்சம்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரம் பெருநகரமாக இருக்கின்ற காரணத்தால், நிறைய அபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்ற வேண்டி இருப்பதால், நிதி குறைவாக இருக்கின்ற காரணத்தால், வழங்குகின்ற அந்த கேளிக்கை வரியில் மூன்றில் இரண்டு பங்கை மாநகராட்சிக்கு வழங்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேளிக்கை வரியின் மூலமாக வருகின்ற வருமானத்தை அரசும் மாநகராட்சியும் பகிர்ந்து கொள்கின்றன. அரசுக்கு பகிர்ந்து கொடுத்தாலும், மாநகராட்சிக்குப் பகிர்ந்து கொடுத்தாலும் எல்லாம் மக்களுடைய நலத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகத்தான் பயன்படுகின்றன. இப்போது நடைமுறையில் இருப்பது, கேளிக்கை வரியில் 10 சதவீதம் அரசுக்கும், 90 சதவீதம் உள்ளாட்சி மன்றங்களுக்கும் கொடுக்கப்படுகிறது. கேளிக்கை வரியின் மேல் வரியின் 100 சதவீதம் உள்ளாட்சி மன்றங்களுக்கு. கேளிக்கை வரி மீதான கூடுதல் வரி 100 சதவீதம்

அரசுக்கு காட்சி வரி 100 சதம் அரசுக்கு. காட்சி வரி மீதான மேல் வரி 100 சதம் உள்ளாட்சி மன்ற நிறுவனங்களுக்கு, காட்சி வரி மேலுள்ள கூடுதல் வரியின் மீது வரி 100 சதம் அரசுக்கு.

(முற்பகல் 10-10)

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரையரங்குகளில் கேளிக்கை வரி பெருமளவில் ஏமாற்றப்பட்டு வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? சென்னை மாநகரத்தில் சில திரையரங்குகளில் வசதிகள் குறைவாக இருக்கின்றன. அவைகளை நவீன வசதிகளோடு மாற்றியமைப்பதற்கு அரசு உத்தரவு இடுமா என நான் அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏய்க்கின்றவர்கள் இருக்கின்ற வரையில் இந்த நாட்டில் வரி ஏய்ப்பு இருக்கத்தான் செய்யும். அதைத் தடுக்கின்ற பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. அதற்கு அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். ஒரு திரையரங்கு கட்டப்படுகின்ற நேரத்தில் விதிமுறைகள் எல்லாம் வரையறுக்கப்படுகின்றன. அந்த விதி முறைகள் பின்பற்றப்பட்டால்தான் அவர்களுக்கு உரிமங்கள் வழங்கப்படுகின்றன. எனவே உரிமங்கள் பெற்று திரையரங்குகளை நடத்துகின்ற நேரத்திலே வசதிகள் குறைவாக இருக்குமானால் அதற்கு நடவடிக்கை எடுக்குமளவுக்கு அரசிடம் எல்லா விதிமுறைகளும் சட்டங்களும் இருக்கின்றன. அதன்படி எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேள்வி கேட்கவில்லை. ஒரு கேள்வி ராங்காக ரெக்கார்ட் ஆகி இருக்கிறது. நிதி பற்றாக்குறை குறைவாக இருப்பதால், நிதி ஆதாரம் அதிகம் என்று அர்த்தம். மாண்புமிகு உறுப்பினர் வளர்மதி கேட்ட கேள்வி. அவர் கூடுதல் நிதி கேட்கிறார்கள் மாநகராட்சிக்கு. கேள்வியே நிதி பற்றாக்குறை குறைவாக இருப்பதால், பற்றாக்குறை குறைவு, பணம் இருக்கிறது என்றுதான் அர்த்தம். இதனால் அந்தக் கேள்வியை மாற்றவேண்டும்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிதி தேவைப்படுகின்றது என்றுதான் குறிப்பிட்டேனே தவிர, நிதி பற்றாக்குறை என்று நான் குறிப்பிடவில்லை என்று நான் இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.





சென்னை 600 008 1386/68

தேனி வணிகவரி அலுவலகக் கட்டிடம்

436—(*வினா எண். 4845)—திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனியில் வணிகவரித் துறைக்கென தனியாகக் கட்டிடம் கட்ட செயற்குறிப்புள்ளதா?

(ஆ) ஆமெனில், எப்போது கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : (அ) மற்றும் (ஆ) தேனியில் வணிகவரித் துறைக்கென தனியாக கட்டிடம் கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனியில் கமர்ஷியல் டாக்ஸ் ஆபீஸ், சி.டி.ஓ. ஆபீஸ் கட்டுவதற்கு கடந்த 4, 5 வருடங்களாக அங்கே நிலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டும் அங்கு கட்டிடங்கள் கட்டுகிற வேலை தாமதப்படுத்தப்பட்டு வருகிறது. அந்த தாமதத்தை போக்கி இந்த ஆண்டிலேயாவது கட்டிடங்களைக் கட்டுவதற்கான பணிகள் துவங்கப்படுமா, இந்த ஆண்டும் மீண்டும் தாமதம் ஏற்படுத்தப்பட்டால் தாமதத்திற்குக் காரணமான அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சர் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனியிலே வணிக வரித் துறையின் மூலமாக இரு அலுவலகங்கள் கட்டுவதற்கு துணை வணிக் வரி அலுவலர், தேனி, வரி விதிப்பு வட்டம் மற்றும் துணை வணிக வரி அலுவலர் (செயலாக்கம்), தேனி, கட்டிடம் கட்டும் பொருட்டு அரசாங்க ஆணை எண். 202, வணிகவரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 21—2—1981-ல் ரூபாய் 5.8 லட்சம் ரூபாய் செலவிட உத்தரவு வழங்கப்பட்டது. ஆனால் அந்த நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுவதில் சிக்கல் ஏற்பட்ட காரணத்தினால்தான் தாமதமேயொழிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல வணிகவரித் துறை அதிகாரிகளுடைய காலதாமதத்தினால் அல்ல என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது அந்த சிக்கல் எல்லாம் போக்கப்பட்டு கட்டிடம் கட்டும் பணி தொடங்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். தேனி, வணிகவரித் துறைக்கென அரசு கட்டிடம்

கட்டுவதற்காக சிட்கோ நிருவாகத்தாரால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மனைகள்-சர்வே எண் 212, மனை எண் 4-லுள்ள 0.72 ஏக்கர் நிலம் 9–1–1986 அன்று வணிகவரித் துறையினால் எடுத்துக்கொள்ளப்பட்டு கட்டிடப்பணியைத் துவங்கும் பொருட்டு, தேனி, பொதுப்பணித் துறை, உதவிப் பொறியாளர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று 26–3–1986-ல் அரசுக்கு தெரிவித்துள்ளார். எனவே கட்டிடம் கட்டும் பணி விரைவாக நடைபெறும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981ஆம் ஆண்டு அரசு ஆணையிடப்பட்டு 26–3–86லாவது கட்டுவதற்கு நடவடிக்கைகள் மிகவிரைவாக எடுத்த அந்த அதிகாரிகளைப் பாராட்டுகின்ற நேரத்திலே அந்தக் கட்டிடத்தைக் கட்டுவதற்கு வாக்குறுதி அளித்த அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிகவரித் துறை அலுவலகங்கள் மாநிலம் முழுவதும் எத்தனை அலுவலகங்கள் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி இருக்கின்றன? அதற்கு அரசு வாடகை செலுத்துகிற தொகை எவ்வளவு? இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் அல்லது எல்.ஐ.சி. போன்ற நிறுவனங்கள் மூலம் கடன் வாங்கி இந்த வாடகை கட்டிடங்களில் இயங்கும் அலுவலகங்கள் எல்லாவற்றிற்கும் துறையின் மூலம் கட்டிடங்கள் கட்டுவதற்கு ஏதாவது சிறப்பு நடவடிக்கை எடுக்கிற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கட்டிடங்களில் இயங்கி வரும் கட்டிடங்களின் எண்ணிக்கை 156. அதற்கு ஆண்டு வாடகை 30 லட்ச ரூபாய் கொடுத்து வருகிறோம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கூறியது போல், 30 லட்ச ரூபாய் என்று சொன்னால் பல கட்டிடங்களை கட்டுகின்ற தொகையை நாம் வாடகையாகக் கொடுத்து வருகிறோம். எனவே இந்த அரசு விரைவில் வாடகைக் கட்டிடங்களில் இயங்கும் எல்லா வணிக வரி அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டிடங்களைக் கட்டி அவைகளை நடத்தவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. தமிழ்நாட்டில் வரும் காலத்தில் அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



உணவுப்பொருள்கள் பதப்படுத்தும் தொழிற்பேட்டை.

437—(*வினா எண் 1413)—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு ஊரகத்தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உணவுப் பொருள்களை பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அடங்கிய தொழிற்பேட்டை ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: (அ) இல்லை.

(ஆ) இந்த வினாவிற்கு இடம் இல்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவுப் பொருள்களைப் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அடங்கிய தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மீன் போன்ற உணவுப் பொருட்களை பதப்படுத்தி வெளிநாட்டுக்கு அனுப்பினால் அதற்கு ஏகப்பட்ட கிராக்கி இருக்கிறது என்று தகவல் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட தொழிற்சாலையை அரசுத் துறையில் தொழிற்பேட்டை அமைக்க சூழ்நிலை இல்லை. எனவே இதைக் கருத்தில் கொண்டு மீன் அதிகமாக மாநிலத்தில் கிடைக்கின்ற பகுதியில் இந்த மீன் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைப்பதற்கு அல்லது அப்படி அமைப்பவர்களுக்கு சில உதவிகளைச் செய்வதற்கு அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசி, கோதுமை, கொட்டை வகைகள், காய்கறி, பழங்கள் இவைகளைக் கொண்டு பல்வேறுபட்ட உணவுப் பொருட்கள் தயார் செய்கின்ற தொழிற்சாலைகளை ஏராளமாக தனியார்கள் நடத்தி வருகிறார்கள். தொழிற்பேட்டையாக இப்போது ஒன்று வத்தலகுண்டில் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அங்கேயும் 4 தொழிற்கூடங்கள் நிறுவி அதில் ஒன்று தான் இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கிறது. மேல் நாடுகளிலும், மத்திய கிழக்கு நாடுகளிலும், ஆப்பிரிக்க நாடுகளிலும் இப்படிப்பட்ட உணவுப் பொருட்களுக்கு நல்ல கிராக்கி இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போல் இந்த நாடுகளில் எல்லாம் நம் நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய பக்குவப்படுத்தப்பட்ட மீன்

உணவுப் பொருட்களுக்கு நல்ல கிராக்கி இருக்கிறது. அதை யாராவது உற்பத்தி செய்வதற்கு தயாராக இருந்தால் அவர்களுக்கு எல்லா வகையான உதவியையும் செய்ய அரசு தயாராக இருக்கிறது.

பேரையூர், சாப்டூர் பகுதிகளில் செங்கல் தொழிற்சாலை.

438—(*வினா எண் 2017)—திரு. இரா. முத்தையா: மாண்புமிகு ஊரகத்தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் பேரையூர், சாப்டூர் ஆகிய பகுதிகளில் கிடைக்கும் தரமான மண்ணைப் பயன்படுத்தி கூட்டுறவுத் துறையில் ஒரு செங்கல் தொழிற்சாலை அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: அமைக்க வாய்ப்பு தற்போதைக்கு இல்லை

திரு. இரா. முத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் இந்தப் பகுதியில் ஏராளமான அளவில் மண் கிடைத்தாலும் சிறிய அளவில் தான் செங்கல் தயாரிக்கப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. அந்த இடத்தில் பெரிய அளவில் சேம்பரை ஏற்படுத்தி உற்பத்தியைச் செய்தால் அந்தப் பகுதி மக்களுக்கு ஏராளமானவர்களுக்கு வேலை கிடைப்பதற்கு வசதியாக இருக்கும். செங்கல் உற்பத்தியும் நல்ல முறையில் இருப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். அதற்கு ஏற்ற வகையில் அரசு மீண்டும் விரைந்து பரிசீலித்து இங்கே அத்தகைய ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் துவரைமான் பகுதியில் ஒரு செங்கல் தொழில் கூட்டுறவுச் சங்கம் இப்போது இருக்கிறது. அதேபோல் மதுரை மாவட்டத்தில் சங்களாம்பட்டி, விட்டல்நாயக்கன்பட்டி போன்ற 2 இடங்களில் தொழில் கூட்டுறவு சங்கங்கள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு இறுதிக்குள் அங்கே உற்பத்தி தொடங்க உத்தேசிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, இந்த 2 இடங்களிலும் உற்பத்தியை தொடங்கிய பிறகு வேண்டுமானால் இதைப் பரிசீலிக்கலாம்.



(முற்பகல் 10-20)

திரு. இரா. முத்தையா: தலைவர் அவர்களே, துவரிமானில் செயல்பட்டுவரும் அந்த கூட்டுறவுச் சங்கம் இருந்தாலும், அந்தப் பகுதியில் அதிகமான அளவில் செங்கல் உற்பத்தி செய்ய முடியாத சூழ் நிலையில் அந்த மண்ணைக் கொண்டு வருவதில் கஷ்டமான ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. அதைக் கருத்தில் கொண்டு தொழில் வாய்ப்பு இருக்கக் கூடிய, பேரையூர், சாப்டூர் போன்ற பகுதிகளில் ஆரம்பிக்க அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக தொழில் வணிக இயக்குநரைக் கொண்டு, அரசு பரிசீலித்து முடிவு செய்யும்.

திருபுவனம் பகுதியில் தொழிற்பேட்டை.

439 — (* வினா எண். 2358) திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தாலுக்கா, திருபுவனம் கிராமத்தில் சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்திற்காக நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அங்கு தொழிற்சாலைகள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: (அ) ஆம்.

(ஆ) திருவிடைமருதூர் தாலுக்கா திருபுவனம் கிராமத்தில் நிலம் 1966 ஆம் ஆண்டு கையகப்படுத்தப்பட்டு ஏற்கெனவே அரசினால் ஒரு தொழிற்பேட்டை ஏற்படுத்தப்பட்டு தற்போது இயங்கி வருகிறது.

திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருபுவனம் தொழிற்பேட்டையில் உள்ள கட்டிடங்கள் ஒரு சில குறிப்பிட்ட நபர்களால் ஒப்பந்தம் செய்யப்பட்டு, அங்கு அலுமினியத் தொழிலும், டான்சியினுடைய ஒப்பந்தத் தொழிலுமே செய்யப்படுகிறது. புதியதாக தொழில் துவங்குபவர்களுக்கு அங்கு இடம் கிடைக்கவில்லை. அதை அரசு அறியுமா? அப்படி புதிய தொழில் துவங்குபவர்களுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா என்பதை அறியவிரும்புகிறேன்.

[1986 ஏப்ரல் 8

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : தலைவர் அவர்களே, 1966-ஆம் ஆண்டு ஏறக்குறைய 32.30 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. அதில் ஏறக்குறைய 7 ஆண்டுகளுக்கு முன்னாலே 4 பெரிய தொழிற் கூடங்களை அரசு கட்டியிருக்கிறது. அதற்குப் பிறகு 4 ஆண்டுகளுக்கு முன்பாக சுமார் 3000 சதுர அடி அளவில் 2 பெரிய தொழிற் கூடங்களையும், 3 ஆண்டுகளுக்கு முன்னாலே 10 சின்னஞ்சிறு தொழிற்கூடங்களையும் கட்டி முடித்திருக்கிறது. தற்போது 16 தொழிற்கூடங்களில் தொழில் நடைபெற்று வருகிறது. சிலவற்றை சிட்கோ ஏற்று, நடத்தி வருகிறது. மற்றும் சில தொழிற்கூடங்களை தனியாரும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. மு. இராசாங்கம் : தலைவர் அவர்களே, சிலவற்றை சிட்கோ ஏற்றுக்கொண்டு நடத்திவருகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சில கட்டிடங்களை ஒரு சில தனி நபர்களே ஏற்றுக்கொண்டு நடத்துகிறார்கள். புதிய தாகத் தொழில் துவங்குபவர்களுக்குக் கட்டிடம் கிடைக்காத காரணத்தால், அதற்குரிய முயற்சியை மாண்புமிகு அமைச்சரவர்கள் மேற்கொள்வார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் ; தலைவர் அவர்களே, இப்போது கட்டிடம் கட்டப்பட்டுள்ள பகுதி 10 ஏக்கர் 12 செண்ட் ஆகும். மீதமுள்ள 22 ஏக்கர் 18 செண்ட் நிலம் காலியாகவே தொழிற்கூடங்களைக் கட்டுவதற்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. தற்போது குறைந்த பட்சம் ஒரு 10 சிறு தொழில் முனைவர்கள் ஒன்று சேர்ந்து வங்கியிலிருந்து நிதியுதவி பெற அங்கீகாரம் பெற்று, திட்டங்களோடு விண்ணப்பித்தால், நிச்சயமாக அவர்களுக்கு உடனடியாக தொழிற் கூடங்களைக் கட்டித்தர அரசு முன்வரும்.

## ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனை

குறுகிய கால வினா எண். 3 (*வினா எண். 8918)—திரு. எஸ். டேனியல்ராஜ் ; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வேன் ஒன்று அளிக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு தனியாக ஒரு ஆம்புலன்ஸ் வேன் வழங்க தற்போது உத்தேசமில்லை.

(ஆ) கேள்வி எழ இடமில்லை.



1986 ஏப்ரல் 8]

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவைகுண்டம் தாலுக்காவில் அரசு மருத்துவமனை இயங்கிவருகிறது. ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சை பெற வரும் நோயாளிகள் தீவிர சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கோ அல்லது தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கோ செல்வதற்கு எந்தவித வாகன வசதியும் கிடையாது. அதே நேரத்தில், நோயாளிகளைத் திருநெல்வேலிக்குக் கொண்டு செல்வதற்கு டாக்சி வாடகையாக ரூ. 150 லிருந்து ரூ. 200 வரையிலும், தூத்துக்குடி அரசு தலைமை அரசு மருத்துவமனைக்கு நோயாளிகளைக் கொண்டு செல்வற்கு ரூ. 250 லிருந்து ரூ. 300 வரையிலும் டாக்சி வாடகையாகக் கொடுக்கிறார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் ஏழை விவசாயிகள், வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்கின்றவர்கள் வசிக்கின்ற பகுதியாகும். ஆகவே அமைச்சர் அவர்கள் உடனே தலையிட்டு ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு உடனடியாக ஒரு ஆம்புலன்ஸ் வேனை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, ஸ்ரீவைகுண்டம் மருத்துவ மனையைப் பொறுத்தவரையில் தாலுக்கா மருத்துவ மனையாக இருந்தாலும் அது 20 படுக்கைகளைக் கொண்ட ஒரு மருத்துவ மனையாக இருக்கிறது. இப்போது நாம் பல்வேறு தாலுக்கா மருத்துவ மனைகளிலேயும் படிப் படியாக ஒரு ஃபேஸ்டு மேனர் என்று சொல்லக்கூடிய அளவில் ஒவ்வொரு ஆண்டும் சில தாலுக்கா மருத்துவ மனைகளை எடுத்துக் கொண்டு அவற்றிற்கு ஆம்புலன்ஸ் வேன்களைக் கொடுக்க நடவடிக்கை எடுக்கிறோம். அதைப்போன்று இந்த தாலுக்கா மருத்துவ மனையையும் கவனிக்கலாம். முதலிலே கூடுதலாகப் படுக்கைகள் இருக்கக்கூடிய பகுதிகளை எடுத்துக்கொண்டு அதற்குப் பிறகு இதை எடுத்துக்கொள்ளலாம் என்று எனக்குத் துறையிலே குறிப்புக்களைக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடிய ஸ்ரீவைகுண்டம் பகுதிக்கு அருகிலே பாளையங்கோட்டை மெடிக்கல் காலேஜ் ஹாஸ்பிடல் இருக்கக் கூடிய காரணத்தினால் உடனடியாக அங்கேயிருந்து ஆம்புலன்ஸ் அனுப்பக்கூடிய நிலை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார்கள். நான் அதை ஆராய்ந்து பரிசீலிக்கிறேன் என்ற வாக்குறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. தகவல் கோரல்

### நீதிமன்றங்களின் தீர்ப்பின்மேல், சட்டமன்றம் தலையிடுவதற்குள்ள உரிமை

திரு உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் சட்டத் துறை பற்றிய விவாதத்தில் தாங்கள் ஒரு முடிவு எடுத்துச் சொன்னீர்கள். அதைப்பற்றிப் பலர் பலவிதமான கருத்துக்களைச் சொல்கிறார்கள். இப்போது நம்முடைய சட்டமன்றத்தினுடைய வரையறைகள், சக்திகள் எந்த அளவுக்கு இருக்கின்றன என்பதை நம்மைத்தவிர வேறு யாரும் வெளியிலிருந்து சொல்வதற்கில்லை. மதர் ஆப் பார்லிமெண்ட்ஸ் என்று சொல்லக்கூடிய பிரிட்டிஷ் பார்லிமெண்டிலேகூட இந்தப் பிரச்சினை நீண்ட நாட்களாகத் தீர்க்கப்படாமல் இருப்பதாக நாம் அறிகிறோம்.

Whether the House is supreme or the Court is supreme என்பதை அவர்கள் தெளிவாக ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வர முடியாத நிலைதான் இருக்கிறது. அதைப்போல கோர்ட்டுகளுக்கும் அவர்களுக்கே உரிய தனித்த ஒரு நிலை, சக்தி, பவர் உண்டு என்பதிலே மாறுபாடு கிடையாது இங்கே பேசப்பட்டும் தாங்கள் தீர்ப்பு அளித்திருக்கிறீர்கள். தங்கள் தீர்ப்பு தவறு என்றோ அல்லது சரியல்ல என்றோ நான் பேசுவதற்கு விரும்பவில்லை. பொது நலனைக் கருதி தேவையற்ற விவாதத்தைக் கிளப்பி, மீண்டும் கோர்ட்டு பெரிதா அல்லது சட்டமன்றம் பெரிதா யார் சொன்னது சரி அல்லது யார் சொன்னது சரியல்ல என்ற வீண் விவாதத்திற்கு இடம் அளிக்க வேண்டாம் என்று பலர் கருதுவதால் தாங்கள் அளித்த தீர்ப்பு — அதன் விவரத்திற்குள் நான் போக விரும்பவில்லை—அதைப்பற்றி ஒருமறு பரிசீலனையைந் தாங்கள் செய்து அதைப்பற்றிய கருத்துக்களை—நாம் பின்வாங்கிவிடுகிறோம் அல்லது தாங்கள் சொன்னது தவறு, திருத்திக் கொள்ள வேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை—பொது நலனைக் கருதி சில காரியங்களிலே நாம் விரும்புகிற ஒரு மாற்றத்தைச் செய்வதில் தவறில்லை என்று கருதுவதால் நாங்கள் உங்களைக் கேட்டுக்கொள்கிறோம். தாங்கள் அளித்த தீர்ப்பைப் பற்றி மறுபரிசீலனை செய்து பின்னால் சாவகாசமாக ஒரு முடிவு எடுக்கலாம், அதற்கு அவகாசம் கொடுத்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளைச் செய்யலாம் என்பது எங்களுடைய கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்ப்பு இங்கே என் மூலமாகத் தான் வழங்கப்படவேண்டும். இங்கே நான் தான் ஒரே ஒரு அதிபதி. நேற்று நடந்தது—I have taken the entire House into confidence. அவைக் குறிப்பை நான் எடுத்து வைத்திருக்கிறேன்.



It is the House decision. It is not an individual decision.

(குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் நேற்றைக்கு வரவில்லை, நான் என்ன செய்யமுடியும். புரசீடிங்ஸிலே இருக்கிறது, நான் அதிலே என்ன சொல்லியிருக்கிறேன் என்றால் யாராவது என்னுடைய முடிவில் அந்த நேரத்திலேயே தவறு என்று சொல்லிவிட்டால் I will shed. Because I should take you all with me என்று சொல்லியிருக்கிறேன். அதல்லாமல் அடுத்தும் சொல்லியிருக்கிறேன். ஹவுசை கான்பிடன்ஸிலே எடுத்துக் கொண்டுதான் இதைச் செய்கிறேன் என்றும் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) எல்லா உறுப்பினர்களும் இங்கே இருந்தார்கள் (குறுக்கீடு) இல்லை, நான் சொல்கிறேன், திரு. ரகுமான்கான் அவர்களே பேசும்போது உங்களுடைய தீர்ப்பிலே எனக்கு உடன்பாடு என்று பேசியிருக்கிறார். என்னிடம் அவைக்குறிப்பு இருக்கிறது. புரசீடிங்ஸ் எப்படி இருக்கிறது என்று நான் படித்துப் பார்த்தேன். அவர் இந்த அவையில் தான் சொன்னார். உங்களுடைய தீர்ப்பில் இது எனக்கு உடன்பாடு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். It is not the Speaker's decision. ஹவுஸ் டெசிஷன் தான். திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் கேட்டார்கள். நிர்வாகம் தவறு செய்தால் நீதிமன்றத்திற்குப் போகிறோம். அவர்கள் கண்டிக்கிறார்கள் ; சட்டமன்றத் துறையைப் பற்றியும் சில நேரங்களிலே தொட்டுப் பார்த்திருக்கின்றார்கள். ஆனால் அங்கே தவறு நடந்தால் என்ன செய்வது என்ற கேள்வியைக் கேட்கின்றபொழுது நான் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். அந்தப் பதிலிலே வந்தது தான் இது. இப்படி இருக்க வேண்டாம் என்று ஹவுஸ் முடிவு செய்தால் சரியாய்ப் போய்விட்டது. இந்தப் பிரச்சினையிலே கட்சிப் பாகுபாடு இல்லாமல்தான் நேற்று நடந்திருக்கிறது. இதிலே பார்ட்டி என்ற பிரச்னை இல்லை. இதை ஒரு இஷ்யூவாக ஆக்காமல் என்ன முடிவு செய்ய வேண்டுமோ அதை—திரும்பச் செய்ய வேண்டும் என்று சொன்னால் அதை ஹவுஸ் ஒத்துக்கொண்டால் சரி.

(முற்பகல் 10-30)

திரு. க. அன்பழகன் : பேரவையின் தலைவர் அவர்களே, இந்த அவையிலே இப்பொழுது நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய அந்தக் கருத்தை, அந்த நோக்கத்தை நான் ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல வேண்டிய அவசியத்தில் இருக்கிறேன். நேற்றையதினம் தாங்கள் இந்தத் தீர்ப்பை வழங்கிய நேரத்தில் இந்த மன்றத்தில் சில உறுப்பினர்கள்.....

[1986 ஏப்ரல் 8

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் மீண்டும் சொல்கிறேன்.
தாங்கள் வழங்கியது, தாங்கள் வழங்கியது என்று சொல்லவேண்
டாம். அவை வழங்கிய நேரத்தில் என்று சொல்லுங்கள்.
ஏனென்றால் இதிலே 234 பேர்களையும் கான்பிடன்சில் எடுத்துக்
கொண்டுதான் நான் பேசுகிறேன். அதனாலே அவை தீர்ப்பு,
அவை தீர்ப்பு என்று சொல்லுங்கள்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, 234 பேர்களையும்
கான்பிடன்சில் எடுத்துக் கொண்டு சொல்கிறேன் என்பது பொது
வான ஒரு கருத்தே தவிர, இந்த அவையிலே அவை முழுவதும்
ஒத்துக்கொள்வதாக இருந்தால், அவை முன்னவராலேயோ மற்ற
வர்களாலேயோ ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டு, அந்தத்
தீர்மானம் நிறைவேற்றப்பட்டால்தான் அவை முழுவதும் ஒத்துக்
கொண்டது என்ற பொருளே தவிர, எதிர்ப்பு இருந்தால்கூட
அப்படி ஒரு தீர்மானம் வருமானால் அப்பொழுது ஒத்துக் கொள்ளப்
பட்டதாகப் பொருளே தவிர, தாங்கள் தங்களுடைய மனச்
சான்றின்படி, எல்லோரும் ஒத்துக்கொள்கிறார்கள் என்று கருதி
இப்படி ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறீர்களே தவிர, அதற்
காகத் தங்கள் மீது குற்றம் சாட்டுவது என்னுடைய நோக்கம்
அல்ல; உங்களுடைய மனச் சான்றில் இந்த அவை ஒத்துக்கொள்
ளும் என்று—ஏனென்றால், அவைக்குக் கிடைக்கின்ற ஒரு பெருமை
காரணமாக, ஒரு முக்கியத்துவம் காரணமாக அவை முழுவதும்
ஒத்துக்கொள்ளும் என்று தாங்கள் கருதி இருக்கக்கூடும். ஆனால்
அப்பொழுதுகூட இந்த அவையிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சியைச் சேர்ந்த தோழர் ரமணி அவர்களே, சிந்தன் அவர்களே,
ரகுமான்கான் அவர்களேகூட சில ஐயங்களை எழுப்பி இருக்
கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுதும் நான் சொல்
கிறேன். ஒரே வரியிலே சொன்னால்கூட இந்தப் பிரச்னையை
நாம் முடித்துவிடலாம். Do you want that judgement to be here
or not ? இது விவாதத்தில் வேண்டாம். எதற்காகச் சொல்கிறேன்
என்றால், உறுப்பினர் பேசியதையெல்லாம் பேசவில்லை என்று
சொன்னாலும் அது என்னுடைய கருத்துக்கு நல்லது அல்ல.
நாம் எடுத்த அந்த முடிவை நீங்கள் மாற்றுவதற்கு வேறு
ஏதாவது பேச வேண்டாம். நேற்று எல்லோரையும் வைத்துக்
கொண்டுதான் இதைப் பேசினோம். திரும்ப அதைப்பற்றி
எழுப்பி ரகுமான்கான் இப்படிச் சொல்லவில்லை, சிந்தன் இப்படிச்
சொன்னார் என்றால் அது நம்முடைய ஒரு ஹானருக்கு நல்ல
தாக இருக்காது.



1986 ஏப்ரல் 8]

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நான் தங்கள் மூல
மாக அல்லது தங்களுக்குத் தெரிவிக்க வேண்டிய மிக முக்கியமான
ஒரு கருத்து, அவை முழுவதும் உடன்பட்டது என்ற ஒரு கருத்
தைத் தாங்கள் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் அவையில்
அதற்கான முறையில் நடவடிக்கை இல்லை. அவையிலே ஒரு
தீர்மானம்—இந்த அவையிலே இருந்து....

**Mr. SPEAKER** : I am asking you in one line. Whether you
want that judgement or not ? If you want to have it, we will have it.
If you don't want it we will take it out immediately. இதற்கு
விவாதமே வேண்டாம். இதில் வேறு என்ன இருக்கிறது. இந்த
விவாதங்கள் வந்து அது வேறுவிதமாக வெளியிலே வரும்,

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஒரே வரியில் கேட்
பதாலே சொல்கிறேன். அந்தத் தீர்ப்பை திராவிட முன்
னேற்றக் கழகம் ஏற்றுக்கொள்ளவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைக்கு ஏற்றுக் கொண்
டீர்கள், இன்று காலையில் ஏற்றுக்கொள்ளவில்லை. நேற்று
ஏற்றுக்கொண்டது, (குறுக்கீடு) இதில் கட்சி இல்லை என்று
சொல்கிறேன். என்னை கட்சிச் சார்பில்லாமல் எண்ணிப் பார்ப்பது
நல்லது. நான் அதைத்தான் சொன்னேன். நான் ஆரம்பத்
திலேயே சொன்னேன். இது ஒரு கான்ட்ரவர்ஸி, வேண்டாம்
என்று. கான்ட்ரவர்ஸி என்றுதான் சொன்னேன்.

திரு. க. அன்பழகன் : நீங்கள் சொல்வதை அவை ஏற்றுக்
கொண்டதாக அர்த்தம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாட்டுக்காகவே சொன்னேன்.
இது கான்ட்ரவர்ஷியல் என்று சும்மா இருந்திருக்க வேண்டும்.
எல்லோர் மாதிரி நானும் நாடு போவதுபோல் போகட்டும் என்று
இருந்திருக்கவேண்டும். Why should I take it. I am not a selfish
person. I am a practising lawyer. I have to go back. நான்
செல்பிஷாக இருந்திருந்தால் இதைச் செய்திருக்க மாட்டேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித்
தலைவர் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய
தலைவர் மாண்புமிகு பேராசிரியர் அவர்களும் இங்கே கருத்துக்
களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்
கட்சித் தலைவரவர்கள் பேசுகின்றபொழுது, நேற்று ஒரு குறிப்
பிட்ட வழக்கு பற்றியும், அது உயர்நீதி மன்றத்திற்கும், உச்ச

நீதி மன்றத்திற்கும் சென்ற விதம் பற்றியும், அதன் மூலம் ஏற்பட்ட தீர்ப்புகளினுடைய தன்மைகளைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் எடுத்துத் தெரிவித்ததற்கிணங்க நீங்கள் அந்தக் கருத்தின் அடிப்படையிலே, இந்த அவைக்கு இருக்கிற உரிமைகளையும் வைத்துக்கொண்டு, இந்த அவையை நம்பிக்கைக்கு உரியதாக எடுத்துக்கொண்டு, தாங்கள் தீர்ப்பு வழங்க முடியும் என்ற வகையிலே தீர்ப்பும் வழங்கி இருக்கிறீர்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துத் தெரிவித்ததற்கிணங்க அந்தத் தீர்ப்பு வழங்கத் தங்களுக்கு உரிமை இல்லையென்றோ அல்லது அப்படிப்பட்ட கருத்துக்கள் எடுத்துச் சொல்லக் கூடாது என்றோ இங்கே வாதாடுகின்ற தன்மைகள் இல்லை.

நாட்டிலே பல்வேறு மாநிலங்களிலே உச்ச நீதிமன்றத்திற்கும் மாநில சட்டமன்றத்திற்கும் பல்வேறு முரண்பாடுகளும், வேறுபாடுகளும், பிணக்குகளும் ஏற்பட்டதன் காரணமாக, பல்வேறு சங்கடங்களும் பல்வேறு சூழ்நிலைகளில் கட்டுப்பாடுகளும் ஏற்பட்டிருக்கின்ற விளைவுகளை எல்லாம் நாம் வரலாற்றிலே கண்டிருப்பதன் காரணமாகவும் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலும் நீதிமன்றத்திற்கும் சட்டமன்றத்திற்கும் ஒரு ஒழுங்கான நட்புறவுத் தன்மை தொடர்ந்து நீடித்துக் கொண்டுவருவதன் காரணமாகவும்—நாம் அதைத்தொடர்ந்து காப்பாற்றிக் கொண்டு வருகின்றோம்; இந்த அவையும் காப்பாற்றிக் கொண்டு வருகின்றது. அவ்வப்போது மீறுகின்ற சூழ்நிலைகள் ஏற்பட்ட பொழுதெல்லாம் கூட அவைத் தலைவர் என்ற முறையில் அவற்றை காப்பாற்றுகின்ற வகையில், பல்வேறு தீர்ப்புகளைத் தாங்கள் வழங்கியிருக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர்களும் அந்தத் தீர்ப்புகளை ஏற்றுக்கொண்டு அந்த ஒழுங்குக்கு ஏற்ப தங்களுடைய கருத்துக்களை வழங்கிக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஜனநாயக அமைப்பிலே, அதுவும் பாராளுமன்ற ஜனநாயக அமைப்பிலே, நாம் அனைவரும் அறிந்த வகையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொல்வதற்கிணங்கவும் பேராசிரியர் அவர்கள் சொல்வதற்கிணங்கவும் இந்தச் சட்டமன்றத்திற்கென்று சில பொறுப்புகள், கடமைகள் இருக்கின்றன; நீதிமன்றத்திற்குச் சில பொறுப்புகள், கடமைகள் இருக்கின்றன. அதைப் போன்று நிர்வாகத்திற்கும் பொறுப்புகள், கடமைகள் இருக்கின்றன. நீதிமன்றம் தன்னுடைய பொறுப்பிலே, கடமையிலே முழு உரிமையும் பெற்று விளங்குகின்றது. சட்டமன்றத்தைப் பொறுத்தவரையிலும் அதனுடைய பொறுப்புகள், கடமைகள் ஆற்றுவதிலே முழு உரிமையும் பெற்று விளங்குகின்றது. இதனை மீறி நடக்கவோ அல்லது இதனைத் தடுத்து நிறுத்தவோ யாருக்கும் இந்த நாட்டில் உரிமையில்லையென்பது நிலைநாட்டப்பட்ட ஒன்று. அந்த வகையிலே



தான் பணிகள் ஆற்றிக் கொண்டு வருகின்றன. ஆனால் உரிமைகளும் கடமைகளும் என்று வைத்துக் கொண்டு வருகின்றபொழுது 'கோஆர்டினேஷன் அன்ட் கோஆப்பரேஷன்' என்று சொல்கின்ற முறையில், தனித்தனியாக, இயங்குகின்ற இயல்புகளைக் கொண்டிருந்தாலும், தனித்தனியாக இயங்கி வருகின்ற பொறுப்புகள், கடப்பாடுகள் இருந்தாலுங்கூட, ஒரு கூட்டு உணர்வு அல்லது ஒத்துழைப்பினுடைய தன்மையிலேதான் ஜனநாயகம் இயங்கி வருகின்ற பாங்கு இருப்பதன் காரணமாக, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துத் தெரிவித்ததற்கிணங்கவும் பல்வேறு கருத்துக்கள் கொண்டிருப்பதற்கிணங்கவும் தங்களுக்கு அந்த உரிமை இல்லையென்றோ, அல்லது தாங்கள் அளித்த தீர்ப்பு சட்டத்திற்கு முரண்பட்டது என்றோ அந்தக் கருத்து இல்லை. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட வேண்டாம். ஏனென்றால், இந்தப் பிரச்னையே அவையைப் பொறுத்தும் அல்ல, இந்த அவையோடு ஒட்டி வருகின்ற ஒன்றும் அல்ல. இந்த அவை பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை இருந்து இந்த அவையினுடைய உரிமை பாதிக்கப்படுகின்ற நிலைமை வந்திருந்தால், இந்த அவை முழு மூச்சோடு இருந்து அதைக் காப்பாற்றுவதற்காக, உயர்நீதிமன்றத்தோடோ, அல்லது உச்ச நீதிமன்றத்தோடோ வாக்கு வாதங்கள் நடத்தி, நாம் நிலை நாட்ட வேண்டியது அவசியமாகும்.

இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் எடுத்துச் சொல்வதற்கிணங்க இங்கே ஒரு சுமூகமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் இருப்பதன் காரணமாக, அந்தத் தீர்ப்பை மாற்ற வேண்டுமென்று கூட அல்ல, ஆனால் ஒரு ஜட்ஜ்மென்ட் அல்லது தீர்ப்பு என்று வந்துவிட்டால், தீர்ப்பு வந்ததற்குப் பிறகு, கருத்துக்களைச் சொல்வதற்கு, சரியான தீர்ப்பு என்று சொல்வதற்கு யாருக்கும் உரிமை உண்டு, அது சரியான தீர்ப்பு அல்ல என்று சொல்வதற்கு யாருக்கும் உரிமை உண்டு. முறைகேடாக அந்தத் தீர்ப்பைக் கொடுத்து விட்டார்கள் என்று சொல்வதற்கு உரிமை உண்டு. ஆனால், வழங்கிய நீதிபதியின்மீது உள்நோக்கம் வைத்து, இதற்காக அவர் தீர்ப்பளித்தார் என்று மட்டும்தான் சொல்லக் கூடாது. நீதிபதியின் மீது உள்நோக்கம் வைத்து சொல்லக் கூடாதே தவிர, தீர்ப்பைப் பற்றி எது வேண்டுமானாலும் சொல்லலாம். (குறுக்கீடு) ஜட்ஜைப் பற்றி சொல்லக்கூடாது, தீர்ப்பைப் பற்றி சொல்லலாம்.

தீர்ப்பைப் பற்றி திரு. சித்தன் அவர்கள் பேசுகின்றபொழுது கருத்துக்கள் சொன்னார்கள், கருத்துக்கள் சொல்ல உரிமை உண்டு. அந்த வகையில், தாங்கள் சொன்னதையும் தீர்ப்பாக வைக்காமல் தாங்கள் சொன்ன கருத்தாக ஏற்றுக் கொண்டு, அதனை ஒட்டி—அவர்கள் சொன்னார்கள், தாங்களும் அந்தக் கருத்தோடு ஒட்ட வேண்டும் என்று ஒரு கருத்தை வெளியிட்டீர்கள் என்ற அளவில், இந்தக் கருத்து நாட்டு மக்களால் உணரப்படுகின்ற அளவுக்கு இருக்கும் என்ற அளவிலே கொண்டு, அதைத் தீர்ப்பாக இல்லாமல் வைத்துக்கொள்கிற சூழ்நிலை ஏற்பட்டால்,

ஒரு சுமூகமான சூழ்நிலை ஏற்படும் .(குறுக்கீடு) நான் சொன்னது கருத்து சொல்ல உரிமை உண்டு, அந்தக் கருத்தின் அடிப்படையில் சொல்லப்பட்டது. தங்கள் தீர்ப்பாக வழங்கப்படவில்லையென்று மாற்றி அமைக்கப்பட்டு விடுமேயானால், சுமூகமான சூழ்நிலை ஏற்பட்டு விடும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கூறியதற் கிணங்கவும் தாங்கள் கூறியதற்கிணங்கவும்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவையில் நீதி பதிகளைப்பற்றி பிரச்சனை எழுப்புவதை அனுமதிப்பதில்லை. நீதிபதிகளைப் பற்றி இங்கே விவாதிப்பது கிடையாது. அரசியல மைப்புச் சட்டத்தில் ஆர்டிகிள் 211ல் கிளியராக இருக்கிறது.

"Conduct of any Judge of a High Court or of the Supreme Court in the discharge of duty cannot be discussed here".

ஆனால் நம்முடைய உயர் நீதிமன்றத்திலே ஒரு தீர்ப்பு அந்த 211-ஐ மீறியிருக்கிறது. மூன்று நீதிபதிகள் கொண்ட ஒரு பெஞ்ச், ஒரு முன்னாள் தலைமை நீதிபதி மீது ஒரு வழக்கைத் தொடரும்போது அவர் இதே கருத்தைத்தான் நீதிமன்றத்தில் வலியுறுத்தினார். 3 நீதிபதிகள் கொண்ட பெஞ்ச் சொல்லி யிருக்கிறது:

"Receiving bribe is not in the discharge of duty" என்று. அந்தக் கருத்தில்தான் நேற்று இவ்வளவு விவாதம் வந்ததால், சட்டம், அந்தப் பிரச்சனை தெரிந்ததால் சொன்னேன். இன்றைக்கும் அந்த ஜட்ஜ்மெண்டை ரிவர்ஸ் செய்யவில்லை.

The judgement is not reversed.

அதையும் வேண்டாம் என்று சொன்னால் 'ஹவுஸ்' முடிவுப் படி செய்யலாம். ஆனால் இந்த அவையில் விவாதிக்கலாம் என்பது, சபாநாயகர் என்ற முறையில் நான் உங்களுக்கு அந்தத் தீர்ப்பின் மூலமாக சொல்வது. ஒரு ஃபுல் பெஞ்ச் ஜட்ஜ்மெண்டாக இருப்பதால்தான், இல்லை என்றால் அனுமதித்திருக்கமாட்டேன். (குறுக்கீடு) இல்லை. வழக்கில் இருக்கிறது. It is a public document. நீங்கள் அந்த ஜட்ஜ்மென்டை வாபஸ் பண்ண வேண்டு மென்று சொல்கிறீர்களா வேண்டாம் என்று சொல்கிறீர்களா? அதையும் சொல்லுங்கள்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்ன கருத்திலே ஒரே ஒரு கருத்தைத் தான்,...



மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொல்லி முடித்துவிடு கிறேன். சுமூகமாக வரவேண்டுமென்று சொல்லுங்கள்; சரி. ஆனால் சட்டத்திற்குப் புறம்பாக அல்ல. நாட்டிலே என்ன தவறு நடந்தாலும், இனிமேல் யாரும் தட்டிக்கேட்க வேண்டாம் என்ற முறையிலே வேண்டுமானால் சொல்லுங்கள், ஒத்துப்போவோம்; யாரும் பாதிக்கப்படலாம்,

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :

** **

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தாங்கள் ஒரு முடிவுக்கு வருவதற்கு சில காரணங்களைச் சொல்லக்கூடும். ஏற் கெனவே இருக்கிற தீர்ப்பு அல்லது கருத்தைப்பற்றிச் சொல்வதன் காரணமாக அவை முன்னவர் சொன்ன கருத்து மறுபடியும் அடி பட்டுப் போகிறது. 'மோட்டிவேஷன்' அல்லது ஏதாவது ஒரு 'இன்சினுவேஷன்' இருக்கக் கூடாது என்று அவை முன்னவர் அவர்கள் தெரிவித்தார்கள். அது ஒரு பிரச்சனை.

** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சுமத்தவில்லை. சட்ட நுணுக்கத்தைச் சொன்னேன். நேற்று எதிர்க்கட்சித் தலைவர், திரு. என். எஸ். வி. சித்தன் மற்றவர்கள் எல்லாம் கேட்டார்கள் எங்கே போய் நீதி கேட்பது என்று. அதிலிருந்துதான் இந்தப் பிரச்சனை வந்தது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :

** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என் கருத்து என்று சொன்னால் என்ன அர்த்தம்? எனக்கும் அது தெரியும். It is an unpleasant scene.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இங்கே மற்றவர்கள் எடுத்துச் சொல்லியதற்கு இணங்கவும், தாங்கள் சொல்லியதற்கு இணங்கவும் சட்டப் பிரச்சனை, உரிமைப்பிரச்சனை மற்றவை பற்றி விவாதிக்க வேண்டாம் என்ற

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

முடிவுக்கு வந்து, ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்ற தன்மையின் அடிப்படையிலே, தாங்களும் அப்படியானால் ஒரு முடிவு செய்யலாம் என்று சொன்னதற்கு இணங்க, ஒரு சுமுகமான முடிவு ஏற்பட வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையிலே, இங்கே பல மாறுபட்ட கருத்துக்கள் கொண்டுபொருளைத் தீர்ப்பாக இல்லாமல் கருத்தாக வைத்துவிடலாம் என்று கருதுவதால் கடைசியாக தீர்ப்பு என்று சொன்னீர்கள், அதை மாற்றிவிட்டு கருத்து என்று சொல்லிவிட்டால் அது ஆளும் கட்சி, எதிர்க் கட்சிகள் எல்லோருக்கும் ஒத்த முடிவாக இருக்கும். ஆகவே, இந்த அவையின் கருத்தை தாங்கள் தெரிவித்ததாக கூட சொல்லி விடலாம்.

**திரு. வே. இரா. ஜெயராமன் :**

** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்ன செய்யவேண்டும் என்று சொல்லுங்கள் ....(குறுக்கீடுகள்)....

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, நேற்று நீங்கள் சொல்லிக்கொண்டு வந்த கருத்துக்கள் அவ்வளவும் சரிதான். உங்களுடைய கருத்தாக அவை அனைத்தும் இருக்கலாம். பேரவை கேட்டுக் கொண்டதற்கிணங்க பிரச்சினையை உருவாக்கக்கூடிய ஒன்றிரண்டு ஆட்சேபகரமான கருத்துக்களையும், இறுதியில் தாங்கள் தீர்ப்பாகச் சொன்ன பகுதியையும் தாங்களே அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடலாம் என்ற அளவுக்கு முடிவு பண்ணுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவை முன்னவர் அவர்கள் கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

இன்று அவை முன்னவர் சொன்ன கருத்து, நான் பேசியவை அவைக்குறிப்பில் இருக்கும்: மற்றவை நீக்கப்படுகிறது.

**திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசியதும் நீக்கப்படுகிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் பேராசிரியர் மற்றும் நான் பேசிய கருத்துக்கள்தான் முக்கியமாகப் பேசப்பட்டவை யாகும். இவை மட்டும் இருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சரி, அப்படியே இருக்கலாம்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



## 4. கவன ஈர்ப்புகள்

(அ) செங்கற்பட்டு மாவட்டம், பாலு செட்டி சத்திரம் காவல் நிலையத்தில் ஒரு காவல் கைதியை கொலை செய்ய முயற்சித்ததாகக் கூறப்படுவது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் கு. சுப்பராயன், இரா. தாமரைக்கனி, அ. ரகுமான்கான், கு. ரமணி, கோ. வீரய்யன், ஜே. ஹேமச்சந்திரன், மற்றும் எம். செல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. கு. ரமணி :** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, "செங்கற்பட்டு மாவட்டம், பாலு செட்டிசத்திரம் காவல் நிலையத்தில் சேட் என்கிற காவல் கைதி மீது மண்ணெண்ணெய் ஊற்றி கொலை செய்ய முயற்சி நடந்ததாக அக் கைதி மரண வாக்குமூலம் கொடுத்துள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை

12—3—86 அன்று திருப்புக்குழி கிராமத்தைச் சேர்ந்த விஜயன் என்பவர், பாலுசெட்டிசத்திரம் காவல் நிலையத்தில், 7—3—86 அன்று தன் வீட்டிலிருந்து ரூபாய் 600 பெறுமான லுங்கிகள் களவு போய்விட்டதாகவும், இக்களவு சம்பந்தமாக, அண்டை வீட்டிலுள்ள பச்சையப்பன் மற்றும் அவரது நண்பர் சேட்டு, த/பெ. முனுசாமி என்பவர்கள் மீது தனக்கு சந்தேகமிருப்பதாகவும் ஒரு புகார் கொடுத்தார். பாலு செட்டிசத்திரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் இப்புகார் குறித்து 12—3—86 அன்று குற்ற எண். 76/86 இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 380-ன் கீழ் வழக்குப் பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்டார். சந்தேகத்திற்குரிய குற்றவாளி சேட்டு, காவல் நிலையம் அழைத்து வரப்பட்டு விசாரிக்கப்பட்டபோது சம்பந்தப்பட்ட குற்றத்தில் தான் ஈடுபடவில்லை எனக் கூறியதாகத் தெரிகிறது. உதவி ஆய்வாளர் சேட்டுவை இன்னும் சிறிது அவகாசம் அளிப்பதாகவும் மீண்டும் வந்து உண்மையை சொல்லுமாறும் சிறிது அவகாசம் அளித்து அனுப்பிவைத்ததாகக் கூறப்படுகிறது.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1986 ஏப்ரல் 8

இதற்கிடையே 13–3–86 அன்று இரவு 11-50 மணியளவில், திருப்புக்குழியைச் சேர்ந்த மணி என்பவர் பாலுசெட்டிசத்திரம் காவல் நிலையம் வந்து, சேட்டு என்பவர் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்தில் தன்மீது மண்ணெண்ணை ஊற்றி தீவைத்துக் கொண்டதாகவும், காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு அவரை எடுத்துச்சென்று அனுமதித்ததாகவும் கூறினார். இது குறித்து பாலுசெட்டிசத்திரம் காவல் நிலையத்தில் குற்ற எண் 77/86 இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 309-ன் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை நடைபெற்றுவருகிறது. சேட்டு மருத்துவரிடம் தன் உடலில் உள்ள தீக்காயங்கள் தானே வாழ்க்கையில் விரக்தியுற்றதினால் உண்டாக்கிக்கொண்டவை என்று கூறியதாக செங்கற்பட்டு காவல் துறை கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார். காஞ்சிபுரம் மருத்துவமனை மருத்துவரின் வேண்டுகோளின்படி, காஞ்சிபுரம் நீதித்துறை குற்றவியல் இரண்டாம் நிலை நடுவர் மருத்துவமனைக்கு அழைக்கப்பட்டு 14–3–86 அன்று மாலை 5.30 மணியளவில் சேட்டுவிடம் மரணவாக்குமூலம் பெறப்பட்டது. சேட்டு தன் மரணவாக்குமூலத்தில் ஒருவாரத்திற்கு முன் தான் காவல் நிலையம் அழைக்கப்பட்டு தாக்கப்பட்டதாகவும் ஒரு திருட்டுக் குற்றத்தை ஒப்புக்கொள்ளுமாறு கட்டாயப்படுத்தப்பட்டதாகவும் அப்போது உதவி ஆய்வாளரும் மற்றும் மூன்று காவலர்களும் தன்மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்ததாகவும் கூறியுள்ளார்.

மரணவாக்கு மூலம் கிடைக்கப்பெற்றவுடன் காஞ்சிபுரம் நகர சட்டம் மற்றும் ஒழுங்கு ஆய்வாளர் 17–3–86 அன்று பாலுசெட்டிசத்திரம் காவல் நிலைய குற்றப் பிரிவு உதவி ஆய்வாளர் மற்றும் 3 காவலர்களுக்கெதிராக விஷ்ணுகாஞ்சி காவல் நிலைய குற்ற எண். 308/86-ன் கீழ் வழக்கு பதிவு செய்து, காஞ்சிபுரம் கோட்ட கூடுதல் பொறுப்பிலிருந்த சைதாப்பேட்டை வருவாய்க் கோட்டாட்சியருக்கு விரைவு அறிக்கை ஒன்று அனுப்பிவைத்தார். 18–3–86 அன்று சேட்டு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டார். தீக்காயங்களுக்கு சிகிச்சை பெற்றுவரும்போது 25–3–86 அன்று அதிகாலை 1.30 மணியளவில் சேட்டு மரணமடைந்தார். பாலுசெட்டிசத்திரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. மணி தற்காலிக பணி நீக்கத்தில் வைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து காவல் நிலை ஆணை எண். 145-ன் கீழ் சைதாப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் விசாரணை நடத்துமாறு செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரால் பணிக்கப்பட்டுள்ளார். விசாரணை விரைவாக நடைபெற்றுவருகிறது. விசாரணை அறிக்கை பெற்று அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.



1986 ஏப்ரல் 8]

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, போலீஸ் லாக் அப்பிலே நடக்கும்படியான பல கொடுமைகளைப் பற்றிப் பார்த் தால் எப்படிப்பட்ட கடுமையான தவறுகள் நடந்தாலும் கூட கடைசியில் தற்கொலை என்ற பெயரால் அல்லது வேறு விதத்தில் கொலை செய்யப்பட்டார்கள் என்ற நிலைமையிலே தொடர்ந்து வருவது என்பதை இந்த மன்றத்தில் நாம் பல தடவை பார்த்துக் கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட அநீதிகள், அநியாயங்கள் நடக் கக்கூடாது. குற்றம் செய்பவர்களைப் பொறுத்த வரையில் நியாயமாக விசாரித்துத் தண்டிப்பதில் யாருக்கும் கருத்து வேறு பாடு இல்லை. ஆனால் இந்தப் பிரச்சினையில் சம்பந்தப்பட்டவர் ஏதோ துணி திருடிக்கொண்டு போனார் என்ற காரணத்தினால் முதலிலே அழைத்து விசாரித்து இருக்கிறார்கள். அதன்பின்னர் அவரைப் போகச் சொல்லி இருக்கிறார்கள்.

பின்னர் மறுபடியும் வரச்சொல்லி விசாரித்து அப்படித்தான் காரியம் நடந்தது என்று கூறப்படுகிறது. இறந்துபோனவர் மீது மண்ணெண்ணெயை ஊற்றிக் கொளுத்தியதன் காரணத்தால், அதாவது அதன்மூலம் அவர் கொலை செய்யப்பட்டார் என்று அவருடைய மரண வாக்குமூலத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் சம்பந்தப்பட்ட போலீசாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப் பட்டுள்ளது என்பது உண்மை. ஆனால் அந்த வழக்கைப் பொறுத் தவரையில் கொலைக் குற்றம் செய்யக்கூடிய வழக்காகத் தாக்கல் செய்வதுதான் சரியாக இருக்கும். அப்படிப்பட்ட முறையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை. இது கடுமையான குற்றம். கொலை செய்யப்பட்டிருக்கிறது. வாக்குமூலம் வந்திருக்கிறது. போலீசார் மீது தாவா இருக்கிறது. சரியான நடைமுறையாக இது இல்லை. கொலைக்குற்றவாளிகளாகக் கருதி அந்த வகையில் அவர்கள் மீது வழக்கு கொண்டுவருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சி குறித்து பல்வேறுவிதமான தகவல்கள் காவல் துறைக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் வந்திருக் கின்றன. அவர்கள் மூலம் அரசுக்கும் கிடைத்திருக்கிறது. ஒரு ஆர். டி. ஓ. விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிற காரணத் தால், இதிலே நடை பெற்றிருக்கிற உண்மையான சம்பவங்கள் அனைத்தும் தக்க சாட்சியங்களுடன் விசாரிக்கப்படும் என்பதை யும், அப்படியாராவது குற்றம் செய்திருந்தால் அவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், அதையொட்டித்தான் அங்கே குற்றம் சுமத்தப் பட்ட ஒரு காவல்துறை அதிகாரி தற்காலிக வேலை நீக்கம் செய் யப்பட்டிருக்கிறார். அவர்கள் மீது கொலை முயற்சி போன்ற குற்றப்பதிவுகள் செய்யப்பட்டு அந்த வழக்கும் விசாரணையில்

இருக்கிறது. ஆகவே தவறாக சட்டத்தை அல்லது மரபுகளை மீறி எந்தத் துறையைச் சார்ந்தவர்கள் இதிலே நடந்து கொண்டிருந்தாலும், யார் நடந்து கொண்டிருந்தாலும், அவர்களைப் பற்றிய விசாரணை முடிவுகள் கிடைத்ததற்குப் பிறகு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஆ) திண்டுக்கல் சிறுமலைப் பகுதியில் காட்டு விலங்குகளின் தொல்லை.

திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் தொகுதியிலுள்ள சிறுமலைப்பகுதியில் 20க்கும் மேற்பட்ட காட்டு எருமைகள் மலைத் தோட்டங்களில் புகுந்து காப்பி, எலுமிச்சை, மாதுளை போன்ற பயிர்களையும், அங்குள்ள குடிசைகளையும் நாசப்படுத்தி வருவதால், அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள அச்சம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திண்டுக்கல் வனக் கோட்டம், சிறுமலைப்பகுதியில் காட்டு எருமைகள் இருக்கின்றன. பொதுவாக இக்காட்டெருமைகள் காட்டிற்குள் கூட்டமாகச் செல்லும்போது அவற்றில் சில எருமைகள் பிரிந்து காடுகளை ஒட்டியுள்ள பட்டா நிலங்களிலோ, தோட்டங்களிலோ அவ்வப்போது புகுந்துவிடுவதுண்டு. அச்சமயங்களில் காட்டெருமைகளுக்கு ஊறு ஏதும் நேராவண்ணம் பொதுமக்கள் அவற்றைக் கழி, கம்புகள் கொண்டு காட்டிற்குள் விரட்டிவிடுவார்கள். இது போன்ற நிகழ்ச்சிகள் காடுகளை ஒட்டியுள்ள பட்டா நிலங்களில் அவ்வப்போது ஏற்படுவதால் இதனால் பொதுமக்கள் அதிகமாக பீதி அடைவதில்லை. இதுபோன்ற சம்பவங்களினால் பயிர்களுக்கோ, மரம், செடி, கொடிகளுக்கோ அதிகமாக சேதங்களும் ஏற்படுவதில்லை.

சென்ற மாதம் சிறுமலைக் கிராமத்தைச் சேர்ந்த திருமதி சொர்ணம்மாள் மற்றும் திருமதி கந்தாயம்மாள் என்கின்ற லீலா ஆகியோரின் பட்டா நிலங்களில் காட்டெருமைகள் நுழைந்த போது அருகில் தோட்டங்களில் வேலை செய்துகொண்டிருந்த கிராம மக்கள் கம்பு தடிகளைக் கொண்டு அவ்விலங்குகளை மீண்டும் காட்டிற்குள் விரட்டியதாகவும் அப்போது அவற்றில் சில



இங்குமங்கும் ஓடியதால் நிலத்திலுள்ள பயிர்கள் மிதிபட்டு மிகச் சிறிதளவு சேதம் ஏற்பட்டதாகவும் தெரியவருகிறது. இச்சேதத்தினால் பட்டாதாரர்களின் மகசூலுக்கு குந்தகம் ஏதும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

அப் பகுதியில் மக்களிடம் அச்சமோ, பீதியோ எழவில்லை.

திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அங்கே அச்சம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் சிறுமலைப் பகுதியிலே பழையூரில் ஏசப்பன் என்ற ஒருவர் தன்னுடைய குடிசைக்கருகில் மலைத் தோட்டப்பணியில் இருந்தபோது, காட்டு எருமைகள் தாக்கி அவரை காயப்படுத்தியதோடு மட்டுமல்லாமல் குடிசைக்குள் புகுந்து அங்கேயும் சேதப்படுத்தியிருக்கிறது. அவர் அதைப்பற்றி காயங்களுடன் வந்து என்னிடம் சொல்லி மனு கொடுத்திருக்கிறார். அதைப்போல சையது என்பவர் அவருடைய காரிலே மலைத்தோட்டத்திற்கு சென்றபோது காட்டு எருமைகள் அவருடைய காரை தாக்கி, கார் கூட சேதம் அடைந்து விட்டது.

ஏற்கெனவே சிறுமலையில் இருக்கின்ற பகுதிகளில் வாழைகள் போன்ற பயிர்கள் நோயினால் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மிஞ்சியுள்ள காப்பி, எலுமிச்சை, மாதுளை போன்ற பயிர்களுக்கும் பாதிப்பு இந்த காட்டு எருமைகளால் அதிகமாகி வருகிறது. முதலிலே பத்து காட்டு எருமைகள் தாம் இருந்தன. அவைகள் இப்போது அதிகமாகி இனப்பெருக்கத்தின் காரணமாக 20-க்கும் மேலாக இருந்து வருகின்றன. ஆகவே அந்தச் சூழ்நிலையைக் கருதி, நிரந்தரமாக மக்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும் வண்ணம், அவற்றை அங்கிருந்து அகற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சமீபத்திலே மேலும் நடைபெற்ற ஒன்றிரண்டு சம்பவங்களை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். பொதுவாக திருநெல்வேலி பகுதியிலே கூட காட்டுப் பன்றியினுடைய நடமாட்டத்தினாலே ஏற்படுகிற தொல்லைகள் குறித்து விவசாயிகள் புகாரும் செய்திருக்கிறார்கள். அவற்றை விரட்டுவதற்காக சில நடவடிக்கைகளை விவசாயிகளே மேற்கொள்ளுவதும் புழக்கத்தில் இருந்து வருகிறது. இந்தச் சிறுமலைப் பகுதியில் காட்டெருமைகள் பெருக்கம் அதிகமாக இருக்கிறதாகவும், அவற்றின் நடமாட்டம் அதிகமாக இருக்கிறதாகவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்றார்கள். அந்தக் காட்டெருமைகளையும் நாம் காப்பாற்றியாக வேண்டும். அதனுடைய உயிருக்கும் நாம் சேதம் ஏற்படுத்தி விடக் கூடாது. அதேநேரத்தில் பயிர்களையும் மற்றும் மக்களையும் நாம் காப்பாற்றியாக வேண்டும். ஆகவே இப்போது ஏற்பட்டிருக்கி

[திரு. ஆர். எம். வீரப்பன்]

சூழ்நிலைகளை மனதிலே கொண்டு வனத்துறையின் அதிகாரிகளுக்கு தக்க ஆலோசனைகள் வழங்கப்படும். வனத் துறை அதிகாரிகளும், அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகளும் கலந்து பேசி அதன்மூலமாக காட்டெருமைகளை விரட்டுவதற்கு நாம் விவசாயிகளுக்கும் பயிற்சி கொடுத்து, அந்தப் பழக்கத்தையும் ஏற்படுத்தினால் பயிர்களுக்கும் பாதகம் ஏற்படாது, காட்டெருமைகளின் உயிருக்கும் சேதம் ஏற்படாது.

திரு. ஆ. பிரேம்குமார் : தலைவர் அவர்களே, மக்களின் குறை கேட்டு நானே அந்தப் பகுதிக்குச் சென்று அங்கேயிருக்கிற அழிந்து போயிருக்கிற பயிர்களையும் பார்த்து வந்திருக்கிறேன். ஆகவே இந்தச் சூழ்நிலையில் விரைவில் அப்படிப்பட்ட காட்டெருமைகளை அவர்கள் விரட்டுவதற்கு தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு அரசு விரைவிலே முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, அரசு விரைவிலே முன்வந்து நடவடிக்கையெடுக்கும்.

5. அரசினர் சட்ட முன்வடிவு.

நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1986ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.



6. வரவு-செலவுத் திட்டம் 1986-87 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1986-87 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், மானியம் சம்பந்தமாக....

திரு. ஏ. எஸ். ரவீந்தரன் : தலைவர் அவர்களே, இந்த மானியம் சம்பந்தமாக நானும் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் முதலில் மூவ் பண்ணட்டும்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, மூவ் பண்ணுவது பற்றித் தான் பாயின்ட் ஆப் ஆர்டர், because it is not in order.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யார் வேண்டுமானாலும் மூவ் பண்ணலாம். It is up to them.

**Thiru P. Ponnurangam** : I will explain......

**Mr. Speaker** : It is a collective responsibility. Any Minister can move any demand. You cannot compel a particular Minister to move a demand.

திரு. ப. பொன்னுரங்கம் : ஒரு ஒழுங்குப் பிரச்னை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒழுங்குப் பிரச்னையில் வராது.

**Dr. K. Sourirajan** : Mr. Speaker, Sir, when the concerned Minister is here, you cannot ask somebody else to move the demand.

**Thiru P. Ponnurangam** : Mr. Speaker, Sir, the Governor has told newsmen that he was awaiting the advice of the Chief Minister Thiru. M. G. Ramachandran on Mr. Krishnaswamy's resignation. He has also said that Mr. K. A. Krishnaswamy continued to be a Minister till his resignation was accepted.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது அது கேள்வியல்ல. எந்த அமைச்சர் வேண்டுமானாலும் டிமாண்டை மூவ் பண்ணலாம்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, அவர் இன்னும் மினிஸ்ட்டராக இருக்கிறார்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தந்த அமைச்சரின் பெயர் தான் வரவேண்டும் என்பதல்ல. முதலமைச்சரின் பெயர் இருந்தால் போதும். It is a collective responsibility. Any minister can move any demand. (குறுக்கீடு) நான் சொன்ன தீர்ப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். இதில் தவறு இல்லை. நான் தீர்ப்பளித்து விட்டேன்.

**Dr. K. Sourirajan** : Mr. Speaker, Sir, who is going to reply to the discussion on the demand? You must give a correct ruling.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள்.

(அ) கோரிக்கை எண். 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,19,60,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

(முற்பகல் 11-00)

திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 5-முத்திரைத் தாள்கள்-நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,19,60,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

(ஆ) கோரிக்கை எண். 6—பத்திரப் பதிவு

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 6—பத்திரப் பதிவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,51,62,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".



திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்கள், பழங்குடியினர்களுக்குப் பத்திரப் பதிவு செய்வதில் விலக்களிக்க வேண்டுமென விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 6—பத்திரப் பதிவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற. ரூ. 7,51,62,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்கப் பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவு அலுவலகங்களில் ஜெராக்ஸ் மெசின்கள் நிறுவுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 6—பத்திரப் பதிவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 7,51,62,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(இ) கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,81,89,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்."

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் அரசு மூலமாக கடன் பெற்று மாடு வாங்கி கறக்கும் பால் முழுமையும் அரசு மூலமாக வாங்குவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,81,89,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் உற்பத்தி செய்யப்படும் பாலை மாவட்ட பதப்படுத்தும் நிலையங்களுக்கு எடுத்துச் செல்ல வசதி செய்ய வேண்டியதின் அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

[1986 ஏப்ரல் 8

" மானியக் கோரிக்கை எண். 10-பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,81,89,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும் ".

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, ஏழை எளியவர்கள் வாழும் குடிசைப் பகுதிகளில் தொழிலாளர்கள் குடியிருப்புகளில் தாராளமாக பால் வழங்க நடவடிக்கை எடுப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 10-பால் வழங்கு திட்டங்க என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,81,89,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும் ".

திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் பால் குளிர் பதன நிலையம் ஏற்படுத்தல் குறித்து விவாதிக்க, நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 10-பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,81,89,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும் ".

(ஈ) கோரிக்கை எண். 22-கால்நடை வளர்ப்பு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 22-கால் நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 29,62,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும் ".

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, சென்னை பெருநகரில் கால்நடைகளை வளர்ப்பதால் ஏற்படும் தொல்லைகளை நிவர்த்தி செய்ய அரசு கால்நடை வளர்ப்புப் பண்ணைகளை நகருக்கு அப்பால் கட்ட வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 22-கால் நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 29,62,68,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும் ".



1986 ஏப்ரல் 8]

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, to discuss about the need to provide free education on animals and to promote anim l welf re, I move—'that the allotment of Rs. 29,62,68,000 under Demand No. 22-Animal Husbandry pe reduced by Rs. 100.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத்தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரைத் தாள் மற்றும் நிர்வாகம் பற்றியும், பத்திரப் பதிவு பற்றியும், பால் வழங்கு திட்டங்கள் பற்றியும், கால் நடை வளர்ப்பு பற்றியும் விரிவாகவும், தெளிவாகவும் கொண்ட விளக்கக் குறிப்புகள் *இந்தப் பேரவை உறுப்பினர்களுக்கு பயன்படுகின்ற வகையில் முன் கூட்டியே வைக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றை எல்லாம் நான் படித்த தாக குறிப்பேட்டில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களுக்கு விவாதங்கள் முடிந்ததற்குப் பிறகு இறுதியாக விடை அளிக்கின்றபோது, தேவையான கருத்துக்களுக்கு விடை தருகின்ற சூழ்நிலை ஏற்படும் என்று கூறி முடிக்கிறேன்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு முக்கியமான பிரச்சனையைச் சொல்வதற்கு தங்களிடத்திலே அனுமதி கோரினேன். அவை முன்னவர் அவர்கள் அதற்கு சம்மதம் தெரிவித்தார்கள். நான் அழைக்கப்படவில்லை. எனவே அருள்கூர்ந்து..........

MR. SPEAKER : We have passed that stage.
நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம்.

திரு. மா. கதிர்வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சியில் சார்பில், பால் வழங்கும் திட்டங்கள், பத்திரப் பதிவு, கால்நடை வளர்ப்பு சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

---

*132–193-ம் பக்கங்களில் இணைப்புகள் II, III, IV, V ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

இன்றையதினம் கிராமப்புற பொருளாதாரம் என்பது, விவசாயத்துறைக்கு அடுத்து பார்ப்போமானால், ஏழை மக்களுடைய பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் பயன்படுகிற வகையில் இருக்கக் கூடிய துறை எது என்று சொன்னால், அது கால்நடைத் துறை என்றுதான் சொல்லலாம். எனவே அந்த வகையில் இந்தியாவில் குஜராத்திற்கு அடுத்து, இன்றையதினம் தமிழகம் முதல் இடம் பெற்றிருக்கிறது என்று சொன்னால், அதற்கு பொறுப்பாக உள்ள அமைச்சர் அவர்களும் அதனுடைய பொறுப்பாளர்களும் கடைப்பிடித்துவந்த செயல்முறைகள்தான் என்று சொன்னால், அதையாரும் மறுக்க முடியாது. அந்தவகையில் அதனை நான் பாராட்டாமல் இருக்கமுடியாது. அந்த வகையில் தான் தமிழகத்தில் சேலத்திற்கு அடுத்து நான் சார்ந்திருக்கிற வட ஆற்காடு மாவட்டம் அடுத்தநிலையிலிருந்து முதன்மையான நிலைக்கு வருவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கிறதென்பதை நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து இன்றையதினம் கால்நடைச் சங்கங்களை எடுத்துக் கொண்டால் அங்கே இருக்கிற பி.டி.ஒ.க்கள் மூலமாகவும் அங்கே இருக்கிற கிராம அதிகாரி மூலமாகவும், அங்கே இருக்கிற வெட்டினரி டாக்டர் மூலமாகவும், வங்கிகள் மூலமாகவும், ஐ.ஆர்.டி.பி. மூலமாகவும், வங்கிகளுடைய உதவிகள் மூலமாகவும் கால்நடைகளை வாங்குகிறபோது மிகப் பெரிய ஊழல் நடை பெறுகிறது. 3 ஆயிரம் ரூபாய் கொடுத்து ஒரு மாடு வாங்க வேண்டுமென்று சொன்னால், இடைத்தரகர்களிடம் ஏறத்தாழ 500 ரூபாய் கொடுத்து அந்த ஏழைஎளிய மக்கள் ஒரு மாட்டை வாங்குகிறபோது மிகக் கடுமையான முறையிலே பாதிக்கப் படுகிறார்கள் என்பதை இந்த அரசு உணரவேண்டும். அதற்கு உண்டான திட்டத்தை நடைமுறைப்படுத்தினால்தான் அங்கே இருக்கின்ற பி.டி.ஓ., கிராம நிர்வாக அதிகாரிகள், வெட்னரி டாக்டர்கள், இடைத்தரகர்கள் போன்றவர்கள் அடிக்கின்ற கொள்ளையை தடுத்து நிறுத்துவதோடு நியாயமான முறையிலே தரமான கறவை மாடுகளை வாங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று நான் மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், கால்நடை வாங்க வேண்டுமென்று சொன்னால், மாவட்டத்துக்கு மாவட்டம் தான் வாங்க செல்லமுடிகிறதே தவிர, புதிய தரமான மாடுகளை, கால்நடைகளை வாங்க முடிகிறதா என்று சொன்னால் இல்லாத சூழ்நிலைதான் இருக்கிறது. இதனால் ஏழைஎளிய மக்கள், மாடுகள், கால்நடைகளை வாங்குகிறார்கள் என்று சொன்னால் அவர்கள் வாங்குகின்ற பொருளாதாரத்தினுடைய அடிப்படையிலே, மாடுகள் வாங்குகின்ற இடத்திலே தினமும் மூன்று லிட்டர் கறக்கக் கூடியவை 1 லிட்டர் பால்தான் கறக்கிறது என்று சொல்கிற ஒரு அபாயகரமான சூழ்நிலை ஏற்படுகிறது. மாவட்டத்துக்கு மாவட்டம் அதே கறவை மாடுகள் இருக்கின்ற காரணத்தால் இந்த நிலை ஏற்படுகிறது. இந்த நிலையினைப் போக்க மாவட்டந் தோறும் கால்நடை உற்பத்திக்காக பண்ணைகள் உருவாக்க



வேண்டுமென்று சொன்னால், இதுபோன்ற மிகப்பெரிய மோசடிகள் மிகப்பெரிய ஊழல்களை தடுத்து நிறுத்தமுடியும். தரமான கால் நடைகளை நாம் உருவாக்க முடியும் என்று சொல்லி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கால்நடை பண்ணைகளை நாம் உருவாக்க வேண்டும் என்றும், அதனால் ஏழை எளிய மக்கள் நியாயமான முறையிலே கால்நடைகளை வாங்குவதற்கு சிறந்ததாக இருக்கும் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால் கால்நடைகளுக்கு தீவனம் வழங்குவதாக மானியத்திலே சொல்கிறார்கள். அப்படி பார்ப் போமேயானால் இன்றையதினம் 100க்கு 20 சங்கங்களுக்குக் கூட கால்நடை தீவனங்கள் பெறமுடியாமல் இருக்கின்றன. மேலும் மற்ற சலுகைகளையும் இந்த ஏழைஎளிய மக்கள் பெறுகிறார்களா என்று சொன்னால், பெறமுடியாத சூழ்நிலைதான். ஏன் இந்தச் சூழ்நிலை? ஆகவே தீவனம் பெறப்படுகின்ற அந்த சங்கங்களுக்கு உத்தரவுகளைப் போட்டு, மானியமாக வழங்கப்படுகின்ற அந்தத் தீவனங்கள் ஏழை எளிய மக்களுக்கு முறையாக போய்ச்சேர வழி வகை செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும். ஏழை எளிய மக்கள் சங்கங்களின் மூலமாக கால்நடைகளை வாங்கு கிறார்கள், அவர்கள் பயன்பெறுகின்ற வகையில் ஏன் நீங்கள் அந்தத் திட்டத்தை ஊக்குவிக்கக்கூடாது என்று நான் மெத்த பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். இன்னும் சொல்லப் போனால் கால்நடை உணவு உற்பத்தியில், கால்நடைகளில் தர மான கால்நடைகள் இல்லை என்று சொல்கிறார்கள். தரமான இன உற்பத்திக்காக வாங்கப்படுகின்ற, 2 ரூபாய், 4 ரூபாய் அல்லது 5 ரூபாயையும், உறைவிந்து போன்றவற்றுக்கு ஏற்படும் செல வினத்தையும், இனவிருத்திக்காகப் போடப்படுகின்ற ஊசிக் கட்டணத்தையும் நீங்கள் அறவே நீக்கி ஏழை எளிய மக்களுக்கு உதவிட வேண்டுமென்று இந்த அரசை நான் மெத்த பணிவன் போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஒன்றியங்களிலே பணிபுரிகின்ற கால்நடை டாக்டர்கள் அரசு டாக்டர்களாக இல்லை என்கிற நிலையிலே, வேறு துறை யிலே அவர்களுக்கு வேலை வந்துவிட்டால், தற்காலிகமாக பணி புரிகின்ற அந்த டாக்டர்கள் வேலையை விட்டே சென்றுவிடு கிறார்கள். இப்படி அந்த டாக்டர்கள் சென்றுவிடுகிறபோது, அந்த ஒன்றியங்களிலே கால்நடைகளை பராமரிக்கின்ற ஒரு சூழ் நிலை இருக்கிறதா என்று பார்த்தால் இல்லாத சூழ்நிலைதான் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட ஒரு வெற்றிடத்தை நிவர்த்தி செய்ய அரசுத் துறை கால்நடை டாக்டர்களை அந்த இடங்களில் நிரந்தரமாகப் போடவேண்டும், அல்லது அந்த ஒன்றியங்களிலே பணிபுரிகின்ற டாக்டர்களை அரசுத்துறையைச் சார்ந்த டாக்டர் களாக அறிவிக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டம், ராணிப்பேட்டையிலே கால்நடை நோய் தடுப்பு ஆராய்ச்சி நிலையம் ஒன்று உள்ளது. அதுபற்றி இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரியுமோ, தெரியாதோ; இந்தியாவிலே என்று மட்டும் நான் சொல்லமாட்டேன், ஆசியாவிலேயே இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது இந்த ஆராய்ச்சி நிலையம்.

(முற்பகல் 11-10)

அந்த ஆராய்ச்சி நிலையம் என்பது இங்கே தமிழகத்தில் மட்டும் அல்ல இந்தியாவிலேயே எந்த நோய் வந்தாலும் அதை முறையாக தடுக்கக்கூடிய தகுதி வாய்ந்த டாக்டர்கள் நம்முடைய தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். அதுவும் என்னுடைய ராணிப்பேட்டையில் பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். ஆராய்ச்சி செய்து கொண்டு இருக்கிறார்கள், திறமை வாய்ந்தவர்கள் அந்த நிலைபத்தில் இருக்கிறார்கள். ஏறத்தாழ 180 பேர்கள் கால்நடை உதவி மருத்துவர்கள் சர்வீஸ் கமிஷன் மூலம் 1980ல் தேர்வு செய்யப்பட்டு இன்று வரை ரெகுலரைசேஷன் செய்யப்படாமல் இருக்கிறார்கள். இப்படி ரெகுலரைசேஷன் செய்யாமல் இருப்பதால் அவர்கள் பட்ட மேற்படிப்பு படிக்கவேண்டும் என்று சொன்னால் அவர்களுக்கு விடுப்பு கிடைக்கவில்லை. ஆகவே அந்த 180 உதவி கால்நடை மருத்துவர்களுக்கு ரெகுலரைசேஷன் செய்து அந்த டாக்டர்களுக்கு வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் நோய் தடுப்பு அலவன்ஸ் என்பது அங்கே அந்த நோயை தடுக்கின்றபோது, அந்த மருந்துகளை கண்டுபிடிக்கின்ற போது வெறிநாய் கிருமிகளாலும், புருசலா கிருமிகளாலும் அங்குள்ள பல டாக்டர்கள் தாக்கப்படுகிறார்கள். டாக்டர்கள் மட்டும் தாக்கப்படுவது இல்லை. அங்கே வேலை செய்கின்ற லேப் அண்டன்டர்கள், லேப் டெக்னிசியன்கள், மஸ்தூர்கள் போன்றவர்கள் ஏறத்தாழ 2 ஆயிரம் பேர்கள் அந்த நோய்களால் தாக்கப்படுகிறார்கள். இப்படி தாக்கப்படுவதால் அவர்களுக்கு எல்லாம் ரிஸ்க் அலவன்ஸ் டாக்டர்களுக்கு கொடுப்பது போல் கொடுத்து உதவி செய்யவேண்டும். அப்படி உதவி செய்வதால் அவர்கள் அந்த நோயிலிருந்து தன்னைக் காத்துக் கொள்வதற்கு உதவிகரமாக இருக்கும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தின் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பால்வளத்துறை. தண்ணீர் பால் தான் கிடைக்கும் என்ற நிலை 6, 7 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது. ஆனால் இன்றையதினம் தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் அந்த நிலை இல்லை. பாலீதின் பைகளில் இப்போது பால் வழங்கப்படுகிறது. இதனால் நடுத்தர ஏழை எளிய மக்கள் பயன்பெறுகிற சூழ்நிலை இருக்கிறது. இந்தப் பயனை மாவட்ட





தலைநகரங்களில் இருப்பவர்கள் மட்டும் தான் அனுபவிக்க வேண்டுமா? நகரத்தில் இருக்கிற மக்களும் இந்தப் பயனை அனுபவிக்கவேண்டும். ஆகவே இப்போது இருக்கிற நிலையை போக்குகிற வகையில் மாநிலத்தில் உள்ள அனைத்து நகரங்களிலும் பாலீதின் பைகளில் பாலை வினியோகம் செய்யவேண்டும். அந்த நிலையை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தோல். 500 கோடி ரூபாய்க்கு நமக்கு அன்னிய செலாவணி கிடைக்கிறது தோல் மூலமாக. இந்த 500 கோடி ரூபாய் கிடைக்கவேண்டும் என்று சொன்னால் அதற்கு மூலதனமாக இருக்கிற கால்நடைகளை நாம் பார்க்கவேண்டும். ஆகவே அதை அரசு உணர்ந்து இந்தக் கால்நடைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தாக வேண்டும்,

அடுத்து பத்திரப் பதிவு சம்பந்தமாக சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். ஏழை எளிய மக்கள் வறுமைக் கோட்டுக்கு கீழே இருக்கக்கூடியவர்களுக்கு—இன்றையதினம் உழைப்பவருக்கே நிலம் சொந்தம் என்று சொல்லுகிறோம்– வீடோ, வீட்டு மனையோ இல்லாதவர்கள் புதிய வீடோ, வீட்டு மனையோ வாங்கினால் அவர்களுக்கு பத்திரத் தாள் வாங்குவதில் சலுகை அல்லது பதிவுக் கட்டணத்தில் சலுகையை இந்த அரசு அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை எளிய மக்கள் மேல் பாசம் வைத்து இருப்பவர்கள். இந்த ஏழை எளிய மக்கள் வறுமைக்கோட்டுக்கு கீழே வாடிக்கொண்டு இருக்கிற மக்களுக்கு இந்த உதவிகரமான செயலைச் செய்து இந்த கட்டண சலுகையை அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்து, நீதி மன்றத்தில் முத்திரைத் தாட்களை அரசு விற்கிறது. ஆனால் இவைகள் எல்லாம் கிடைத்தாலும் வழக்கறிஞர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இங்கே கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர்கள் சொன்னது போல அந்தக் கட்டணத்தை பணமாக அங்கே வாங்க அந்த நிலையை நீங்கள் உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் நீதி மன்றத்தில் நகல்கள் கிடைப்பதில் மிகுந்த சிரமமாக இருக்கிறது. இது போன்ற சிரமங்கள் எல்லாம் நீக்கப்பட வேண்டும் என்று சொல்லி இந்த மசோதா மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் கீழ் முத்திரைத்தாள் நிர்வாகம், பத்திரப்பதிவு, பால் வழங்கும் திட்டம், கால்நடை பராமரிப்பு போன்ற மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு சந்தர்ப்பம் தந்ததற்கு எனது

இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமம் நகரமாக்கப்படவேண்டும் என்று அங்கு புரட்சித் தலைவர் அவர்கள் அண்டை நகரங்களில் இருக்கின்ற வசதிகள் அனைத்தும் கிராமங்களில் கிடைக்க வேண்டும் என்று கொள்கை அளவிலும் அவருடைய எண்ணங்கள் பிரதிபலிக்கின்ற வகையிலும், இன்று ஒரு சிறப்பான நிலையினை உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்பதாலும், இது ஒரு காலச் சிறந்த திட்டமாக, கிராமங்களுடைய அபிவிருத்தி எண்ணத்தோடு இங்கு சிறப்புடனும் செயல்பட்டு வருகிறது என்பதாலும்; குறுநில விவசாயிகள் போன்ற கோடான கோடி மக்களுக்கு நிறைவு செய்கின்ற ஒரு திட்டத்தை, பெருமை சேர்க்கின்ற ஒரு திட்டத்தைத் தந்திருக்கிறார்கள் என்பதைப்பற்றி உங்கள் மத்தியிலே பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு காலத்தில் நகரமானாலும் சரி, கிராமமானாலும் சரி, பால் கிடைக்காது இருந்த நிலையினைப்போக்கி இன்று பால் கிடைக்கின்ற நிலையினை உண்டாக்கியபோது, கிராமங்களில் பொருளாதார வளர்ச்சி ஐ.ஆர்.டி.பி. திட்டங்கள் மூலமாகவும், அங்கே உற்பத்தியாகின்ற பொருள்களை நேரடியாக சென்னை போன்ற பெருநகரங்களில் விற்பனை செய்வதற்கு வாய்ப்பினை நல்குகின்ற சூழ்நிலையினை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். மற்றுமுள்ள பொருள்களைப் பார்க்கின்றபோது மத்தியில் தரகர்கள் வருகின்ற நிலையைப் பார்க்கின்றோம். ஆனால் பால் உற்பத்தியைப் பொறுத்தவரையில், கிராமங்களில் மக்கள் தயாரிக்கின்ற பாலை வாங்கி நுகர்வோருக்கு அளிக்கின்ற தன்மை புரட்சித் தலைவர் ஆட்சியில் ஏற்பட்டிருக்கின்றது என்பதை அறிவோம். புரட்சித் தலைவர் ஆட்சியில் பால் வளம் என்பது ஒரு புனிதமான திட்டமாகும். ஆக கிராமத்தினுடைய பொருளாதார நிலையை பார்க்கும்போது ஒவ்வொரு விவசாயியும் பின்தங்கிய நிலையில் இருப்பதைப் போக்குவதற்கு மாடுகள். பசுக்கள், எருமைகள் வழங்கப்பட்டு, அதன்மூலம் பால் உற்பத்தி செய்யப்பட்டு, அது நகரங்களில் நுகர்வோருக்கு நியாயமான விலையில் கொடுக்கின்ற நிலையினை புரட்சித் தலைவர் ஆட்சியில் தான் தந்திருக்கிறார்கள். அந்த வகையில் பல கூட்டுறவுச் சங்கங்கள், உற்பத்தியாளர் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு, அங்கேயுள்ள மக்கள் அதிலே உறுப்பினர்களாக்கப்பட்டு, எந்த அளவிற்கு அவர்கள் பொருளாதார வளர்ச்சியைக் காண வேண்டுமோ அந்த அளவிற்கு எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்கள் தந்திருக்கிறார்கள் என்பதை நாடு அறியும்.

அதோடு மட்டுமல்ல. பால் உற்பத்தியில் ஐ.ஆர்.டி.பி. திட்டத்தில், மாடுகள் வழங்கப்படுகிறது. ஐ.ஆர்.டி.பி. மத்திய சர்க்காரின் சலுகைத்திட்டமாகும். அது ஷெட்யூல்டு காஸ்ட், ஷெட்யூல்டு ட்ரைப் வகுப்புகளுக்கு 33 சதவீதமும், மற்ற இனத்தவர்களுக்கு 25



சதவீதமும், கொடுக்கின்ற நிலைமையினை நாம் இன்று மக்கள் மத்தியில் கொடுத்துக்கொண்டு வருகிறோம். அந்த வகையில் ஷெட்யூல்டு காஸ்ட், ஷெட்யூல்டு டிரைப் வகுப்பினருக்கு நாம் அதிகபட்சமாகக் கொடுத்து, பொருளாதார வளர்ச்சியில் பிற்பட்ட மக்களுக்கு ஒரு வாய்ப்பாக நல்குகின்ற ஒரு திட்டமாக அமைந்திருப்பதை நாம் பார்க்கிறோம்.

அதுமட்டுமல்ல, கால்நடைப் பராமரிப்புத் துறை மூலமாக தீவிர கால்நடைத் தீவனத் திட்டம், கேந்திர கிராமத் திட்டம், சிறப்பு கால்நடைத் திட்டம் போன்ற பயனுள்ள திட்டங்களின் மூலமாக பயனுள்ள காரியங்களை ஏற்படுத்தி செயல்பட்டு வரும் நிலையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது.

எங்களுடைய மாவட்டம் வடாற்காடு மாவட்டம். மாநிலத்திலே சேலத்திற்கு அடுத்தபடியாக பால் வளத்திலே வடாற்காடு மாவட்டம் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது என்ற நிலைமையை இந்த மாமன்றத்தில் உள்ளவர்கள் அறிவார்கள். அந்த அளவில் ஒரு வளர்ச்சியான பகுதியாகும். அதே போல் தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக வடாற்காடு மாவட்டம் நெல் உற்பத்தியிலும் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. அந்த வகையில் கால்நடை வளர்ப்புப் பராமரிப்புத் துறையின் மூலம் தீவிரத் திட்டத்தை எங்கள் மாவட்டத்தில் தீவிரப்படுத்தும் வகையில் 1987ஆம் ஆண்டை அறிவிக்கவேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைக் கனிவோடு, பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கால்நடைகள் கருவூட்டுவதற்கு உலறவிந்து திரவ விந்து முறையை மாற்றி இப்போது உறைவிந்து கருவூட்டும் முறையை உருவாக்கித்தந்திருக்கிறார்கள். அந்தக் கருவூட்டு திரவ விந்து ஏறக்குறைய 72 மணி நேரம் தான் தாங்கும் என்ற நிலையை ஆராய்ச்சியாளர்களும், அதற்குண்டான டாக்டர்களும் குறிப்பிடுகிறார்கள். இந்த நிலைமையை இப்போது விஸ்தரிப்பு என்ற அடிப்படையிலே விந்துக்களை நாம் கலப்பினங்களிலே உருவாக்குகின்ற திரவ விந்தைப் பயன்படுத்துவதால் காலக் கெடுவை அதிகப்படுத்துவதோடு, அந்த விந்துக்கள் பசுக்களுக்கு கரு உற்பத்தி உண்டாக்குவதற்கான வாய்ப்புகள், கலப்பினங்கள் தயாரிப்பதற்கான நிலையை உருவாக்குவதற்கான நிலையை நிர்ணயிப்பதற்குப் பயன்படுகிறது. இந்த நிலைமையை ஆராய்ச்சியாளர்களும், நாமும் அனுபவப் பூர்வமாக பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

(திரு. கோ. இரகுபதி) [1986 ஏப்ரல் 8

ஏறக்குறைய 72 சென்டர்கள் தான் வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மேலும் அந்த முறையைத் தமிழகத்திலே பரவலாக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

அடுத்து வட ஆற்காடு மாவட்டத்திலே கிராமங்களிலே கால்நடைகளுக்கு, பசுக்களுக்குத் தீவனம் அளிக்கப்பட வேண்டும். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வாடகை அடிப்படையிலே சுகர் மில் சட்டடத்தில் கலப்புத் தீவனங்களைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். அதோடு இல்லாமல் கலப்புத் தீவனத்தைப் பார்க்கும்போது நல்ல முறையிலே செய்யப்பட்டு பால் இறங்குகின்ற, பால் அதிகமாகக் கறக்கின்ற நிலைமை உருவாகி வருகிறது. ஆனாலும் மலட்டுத் தன்மையைப் போக்குவதற்கு பசுக்களுக்கு நிறைய சினை நிற்காத நிலைமையைப் போக்குவதற்கு பசும்புல் தீவனம் தேவை என்று ஆராய்ச்சி செய்த டாக்டர்களும், நிபுணர்களும் சொல்லியிருக்கிறார்கள். கிராமங்களிலே எல்லாம் பழங்காலத்திலே மேய்க்கால் புறம்போக்கு என்றே ஒவ்வொரு கிராமத்திலும் 10 ஏக்கர் 5 ஏக்கர் என்று வைத்துக் கொண்டிருக்கிற நிலை இருந்தது. ஆனால் இன்றைய தினம் அந்த நிலத்தை வசதி படைத்தவர்கள், வாய்ப்புப் படைத்தவர்கள் பயன்படுத்தி அந்த நிலங்களை உழுதுகொண்டு இருக்கிற நிலைமையை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அங்கே இருக்கிற மக்கள் எல்லாம், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்கள் எல்லாம் அங்கே உள்ள ஏழை எளிய மக்கள், விவசாயிகள் எல்லாம் தீவனத்தைத்தான் வாங்கிப்போடக்கூடிய நிலைமை இருக்கிறதே தவிர பசும்புல்லை மேயவிடக்கூடிய அல்லது அதைக் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இல்லை. ஆகவே மேய்க்கால் புறம்போக்கு நில ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு அல்லது பசும் புல்லை அதிகமான அளவில் வளர்ப்பதற்கான நிலையை உருவாக்கித்தர வேண்டுமென்று நான் அன்புடன் புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. கதிர்வேலு அவர்கள் சொன்னதைப்போல் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் இ.ஓ.எச். கால்நடை விஸ்தரிப்பு அலுவலர் இருக்கிறார். ஆனால் அந்தப் பதவிகள் 182 பஞ்சாயத்து யூனியன்களிலே காலியாக இருக்கின்றன. பி.வி.எஸ்.ஸி. டாக்டர் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் வரமுடியாது என்ற நேரத்திலே கால்நடை ஆய்வாளர்களை இ.ஓ.எச். என்ற முறையிலே பயன்படுத்தி அங்கே அவர்களை ஏ. எச். ஆக பயன்படுத்திக்கொண்டு வந்தார்கள். ஆனால் அவர்கள் முறையிட்டதன் பேரில் பி.வி.எஸ்.ஸி. டாக்டர்கள் நியமிக்கப்பட்டால் கால்நடைகளுக்கும் பசுமாடுகளுக்கும் நல்ல முறையிலே வைத்தியம் செய்வார்கள்



1986 ஏப்ரல் 8] (திரு. கோ. இரகுபதி)

என்ற முடிவிலே ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் அவர்களை ஏ.எச். ஆக நியமித்தார்கள். ஆனால் 182 இடங்கள் 3 ஆண்டுக் காலமாக காலியாக இருக்கின்றன. அதனால் ஐ.ஆர்.டி.பி. போன்ற திட்டங்கள் மூலமாகக் கிடைக்கவேண்டிய சலுகைகள் அந்த மக்களுக்குப் போய்ச் சேராத நிலை இருக்கிறது. இப்போது அந்தக் காலி இடங்களில் ஆய்வாளர்கள் தான் இருக்கிறார்கள். அந்தத் திட்டங்களை நல்ல முறையிலே நிறைவேற்றுவதற்கு அவர்களை நியமிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

செம்மறியாடுகள் சங்கம் அமைத்துக்கொண்டு சங்க உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ஆலோசனை அளிப்பதற்காக அவைகளைப் பற்றிய எண்ணங்களை பிரதிபலிப்பதற்காக கால்நடை ஆய்வாளர்களை நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய மாவட்டத்திலே பால் உற்பத்தி அதிகம். பால்பொருட்கள் செய்கிற பேக்டரி அங்கே ஆரம்பிக்கப்படவில்லை. அப்படிப்பட்ட பேக்டரிகளை ஆரம்பிக்க வேண்டுமென்று புரட்சித் தலைவர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பத்திரப் பதிவு என்ற அடிப்படையில், நமது புரட்சித் தலைவரவர்களின் அரசு தஞ்சைத் தரணியிலே உழுபவர்களுக்கு நிலம் சொந்தம் என்ற அடிப்படையிலே வருகின்றபொழுது அந்த நிலத்தை இனாமாகவே பதிவு செய்து கொடுக்கிறார்கள். ஷெட்யூல்ட் காஸ்டைச் சேர்ந்தவர்களுக்கும், ஷெட்யூல்ட் ட்ரைபைச் சார்ந்தவர்களுக்கும் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தில் வீட்டை அடைமானம் வைக்கின்ற நேரத்தில் பத்திரச் செலவை இனாமாகவே அளிக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்களில் யாராவது சிலர் இனாமாக நிலமோ, கட்டிடமோ தந்தால் பெயரளவிற்கு நூறு ரூபாய் என்று அளவிற்கு வாங்கிக்கொண்டு பதிவு செய்யப் பட்டு வருகிறது. வங்கிகள் மூலமாக விவசாயிகள் கடன் பெற்றால் 10,000 ரூபாய் வரை முத்திரைத் தீர்வை தள்ளி வைக்கப் பட்டிருக்கிறது.

இதுபோன்ற சலுகைகளையெல்லாம் நமது இதய தெய்வம் புரட்சித் தலைவரவர்கள் வழங்கியிருக்கிறார்கள். எனவே, இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன், பஞ்சாயத்து யூனியன் களில் உள்ள கிராம மக்கள் பதிவுத் தாள்களை உடனடியாகப் பதிவு செய்ய வேண்டுமென்றால், குறுகிய காலத்திலே அதைச் செய்து தர வேண்டுமென்ற எண்ணத்தோடு ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலேயும் ஒரு சார்பதிவு அலுவலகத்தை ஆரம்பிக்க வேண்டும்—சப்ரிஜிஸ்தார் அலுவலகத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நமது அரசு திட்டமிட்டுள்ளது. ஆனால் பொருளாதார நிலையைக் கருதி, நிதி நிலை இல்லாத காரணத்தினால் அந்தத் திட்டம் தள்ளி வைக்கப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்பொழுதாவது

ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலேயும் ஒரு சப்ரிஜிஸ்தார் ஆபீசை ஆரம்பித்துத் தர வேண்டுமென்று அன்புத் தலைவரவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சப்ரிஜிஸ்தார் அலுவலகங்களில் தவறுகள் செய்கின்றவர்களைத் திருத்த வேண்டும், தவறுகள் திருத்தப்பட வேண்டும் என்ற முறையில் டி ஐ.ஜி. என்ற ஒரு அதிகாரியைப் போட்டிருக்கிறார்கள். சப்ரிஜிஸ்தார் ஆபீஸ்களில் பதிவு செய்யும் நபர்கள்—கிரயம் வாங்கும் நபர்கள் சப்ரிஜிஸ்தார் ஆபீசுக்குச் சென்றால் அங்கே மாமூல் கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்க வேண்டுமென்பதற்காக டி.ஐ.ஜி. என்ற தனி அதிகாரியை, ஊழல்களைத் தடுக்க வேண்டுமென்பதற்காக நியமித்து இருக்கிறோம். அவர்கள் உஷார் நிலையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த அலுவலகங்களில் பத்திரங்களைப் பதிவு செய்கின்றபொழுது, சட்டத்திற்கு முரணாகச் செய்யப்படுகின்ற காரியங்களைக் கண்காணிக்க வேண்டும். பார்ட்டிகளும் மாமூல் கொடுக்கிறார்கள்; அதைப் பெறுகின்ற அதிகாரிகளும் அங்கே இருக்கிறார்கள். அதையெல்லாம் திருத்துவதற்காகப் போடப்பட்டிருக்கின்ற இந்த டி.ஐ.ஜி. என்ற அதிகாரி, இந்தத் தவறுகளை கண்டுபிடித்து, நல்ல நிலைமையில் கொண்டு வர முற்பட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, ''பைனான்ஸ்'' என்று சொல்லப்படுகின்ற வகையில், நான்கைந்து பேர்கள் ஒன்றிணைந்து பதிவு செய்து கொண்டு, அந்தப் பகுதியில் உள்ள கூலித் தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் கடன்களை வழங்குகின்ற முறை இருக்கிறது. அவர்கள் ஆயிரம் ரூபாய் கடன் தந்தால் ஏறக்குறைய 100 ரூபாய் வட்டி கட்ட வேண்டுமென்றும், முதலிலேயே அந்த ஆயிரம் ரூபாய்க்கு நூறு ரூபாயை வட்டியாக எடுத்துக்கொண்டு 900 ரூபாய் கொடுக்கிறார்கள். தினம்தோறும் 10 ரூபாய் கட்ட வேண்டும். இப்படி தினந்தோறும் 10 ரூபாய் என்ற முறையில் மூன்று மாதங்களில் அந்த ஆயிரம் ரூபாய்க் கடனை அடைக்க வேண்டும். இப்படிப் பார்க்கின்றபொழுது மூன்று ரூபாய் அளவிற்கு வட்டி கணக்கிடப்படுகிறது. ஆனால் கூட்டு வட்டி என்ற முறையில் கணக்கிடுகின்றபொழுது ஒவ்வொரு ஆயிரத்திற்கும் நூற்றுக்கு ஐந்து ரூபாய், ஆறு ரூபாய் என்று வட்டி விகிதத்தைக் கூட்டிக் கொண்டே போகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளைப் பார்க்கின்றபொழுது, பைனான்ஸ் என்று சொல்லப்படும் இந்த அமைப்பு ஆங்காங்கு பதிவு செய்யப்பட்டு, இந்த வியாபாரத்தைச் செய்கின்றவர்கள் புரிகின்ற தில்லுமுல்லு போன்ற நிலைமைகளைப் பார்க்க முடிகிறது. வடாற்காடு மாவட்டத்தில் என்னுடைய காட்பாடி தொகுதியில், எங்கள் பஞ்சாயத்து யூனியனில் பார்க்கின்றபொழுது பெரும்பாலும் ஆசிரியர்கள், ஆசிரியர்களின் மனைவி பெயரால், பெரும்பான்மையான அலுவலர்களின் பெயரால் அவர்கள்





தங்கள் வட்டி பிசினஸை நடத்திக்கொண்டிருக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. இந்த நிலைமைகளை உஷாராகக் கண்காணித்து, இவை திருத்தப்பட வேண்டுமென்று அன்புத் தலைவரவர்களிடத்தில் எடுத்துச் சொல்லி, வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், வணக்கம்.

(முற்பகல் 11-30)

**திரு. சு. பாலன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் அவைமுன் விவாதத்தில் உள்ள முத்திரைத் தாள்கள் நிர்வாகம், பத்திரப் பதிவு, பால் வழங்கு திட்டங்கள், கால்நடை வளர்ப்பு ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது பேசுகின்ற ஒரு வாய்ப்பு அளித்தமைக்கு நான் முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பத்திரப் பதிவு என்பது 1899 ஆம் ஆண்டு மத்திய சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு, அதன் அடிப்படையிலே, 1980 ஆம் ஆண்டு அதற்கென்று பதிவுத்துறைத் தலைவர் தலைமை கட்டுப்பாட்டு வருவாய் அதிகாரி என்ற முறையில், இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின்கீழ் கிடைக்கும் வருவாயை மேற்பார்வை செய்யவேண்டியது அவருடைய கடமையாக இருக்கிறது.

எல்லா மாவட்டக் கருவூலங்களிலும், துணைக் கருவூலங்களிலும் போதுமான அளவு முத்திரைத்தாள்கள் எல்லாவகை மதிப்புகளிலும் மக்கள் தேவைகளை நிறைவு செய்யவும் அவசரத் தேவைக்கும், எதிர்பாரா தேவைக்கும் வகை செய்யவும் முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் கவனிக்கவேண்டிய விஷயமாகும்.

இயங்காச் சொத்துக்களை விற்பனை செய்தல், உரிமை மாற்றம் செய்தல், உரிமையை விட்டுக் கொடுத்தல், அறுதியாவணம், முடிவடையும் காலம் குறிப்பிடாத குத்தகை மற்றும் சுவாதீன உரிமையுடன் கூடிய அடமானம் ஆகிய கட்டாயமான பதிவு செய்யப்பட வேண்டிய ஆவணங்களைப் பதிவு செய்யும் போது செலுத்தும் முத்திரைத் தீர்வையின் மூலம் இந்த துறைக்கு வருமானம் கிடைக்கிறது. அப்படிப் பார்க்கிற பொழுது, 1983–84-ல் ரூ. 82.7 கோடி வருவாய் வந்திருக்கிறது. 1984-85-ல் ரூ. 94.37 கோடி வருவாய் வந்திருக்கிறது. 1985-86-ல் ரூ. 85.68 கோடியாக வருமானம் இருந்திருக்கிறது. இது கடந்த 1985-86-ல் இருந்த சொத்துக்களின் மதிப்பை நிவர்த்தி பண்ணுவதற்காக, மேலும் வருவாய் வர வேண்டுமென்பதற்காக மதிப்பிட்ட போது, குறைந்த மதிப்பில் ஆவணங்களைத் தயாரித்துள்ளதைக் கண்டுபிடித்தால், ரூ. 108 கோடி வருமானம் வரும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ரூ.85.68 கோடிதான் வருவாய் வந்திருக்கிறது என்றால், இன்னும் போதுமான அளவு முத்திரைத் தாள்கள் விற்கப்படவில்லை அல்லது கிடைக்கப் பெறவில்லையென்பதைத் தான் எடுத்து காட்டுகிறது.

தற்போது குறைந்த மதிப்புள்ள முத்திரைத்தாள்கள் கிடைப்பதில் மிகவும் கஷ்டமான நிலையுள்ளது. அதனால், ஏழை-எளிய மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். நீதிமன்றங்களில் ஸ்டாம்ப் பேப்பர் கிடைப்பதில் சிரமமாக உள்ளது. இதனை கருத்திலே கொண்டு, அவை எளிதில் கிடைக்கக்கூடிய வழிவகைகளைச் செய்தாக வேண்டும். நீதிமன்றத்திற்கு செலுத்த வேண்டிய தொகையை நீதிமன்றத்திலே ஸ்டாம்ப் பேப்பர் மூலம் செலுத்த வேண்டியிருப்பதால் பெருந்த சிரமங்கள் ஏற்படுகின்றன. ஆகவே நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் சலான்கள் மூலம் அத்தொகைகளைச் செலுத்துவதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது ரூ. 500 மதிப்புக்கு மேல் விற்கப்படும் பத்திரத்திற்கு கமிஷன் இல்லை என்பதால் பலர் இந்த வெண்டர் வேலையை விடுவதற்கு வருகிறார்கள். ஆகவே, அதிகமான பேர்கள் இந்த வெண்டர் வேலைக்கு வருகின்ற வழிவகைகளை இந்த அரசு செய்தாக வேண்டும். அப்படி அதிகமான பேர்களை நியமனம் செய்கின்ற நேரத்தில், படித்த பட்டதாரிகள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலப் பத்திரங்களுக்குத் தற்போதுள்ள கட்டணம் அதிகமாக உள்ளது. அதனை முறைப்படுத்த ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். ஸ்டாம்ப் பேப்பர் விற்பனையாளர்கள் குறைவாக இருக்கிறார்கள். அதனால் பத்திரம் கிடைப்பது சிரமமாக உள்ளது. அவர்கள் விற்பது குறைவாகவும் உள்ளது. ஆகவே, அவர்களை அதிகப்படுத்துவதுடன், மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யுமாறும் அந்த இலாகாவை நான் கேட்டுக்கொள்கிறேன்.

முத்திரைத்தாள்கள் உரிமம் பெற்ற விற்பனையாளர்கள் மூலம் பொதுமக்களுக்கு வருகின்றன. முத்திரைத்தாள்களுக்கு ஏற்றவாறு அவர்களுக்குத் தரும் தொகை அளிக்கப்படவில்லையென்பது குறையாக இருக்கிறது. அதை அதிகப்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பல பத்திரப் பதிவு அலுவலகங்கள், ஆரம்பகாலத்தில் இருந்த அதே இடங்களில்தான் பெரும்பாலும் இருக்கின்றன. தற்போது பொதுமக்களுடைய தேவை அதிகமாக இருக்கிறது; அதிகமான அளவுக்கு வருகிறார்கள். ஆகவே, அந்த இடங்கள் போதுமான அளவுக்கு இல்லாத காரணத்தால், அவற்றைப் புதுப்பித்து, நல்ல, மக்களுக்கு வசதியான இடங்களைச் செய்து தரவேண்டும். அவை பெரும்பாலும் வாடகைக் கட்டிடங்களில்தான் இன்றைக்கு இயங்கி வருகின்றன. சொந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்கான வழி வகைகளை, மக்கள் நல்லமுறையிலே வந்து அமர்வதற்கான வழி வகைகளை அந்த இடங்களில் உண்டாக்கித் தர வேண்டும்.





பல சப்-ரெஜிஸ்திரார் அலுவலகங்களில் போதுமான இடவசதி இல்லை; மக்கள் போய் பத்திரப் பதிவு செய்வதற்கு, அங்கே உட்கார்ந்திருப்பதற்கு இடவசதி இல்லை. பணியாளர்களுக்கும் இடவசதி இல்லை. இந்தக் குறையைப் போக்க உடனடியாக முனைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ளவர்கள் கேரளாவில் போய் தங்களுடைய பத்திரங்களைப் பதிவு செய்கின்ற நிலையை இருப்பதால் தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய வருவாய் இழப்பு ஏற்படுகிறது. ஆகவே, தமிழ் நாட்டிலேயே அவர்கள் தங்களுடைய பத்திரங்களை, தங்களுடைய சொத்துக்களை பதிவு செய்துகொள்ள ஏற்ற வழி வகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது பத்திரப்பதிவு அலுவலகங்களில் போதுமான பணியாளர்கள் இல்லை. அதனால் பத்திரம் பதிவு செய்வதில் பெருத்த காலதாமதம் ஏற்படுகிறது. இதைப் போக்க வேண்டும். அதைப் போல நகல்கள் எடுப்பதற்கு போதுமான பணியாளர்கள் இல்லை. மிக மிக குறைந்த அளவிலேதான் நகல் எடுப்போர் இருக்கிறார்கள். நகல் எடுப்பதில் ஏற்படுகின்ற காலதாமதத்தைத் தவிர்க்க ஜெராக்ஸ் காப்பி எடுக்க தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது சொத்துக்களை பதிவு செய்யும்போது மார்க்கெட் விலைக்கு பதிவு செய்வதில்லை. அதிகமான விலை கொடுத்து வாங்குகிறார்கள். ஆனால் பதிவு செய்கிறபோது ஏற்கெனவே அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற குறைந்த மதிப்புக்கே பதிவு செய்கிறார்கள். வேண்டுமென்றே, திட்டமிட்டு இப்படிச் செய்வதால் அரசாங்கத்திற்கு பத்திரப் பதிவு மூலம் கிடைக்கின்ற வருவாயில் இழப்பு ஏற்படுகிறது. இப்படி சொத்துக்களை அதிக விலைக்கு வாங்கிவிட்டு, குறைந்த விலைக்கு பதிவு செய்வதை அதிகாரிகள் கண்டறிந்து, உண்மையாக விலைக்கு ஏற்றவாறு பத்திரப் பதிவு செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பால் வளம் பற்றி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த பால் வளத் திட்டத்தில் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களைப் பார்த்தால் மக்களுக்கு நிறைவு செய்ய முடியாத அளவில்தான் இந்த பால்வளம் இருக்கிறது என்பது நன்றாகத் தெரிகிறது. பால் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்றும், பால் உற்பத்தியாளர் சங்கங்களை ஆரம்பிக்க வேண்டும் என்றும், பால் வழங்கு நிலையங்களை அமைக்க வேண்டும் என்றும், இன்னும் ஏராளமான டெப்போக்களை ஆரம்பிக்க வேண்டும் என்றும்; பால் உற்பத்தி பெருக

தரமான மாடுகள் வழங்கப்பட வேண்டும் என்றும், பாதுகாக்கப் பட்ட பால் எல்லா மக்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்றும், ஏழை எளிய மக்களும் பால் குடிக்கின்ற அளவுக்கு தாராளமாகக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்கள்.

ஏழை எளிய மக்களுக்கு எல்லாம் பால் வினியோகிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்திலே பாலித்தீன் பைகளில் பாலை அடைத்து விற்பனை செய்கிறார்கள். அந்த பாலில் சில நேரங் களில் புழு உண்டாகியிருக்கிறது. பாலித்தீன் பையில் அடைக்கப் பட்ட பாலில் எப்படி புழு வந்தது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். அது ஒருபுறமிருக்க, இந்த டெப்போக்களில் விற்கப் படுகின்ற பால் மக்களுக்கு ஒழுங்காக கிடைப்பதாக இல்லை. ஓட்டல்காரர்களும் டீக்கடைக்காரர்களும் ஏராளமான அட்டை களை பதிவு செய்து பாலித்தீன் பைகளில் வருகின்ற பாலை எல்லாம் அவர்கள் வாங்கிக்கொண்டு போய்விடுகிறார்கள். அட்டை வைத் திருக்கிற சாதாரண மக்கள் போய் பால் கேட்டால் இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். ஓட்டல்காரர்களுக்கும் டீக்கடைக்காரர் களுக்கும்தான் தாராளமாக பால் கிடைக்கிறது. அந்தப் பகுதியில் இருக்கிற பால் விற்பனையாளர்களும் இதற்கு முழுமையாக அவர் களுக்கு உடந்தையாக இருக்கிறார்கள். ஓட்டல்காரர்களுக்கும் டீக்கடைக்காரர்களுக்கும் உடந்தையாக இருந்துகொண்டு, அவர் களுக்கு முன்னுரிமை கொடுத்து, விற்றுவிடுகிறார்கள். சாதாரண மக்களுக்கு பால் கிடைக்கின்ற நிலையை ஏற்படுத்த வேண்டும்.

இப்போது விற்கப்படுகின்ற பால் விலை சாதாரண மக்கள் வாங்கக்கூடியதாக இல்லை. ஏழை எளிய மக்கள், தங்களுடைய குழந்தைகளுக்கு பால் வாங்கிக் கொடுக்க முடியாமல் இருக்கிறார் கள். ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கு நல்ல தரமான பால் வாங்கிக்கொடுக்கக்கூடிய அளவுக்கு விலை இருக்க வேண்டும். இப்போது அந்த நிலை இல்லாத காரணத்தால் அந்தக் குழந்தைகள் நல்லமுறையில், திடகாத்திரமாக வாழ வழி இலலை. அந்தக் குழந்தைகள் நல்ல முறையில் திடகாத்திரமாக வாழ வேண்டும்; அதற்கு ஏற்றவகையில் பால் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

கூட்டுறவு மத்திய பால் வழங்கு நிலையத்தின் மூலம் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பால் வினியோகம் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே அந்த கூட்டுறவு மத்திய சங்கத்தை முடுக்கி எல்லா மக்களுக்கும் பால் கொடுப்பதற் கான வழிவகைகளை உண்டாக்கவேண்டும்.

பல்வேறு மாவட்டங்களில் அரசின் மூலமாக பால் பொருட் களைத் தயாரிக்கின்ற தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏழை, எளியவர்களுக்கும்



மற்றவர்களுக்கும் உதவுகின்ற வகையில் அவ்வாறு ஆரம்பிப்பதற்கு இந்த அரசு உடனடியாக வழிவகை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் அரசின் மூலமாகக் கடன் பெற்று மாடுகள் வாங்கியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கொண்டுவரும் பாலை முழுமையாக வாங்குவதில்லை. ஒரு லிட்டர் பால் கொண்டு வந்தால் அரை லிட்டர்தான் வாங்குகிறார்கள், அரை லிட்டரைத் திருப்பி அனுப்பிவிடுகிறார்கள். அதுபற்றி எனக்கு ஒரு கடிதம் கூட வந்திருக்கிறது. சூலமங்கலத்தில் புதுக்கிராமத்தில் கூட்டுறவு பால் வழங்கு நிலையம் உள்ளது. அங்கே கொண்டு வரப்படுகின்ற பால் முழுவதும் வாங்கப்படுவதில்லை, கொஞ்சம் வாங்கிக்கொண்டு மீதியைத் திருப்பி அனுப்பிவிடுகிறார்கள். முழுப்பாலையும் வாங்காததன் காரணத்தால் அந்த மக்கள் மிகவும் கஷ்டப்படு கிறார்கள். முழுமையாக வாங்கினால்தான் அந்த மக்கள் வாழ முடியும். முழுமையாக பாலை வாங்கிக்கொண்டு அதற்கான பணத்தைத் தருமாறு ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையைப் பொறுத்தவரையில் ஆங்காங்கே தானியங்கிப் பால் வழங்கு நிலையங்கள் இருக்கின்றன. அதிலே நடைபெறுகின்ற தில்லு முல்லுகளைப் பற்றிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். விடியற்காலையிலே பால் சப்ளை செய்கிறார்கள். அதாவது இரவு நேரத்தில்தான் பாலை டேங்குகளில் நிரப்புகிறார்கள். தனி யாரிடத்திலே இவை கொடுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் அவர்கள் முதலிலேயே தண்ணீரைக்கலந்து வைத்திருக்கிறார்கள். அதன்பின்னர் பாலைக் கொண்டுவந்து ஊற்றுகிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு கூட இப்படி கலப்படம் செய்தவர்களைக் கண்டுபிடித்து இருக்கிறார்கள். இப்படிப்பட்ட தவறுகள் நடப்ப தன் காரணத்தால் அந்தப் பாலை மாநகராட்சியின் சேனிட்டரி இன்ஸ்பெக்டர் மூலமாகச் சோதனையிடுவதற்கான வழிவகை இருக்கவேண்டும். தானியங்கிப் பால் நிலையங்கள் சுகாதாரமான முறையில் இருக்கிறதா என்பதைக் கண்காணித்து அதன்பின்னர் அவர்களுக்கு லைசன்ஸ் தரக்கூடிய நிலைமையை உண்டாக்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

1985–86 ஆம் ஆண்டில் 5601 மக்கள் தொடர்பு முகாம்கள் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது 2000 என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் எது உண்மை? இது சரியான கணக்கா என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகி றேன். ஒருவேளை ஆய்வாளர்கள் சரியான முறையில் இல்லாத காரணத்தால்தான் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறதா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். கடைசியாக தஞ்சை

(திரு. கு. பாலன்) [1986 ஏப்ரல் 8

மாவட்டத்தில் கால்நடை துறையில், கால்நடை மருத்துவத்தை ஒரு துறையாகவும், திட்டங்களை நிறைவேற்றுகின்ற நிர்வாகத்தை வேறு ஒரு துறையாகவும், இரண்டாகப் பிரித்தால்தான் உண்மையாகவே கால்நடைகளுக்கு உபயோகப்பட முடியும்; அதைப் போலவே தஞ்சை மாவட்டத்தில் உறைவிந்து திட்டத்தை விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் பல ஆண்டுக்காலமாக வட்டத் தலைமை கால்நடை மருத்துவமனை என்று ஒரு மருந்தகம் இருக்கிறதே தவிர, மருந்துவமனையாக இல்லை. அதை மருத்துவமனையாக மாற்ற வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, இந்த நல்ல சந்தர்ப்பத்தை கொடுத்த தலைவருக்கு நன்றியைத் தெரிவித்து, முடித்துக் கொள்கிறேன்,

*திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற, முத்திரைத்தாள், பத்திரப் பதிவு, மதல் வழங்கும் திட்டம் பற்றிய மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்கள் ஒரு சிலவற்றை இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

பத்திரப் பதிவுத் துறையைப் பொறுத்தவரையில் பல்வேறு உரிமைகளுக்கு அத்தாட்சி வழங்குகின்ற ஒரு துறையாக இது இருந்து வருகிறது என்பது நமக்கெல்லாம் நன்றாகத் தெரியும். அப்படிக் கிடைக்கப்பெறுகின்ற உரிமைகள் எளிய முறையில் கொடுக்கப்பட வேண்டும் என்று மக்கள் விரும்புவது தவறு அல்ல. எனவே இந்தப் பத்திரப் பதிவுத் துறையைப் பொறுத்தவரையில் ஆவணங்களைப் பதிவு செய்கிறபோது சில சங்கடங்கள் இருக்கின்றன என்பதை அவையின் மேலான கவனத்திற்கு கொண்டு வருவதன் மூலம் அந்த சங்கடங்கள் எல்லாம் நீக்கப்பட வேண்டும் என்பது நீங்கத்தான்.

சாதாரணமாக ஒரு விவசாய நிலத்தில் ஒரு சர்வே நம்பரில் ஒரு பகுதியை வீட்டு மனையாக விற்றால் அதற்கு அதிகமாக நில மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அந்த ஆவணம் பதிவு செய்யப்படுகிறது. ஆனால் அதே சர்வே நெம்பரில் மீதம் உள்ள நிலங்களை விவசாய நிலமாகவோ அல்லது வேறு விவசாயியோ வாங்குகிறபோது, கடையாக வீட்டு மனைக்கு என்ன மதிப்பை நிர்ணயம் செய்தார்களோ, அதே மதிப்பைத்தான், விவசாய நிலத்திற்கும், விவசாய காரியத்திற்காக பதிவு செய்கிறபோதும் வசூலிக்கிறார்கள் என்ற நிலைமையை இந்த மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதேபோல ஒரு விவசாயி பக்கத்திலே இருக்கிற நிலத்திலே ஒரு பத்து செண்ட் என்ற அளவிற்கு ஒரு பகுதி நிலத்தை வாங்குவார்களேயானால் அவர்களுக்கும் அதிக மதிப்பீட்டையே



1986 ஏப்ரல் 8] (திரு. செ. செம்மலை)

கணக்கில் எடுத்துக் கொண்டு பத்திர ஆவணம் மாற்றப்பட்டு பதிவு செய்யப்பட வேண்டும் என்ற அந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். ஜி.ஜி. புரொசீடிங்ஸ் நெம்பர் 47874 எம்2/81 தேதி 29-7-81 புரொசீடிங்ஸ்படி ஒரு உத்தரவு தற்போது நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதில் சொத்தின் மதிப்பு உச்ச கட்டத்திற்கு தள்ளப்பட்டதோடு மட்டும் அல்லாமல் தேவையில்லாமல் விவசாய நிலத்திற்கு வீட்டு மனையாக பத்திரத் தீர்வை செலுத்துகின்ற நிலைமைக்கு விவசாயிகள் தள்ளப் பட்டிருக்கிறார்கள். அது மட்டும் அல்லாமல் விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் கேப்பிட்டல் கெயின்ஸ் டாக்ஸ் போன்ற வேதனைகளுக்கும் அவர்கள் ஆளாக்கப்படுகிறார்கள். எனவே அந்த நிலைமை மாற்றப்பட வீட்டு மனைக்கு பத்திரம் பதிவு செய்யப்படுமானால், அப்போது வீட்டு மனைக்கு உள்ள மதிப்பை நிர்ணயித்துக் கொள்ளலாம். ஆனால் அந்தப் பகுதியிலே அந்த சர்வே நெம்பரிலே விவசாய நிலத்திற்கு பத்திரம் பதிவு செய்யப் பட்டால், ரெஜிஸ்டிரார் அலுவலகத்தில் இருக்கிற கைடு லைன்ஸ் புஸ்தகத்தில் இருக்கிற அந்த மதிப்பீட்டை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல ரெஜிஸ்ட்ரேஷன் புரொசீஜர் கைட் லைன்ஸில் இருக்கிற—

'no document, affecting the property of the value exceeding Rs. 50,000 should be registered without the production of a certificate from the Income-tax Officer concerned as required by Section-230(A) of Income-tax Act, 1961.'

அதன்படி 50 ஆயிரத்திற்கு மேல் சொத்தின் மதிப்பு இருக்குமானால், வருமான வரி அலுவலகத்தில் சர்டிபிகேட் பெற்றுத்தான் பத்திரம் பதிவு செய்யப்பட வேண்டும் என்று இருக்கிறது. இந்த மதிப்பீடு செய்யப்பட்ட வருஷம் 1950. அதற்குப் பிறகு அந்த மதிப்பீடு உயர்த்தப்படவே இல்லை. இன்றைக்கு சொத்தினுடைய மதிப்பு உயர்ந்து விட்ட நிலையில் சாதாரண நிலத்தைக் கூட கிரயம் செய்கிறபோது, ஒரு விவசாயி அந்த இன்கம்டாக்ஸ் சர்டிபிகேட் வாங்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்படுகிறார். இதனால் விவசாயிகளுக்கு பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே சொத்தின் மதிப்பு உயர்ந்திருக்கிற நிலைமையைக் கருத்தில் கொண்டு 50 ஆயிரம் என்பதை 2 லட்சம் என்ற அளவுக்கு உயர்த்தினால், விவசாயிகள் பத்திரம் பதிவு செய்யும் போது அதற்கான இன்கம்டாக்ஸ் சர்டிபிகேட் வாங்குவதற்காக அலைவதை தவிர்க்க முடியும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(திரு. செ. செம்மலை) [1986 ஏப்ரல் 8
(முற்பகல் 11.50)

அதேபோல தேவையான அளவிற்கு முத்திரை தீர்வை செலுத்தப்படாத ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு ஒரு ஆண்டிற்குள் தவிர்க்க முடியாத காரணத்தால் அந்த ஆவணத்திற்கு சரியான முத்திரை தீர்வை செலுத்தப்படாமல் இருந்தால் ஒரு ஆண்டுக் காலத்திற்குள் மாவட்ட ஆட்சித் தலைவருடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் அந்தத் தொகையை பெற்று மாவட்ட ஆட்சித் தலைவர் சான்றிதழ் வழங்கலாமென்று முறை இருக்கிறது. அதற்கு முத்திரைச் சட்டம் வகை செய்கிறது. பத்திரம் பதிவு செய்கிறபோது குறைவான தொகைக்கு பத்திரம் வாங்கப்பட்டிருக்குமானால் அப்போதே உடனடியாக அந்த மீதித் தொகையை கட்டி பதிவு செய்வதற்கு சார் பதிவாளர்களுக்கு அதிகாரம் இருக்கிறது. அந்தப் பத்திரம் பதிவு செய்யப்பட்ட பிறகு அந்த விவசாயி குறைவான கட்டணத்தை அல்லது செலுத்த வேண்டிய கட்டணத்தைச் செலுத்துவதற்கு சார்பதிவாளர் அலுவலகத்தில் சட்டவிதி இடம் கொடுக்கவில்லை. ஆனால் நம்முடைய வணிக வரி ஆணை எண் 1359 என்ற உத்தரவின் கீழ் ஒரு ஆண்டிற்குள் அப்படி செய்வதற்கு சார்பதிவாளர்களுக்கு அந்த அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆனால் என்ன காரணத்தினாலோ அந்த ஆணை தற்போது நிறைவேற்றப்படுவதில்லை. ஆகவே பத்திரம் பதிவு செய்த பிறகு கூட குறைந்த கட்டணம் செலுத்திய பத்திரத்திற்கு ஈடாக அந்தப் பத்திரத்திற்குண்டான தொகையைச் செலுத்துவதற்கு விவசாயிகள் முன் வருவார்களானால் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அல்லது மாவட்ட பதிவாளரிடம் சென்று வீண் அலைச்சல், காலதாமதம், வீண் பணச்செலவு ஆகியவைகள் ஆவதைத் தவிர்ப்பதற்காக எந்த நேரத்தில் வேண்டுமானாலும் அந்தக் கட்டணத்தைச் செலுத்தி சார்பதிவாளர் அத்தாட்சி பெறுகிற வழிவகைகளை இந்தத் துறை செய்ய ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல இந்த நேரத்தில் ஒரு கருத்தை என்னுடைய யோசனையாக மன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன். திருமணங்களை ஒவ்வொரு ரெஜிஸ்டர் ஆபீசிலும் பதிவு செய்ய வேண்டும். அபபடியென்றால் ஒவ்வொரு திருமணமும் ரெஜிஸ்டர் ஆபீசில் தான் நடக்க வேண்டுமென்பது அல்ல. திருமணம் கோவிலிலோ, திருமண மண்டபங்களிலோ அல்லது வீட்டிலோ நடந்தாலும் சரி ஒரு வாரம், பத்து நாட்களுக்குள் அந்தத் திருமணங்களை பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்களுடைய சம்மதத்தோடு ரெஜிஸ்டர் ஆபீசில் பதிவு செய்ய வேண்டும். அதற்கென்று ஒரு கட்டணத்தைக் கூட நாம் வசூலிக்கலாம். லட்சக்கணக்கில் ரூபாய் செலவழித்து திருமணம் செய்கிறபோது 100ரூபாய் செலவு செய்து ரெஜிஸ்டர் செய்து கொள்வதிலே ஒரு தவறுமில்லை. அதனால் இந்தத் துறைக்கு கூடுதலாக வருமானம் வரும் என்பது ஒன்று. அதோடு வரதட்சணைப் புகார்கள், வழக்குகள், போன்றவற்றை தவிர்ப்பதற்கும் இந்த முறை ஒரு வாய்ப்பாக இருக்கும். இதையும் துறை பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 8] (திரு. செ. செம்மலை)

இன்றைக்கு கால்நடை பராமரிப்புத் துறையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் இந்தத் துறை எந்த அளவிற்கு வளர்ந்திருக்கிறது என்பதை நாம் நன்றாக அறிவோம். முன் காலத்தில் இந்தத் தொழிலை ஒரு உப தொழிலாக மட்டும் கருதி வந்தார்கள். இப்போது இதனை முக்கிய தொழிலாக எடுத்து, இரண்டு கறவை மாடுகள் இருந்தால் போதும் அல்லது 20 ஆடுகள் இருந்தால் போதும் ஒரு குடும்பத்தை நடத்தலாம் என்கிற அளவிற்கு கிராமப் பொருளாதாரம் இந்தத் துறை மூலமாக வளர்க்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து இந்தத் துறை ஒன்றில் கவனம் செலுத்த வேண்டும். இந்தத் துறையில் கால்நடைகளைப் பராமரிக்கிறார்களே தவிர, ஆராய்ச்சிப் பணியில் ஈடுபடுவதாகத் தெரியவில்லை. விவசாயத் துறையில் நாம் ஆராய்ச்சிகளைச் செய்கிறோம். ஆனால் கால்நடைத் துறையில் ஆராய்ச்சிகள் குறைவாக இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் விவசாயிகள் ஏதோ உழவிற்காக, தங்களின் விவசாயத்திற்காக இந்தக் கால்நடைகளை கொத்தடிமைகளாக பயன்படுத்துகிறார்களே தவிர, வியாபார ரீதியில் பயனடைவதாகத் தெரியவில்லை. ஆகவே இன்றைக்கு அரசு திட்டங்கள் மூலம், ஐ. ஆர். டி. பி. திட்டங்கள் மூலம் ஆடுகள், மற்ற கால்நடைகளை நாம் கொடுக்கிறோம். அவைகளை அப்படி கொடுக்கிறபோது, வறுமைக்கோட்டிற்கு கீழே இருக்கிற ஏழை எளிய விவசாயிகளுக்குக் கொடுக்கிறோம். அப்படி அவர்களுக்கு கொடுக்கிறபோது அவர்களுக்கு போதுமான மேய்ச்சல் தரை இல்லை அல்லது தீவனங்கள் கிடைப்பதில்லை என்பதற்காக அந்தக் கால்நடைகளை விற்று விடுகிறார்கள். அவற்றின் மூலம் பயனடைய மறுக்கிறார்கள். எனவே அதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் தீவனங்களுக்கெல்லாம் வரி குறைக்கப்பட்டிருந்தாலும், தீவனங்களை கூட்டுறவு சொசைட்டிகள் மூலமாக, அல்லது யூனியன் மூலமாக, ஷீப் பிரீடிங் பார்ம் மூலமாக சப்சிடி ரேட்டிலே பாதி மானிய விலையில், யார் யாருக்கு ஐ.ஆர்.டி.பி. மூலமாக நாம் கால்நடைகளை கொடுத்திருக்கிறோமோ, அவர்களுக்கு கார்டுகள் மூலமாக வழங்க வேண்டும். தீவனங்கள் கிடைக்காமல் தான் அவர்கள் கால்நடைகளை விற்றுவிடுகிறார்கள். எனவே மானிய விலையில் தீவனங்களை ரேஷன் கார்டு மூலமாக கொடுப்பதற்கு இந்தத் துறை நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் மேச்சேரி செம்மறி ஆடு என்ற தரம் உயர்ந்த ஆடுகள் இருக்கின்றன. மிகவும் பெயர் பெற்ற ஆடுகள் அவை. மைசூர், மாண்டியா ஆடுகளை விட இறைச்சியிலே, தோலிலே தரமுயர்ந்தவை. அந்த ஆடுகளை

அபிவிருத்தி செய்கிற விதத்திலே உலக வங்கியின் கடனுதவியுடன் 16 கோடி ரூபாய் மதிப்பில் என்னுடைய தொகுதியில் ஷீப் பாரம் அமைக்க சர்வே நடந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இந்தத் துறை இயக்குநர் அவர்களும், இதிலே அக்கறை கொண்டு இந்த ஷீப் பார்மை, மேச்சேரி பகுதியில் ஆரம்பித்து, மேச்சேரி செம்மறி ஆடுகளை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் புரட்சித்தலைவர் ஆட்சியிலே பால் வளத் திட்டத்தைப் பொறுத்தவரையில், வெண்மைப் புரட்சியை இன்றைக்கு வெற்றிகரமாக கண்டு கொண்டு வருகிறோம். மாறி வரும் உணவுப் பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப, இன்றைக்கு உணவுப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு இந்த மில்க் புராடக்ட்ஸ்கள் பயன்படுகின்றன. அதேபோல் சேலம் டயரியைப் பொறுத்த வரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னதைப் போல, மற்ற மாவட்டங்களை விட இந்த டயரி நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. அதனுடைய செயல்திறன் இப்போது பால் குளிரூட்டும் திறன் 1 லட்சம் லிட்டர் அளவிற்கு இருக்கிறது. அதேபோல் பால் பவுடர் உற்பத்தித் திறன் 10 டன் அளவிற்கு இருக்கிறது. இன்றைக்கு 618 சங்கங்கள் இருக்கின்றன. இன்னும் நிறைய சங்கங்களை ஏற்படுத்தவேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கையை வைக்கிறார்கள். எனவே அப்படி சங்கங்கள் உற்பத்தி செய்கிறபோது, அந்த பால் குளிரூட்டும் திறனை 1 லட்சம் லிட்டரிலிருந்து 3 லட்சம் லிட்டர் அளவிற்கு உயர்த்த வேண்டும். அதேபோல் பால் பவுடர் உற்பத்தித் திறனை 10 டன்னிலிருந்து 30 டன்னுக்கு உயர்த்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த டயரியைப் பொறுத்தவரையில் இப்போது த்ரி டயர் சிஸ்டம் அதாவது கோ-ஆப்பரேட்டிவ் பிரைமரி சொஸைட்டிஸ், மாவட்ட அளவிலே யூனியன், ஸ்டேட் அளவிலே பெடரேசன் என்று இருப்பது நல்ல ஒரு மூன் மாதிரியான ஒரு அமைப்பாக இருக்கிறது. இந்த பெடரேசனைப் பொறுத்த வரையிலும் யூனியனுக்கு உதவிகரமாக விற்பனை செய்து தரவேண்டும். ஆனால் இப்போது இருக்கிற நடைமுறையில் அந்த பெடரேசன்கள் லாபகரமாக விற்பனை ரீதியாக பொருட்களை விற்பதில்லை. தற்போது பெடரேசன், இந்தியன் டயரி கார்ப்பரேசனுக்கும், அல்லது பல்க்காக வியாபாரிகளுக்கும் அந்த பொருட்களை விற்றுவிடுகிறார்கள். அதனால் குறைந்த விலைதான் கிடைக்கிறது. எனவே இந்த பெடரேசன், கன்ஸ்யூமர் மார்க்கெட்டுகளுக்கு நேரடியாக விற்பனையை விரிவுபடுத்தினால் இப்போது கிடைக்கிற விலைக்கு மேல் கிட்டத்தட்ட 1½ மடங்குக்கு மேல் அதிகமாக விலை கிடைக்கும். அந்த விலை நிச்சயமாக விவசாயிகளுக்குப் போய்ச் சேரும்.





எனவே அந்த அளவிலே பெடரேசனுடைய விற்பனையை பரவலாக்க அபிவிருத்தி செய்து, கன்ஸ்யூமர் மார்க்கெட் மூலமாக விற்பனை செய்ய வேண்டும், என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதிக்குப் பக்கத்திலே இருக்கிற மேட்டூருக்கு பால் குளிரூட்டு நிலையம் ஒன்று, 30 ஆயிரம் லிட்டர் திறனிலே ஒன்றை அமைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் நம்முடைய மேட்டுப்பாளையம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கைக்கு ஏற்ப, காரமடையிலே ஒரு சார் பதிவாளர் அலுவலகம் திறக்கப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கோவை மாவட்டத்தில், ஆனைக்கட்டி மற்றும் கோவனூர் பகுதிகள் மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதி, அங்கே ஒரு சப்-சென்டரை, அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க ஆரம்பித்துக் கொடுக்கவேண்டும்.

அதேபோல் மன்னார்குடி தொகுதியினுடைய உறுப்பினர் நம்முடைய ஞானசுந்தரம் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க, அவர்களுடைய தொகுதியில் உள்ள பெருகவாழ்ந்தானில் ஒரு சப்-ரிஜிஸ்ட்ரார் அலுவலகத்தை ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

*திரு. துரை கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986—87 ஆம் ஆண்டுக்கான கால் நடை பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை நான் சார்ந்திருக்கும் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பிலே சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதலிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இங்கே அமருவதற்கு முன்பாக இருந்த, தலைவர் அவர்கள் இடத்திலே, நான் நீண்ட இடைவெளிக்குப் பிறகு பேசுவதால், எனக்கு இரண்டு நிமிடங்கள் அதிகமாகத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். தற்போது பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அமர்ந்திருக்கிற காரணத்தால், இரண்டு நிமிடங்கள் அதிகமாகத் தரவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய கால்நடை வளர்ப்பு பற்றி எனக்கு முன்பு பேசிய அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும் மிகத் தெளிவோடு ஒன்றுபட்ட கருத்துக்களைச் சொல்லி, நாட்டில் விவசாயத்துறையும், கால்நடைத் துறையும் எப்படி செயல்படுகிறது, எந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை எல்லாம் மிகத்தெளிவாகப்

பேசியிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலேதான் நம்முடைய மகாத்மா காந்தி அடிகள் கூட சொல்லியிருக்கிறார்கள். நகரங்கள் கிராமங்களில்தான் உயிர் வாழ்கின்றன என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலே தான் நம்முடைய மத்திய அரசும், தமிழக அரசும், பல்வேறு திட்டங்களை மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மத்திய உதவித் திட்டம், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் என்று பல்வேறு திட்டங்களை தமிழக அரசு மூலமாகவும், மத்திய அரசின் மூலமாகவும் இங்கே செயல்படுத்தி வருகிறார்கள்.

அதன் அடிப்படையில் தீர்க்கப்படவேண்டிய பிரச்சனை எல்லாம் தீர்க்கப்பட்டு இருக்கின்றன. நம்முடைய கால்நடை இனங்களான, ஆவினங்கள், ஆட்டு இனங்கள், பன்றி, ஆகியவற்றின் உற்பத்தித் திறனையும் பால், பால் பொருட்கள், தோல், தோல் பொருட்கள் மற்றும் முட்டை, இறைச்சி மற்றும் உள்ள பொருட்களின் உற்பத்தித திறனையும் உயர்த்தி, இன்றைக்கு தமிழகம் பொருளாதார ரீதியில் உயரவும், குறிப்பாக கிராமங்கள் எல்லாம் உயரவேண்டும் என்ற எண்ணத்தோடு நல்லமுறையில் இன்றைக்கு செயல்பட்டுக்கொண்டு வருகிறோம். ஆகவே இன்று ஏற்பட்டுள்ள ஜனத்தொகை பெருக்கத்தில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை எல்லாம் சொல்லித் தெரியவேண்டியதில்லை. எந்த அளவிற்கு ஜனத்தொகை பெருகி இருக்கிறது என்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்த்தால், ஒவ்வொரு மனிதனும் சொந்தக் காலில் நிற்பது அவசியமாகிறது.

அதேபோல் இன்று விவசாயிகள் எல்லாம் காவிரியினுடைய நீரை முழுமையாக நம்பி, நிம்மதியற்று, விவசாயம் செய்து கொண்டு இருக்கக்கூடிய நேரத்தில், அவர்கள் தங்களுடைய குடும்பத்தை அன்றாடம் நடத்தி வருகிற ஒரு சூழ்நிலைக்கு இணங்க இந்தக் கால்நடை மிகவும் இன்றியமையாத ஒன்றாக இருக்கிறது என்பதை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

(நண்பகல் 12—00)

அதைப்போல இதுபற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் செம்மலை அவர்கள் பேசுகின்றபோதுகூட ஒரு கருத்தைச் சொன்னார்கள். இன்றைய வரதட்சணைக் கொடுமையையெல்லாம் அவர்கள் கோடிட்டு காண்பித்தார்கள். வரதட்சணைக் கொடுமையாக இருக்கட்டும். மற்ற இயற்கைச் சூழ்நிலையாக இருக்கட்டும் அல்லது கணவனால் கைவிடப்பெற்றவர்களாக இருக்கட்டும் ; ஆக அத்தனை பேரும் இன்று இந்த கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் பயன் அடைவார்களேயானால், அவர்கள் சொந்தக் காலிலே, சுயமாக, சுயமரியாதையோடு, பெண்கள் குடும்பம் நடத்துவதற்கு இது மிகவும் அத்தியாவசியமான ஒரு கால்நடைத் திட்டம் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.





கால்நடைமூலமாக கிடைக்கக்கூடிய பல்வேறு உணவு பொருட்கள் மருந்துப் பொருட்கள், மற்றும் தோல் ஏற்றுமதி ஆகியவற்றால் தமிழகத்தினுடைய பொருளாதாரம் உயர்ந்துவேலையில்லாத் திண்டாட்டம் குறைவதோடு இன்றைய சூழ்நிலையில் தனி மனிதன் தன்னிறைவு அடைவதற்கு இந்தத் திட்டம் ஏதுவாக இருக்கிறது. இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தில் 1977—78-ல் 1,680 ஆயிரம் மெட்ரிக் டன்னாக இருந்த பால் உற்பத்தி நாளடைவில் வளர்ந்து 1985-ல் 2,846 ஆயிரம் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது. இதைப்போலவே கோழி முட்டை உற்பத்தியிலும் வளர்ச்சி இருப்பதாகவும், தனி மனிதனுக்கு பால் சதவிகிதம் 98 கிராமிலிருந்து 161 கிராமாக உயர்ந்துள்ளது என்று கொள்கைக் குறிப்பு கூறுகின்றது. அவ்வளவு வளர்ச்சியடைந்த இந்தத் துறைக்கு பாடுபட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், அதிகாரிகளையும், திட்டங்களின் வெற்றிக்காக பாடுபட்ட கால்நடை ஆய்வாளர்கள் மற்றும் சிப்பந்திகளையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்திலே இதற்கு நேர்மாறாக ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்றவற்றில் 84, 85, 86ஆம் ஆண்டுகளில் அரசு நிர்ணயித்த இலக்குகளை எட்டிப்பிடிக்கமுடியாத பின்தங்கிய நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. ஆடு வளர்ப்போருடைய சங்கங்கள் ஆயிரக்கணக்கில் இருந்தாலும்கூட அங்கே உற்பத்திச் செய்யப்படுகின்ற கடாக்குட்டிகள் என்று சொல்லக்கூடிய அந்த இனங்கள் அங்கே இருக்கக்கூடிய கண்காணிப்பாளருடைய அனுமதியில்லாமல் விற்கப்படுகின்றன. பல்வேறு சூழ்நிலைகளில் ஆடு வளர்க்கின்ற திட்டம் வறட்சிப் பகுதிகளிலெல்லாம் செயல்முறைப்படுத்தப்படக்கூடிய நல்ல திட்டமாக, மலை வாழ்மக்களுக்கும் பயன்படக்கூடிய நல்ல திட்டமாக இந்த ஆடு வளர்ப்புத் திட்டம் இருக்கின்ற காரணத்தால், அதிலே இருக்கின்ற இடையூறுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அதிகாரிகளெல்லாம் கலந்து அதை நல்ல உற்பத்திச் செய்யக்கூடியதாகவும், நல்லபடியாக கடைபிடிக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை பராமரிப்புத் துறைக்குத் தேவைப்படும் நிதி அளவில் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற விளக்கக்குறிப்பில், அதிலே பெரும்பகுதி சிகிச்சை செலவினத்துக்காக செலவிடப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் என்னுடைய தாழ்மையான கருத்து, நோய்வந்தவுடன் தடுக்க அதிக செலவிடுவதைத் தவிர்த்து, நோய் வருவதற்கு முன்பே அவைகளைத் தடுப்பதில் அதிக கவனமும், நவீன முறைகளையும் பிரச்சாரமும் செய்யவேண்டுமென்பதையும், ஆங்கிலத்திலே Prevention is better than cure என்று சொல்வார்கள். அதைப்போல அரசு பல்வேறு திட்டங்களின் மூலமாக கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு அளிக்கப்படுகின்ற கால்நடைகளை முறையாகப் பராமரிக்க

முடியாமல் நல்லெண்ணத்தின் அடிப்படையில் கொண்டு வரப்படுகின்ற திட்டங்கள் எல்லாம் தோல்வியுற்று பொதுமக்கள் கால்நடைகளை பாதி விலைக்கு விற்றுவிடவும், மேலும் அவைகள் இறந்துவிடவும் ஏதுவாகின்றன. இவைகளை நிவர்த்தி செய்ய அரசுக்கு திட்டங்களை வகுத்து கொடுக்கவும், ஆலோசனை வழங்கவும் காங்கிரஸ் ஆட்சி காலத்தில் நடைமுறையில் இருந்து வந்த கால்நடை அபிவிருத்திக் குழு —Livestock Development Committee என்று சொல்வார்கள் அதை மீண்டும் நியமித்து அவர்களின் நல்ல ஆலோசனைகளைப் பெற இந்த அரசு முன்வரவேண்டுமாய் பணிவன்போடு கேட்டுக்கொண்டு மற்றைய நாடுகளைப் போல நாமும் உயரவேண்டும் என்ற அடிப்படையில் 2 ஆயிரம் கால்நடைகளுக்கு அல்லது ஒரு ஊராட்சி மன்றப் பகுதிக்கு ஒரு கால்நடை மருத்துவக் கிளை வீதம் ஆரம்பிக்க வேண்டுமென்று பேரவைத் துணைத் தலைவர் மூலமாய் கேட்டுக்கொள்கிறேன். இவற்றின் மூலமாக சப்பைநோய், தொண்டை அடைப்பான், கோமாரி, வெட்டைநோய் ஆகியவற்றுக்கு நோய் தடுப்பு ஊசி போட்டு காப்பாற்ற வேண்டும். இவைகளை மேற்பார்வையிட ஒன்றியப் பகுதிகளுக்கு அனுபவம் பெற்ற கால்நடை ஆய்வாளரை மேற்பார்வையாளராக பல்வேறு பொறுப்பில் நியமிக்கலாம். கிளை நிலையங்களுக்கு தேவையான கட்டிடங்களை தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் கட்டிக்கொடுக்கலாம். கிளை நிலையங்களில் ஒரு கால்நடை ஆய்வாளரையும், ஒரு உதவியாளரையும் நியமித்து கால்நடை ஆய்வாளர் பயிற்சிக்கு ஆண்டுக்கு 350 பேர் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அனுப்பினார்கள், அப்போது துவங்கப்பட்ட அந்தத் திட்டத்தை மீண்டும் துவக்க அரசு முன்வரலாம்.

அடுத்து தஞ்சாவூர் மாவட்டத்தில் வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் நலிவடைந்த மாடுகள் சராசரியாக ஆயிரக்கணக்கில் அறுப்பதற்காக அண்டை மாநிலங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. அதைக் கணக்கிட்டுப் பார்ப்போமேயானால் நம்முடைய தமிழகத்திலிருந்து எத்தனை மாடுகள் அறுவைக்காகக் கொல்லப்படுகிறது என்பதை நாம் ஒரு கணம் சிந்தித்து பார்க்கவேண்டும். இனி வருங்காலத்தில் அத்தகைய மாடுகளை கறவைத் தன்மை கொண்டதாக மாற்றி வருமானம் கொடுப்பதாக மாற்றினால்தான் கால்நடை அபிவிருத்தியில் தன்னிறைவு பெறமுடியும்.

அதேநேரத்தில் இறந்த ஆடுமாடுகளின் தோல் பதனிடும் தொழிலின் மூலமாக தமிழகத்திற்கு மிகுந்த அந்நிய செலாவணி கிடைப்பதோடு வேலைவாய்ப்பும் கிடைக்கின்றது. இதன் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தோல் பதனிடும் தொழில் துவங்க அரசு முன் வரவேண்டும். மற்றும் உணவுக்காக அறுக்கப்படும் ஆடு, மாடுகளிலிருந்து அவசியமில்லையென்று கருதக்கூடிய இரத்தம், கொம்புகள், குளம்புகள், எலும்புகள் அனைத்தும் இன்று மருந்துகளாக, உரங்களாக, கால் நடைத்தீவனங்கள் போன்றவற்றுக்கு எல்லாம் மூலப் பொருள்களாகப் பயன்படக்கூடிய



சாத்தியக் கூறுகள் இருக்கின்ற காரணத்தால் இவைகளை அடிப்படையாகக் கொண்டு மாவட்டத் தலை நகரங்களில் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சென்னை மாநகராட்சியில் கால்நடைகளை வளர்ப்பதற்கு தடை விதித்து இருக்கிறார்கள். இங்கே கால்நடை மருத்துவ கல்லூரி ஒன்று இருக்கிறது. அவர்களுக்கு சரியான முறையில் செயல்முறை பயிற்சி பூரணமாக செயல்படுத்த முடியாமல் இருக்கிறது. ஆகவே கால்நடைகள் அதிகமாக இருக்கிற மாவட்டங்களில் இந்த கால்நடை மருத்துவ கல்லூரியை அமைத்து அதன் மூலமாக அந்த விவசாயப் பெருமக்கள் பயன்படுகிற வகையில் நீங்கள் அதை நிச்சயமாக செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கால்நடை கிளை நிலையங்களுக்கு வருடம் மருந்துக்கு 2 ஆயிரம் ரூபாய் தான் ஒதுக்கப்படுகிறது. இது ஏறத்தாழ இன்றைய மருந்து விலைவாசியைக் கருத்தில் கொண்டு பார்த்தால் அது போதுமானதாக இல்லை. ஆகவே அதை கருத்தில் கொண்டு 5 ஆயிரம் ரூபாயாக உயர்த்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இங்கே பத்திரப் பதிவு பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்லி விடைபெறலாம் என்று கருதுகிறேன். பெரியவர்கள் சொல்லும்போது ஒரு கருத்தைச் சொல்லுவார்கள், பத்திரம், பத்திரம் என்று சொல்லுவார்கள், அந்த அளவுக்கு பத்திரங்களை பத்திரமாக காப்பாற்றப்படவேண்டும். ஆகவே அவைகளுக்கு எல்லாம் அரசு நிரந்தரமான சொந்தக் கட்டிடங்களைக் கட்டி அவைகளைக் காப்பற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கும்பகோணத்தில் மாவட்ட பத்திரப் பதிவாளர் அலுவலகத்திற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு ஆனால் இன்று வரை ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. மாவட்ட அளவில் பத்திரப் பதிவாளர் அலுவலகம் அங்கே நிறுவப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் தென்காசியில் மாவட்ட பதிவாளர் அலுவலகம் வாடகைக் கட்டிடத்தில் இயங்கிக்கொண்டு இருக்கிறது. அதற்கும் சொந்தக் கட்டிடம் அமைத்து அவற்றிற்கு பாதுகாப்பு வசதியை செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பராமரிப்புத் துறையில் சுமார் 10 ஆயிரம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். கடந்த 20 ஆண்டுகளில் அதிகாரிகள் அதிகமான அளவுக்கு பெருகியிருக்கிறார்கள். இந்தத் துறையில் கால்நடை ஆய்வாளர்கள் 3 ஆயிரம் பேர்கள்

பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட ஈரோட்டில் நடந்த ஒரு மாநாட்டில் மிக பெருமையாக அந்த அதிகாரிகளைப் பாராட்டிச் சொல்லியிருக்கிறார்கள். 'LAP to the land' என்றும், விஞ்ஞானத்தின் தூதுவர்கள் என்றும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திட்டத்தை நிறைவேற்றுகிற சமூகநலத் திட்டத்திற்கு வித்திட்ட ஆய்வாளர்கள் என்றும் குறிப்பிட்டு மிகப் பெருமையோடு சொல்லியிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளுவது அந்த கால்நடை ஆய்வாளர்கள் எப்படி வேலையில் சேர்ந்தார்களோ அதே பதவியில் தான் அவர்கள் ஓய்வு பெறுகிற காலத்திலும் இருக்கிறார்கள். ஆகவே அவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு இங்கே அவர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 300 கால்நடை மருத்துவ பட்டதாரி பதவி நிலைகள் காலியாக இருக்கின்றன. எப்படி வேளாண்மைத் துறையில் பட்டதாரிகளுக்குச் சமமாக உதவி வேளாண்மை அலுவலர்கள் துணை வேளாண்மை அதிகாரிகளாகவும் அவர்களுக்குச் சீக்கிரமாக பதவி உயர்வு கொடுக்கப்பட்டு விடுகிறது. அதேபோல் இவர்களுக்கும் பதவி உயர்வு கொடுத்து நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனவே ஈஞ்சங்கோட்டையில் உள்ள உயர் இன கால்நடைப் பண்ணையில் 170 பேர்கள் கடந்த 15 ஆண்டுகளாக தினக் கூலிகளாக இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் ஒரத்தநாட்டில் உள்ள கால்நடைப் பண்ணையில் உள்ள தினக்கூலி தொழிலாளர்களை ஒரு குறிப்பிட்ட ஆண்டு காலத்திற்குப் பிறகு அவர்களை நிரந்தரம் செய்து கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொண்டு எனக்கு பேச சந்தர்ப்பம் அளித்த மாண்புமிகு துணைத்தலைவருக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. பு. கோ. நாராயணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முத்திரைத்தாள்கள்—நிர்வாகம், பத்திரப் பதிவு, பால் வழங்கு திட்டங்கள், கால்நடை பராமரிப்பு ஆகிய மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை கூற வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களை அதிகமாகக் கொண்டு, விவசாயத் தொழிலை முக்கியத் தொழிலாக கொண்டுள்ள லட்சக் கணக்கான மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, கிராம பொருளாதாரத்தை மேம்பாடு படுத்தவும், கால்நடை பராமரிப்புத் துறை, பால்வளத் துறை இவைகள் சிறப்பான இடத்தைப் பெற்று இருக்கின்றன





வறட்சியாலும், வறுமையாலும் தமிழகம் பாதிக்கப்பட்டு இருந்தபோது கூட இந்த பால்வளத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை ஏழை எளிய மக்களை வறுமையிலிருந்தும்; வறட்சியிலிருந்தும் ஓரளவுக்கு காப்பாற்றியிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

இன்றைக்கு பால் உற்பத்தியைப் பொறுத்தவரையில் தமிழகம் தன்னிறைவைப் பெற்று உபரியாக உற்பத்தி ஆகி பாலை மற்ற மாநிலங்களுக்கு அனுப்புகிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. அந்த அளவுக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் 'வெண்மை' புரட்சி சிறப்பான இடத்தைப் பெற்று மகத்தான வெற்றியை அடைந்து இருக்கிறது என்பதை தெளிவாக்க கடமைப்பட்டு இருக்கிறேன்.

(பிற்பகல் 12-10)

ஒரு காலத்தில் குஜராத் மாநிலம் தான் பால்வளத் துறையில் முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தது. அந்த நிலைமையை மாற்றி, இன்றையதினம் தமிழகம் குஜராத்தை மிஞ்சக் கூடிய அளவிற்கு பால்வளத் துறையில் முன்னேறியிருக்கிறது, வளர்ந்திருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கால்நடைப் பராமரிப்புத் துறையில் கால்நடைகளுக்கு வருகின்ற நோய்களைத் தடுத்து நிறுத்துவதில் ஓரளவிற்கு இந்த அரசு வெற்றி பெற்றிருந்தாலும், இன்னும் தீவிரமாக நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டால் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். நோய்த் தடுப்பு மருந்துகள் ஏழை எளிய விவசாயிகளுக்கு மானிய விலையில் எளிதாகக் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இனப் பெருக்கத்திற்குப் பயன்படுத்தப்படும் உறை விந்து முறை வெற்றிகரமாக இன்றையதினம் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. உறை விந்து எல்லா கால்நடை கிளை நிலையங்களிலும் எளிதாகக் கிடைக்க ஆவனசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உறை விந்து இன்றைக்கு ஒன்றுக்கு ரூ. 5 வீதம் மக்களிடமிருந்து வசூலிக்கப்படுவதாக அறிகிறேன். உறைவிந்து அனைவருக்கும் இலவசமாகக் கிடைக்கச் செய்தால் ஏழை எளிய மக்கள் பயனடைவார்கள்.

கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் கால்நடைகளுக்கு வைத்தியம் பார்க்கும்போது கொடிய நோய்கள் தாக்கக் கூடிய நிலைமை இருப்பதாலும், தொற்று நோய்கள் தொற்றிக் கொள்ளும் அபாயம் இருப்பதாலும் அவர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் கொடுக்கவேண்டியதன் அவசியத்தை இந்த அரசு உணர்ந்து, இந்தத் திட்டத்தை தமிழகத்தில் செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை மருத்துவர்களுக்கு பதவி உயர்வு நீண்டகாலமாக கொடுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். இப்போது கால் நடை மருத்துவர்கள் வெடரினரி அசிஸ்டண்ட் சர்ஜன் என்ற பெயரால் பணியாற்றி வருகிறார்கள். வெடரினரி சர்ஜன்ஸ் என்ற பதவிகள் உருவாக்கப்படுமேயானால், அந்தக் கால்நடை மருத்துவர்கள் அசிஸ்டெண்ட் பதவியிலிருந்து வெடரினரி சர்ஜன் களாக பதவி உயர்வு பெற வாய்ப்பு ஏற்படும். அவர்களுடைய பதவி உயர்வுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மனித மருத்துவர்களுக்கு இணையாக இவர்களையும் எண்ணி சம்பளத்தைத் தரவேண்டுமென்பதற்காக கேரள மாநிலம் ஆய்ந்துகொண்டு வருகிறது. தமிழகமும் இதைச் செயல்படுத்தி னால் சிறப்பாக இருக்குமென்று கருதுகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இன்றைக்கு சைவ உணவு சாப்பிடுபவர்களைவிட அசைவ உணவு சாப்பிடுபவர்கள் அதிகமாகப் பெருகிவருகிறார்கள். நம் முடைய அசைவ உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற அள விற்கு தமிழக அரசு சிறப்பான திட்டங்களைத தீட்டி, பல்வேறு இடங்களில் ஆடு, கோழி, இறைச்சி போன்று அனைவருக்குமே கிடைக்கவேண்டுமென்பதிலே தனிக் கவனம் செலுத்தி, தமிழ்நாடு இறைச்சிக் கழகத்தின் மூலம் இந்தத் திட்டத்தை ஏற்படுத்தி நல்ல முறையில் செயல்படுத்தி வருகிறது. இதன்மூலம் சுகாதார முறை யில் நல்ல இறைச்சி, மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருவது பாராட்டத்தக்க ஒன்றாகும்.

இன்றையதினம் தொழிற்கல்வி முறையாக செயல்படுத்தப் பட்டு வருகின்ற நேரத்திலே, இந்த ஆடுகள், கோழி வளர்ப்பு போன்றவைகளை பள்ளிப் பாடங்களாக வைத்தால் கூட, அது பெருத்வியாக இருக்குமென்று கருத்துகிறேன்.

கால்நடை மருத்துவமனைகளைத் தேவையான இடங்களில் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் ஆப்பக்குடல் என்ற இடத்தில், அதைச் சுற்றியுள்ள வட்டாரங்களில் கால்நடைகள் அதிகமாக உள்ளதால், அங்கே ஒரு கால்நடை மருந்தகம் ஒன்றை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆடு வளர்ப்புத் துறையில் எஸ்.சி.ஏ. (S.C.A.) என்ற திட்டத் தில் ஆதித்திராவிடர் நலனை முன்னிட்டு ஒரு நபருக்கு 20 ஆடு களும், ஒரு கடா ஆடும் ரூ. 4,500 முதலீட்டில் 50 சதவீதம் மானிய மாகக் கொடுக்கும் திட்டம் நல்ல திட்டம். இந்தத் திட்டம் ஒரு





சில மாவட்டங்களில் இன்றையதினம் செயல்பட்டு வருகிறது. மற்ற மாவட்டங்களிலும் இந்தத் திட்டத்தை சிறப்பாக செயல் படுத்த அரசு முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக பத்திரப் பதிவுத் துறையைத் பொறுத்த வரையில், அரசுக்கு வருவாயைக் கொடுக்கக் கூடிய பல துறைகளில் இந்தப் பத்திரப் பதிவுத் துறை ஒன்றாகும். ஓராண்டிற்கு ரூ. 150 கோடி வருவாய் இந்தத் துறையின் மூலமாகக் கிடைக்கிறது என்று கணக்கிட்டிருக்கிறார்கள். பத்திரங்களைப் பதிவு செய்வதானால், ஒரு காலத்தில் 20, 30 கிலோமீட்டர் தூரம் சென்று பத்திரங் களைப் பதிவு செய்ய வேண்டிய நிலை இருந்தது. அந்த நிலையை மாற்றி அமைத்திருக்கிறோம். ஒவ்வொரு 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு, அங்கேயுள்ள மக்கள் பயன்பெறும் வகையில் சார் பதிவாளர் அலுவலகத்தை ஏற்படுத்தித் தந்து, நல்லமுறையிலே செயல்பட்டு வருவதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் தேவையான இடங்களில் குறிப்பாக பவானி வட் டத்தில் அம்மாப்பேட்டையில் ஒரு சார்பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே பவானியில் ஒரு சார்பதிவாளர் அலுவலகம் இருக்கிறது, அதை விட்டால் இடையிலே 25 மைல்களுக்கு எந்த அலுவலகமும் கிடை யாது. மேட்டூரில் தான் இருக்கிறது. ஆகவே அம்மாப்பேட்டையில் ஒரு சார்பதிவாளர் அலுவலகத்தை ஏற்படுத்தித் தரவேண்டு மென்று மக்கள் நலன் கருதி கேட்டுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து இந்திய தேசியக் காங்கிரஸ் இயக்கத்திலே நான் என்னுடைய கருத்துக் களை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைக்கு இந்த மானியத்திற்காக எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டிருக்கிறது என்றால் யுகப் புரட்சித் தலைவர் திரு. ராஜீவ் காந்தி இந்த நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக் கூடிய வாடிக் கிடக்கக்கூடிய கோடிக்கணக்கான மக்களுக்குக் தொழிலாளர் கூத்தாடாமல் கோடிக்கணக்கான மக்களும் குபேரர் களாக மாறவேண்டுமென்ற இந்தத் திட்டத்தை அன்னை இந்திரா காந்தி அவர்கள் கண்டெடுத்துத் தந்த 20 அம்சத் திட்டத்தின் வாயிலாக இங்கே கொடுத்திருக்கிறார்கள்.

1955 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறையில் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் அங்கீ கரிக்கப்பட்ட ஓராண்டு குறுகிய கால கால்நடை ஆய்வாளர் (ஸ்டாக்மேன்) பயிற்சி முடித்து நாட்டின் கேந்திரமாகவுள்ள

(திரு. வி. தங்கவேலு) [1986 ஏப்ரல் 8

கிராமங்களில் கால்நடை மருத்துவ கிளை நிலையங்களிலும், மருந்தகங்களிலும் கால்நடை ஆய்வாளர்களாகப் பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் செய்யும் வேலைகளைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். கால்நடைகளுக்குச் சிகிச்சை, காளைகளுக்கு ஆண்மை நீக்கம், பசு, எருமைகளுக்கு கருத்தரிக்க சினை ஊசி போடுதல், தொத்து நோய் வராமலிருக்க தடுப்பூசி போடுதல், ஆடுகள், கன்றுகள், கோழிகளுக்கு குடற்புழு நீக்கம் செய்ய மருந்தளித்தல், சினை ஊசி போட்ட பசு, எருமைகளை கன்று போட்டனவா என்று ஆய்வு செய்தல் போன்ற பல்வேறு பணிகளைச் செய்கிறார்கள். இப்படிப் பலவகையிலும் கால்நடைகள் நலம் நாடும் பணிகளை செய்துவரும் கால்நடை ஆய்வாளர்களுக்கு அவர்கள் வேலையில் சேர்ந்த நாள் முதல் முப்பது ஆண்டுகள் பணி முடிந்தும் பதவி உயர்வு ஏதும் இல்லாமல் இருந்துவரும் நிலை உள்ளது. அரசு மாறினாலும் அமைச்சர்கள் மாறினாலும் அவர்களின் கோரிக்கை என்றும் தொடர்ந்து நிலுவையிலேயே உள்ளது. மின்சார வாரியத்தில் கல்வித் தகுதி அதாவது தொழில் நுணுக்கக் கல்வி மிகக் குறைவாக உள்ளவர்கள் படிப்படியாக ஏ. இ. ஆக பதவி உயர்வு பெற வாய்ப்பு உள்ளதைக் காணலாம். மருத்துவத் துறையில் ஆறு மாதம் பயிற்சி முடித்த தொழு நோய் ஆய்வாளர் படிப்படியாக பதவி உயர்வு பெறுகிறார். அதுபோலவே 25 ஆண்டுக்காலம் பணி முடித்தவர்களுக்கு தற்போது செய்து வரும் பணியின்றும் மாறுபட்ட பதவிநிலை உருவாக்கி சீனியர் கால்நடை ஆய்வாளர்களுக்கு ரூ. 1,160 ஆரம்ப சம்பளத்தில் பதவி உயர்வு வழங்கிட வேண்டுமென்று கோருகிறேன்.

சில ஆண்டுகளிலே சுமார் 1,000 பேர்களுக்கு மேலாக ஓய்வு பெறும் நிலையில் உள்ள மேற்படி கால்நடை ஆய்வாளர்களுக்கு அதற்குள்ளாவது பதவி உயர்வு வழங்கவேண்டுமென நான் வேண்டி விரும்பி மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு ஒப்பீட்டுக் கணக்கை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கால்நடை ஆய்வாளர்களின் பொறுப்பில் இயங்குகின்ற கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டப் பணிகளிலும் கேந்திர கிராமத் திட்டப் பணிகளிலும் 1984–85 ஆம் ஆண்டு மற்றும் 1985–86 ஆம் ஆண்டுகளிலும் குறியீடு அளவு மிஞ்சி சாதனை அதிசமாக உள்ளது. மேற்படி கால்நடை ஆய்வாளர்களின் முறையான பொறுப்பில் இல்லாத ஆடு வளர்ப்புத் திட்டப் பணியில் 1984-85 மற்றும் 1985-86 ஆம் ஆண்டுகளிலே இலக்குகள் முடிக்கப்படாமல் பணியளவு குறைவாக இருப்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். எனவே ஆடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் ஐந்து ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒரு சீனியர் (தேர்வுநிலை) கால்நடை ஆய்வாளர் வீதம் நியமித்து இத்திட்டப் பணிகளை சிறப்பாகவும் சீராகவும் நிறைவேற்ற ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 8] (திரு. வி. தங்கவேலு)

(பிற்பகல் 12-20)

தமிழ்நாட்டில் செம்மறியாடுகள் ஐம்பத்து ஐந்து இலட்சத்து முப்பத்து ஆறாயிரம் உள்ளன. வெள்ளாடுகள் ஐம்பத்தி இரண்டு இலட்சத்து நாற்பத்து ஆறாயிரம் உள்ளன. இவற்றின் அபிவிருத்திக்காக கால்நடை பராமரிப்புத் துறையில் 1,264 ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அறிகிறேன். இச்சங்கங்களில் உள்ள ஆடுகளுக்கும், அவற்றின் மூலம் உற்பத்தியாகும் ஆட்டுக் குட்டிகளுக்கும், குடற்புழு நீக்கம் செய்ய மருந்து கொடுக்கவும், ஆட்டம்மை, அடைப்பான், துள்ளுநோய் முதலியவற்றிற்கு காலாகாலத்தில் தடுப்பூசி போடவும், வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட கடன் தொகைகளை வசூலிப்பதற்கும் பிரத்தியேகமாக அலுவலர்கள்—தொழில் நுட்பப் பணியாளர்கள் எவரும் இல்லாத காரணத்தால் இச்சங்கங்கள் யாவும் செயலிழந்து ஆடுகள் பெரும்பாலானவை விற்கப்பட்டு, வாங்கிய கடனும் திருப்பத்தரப்படாமல் இருந்து வருகிறது. இந்நிலை மாறவும், சங்கங்களை திறம்பட செயலாற்றச் செய்யவும் ஐந்து சங்கங்களுக்கு ஒரு சீனியர் தேர்வு நிலை கால்நடை ஆய்வாளரை- மேற்பார்வை அதிகாரியாக பதவி உயர்வு கொடுத்து நியமிக்க அரசு ஆணையிடக் கேட்டுக் கொள்கிறேன்.

மருந்து வாங்கும் குழுவைப்பற்றிச் சொல்லியாக வேண்டும். 1975-க்கு முன்பு கால்நடை இலாகாவுக்கு தேவையான மருந்துகள் மருந்து கிடங்குகளிலிருந்து—மெடிகல் ஸ்டோர்ஸ் டெப்போ—வாங்கப்பட்டது. தரமான மருந்துகளாகவும், விலை சகாயமாகவும் இருந்தன. கடந்த பல ஆண்டுகளாக கால்நடை இலாகாவில் மருந்துகள் வாங்குவதற்கு என்று மருந்து வாங்கும் குழு என்ற ஒன்று நியமிக்கப்பட்டு மருந்து கம்பெனிகளிடமிருந்து கொட்டேஷன் பெறப்பட்டு அதன்மூலம் மருந்துகள் வாங்கப்படுகின்றன. கொட்டேஷன் கொடுக்கும்பொழுது போட்டியில் விலை குறைவாக உள்ளதை மட்டுமே கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் போது மருந்துகள் தரக்குறைவாக இருக்க வாய்ப்புள்ளது. மாதிரி காட்டுகின்ற மருந்துகளுக்கும், விநியோகம் செய்யப்படும் மருந்துகளுக்கும் வேறுபாடு இருப்பதாகத் தெரிகிறது. மருந்துகள் தரம் குறைந்து விநியோகம் செய்யப்படுவதால் உரிய பலனை அடைய முடியவில்லை. மேலும் உபகரணங்கள் விநியோகம் செய்ய கொட்டேஷன் கொடுக்கும் கம்பெனிகள் பல உபகரணங்கள் உற்பத்தி செய்யாமல் கொட்டேஷன் கொடுத்துவிட்டு, சந்தையில் வாங்கி இலாகாவுக்கு விநியோகம் செய்கிறார்கள். இதனால் உரிய நேரத்தில் கிடைப்பதில்லை. கிடைக்கின்ற உபகரணங்களும் தரம் குறைந்து உள்ளது. ஆகவே, சென்ட்ரலைஸ்ட் பர்சேஸ் சிஸ்டத்தைக் கலைத்துவிட்டு, முன்பு போல் மெடிகல் ஸ்டோர்ஸ் டெப்போவிலிருந்து தரமான மருந்துகள், உபகரணங்கள் வாங்கி விநியோகம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. வி. தங்கவேலு) [1986 ஏப்ரல் 8

கால்நடை வளர்ச்சி ஆலோசனைக் குழு என்று 1975-ஆம் ஆண்டுக்கு முன்பு லைவ்ஸ்டாக் டெவலப்மெண்ட் கமிட்டி ஒன்று அரசால் நியமனம் செய்யப்பட்டு, கால்நடை துறை சம்பந்தமான திட்டங்களின் செயல்பாடுகள், இலாகாவில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணுதல், கால்நடைத்துறை மூலம் மக்களுக்குச் செய்ய வேண்டிய ஆக்கபூர்வமான பணிகள் பற்றி ஆலோசனை கூறவும், செயல்படுத்தவும் இந்தக் கால்நடை வளர்ச்சி ஆலோசனைக் குழு சிறப்பான பணியாற்றி வந்தது.

ஆலோசனைக் குழுவில், கால்நடை வளர்ப்பில் முதிர்ந்த அனுபவம் உடையவர்கள், கால்நடைத்துறை திட்டங்களோடு நெருங்கிய தொடர்பு உடையவர்கள், சட்டமன்ற, மேலவை உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். திட்டச் செயல்பாடுகளில் குறைகள் இருந்தாலும், அல்லது இன்னும் முனைப்பாகச் செயல்படுவதின் மூலம் மக்களுக்குப் பயன் உள்ள வழிகளை இந்த ஆலோசனைக் குழு பலமுறை கூடி விரிவான விவாதங்களின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்பட்டு இலாகா திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வந்தன. தற்போது அந்த மாதிரியான நடைமுறைகள் இல்லாததால், பல திட்டங்கள் ஒழுங்காகச் செயல்பட முடியாமலும், எந்த இடங்களில் சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்த வேண்டுமோ அங்கு ஆரம்பிக்கப்படாமலும், பல திட்டங்கள் தேக்க நிலையிலும், வெறும் அதிகாரிகள் படை மட்டும் பெருக்கப்பட்டு, மக்களுக்கு உரிய வகையில் செயலாற்றும் திறன் குன்றிக் காணப்படுகின்றன. இலாகாவின் வளர்ச்சிக்கும், மக்களின் நலனுக்கும், பயன்படும் வகையில் மீண்டும் கால்நடை வளர்ச்சி ஆலோசனைக்குழு ஆரம்பிக்கப்பட வேண்டுகிறேன்.

அடுத்து பத்திரப் பதிவைப் பற்றிச் சொல்லுகின்ற பொழுது, தமிழகத்தைப் பொறுத்தவரையில் பார்க்கின்ற பொழுது அண்டை மாநிலங்களில் இருக்கக்கூடிய நிலைமைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்தில் நம்முடைய மாநிலப் பத்திரப் பதிவு இலாக்கா மிகவும் சுறுசுறுப்பு அற்ற நிலையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. இதற்குக் காரணம் என்னவென்றால், கைட்லைன்ஸ் என்று சொல்லும் முறையில் பார்க்கின்றபொழுது, ஒரு இலட்சம் ரூபாய் என்று சொல்லி, முதலிலே 12,000 ரூபாய் கட்டினால் போதும் என்று பத்திரத்திற்கு வாங்கிக்கொள்கிறார்கள். அடுத்து, அது ரிஜிஸ்டிராரிடம், அதிகாரியிடம் வருகிறபொழுது, ரூ. 9,000 கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்படிச் சொல்கின்ற நேரத்திலே சிக்கல் வந்து, நீங்கள் ரூ. 9,000 கட்ட வேண்டாம், அதிகாரிக்கு ரூ. 5,000 தந்தால், அழகாக ரிஜிஸ்டர் செயது விடலாம் என்று சொல்லி அதிகாரிகள் மக்களை ஏமாற்றக் கூடிய சூழ்நிலை உருவாகி, இன்றைக்கு, திருப்பூரிலே மட்டும் கிட்டத்தட்ட 6,000 பத்திரங்கள் பதிவாகாமல் தேங்கிக் கிடக்கின்ற நிலைமை உண்டாகியிருக்கிறது என்று சொல்கின்றபொழுது, திருச்சி, திருப்பூர்,



1986 ஏப்ரல் 8] (திரு. வி. தங்கவேலு)

திருநெல்வேலி என்று சொல்கின்றபொழுது, இலட்சக் கணக்கான பத்திரங்கள் பதிவு செய்யப்படாமல் முடக்கம் செய்யப்பட்டிருக்கிற காரணத்தால், அப்படிப்பட்ட ஒரு முடக்கத்தை அரசு உடனே போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஆடு வளர்ப்போர் சங்கம், அதற்கடுத்தாற்போல், மாடு வளர்ப்போர் சங்கம் என்று சொல்கின்றதைப் போல், நரிக் குறவர் சங்கத் தலைவர் என்ற முறையில், மெத்தப் பணிவன்போடு ஒன்றை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இப்போது நரியின் முகத்தில் விழித்தேன் என்று சொல்கிறார்கள். அந்த அளவுக்கு ஒரு புதுமையான மிருகம் நரி. நரிக்கறி மிகவும் சத்தான கறியாக இருக்கிறது. நரிக்கறி ஒரு மூலிகைச் சத்து நிறைந்த கறியாக இருக்கிறது. இன்றைக்குத் தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 3 இலட்சம் நரிக் குறவர்கள் இருக்கிறார்கள். அவர்களை எடுத்துக் கொண்டாலும்கூட 80, 90 வயது வரை எந்த உடல் புண்ணும், குடல் புண்ணும் இல்லாமல் அவர்கள் இருப்பதற்குக் காரணம் நரிக்கறி சாப்பிடுவதுதான். நரிக்கறி மூலிகைச் சத்து நிறைந்த முத்தான கறியாக இருக்கிற காரணத்தால், ஆட்டுக்கறிக்குப் பதிலாக, அந்த நரிக்கறியை substitutable, consumable commodity என்று சொல்கின்றோமே அதைப்போல் ஆட்டுக் கறிக்குப் பதிலாக இந்த நரிக் கறியைத் தமிழகத்திலே இருக்கிற அரசு அறிமுகம் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாற்றுத், தலைவர் அவர்களே, அவ்வளவு கறி எங்கே கிடைக்கிறது, அது தெரியவில்லை.

திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நரி காட்டிலே இருந்தாலும், அதைப் பிடித்துக்கொண்டு நாட்டிற்கு வந்து, செயற்கை முறையிலே, இன்செமினேஷன் செய்தால், அதைப்பற்றி ஆராய்ச்சி செய்தால், நிறைய நரிக்கறி கிடைக்கக்கூடிய அளவுக்கு அதற்கு வசதி வாய்ப்புகள் இருக்கிறது என்பதை வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாற்றுத் தலைவர் அவர்களே, நரிக்கறியினுடைய முக்கியத்துவம் பற்றியெல்லாம் சொன்னார்கள், அனுபவம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

திரு. வி. தங்கவேலு : மாற்றுத் தலைவர் அவர்களே, நான் நரிக் கறியை வாரம் ஒரு முறை ஞாயிற்றுக்கிழமை சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன் என்பதை வேளாண்மைத் துறை அமைச்சருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாற்றுத் தலைவர் அவர்களே, நரி முகத்திலே விழிப்பது மிகவும் நல்லது என்று அவர் ஆரம்பித்து, நரிக்கறி என்பது மிகவும் நல்லது என்ற அளவுக்கு வந்திருக்கிறார். நரிக்கறி நல்லது என்று ஆரம்பித்தால், எப்படி நரி முகத்திலே விழிப்பது என்று சரியாகத் தெரியவில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாற்றுத் தலைவர் அவர்களே, நரி முகத்திலே விழிக்க வேண்டுமென்பது, நரிக் கறி ஏற்படுவதற்காகத்தான். (சிரிப்பு)

திரு. வி. தங்கவேலு : மாற்றுத் தலைவர் அவர்களே, ஆகவே, நரி பற்றிய ஒரு வளர்ச்சித் திட்டத்திற்கும், நரிக்கறி ஏற்றுமதி செய்வதற்கும் நரிக் கறி விநியோகக் கழகம் அமைப்பதற்கும், அந்த நரிக் குறவர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகம் வழங்குவதற்கும் அரசு ஆவன செய்ய வேண்டுமென்றும் அதற்கென்று ஒரு ஆலோசனைக் குழு அமைக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த அத்தனை பேர்களுக்கும் நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகத்ினுடைய முன்னவர் அவர்களால் முன் மொழியப்பட்ட கால்நடைப் பராமரிப்புத் துறை, பால் வழங்கு திட்டங்கள், முத்திரைத் தாள்கள், பத்திரப் பதிவு ஆகிய மானியக் கோரிக்கைகள் பற்றி என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்திலே எடுத்து வைக்க விழைகின்றேன். அண்ணல் காந்தி அடிகள் கண்ட உண்மையான கிராம ராஜ்யத்தை உருவாக்க வேண்டுமானால், கிராமப்புறத்திலே வாழ்கிற மக்களுக்கு, பொருளாதார வளர்ச்சியும், பொருளாதார ஊக்கமும் பாதிக்கப்பட்ட நேரத்தில் எல்லாம் பலன் அளிக்கின்ற விதத்திலே திட்டங்களைச் செயலாற்றுவது தான் ஒரு அரசின் கடமை என்ற உணர்வோடு வெள்ளத்தாலும் வறட்சியாலும் விவசாயிகள் பாதிக்கப்படுகிற நேரத்தில் எல்லாம் அவர்களுடைய குடும்பங்களுக்கு, இல்லங்களுக்கு வாழ்வளிக்கிற விதத்திலே, குடும்பத்தை நடத்திச் செல்வதற்கும் ஒரு சாதாரண பொருளாதாரத்தை உருவாக்குவதற்கும் பயன் அளிக்கிற விதத்திலே பயன்படுகிற துறைதான் கால்நடை வளர்ப்புத் துறை. ஆகவே, அந்தத் துறையின் மீது நாட்டம் கொண்டு, 1977-ஆம் ஆண்டு இந்த நாட்டினுடைய ஆட்சிப் பொறுப்புக்கு மக்களால் அனுப்பி வைக்கப்பட்டதற்குப் பின்னாலே, தமிழ்நாட்டு முதல்வர் அவர்கள் கிராமப்புற வளர்ச்சிக்கு உதவுகிற விதத்தில், இந்தத் துறைக்கு அதிக முக்கியத்துவத்தைத் தந்து, பல்வேறு முன்னேற்றங்களைக் கொண்டுவந்து, தமிழகத்திலே வெண்மைப் புரட்சியை உருவாக்கி இருக்கிறார்கள். அப்படி வெண்மைப் புரட்சியை உருவாக்கி இருக்கிற தமிழக முதல்வர், விவசாயிகளுக்கு உதவுகிற விதத்தில், சிறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை வழங்கியும்



கிராமங்களிலே விவசாயிகளுக்கு உபதொழிலாக, இன்னும் சொல்லப்போனால், பல நேரங்களில் அவர்களைக் காப்பாற்றுகிற மூலத்தொழிலாகக்கூட ஆக்கியிருப்பது இந்தக் கால்நடை வளர்ப்பும், கோழி வளர்ப்பும் இதுபோன்ற பல்வேறு தொழில்களுமாகும்.

(பிற்பகல் 12—30)

இன்றைக்கு அந்த கிராமப்புறத்து ஏழை எளிய மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் நலிந்துவிடக் கூடாது என்பதால், கோழி வளர்ப்பு போன்ற பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருக்கின்ற விவசாயிகள் நலிந்துவிடக் கூடாது என்பதற்காக அவர்களுக்கு வழங்கப்படுகின்ற தீவனங்களுக்கு போடப்பட்டிருக்கிற விற்பனை வரியை 5 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாக குறைத்து தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் அறிவித்திருக்கிறார்கள். கடந்த ஆண்டு இந்த சட்டமன்றத்திலே நான் பேசும்போது இந்த விற்பனை வரியை அறவே ரத்து செய்ய வேண்டும் என்றும், இந்த கோழி வளர்ப்பில் ஈடுபட்டிருக்கிறவர்கள் எல்லாம் சிறு விவசாயிகள்; அவர்களுடைய வாழ்க்கையை வளப்படுத்த இந்த கோழி வளர்ப்பை நம்பியே வாழ்ந்துகொண்டிருக்கிற விவசாயிகள்; அவர்கள் பயன்படுத்துகின்ற கோழித் தீவனத்திற்கு வரி போட்டு விலை உயர்த்தினால் அந்த விவசாயிகள் பெறும் பயன் குறைந்துவிடும், ஆகவே கோழித் தீவனத்திற்கு விற்பனை வரியை அறவே ரத்து செய்ய வேண்டுமென்றும் கேட்டேன். இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே கோழித் தீவனத்திற்கு 5 சதவீதமாக இருந்த விற்பனை வரியை 2 சதவீதமாகக் குறைத்திருப்பதற்கு கோழி வளர்ப்பிலே ஈடுபட்டிருக்கிற விவசாயிகள் சார்பாக இந்த அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் இந்த 2 சதவீதம் வரி என்று இருப்பதையும் மாண்புமிகு நிதி அமைச்சர் சற்று தாராள மனது வைத்து, அறவே ரத்து செய்து, கோழித் தீவனங்களுக்கு விற்பனை வரி இல்லை என்ற அறிவிப்பை வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று கடந்த ஆண்டு வேறு ஒரு கோரிக்கையையும் விவசாயிகள் சார்பாகவும், கோழி வளர்ப்பில் ஈடுபட்டிருக்கிற நண்பர்கள் சார்பாகவும் வைத்தேன். கோழி வளர்ப்பிலே ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு மின்சார கட்டணம் அதிகமாக இருக்கிறது. தொழில்களுக்கு வழங்கப்படுகின்ற மின்சாரத்திற்கு என்ன கட்டணம் விதிக்கப்படுகின்றதோ அந்த அளவுக்கு கோழி வளர்ப்பவர்கள் பயன்படுத்தும் மின்சாரத்திற்கும் கட்டணம் விதிக்கிறார்கள்,

கோழி வளர்ப்பவர்கள் மிகக் குறைந்த அளவிலேதான் இருக்கிறார்கள். மிகக் குறைந்த வருமானத்தைத்தான் அவர்கள் பெற முடிகிறது. அப்படிப்பட்டவர்களுக்கு இந்த மின்சாரக் கட்டணம் ஒரு சுமையாக இருக்கிறது. முட்டைக்கு நியாயமான விலை கிடைக்காத காரணத்தால் அவர்களுடைய வருமானம் பெருகவில்லை. கோழித் தீவனத்திற்குப் போடுகின்ற வரியினால் அவர்கள் நலிந்துவிடக் கூடாது என்பதற்காக வரி குறைக்கப் பட்டிருக்கிறது. அதைப்போல சிறு விவசாயிகள் பயன்படுத்துகின்ற மின்சாரத்திற்கு அளிக்கப்படுகின்ற சலுகை போல கோழி வளர்ப்பில் ஈடுபட்டிருக்கிறவர்கள் பயன்படுத்துகின்ற மின்சாரத்திற்கும் சலுகை அளிக்க வேண்டுமென்று ஏற்கெனவே கேட்டிருந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் இந்த ஆண்டிலே அதை பரிசீலனை செய்து, சிறு விவசாயிகளுக்கு அளிக்கப்படுகின்ற அளவுக்கு மின் கட்டணத்தில் சலுகை அளித்து, அவர்களை ஊக்கப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குக் கால்நடை வளர்ப்புத் துறையாக இருந்தாலும், பால் பெருக்குத் திட்டமாக இருந்தாலும் தமிழ்நாட்டில் பல்வேறு அம்சங்களில் இந்தத்துறை வளர்ந்து கொண்டிருந்தாலும் இன்னும்நல்ல முறையிலே பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். டென்மார்க், சுவீடன், நார்வே போன்ற வெளிநாடுகளில் மேற்கொண்டிருக்கின்ற ஆராய்ச்சிகளைப் போன்று தமிழ்நாட்டிலும் அந்த நாடுகளைப் பின்பற்றி ஆராய்ச்சிகளை மேற்கொள்ள தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் இதிலே உரிய கவனம் செலுத்த வேண்டும். இப்போது இந்த ஆராய்ச்சிப் பணிக்காக இந்த அரசு ஒதுக்கியிருக்கிற தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. தமிழக அரசு இந்தத் துறையில் பல்வேறு ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதைக் கருத்தில் கொண்டு இதற்கு போதுமான பணத்தை ஒதுக்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாரதிக்கும், பாரதிதாசனுக்கும் பல்கலைக் கழகம் கண்ட மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தாய்த் தமிழுக்கும் பல்கலைக்கழகம் கண்டு, இன்றைக்கு உலகத் தமிழ்ச் சங்கத்தையும் நிறுவியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட முதல்வர் அவர்கள் தமிழ் நாட்டிலே கால்நடை மருத்துவத்திற்கும் ஒரு பல்கலைக்கழகம் கண்டு அதன்மூலம் புதிய வரலாற்றை, புதிய மறுமலர்ச்சியை இந்தியத் துணைக்கண்டத்திலே தமிழ்நாட்டில் படைத்திட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களையும் இந்த அரசையும் கேட்டுக்கொள்கிறேன்.





மருத்துவத் துறைக்கு புதிய பல்கலைக் கழகம் கண்டிருக்கிற இந்த அரசு கால்நடை மருத்துவத்திற்கும் புதிய பல்கலைக்கழகத்தைக் கண்டு, நவீன ஆராய்ச்சிகள் மூலம் ஒரு புதிய வரலாற்றை இந்த நாட்டிலே உருவாக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று நேற்றைக்கு முன்தினம் இந்த மன்றத்திலே வேலை வாய்ப்பு பற்றி ஒரு கேள்விக் கணை எழுந்து, அதன் தொடர்பாக மாமன்ற உறுப்பினர்களில் பலர் கேள்விக் கணைகளைத் தொடுத்தார்கள். இந்தத் துறையிலே பல பதவிகள் இன்றைக்கு காலியாக இருக்கின்றன. குறிப்பாக எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றவர்களுக்கு தடுப்பு ஊசி போடும் பயிற்சி அளித்து, 'வாக்சினேட்டர்'களாக நியமிக்கின்ற, அதாவது தடுப்பூசியாளர்களாக நியமிக்கின்ற பணியிடங்கள் ஏராளமாக காலியாக இருக்கின்றன.

தடுப்பூசியாளர்களாகப் பணியாற்றியவர்கள் எல்லாம் கால்நடை ஆய்வாளர்களாகப் பணி உயர்வு பெற்றிருக்கின்ற நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையில் தடுப்பூசியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படாமல் இருப்பதன் காரணத்தால் முழுமையான பலனை விவசாயிகள் அனுபவிக்க முடியாமல் இருக்கிறார்கள். உரிய காலத்தில் தடுப்பூசி போட்டு நோய் வருவதற்கு முன்னாலேயே தடை செய்கிற நிலைமை இன்றைக்கு இல்லாமல் இருப்பதன் காரணத்தால் உடனடியாகத் தடுப்பூசியாளர்களை நியமித்து ஒவ்வொரு கிராமங்களிலும் நியமிக்கப்படுகிற தடுப்பூசியாளர்கள் இத்தனை கிராமங்கள், இத்தனை இடங்கள், இத்தனை கால்நடைகள் என்ற வகையில் தடுப்பூசி போடவேண்டுமென்று ஒரு டார்கெட் உருவாக்கி படிப்படியாக நாட்டிலே எந்த நோயும் மாடுகளுக்கும், மற்ற கால்நடைகளுக்கும் வராத சூழ்நிலைகளை உருவாக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

வளர்ந்திருக்கிற விஞ்ஞான உலகத்தில் ஏதேதோ திட்டங்களுக்கெல்லாம் பணம் ஒதுக்கப்படுகிறது, இன்னும் சொல்லப்போனால் இந்தியத் துணைக் கண்டத்தில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்காக எவ்வளவோ செலவிடக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆனால் அந்த மக்களுக்கு வாழ்வளிக்கக்கூடிய வகையில், அந்தத் தேவையைப் பூர்த்தி செய்கிற வகையில் இருக்கிற பாலைத் தருகிற மாடுகளுக்கு முழுமையான மருத்துவ வசதி தேவை என்கிற நிலையில் அந்தத் தேவையைப் பூர்த்தி செய்கிற வாய்ப்பு இந்தியத் துணைக் கண்டத்திலேயே இல்லை என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

(டாக்டர் கே. பி. இராமலிங்கம்) [1986 ஏப்ரல் 8

உழவு மாடாக இருந்தாலும் சரி, வண்டி மாடாக இருந்தாலும் சரி, பால் தரக்கூடிய மாடாக இருந்தாலும் சரி, அவை எல்லாம் விபத்துக்குள்ளாகின்ற காலத்தில் கால் முறிவு அல்லது எலும்பு முறிவு ஏற்படுகிறபோது எக்ஸ்ரே எடுக்கக்கூடிய சூழ்நிலை இன்றைக்குத் தமிழகத்தில் பல இடங்களில் இல்லை. இரண்டு இடங்களில் மட்டும்தான் தமிழ்நாட்டிலேயே, இருக்கின்றன. கால்நடை மருத்துவக் கல்லூரியில் ஒன்றும் வேறொரு இடத்தில் ஒன்றும் என்று இரண்டுக்கு இன்றைக்கு இருந்துகொண்டிருக்கின்றன. எனவே உழவு மாடுகளுக்கு கால் முறிவு ஏற்பட்டால் அல்லது மாடுகளுக்கு வேறு நோய்கள் ஏற்பட்டால் எக்ஸ்ரே எடுக்கவேண்டும் என்றால் சென்னைக்குக் கொண்டு வந்து எக்ஸ்ரே எடுத்துப் பார்த்துவிட்டதற்குப் பிறகு ஊருக்குச் செல்வது என்ற நிலைமை இருக்கக்கூடாது. ஒவ்வொரு மாவட்டத்தில் ஒவ்வொரு மருத்துவமனையில் ஒரு எக்ஸ்ரே யூனிட் அமைக்கிற வகையில் அரசாங்கம் முயலவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இவ்வளவு பணம், இவ்வளவு நிதி தேவை என்றெல்லாம் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கவலைப் படாமல் இந்த நாட்டின் வளர்ச்சி திட்டமாக, கிராமப்புற மக்களுக்கு வாழ்வளிக்கிற திட்டமாக இருக்கின்ற காரணத்தால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு எக்ஸ்ரே யூனிட் அமைக்கிற முயற்சியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கீ வில்லேஜ் என்று சொல்லப்படுகிற கேந்திர கிராம அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக பொலி காளைகளை எல்லாம் மூன்றாண்டுக்கு ஒருமுறை மாற்றியாகவேண்டும். அப்போதுதான் அவற்றிலிருந்து எடுக்கப்படக்கூடிய விந்து சக்தி வாய்ந்ததாக இருக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். ஆனால் 10 ஆண்டுகள் ஆகியும் மாற்றப்படாத பொலி காளைகள் கிராம கேந்திரங்களில் இருக்கின்றன. அவற்றால் முழுப் பலன் கிடைக்காது. மேலும் அந்தப் பொலி காளைகளுக்காகச் செலவிடுகிற தொகையும் இந்த அரசுக்குக் கூடுதலாகிறது. ஆகவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இதை எல்லாம் கருத்தில் கொண்டு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை பொலி காளைகளை மாற்றுகிற வகையில் அதிகமான நிதி ஒதுக்கி உரிய ஏற்பாடு செய்து வழங்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

நகரப் பகுதியில் எல்லாம் பாலை டெஸ்ட் செய்வதற்காக சுகாதாரப் பணியாளர்களை பணியமர்த்தி இருக்கிறார்கள். அவர்கள் என்ன டெஸ்ட் செய்கிறார்கள் என்றால் பாலிலே தண்ணீர் கலந்திருக்கிறார்களா என்பதை மட்டும்தான் கண்டு பிடிக்கிறார்கள். அதைமட்டுப்தான் கண்டுபிடிக்க அவர்களால் முடியும். கால்நடை ஆய்வாளர்களாக இருந்தால் முழுமையாக டெஸ்ட் செய்து ஏதேனும் நுண்ணிய கிருமிகள் இருக்கின்றனவா என்பதையும் பார்ப்பதற்கு வசதியாக இருக்கும். எனவே அவ்வாறு



1986 ஏப்ரல் 8] (டாக்டர் கே. பி. இராமலிங்கம்)

டெஸ்ட் செய்கிற பொறுப்பை கால்நடை ஆய்வாளர்களுக்கும், கால்நடை மருத்துவர்களுக்கும் ஒப்படைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு சென்னை நகரிலும் சரி, வேறு பல நகரங்களிலும் சரி காடை சாப்பிடுகிறவர்கள் இருக்கிறார்கள். காடைக்கறி ருசியாக இருக்கும், இங்கே பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. தங்கவேலு அவர்கள் நரிக்கறி சாப்பிடச் சொன்னார்கள். நரிக்கறியைச் சிலபேர் சாப்பிடலாம். ஆனால் காடைக்கறியைப் பலரும விரும்பிச் சாப்பிடுகிறார்கள். அது மிகவும் ருசியாக இருக்கும். இந்த மன்றத்தில் உள்ள பெரும் பாலையோர் காடைக்கறி சாப்பிட்டு இருக்க முடியும். அந்தக் காடையை டேபிள் பர்ப்பசுக்கு உபயோகப்படுத்துகிற வகையில் ஜப்பானிய வகைக் காடைகள் இந்தத் துறையின் மூலமாக அதிகமான அளவில் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டுக் கொண்டு வருகின்றன. இதில் ஒரு மாவட்டத்திற்கு ஒரு மாதிரி பண்ணையை உருவாக்கி, ஒவ்வொரு விவசாயியினுடைய புறக்கடைகளிலேயும் இந்தப் பண்ணையை அமைப்பதற்கான ஆய்வை அரசு மேற்கொள்ள வேண்டும். அதற்கான உதவிகளை, அதற்கான சட்டங்களை இந்த அரசு போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12.40)

இன்றைக்கு நவீன இறைச்சிக்கூடம் துவங்குவதற்கான பணிகளை எடுத்துக் கொண்டால், கடந்த 5 ஆண்டுகாலமாக வரிசையாக ஒவ்வொரு ஆண்டும், அதன் பணிகள் தொடர்ந்து நடைபெறுகிறது. நடைபெறுகிறது என்று சொல்லிக் கொண்டிருந்தாலும், ஒரு முன்னேற்றமான பாதையிலே இந்த நவீன இறைச்சிக் கூடத்தை உருவாக்குவதிலே நாம் கொஞ்சம் மெத்தனமாக இருக்கிறோமோ என்ற ஐயப்பாடு இந்த நாட்டு மக்களுக்கு மத்தியிலேயும், இந்த மன்றத்தில் உள்ள உறுப்பினர்களிடையிலேயும் இருந்து கொண்டிருக்கிறது. இந்தப் பணிகளை விரைவு படுத்தவேண்டும். நவீன இறைச்சிக் கூடத்தை உருவாக்குகின்ற பணிகளை மிக விரைவாக செயல்படுத்தினால்தான் இன்றைக்கு நாட்டிலே வளர்க்கக்கூடிய ஆடுகளுக்கு நல்ல விலை கிடைக்கிற வாய்ப்பு ஏற்படும். இன்னும் சொல்லப்போனால் அப்படி நவீன இறைச்சிக் கூடங்களை உருவாக்குகின்ற அதே நேரத்திலே, ஆடு வளர்ப்பு சங்கங்களை நலிந்த நிலைமையில் இருப்பவற்றை வலிமை ஆக்குவதற்கும், அதைப்போல புதிய சங்கங்களை உருவாக்குவதற்கும், அந்த சங்கங்களுக்கு போதிய விற்பனை உதவியும் போதிய நிதி உதவியும் அரசு தருகின்ற வகையிலே, அந்த சங்கங்களின் மீது அதிகக் கவனம் செலுத்தி ஒரு முயற்சியை மேற்கொள்ள வேண்டும். இவையெல்லாம்

சொல்வதற்குக் காரணம் இன்னமும் கூட இந்தத் துறை, மிகப் பெரிய அளவுக்கு நாட்டு மக்களோடு தொடர்பு கொண்டு, மிகப் பெரிய அளவில் நாட்டு மக்களின் பொருளாதார முதுகெலும்பாக இருக்கிற இந்தத் துறையை, இன்னமும் ஒரு தனித் துறையாக அமைக்காமல் வைத்திருக்கும் நிலைமை நம்முடைய ஆட்சியிலேயும் சரித்திரத்திலேயும் இந்த மாநிலத்திலே இருந்து கொண்டிருக்கிறதே என்று எனக்கு வருத்தமாக இருக்கிறது.

பல ஆண்டுகள் நான் இந்த மன்றத்திலே பேசியிருக்கிறேன். இதற்கென்று அரசு தனித் துறையை தலைமைச் செயலக மட்டத்திலே உருவாக்க வேண்டும். இதற்கென்று தனியாக செயலாளரை நியமிக்க வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறேன். அதையே மீண்டும் இந்த மன்றத்திலே வலியுறுத்த நான் கடமைப் பட்டிருக்கிறேன். காரணம் அப்போதுதான் இந்தத் துறையிலே முழுமையான தெளிவு சுளிவுகளைப் புரிந்து, இந்தத் துறைக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்தால்தான் இந்தத் துறையினுடைய வளர்ச்சியை நல்ல முறையில் வளர்க்கமுடியும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல இன்றைக்கு இறைச்சித் துறையை எடுத்துக் கொண்டால் இன்னும் பழைய முறையிலேயே நாம் இருந்துக் கொண்டிருக்கிறோம், அப்படி இருந்து கொண்டிருக்காமல், கேன்ட் குக்ட் மீட் என்று சொல்லுகிற அளவுக்கு டின்களிலே அடைக்கப்பட்ட இறைச்சிகளை, பதப்படுத்தப்பட்ட, சமைத்த இறைச்சிகளை வழங்குகின்ற ஒரு முயற்சியிலேயும் நம்முடைய கோழி வளர்ப்பு துறையாக இருந்தாலும் சரி, இறைச்சி துறையாக இருந்தாலும் சரி அந்த முயற்சிகளை மேற் கொள்ள வேண்டும். இன்னும் சொல்லப்போனால் அப்படிப் பட்ட முயற்சிகளை மேற்கொண்டு அவைகளை வழங்கி, ஒரு மாதிரியாக அதை உருவாக்கி செய்து பார்ப்போமேயானால் தான் அதற்கு மக்களிடையே எந்த அளவிற்கு வரவேற்பு இருக்கிறது என்று புரிந்துகொள்கிற ஒரு வாய்ப்பாக அமையும். அத்தோடு வேலை இல்லதவர்களுக்கு இதன் மூலம் மிகப் பெரிய வியாபாரத்தை செய்வதற்கு வாய்ப்பாகும் என்ற நிலை கருதி, அந்த மக்களுக்கு உதவுகின்ற வகையில், அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று வேண்டுகிறேன்.

இன்றைக்கு கால்நடைகளுக்கு எவ்வளவோ உதவிகள் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் ஒரு கருத்தை நான் சொல்லவிரும்புகிறேன். காரணம் இன்றைக்கு கால்நடைகளுக்கு மேய்வதற்கு கூட இடம் இல்லை என்ற சூழ்நிலை இருக்கிறது. மேய்வதற்கு இடம் இல்லை என்றாலும் அவைகள் காலார நடப்பதற்காவது இடம் வேண்டாமா? கால்நடைகள் ஒவ்வொரு கிராமத்திலேயும் தானாக நடந்து போய் திரும்ப தன்னுடைய தொட்டடிக்கு வந்து சேருவதற்காவது இடம் வேண்டும்.





ஆனால் இன்றைக்கு கிரேசிங் யார்ட்ஸ் (Grazing Yards) என்று சொல்லப்படுகிற மேய்ச்சல் புறம்போக்கு நிலங்களைக் கூட பல இடங்களில் பட்டாக்கள் போட்டு கொடுக்கப்படுகிறது. இன்னும் பல இடங்களில் கொஞ்சம் அவற்றை விட்டு வைததிருந் தாலும் சோஷியல் ஃபாரஸ்ட் என்ற அடிப்படையில் மரங்கள் நடுவதற்காக அவைகள் எல்லாம் வன இலாகாவிற்கு போய்ச் சேர்ந்து விடுகிறது. அப்படிப்போய் அவர்கள் மரங்களை நடுகிற சூழ்நிலை ஏற்பட்டு விடுமானால், ஆடுமாடுகள் அங்கே போகக் கூடாது, நுழையக் கூடாது அப்படிப் போனால் அதற்கு தடை என்று பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆகவே மாநில அரசு கிரேசிங் யார்ட்ஸ் என்று சொல்லப்படுகிற இந்த மேய்ச்சல் நிலங்களை பட்டா செயது கொடுக்கிற முறையை இனியேல் ரத்து செய்ய வேண்டும். எந்த ஊரிலேயும் மேய்ச்சல் புறம்போக்கு இருக்கிற இடங்களுக்கெல்லாம் எந்தக் காரணத்தைக் கொண்டும், தனிப்பட்டவர்களுக்கு பட்டா போட்டு தருவதோ அல்லது அரசுத் துறைகளுக்கு எடுக்கின்ற நிலைமையோ இருக்கக் கூடாது என்பதை அரசுக்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோல சோஷியல் ஃபாரஸ்ட் துறைக்கு கொடுக்கப் படுவதும் தடுக்கப்பட்டாக வேண்டும். மேய்ச்சல் நிலங்களை எந்தக் காரணத்தைக் கொண்டும் யாருக்கும் கொடுக்கக் கூடாது. இன்றைக்கு நல்ல வேளையாக வருவாய்த் துறை அமைச்சர் அவர்களே இந்தத் துறைக்கும் முன் மொழிந்திருக்கிற காரணத தால், அவர்களே இந்த இரண்டையும் சேர்த்து செய்துவிட முடியும் என்ற காரணத்திற்காக இதை வலியுறுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆகவே எந்தக் காரணத்தைக் கொண்டும் மேய்ச்சல் புறம்போக்கு நிலங்களை வேறு எந்த துறையிடமோ அல்லது தனிப்பட்டவர்களுக்கோ பட்டா கொடுப்பது நிறுத்தப்பட வேண்டும். அப்படிச் செய்தால்தான் மாடுகள் மேய்வதற்கு போதுமான அளவுக்கு நிலம் இல்லாவிட்டாலும் கூட அவைகள் காலார நடந்து போய் வருவதற்காவது வழி ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு கால்நடை உதவி மருத்துவர்களைப் பொறுத்த வரையில் 10 ஆண்டுகள், 20 ஆண்டுகள் கழித்து அவர்கள் துணை இயக்குநர்களாக பணி உயர்த்தப்படுகிறார்கள். இவர்களின் அனு பவம் எல்லாம் நிர்வாகத் துறைக்குத்தான் போய்ச் சேர்கிறது. அதைத் தவிர்த்து அவர்களின் மருத்துவத் துறை அனுபவம் மருத் துவத்திற்கும் பயன்படுகிற வகையில் செய்ய வேண்டும். ஆகவே துணை இயக்குநர்களாக இருப்பவர்கள் மருத்துவமனைகளில் மருத்துவர்களாக பணியாற்ற வேண்டும். அதற்கான ஆணையை அரசு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் சொல்லப் போனால் துணை இயக்குநர்களாக இருப்பவர்கள் அவர்களின் சொந்த மாவட்டத்தில் பணியாற்றக் கூடாது என்று சொல்கிற நிலை இருக்கிறது. சொந்த மாவட்டங்களில் பணியாற்றுபவர்கள் வேறு பல துறைகளில் இருக்கிறார்கள். ஆகவே இந்தத் துறையில் இருப்பவர்களையும் கால்நடை உதவி மருத்துவர்களாக இருந்து, துணை இயக்குநர்களாக பதவி உயர்வு பெற்றவர்களும் தங்கள் மாவட்டத்தில் பணியாற்றலாம் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கால்நடை சூப்பர்வைசர்கள் பதவிகள் இப்போது பல இடங்களில் காலியாக இருக்கின்றன. அதற்கு கால்நடை உதவி மருத்துவர்கள் போய்ச் சேர முடியாது. காரணம் 2 ஆண்டுகள் படித்தவர்கள் அந்தப் பதவியை வகித்தார்கள். ஆகவே அந்த இடத்திற்கு கால்நடை ஆய்வாளர்களுக்கு ஒரு பயிற்சி கொடுத்து அந்த இடத்திற்கு அவர்களை நியமிக்கலாம் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தமிழ் நாட்டில் வறட்சி ஏற்பட்டாலும் சரி அல்லது வியாபாரத்திற்காக என்று எடுத்துக் கொண்டாலும் சரி இங்கேயிருந்து கால்நடைகள் கேரள மாநிலத்திற்கு தொடர்ந்து கடத்தப்படுகிற நிலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கடத்தப்படுகிறது என்று சொல்வதை விட இங்கே இருக்கிறவர்கள் மாடுகளை விற்றுவிடுகிறார்கள், அவர்கள் வாங்கிச் செல்கிறார்கள் என்று சொல்வது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். இங்கேயிருக்கிற கால்நடைச் செல்வங்களை வேறு மாநிலங்களுக்கு விற்று விட்டால் தமிழ் நாட்டில் கால்நடைகளின் எண்ணிக்கை குறைந்து போகிற சூழ்நிலை ஏற்படுகிறது என்பதை உணர்ந்து அந்த பார்டர்களில் ஒரு தடையை உருவாக்கி, மாடுகள் ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு எடுத்துச் செல்வது முழுமையாக தடைப்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு ஐ.ஆர்.டி.பி. மூலமாகவும் வேறு பல நிதி நிறுவனங்கள் மூலமாகவும் வழங்கப்படுகிற கடன்கள் திரும்பத் திரும்ப ஒரே மாட்டிற்கு வழங்கப்படுகிற சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதுகுறித்து நான் பலமுறை இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். இதனை முழுமையாக தடை செய்கிற சூழ்நிலை இன்னும் ஏற்படவில்லை. இதனை தடுக்கிற வகையில் என்னுடைய கருத்தினை ஒரு யோசனையாக வைக்க விரும்புகிறேன் எந்தக் கடன் வழங்கினாலும் மாடுகளாக வழங்குகிற ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டும். அப்படி மாடுகளாக வழங்குகிற சூழ்நிலை நல்ல பலனை அளிக்கும். இப்போது மாடுகளை சந்தைக்குப் போய் வாங்குகிற நிலைதான் இருக்கிறது. ஆகவே புதிய



கால்நடைப் பண்ணைகளை உருவாக்கி, புதிய கன்றுகளை உற்பத்தி செய்து, அந்தக் கன்றுகளை வழங்குவதற்கான வாய்ப்புகளை உருவாக்கவேண்டும். அதற்கு அதிகமான நிதி தேவைப்பட்டாலும் கூட புதிய பண்ணைகளை ஏற்படுத்தினால் அது நாட்டின் வளர்ச்சிக்கு உதவிபுரிவதாக அமையும். இன்றைக்கு 10 சதவீதம், 20 சதவீதம் தான் கலப்பின பசுக்கள், கலப்பின மாடுகள் தமிழகத்தில் இருக்கிறது. அந்த நிலையை மாற்றி 50 சதவீதத்திற்கு மேலே கலப்பின கால்நடைகள் தமிழ் நாட்டில் இருக்கின்றன என்று செய்தால்தான் ஒரு வேகமான மறுமலர்ச்சியை இந்த மாநிலம் பெறமுடியும். அதற்கேற்ப கலப்பின கால்நடைகளை உருவாக்கி கொடுப்பதற்கு ஏற்றவகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாதிரி கால்நடைப் பண்ணையை உருவாக்கி அதன் மூலமாக கன்றுகளை உற்பத்தி செய்து, அந்தக் கன்றுகளை நேரிடையாக விவசாயிகளுக்கு வழங்குகிற விதத்தில் மாநில அரசு திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்,

அடுத்து பத்திரப் பதிவைப் பொறுத்தவரையில் இன்றைக்கு பொதுமக்கள் மிகுதியாக சட்டணம் விதிக்கப்பட்டிருக்கிறது என்று குறைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மிகுதியாக கட்டணம் விதிக்கப்பட்டிருப்பது ஓரளவிற்கு உண்மைதான். ஆகவே இதனை மறுபரிசீலனை செய்து கட்டணத்தை சிறிது குறைக்க முடியுமா என்பதை மாநில அரசு ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் துறையின் மூலமாக நாட்டிற்கு ஆற்றியிருக்கும் பணிகளை பாராட்டி என்னுடைய கருத்துக்களை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, முத்திரைத் தாள்கள்—நிர்வாகம், பத்திரப் பதிவு, பால் வழங்கு திட்டங்கள், கால்நடை வளர்ப்பு ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களை நான் சார்ந்திருக்கும் ஜனதா கட்சியின் சார்பிலே எடுத்துச்சொல்ல வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

பத்திரப் பதிவைப் பொறுத்தவரையில் பத்திரப் பதிவு செய்வதற்கு 100 ரூபாய்க்கு 12 ரூபாய் என்று அரசாங்கத்தால் வரி விதிக்கப்படுகிறது. பதிவு பீசாக 100 ரூபாய்க்கு ஒரு ரூபாய் வசூலிக்கப்படுகிறது.

(பிற்பகல் 12–50)

அதேபோல் பத்திரம் எழுத நிலத்தை அளந்து பார்க்க சர்வேயரைக் கூட்டிச் செல்ல மற்றும் பல செலவுகள். அங்கே பத்திரப் பதிவு அலுவலகத்தில் ஏற்படுகின்ற காரணத்தால், ஏறக்குறைய ஒரு ரூபாய்க்கு 20 பைசா செலவழித்துத்தான் ஒருவர், இவர் நிலம்

வாங்குபவராக இருந்தாலும் சரி, வீடு வாங்குபவராக இருந்தாலும் சரி பத்திரத்தைப் பதிவு செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. இதிலே இன்னும் ஒரு வேடிக்கை என்னவென்றால், ஒரு சதுரத்தை மட்டுமின் சென்ட் நிலம் 500 ரூபாய் வீதத்தில் 10 சென்ட் நிலத்தை வாங்கிக்கொண்டு பத்திரப்பதிவு அலுவலகத்திற்குச் சென்றால், அங்கே 500 ரூபாய்க்கு, அல்லது 600 ரூபாய்க்கு பத்திரம் வேண்டும் என்று கேட்டால், இல்லை, இல்லை இங்கே சென்ட் 3 ஆயிரம் ரூபாய்க்கு மதிப்பிருக்கிறது, எனவே நீங்கள் 3,000 ரூபாய்க்கு அதிகமாக பத்திரம் வாங்கவேண்டும் என்று சொல்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட செலவையும் சேர்த்தால், கிட்டத்தட்ட 4 ஆயிரம் ரூபாய் ஆகிறது. 5 ஆயிரம் ரூபாய்க்கு நிலம் வாங்குகிறவர்கள், 4 ஆயிரம் ரூபாய்க்கு பத்திரம் வாங்கவேண்டும் என்று சொன்னால், எப்படி இது சாத்தியப்படும். இதை எல்லாம் நீங்கள் பரிசீலனை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உதாரணமாகச் சொல்லவேண்டும் என்று சொன்னால், என்னுடைய விருதுநகர் தொகுதியில் உள்ள சின்னமப்பட்டி கிராமத்தில் உள்ள 51-ஏ, 51(1)ஏ-வில் சென்ட் நிலம் 1,500 ரூபாய் என்று விலை இருக்கிறது. ஆனால் பத்திரப் பதிவு அலுவலகத்தில் உள்ள மதிப்பீடு 3,300 ரூபாய் என்று இருக்கிறது. 1,500 ரூபாய்க்கு மேல் போகாத நிலம் 3,300 ரூபாய்க்கு பதிய வேண்டும் என்று சொன்னால், எப்படி நிலத்தை பதிவு செய்ய முடியும். ஏழை கிராம மக்கள் தங்களுடைய அவசர அவசிய செலவுகளுக்காக தங்களுடைய வீடுகளையோ அல்லது மற்ற இடங்களையோ, இதனால் விற்க முடியாத ஒரு சிரமமான நிலைமை இருக்கிறது.

இதிலே இன்னொன்று. வருடா வருடம், கிராமப்புறங்களில் 10 சதவீதம், நகர்ப் புறங்களில் 15 சதவீதம் என்று விலைகளை கூட்டிக்கொண்டு செல்லுகிறார்கள். சார்பதிவாளர் அலுவலகத்திற்குச் சென்றால், அவர் குறிப்பேட்டிலே இருக்கிற விலையைச் சொல்கிற போது, அந்த விலை வேறுவிதமாக இருக்கிறது. இதனால் அங்கே தினசரி பத்திரப் பதிவு அலுவலகத்தில் சண்டைதான் நடந்து கொண்டு இருக்கிறது. ஏன் அவர்கள் இப்படிச் செய்கிறார்கள் என்றால், எங்கேயோ, ஏதோ ஒரு வேலை நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது, அந்த வேலைகள் முடிவுற்றவுடன், அவர்கள் அந்தப் பத்திரப் பதிவேட்டில் உள்ள விலைக்கு இறங்கி வந்துவிடுகிறார்கள். இவைகள் எல்லாம் பத்திரப் பதிவு அலுவலகத்திலே மிகச் சகஜமாக நடந்து கொண்டு இருக்கின்றன.

மேலும் சொத்துக்களின் நடப்பு மதிப்பு பற்றி அவர்கள் அக்கறைப் படுவதில்லை. இதிலே இன்னொன்று. வார்ட் வாரியாக அவர்கள் ஒரு நிலத்தினுடைய விலையையோ, அல்லது வீட்டினுடைய விலையையோ நிர்ணயம் செய்கிறார்கள். ஒரு வார்டிலே எத்தனையோ தெருக்கள் இருக்கும். மக்கள் மிகுந்த



தெருக்கள் இருக்கலாம், மக்கள் குறைவாக இருக்கிற தெருக்கள் இருக்கலாம். ஒரு வார்டிலே உள்ள ஒவ்வொரு தெருவுக்கும் ஒவ்வொரு விலை இருப்பதை அந்தப் பத்திரப் பதிவு அலுவலகத்திலே உள்ளவர்கள் கவனிப்பதில்லை. இப்படிப்பட்ட காரணத்தாலே பல சிரமங்கள் இங்கே உண்டாகின்றன.

அடுத்து திருப்பூரிலே நிலம் வாங்குபவர்களும், நிலம் விற்பவர்களும் சேர்ந்து ஒரு ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். நான் இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம் முத்திரைத் தாள்களில் நீங்கள் வைத்திருக்கிற விலைகள் மிகவும் அதிகம் என்பதற்காகத் தான் சொல்கிறேன். ஆளும்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ராமலிங்கம் அவர்கள் சொன்னதைப் போல 12 சதவீதம் என்பது பழைய ரூபாய்க்கு அரைக்கால்ரூபாய் ஆகிறது. எனவே பழைய ரூபாயிலே இரண்டணா என்று நீங்கள் வாங்கினால் இது எப்படிப் பொருந்தும் என்பதுதான் தெரியவில்லை. வணிகர்களுக்கு வரியைப் போடுகின்றபோது, விலைவாசியைக் கருத்தில் கொண்டு 5 சதவீதம் தான் போட்டிருக்கிறோம். ஆனால் ஏழை மக்கள் கிராமங்களில் விற்பவர்களுக்கு 12 சதவீதம் கொடுத்துதான் பதிய வேண்டும் என்று சொன்னால், அவர்கள் மிகவும் சிரமப்படுகிற நிலைமை இருக்கிறது.

அதேபோல் பத்திரங்கள் நியாயமான விலையில் கிடைப்பதில்லை. $2\frac{1}{2}$ ரூபாய், மற்றும் 3 ரூபாய் பத்திரங்கள் எல்லாம் கிடைப்பதில்லை. 5 ரூபாய்க்குத்தான் பத்திரம் வாங்கவேண்டியிருக்கிறது.

அடுத்து, பால் பண்ணையைப் பற்றிச் சொல்லவேண்டும் என்று சொன்னால், அதிகமான பால் பண்ணைகளை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கிராமப்புறங்களில் அதிகமான பால் பண்ணைகளை வைப்பதற்கு அதிகாரிகள் முயற்சிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு கிராமத்திலேயும் 2 கருத்துக்களைக் கொண்டவர்கள் இருக்கிறார்கள். எல்லா இடங்களிலேயும் அவர்கள் இருக்கிறார்கள். மேலும் இந்த உள்ளாட்சித் துறை தேர்தல் நடந்து முடிந்ததற்குப் பிறகு, இருவேறு கருத்து வேறுபாடு கொண்டவர்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தாலே ஒரே ஊரிலே இரண்டு பால் பண்ணைகளை ஆரம்பிப்பதிலே உங்களுக்கு என்ன சிரமங்கள் இருக்கின்றன. மாடுகளை வைத்து பாலைக் கறந்து கொடுப்பது அவர்களுடைய பொறுப்பு. எனவே 2 பால் பண்ணைகளை ஒரு ஊரில் வைப்பதற்கு அரசு ஏன் தடை செய்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. இரண்டு பால் பண்ணைகளை வைப்பதற்கு என்னுடைய தொகுதியில் பல இடங்களில் உள்ளவர்கள் வந்து கேட்டு, என்னால் செய்து கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இது போக, பால் குழந்தைகள் சாப்பிடும் உணவு. இந்த நாட்டிலே பெருவாரியான மக்கள் ஏழைகள் என்பது உங்களுக்குத் தெரியும். குழந்தைகள் சாப்பிடும் உணவின் மீது போன பட்ஜெட்டிலே ஏறக்குறைய 65 பைசாவை சென்னை நகரத்திலே உயர்த்தினீர்கள். இந்தப் பால் பண்ணைகள் நஷ்டத்தில் ஓடுவதாக எனக்குத் தெரியவில்லை. எல்லாமே லாபகரமாக ஓடும் போது, நீங்கள் ஏன் விலையை கூட்டுகிறீர்கள். இது எனக்குப் புரிய வில்லை. எனவே நீங்கள் விலையை மறுபடியும் 1 லிட்டருக்கு 1 ரூபாய் குறைக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். இது கட்டுப்படியாகாவிட்டால் மானியம் கொடுத்தாவது, இந்த பாலின் விலையை நீங்கள் குறைக்க வேண்டும். காரணம் இந்தப் பால ஏழைக் குழந்தைகளின் உணவு என்பதால், மானியம் கொடுத்தாவது இந்த விலையைக் குறைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இங்கே வறட்சி காரணமாக தீவனங்கள் கிடைக்கவில்லை, அதனால் கால்நடைகளை மிக அதிகமாக கேரளாவுக்கு வாங்கிச் செல்கிறார்கள். கால்நடைகளுக்கு தீவனம் கிடைக்காத காரணத்தால் விவசாயிகள் அவைகளை விற்பனை செய்து விடுகிறார்கள். அவைகள் கேரளத்துக்குச் செல்கின்றன. ஆகவே நீங்கள் முன்பு கொடுத்ததுபோல மாட்டுத் தீவனத்துக்கு மானியம் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் உணவுப் பொருட்களுக்குத் தடை விதித்திருப்பதைப்போல கால்நடைகளை கேரளாவிற்குக் கொண்டு செல்வதற்கும் தடை விதிக்கலாம் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

பால் கறக்கும் எருமை மாடுகள், பசுமாடுகளெல்லாம் கொடுப்பதிலே பல பிரச்சனைகள் இருக்கின்றன. அங்கே பாரங்களை நிரப்பி அனுப்புவதற்கு கிராம சேவக்குகள் தயவு வேண்டும், பி.டி.ஓ., கால்நடை மருத்துவர்கள், ஆளும் கட்சிக்காரர்களின் சிபாரிசு எல்லாம் தேவைப்படுகிறது. ஆக பல மட்டங்களிலும் ஊழலுக்கு வழி ஏற்படுகிறது. இதையெல்லாம் அரசு சரிபார்த்து நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கால்நடை மருத்துவர்களுக்கு பல குறைகள் இருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன. கால்நடை உதவி மருத்துவர் பதவி என்று சொல்கிறீர்கள். அப்படியென்றால் கால்நடை மருத்துவர்கள் இல்லையென்று நான் நினைக்கிறேன். கால்நடை மருத்துவர் இல்லாதபோது கால்நடை உதவி மருத்துவர் என்ற பெயர் தேவையில்லையென்று நினைக்கிறேன். ஆகவே கால்நடை மருத்துவர்கள் என்றே அழைக்கலாம் என்பது என்னுடைய வேண்டுகோள். கால்நடை மருத்துவர்களுக்கு, மற்றைய மருத்துவர்களுக்குக் கொடுப்பதைப்போல ஊதியம் கொடுக்கப்படவில்லை என்று அவர்களுக்கு ஒரு குறை இருக்கிறது. அதையும் இந்த அரசு சரிபார்த்து,





ஊதியத்திலே பாரபட்சம் காட்டாமல் அவர்களுக்கு தரவேண்டிய நியாயமான ஊதியத்தை வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல் அவர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கவில்லையென்று சொல்கிறார்கள். 22 ஆண்டுகளானாலும் பதவி உயர்வு கிடைக்கவில்லை என்கிற அந்தக் குறையை இந்த அரசு போக்க வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போல கால்நடைகளுக்குத் தேவையான புண்ணாக்குக்கு இந்த அரசு வரி விதித்து இருக்கிறது. பருத்திக்கொட்டையைப்போல புண்ணாக்குக்கும் வரி விலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

*திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கால்நடை, பால் பண்ணை இன்னும் பல்வேறு மானியத்தின் கோரிக்கை மீது சில கருத்துக்களை சொல்ல விழைகிறேன்.

மன்னார்குடி பால் கூட்டுறவு சொசைட்டியில், பால் பண்ணையில் 34 ஆயிரம் அங்கத்தினர்கள் அங்கம் வகிக்கிறார்கள். ஆனாலும் 7, 8 ஆண்டு காலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் கலைக்கப்பட்டு, இன்றைக்கு தனி அதிகாரிகள் நிர்வாகத்தை நடத்திக் கொண்டு வருகிறார்கள். அதனால் லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டத்திலே இன்றைக்கு ஓடிக்கொண்டிருக்கிறது. பால் சொசைட்டி மூலமாக கறக்கக்கூடிய பாலை முழுமையாக அவர்கள் பெறுவது கிடையாது. இவர்களுக்குத் தேவைப்படுகிற போது பாலைப் பெறுவதும், தேவையில்லாதபோது முழுமையாக பாலைப் பெறாததனால் மாடு வாங்கி கறக்கக்கூடிய விவசாயிகள் பெரிதும் நஷ்டத்துக்கு ஆட்பட்டிருக்கிறார்கள். பால் கொள்முதல் விலை இன்றைக்கு 3.50 என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் உற்பத்தியாளர்களுக்கு போனஸ் கிடையாது. கூட்டுறவு பால் வழங்கும் சங்கத் தேர்தலை உடனே நடத்தவேண்டுமென்று இதன் அங்கத்தினர்கள் இன்றைக்கு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவே தமிழகத்திலே இருக்கக்கூடிய மன்னார்குடி ஒரு பெரிய பால் பண்ணை. அந்தப் பண்ணையில் இன்றைக்கு லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே எதிர் காலத்தில் அந்த உற்பத்தியாளர்களுடைய கோரிக்கையைப் பரிசீலனை செய்து அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல திருத்துறைப்பூண்டியில் 1-5-1936 ஆம் ஆண்டு கால்நடை மருந்தகம் துவக்கப்பட்டது, இன்றைக்கு 50 ஆண்டுகள் வரக்கூடிய 1-5-86 உடன் முடிவடைகிறது. இன்னமும் அது

மருந்தகமாகத்தான் இருந்துகொண்டிருக்கிறது. ஆனால் திருத்துறைப்பூண்டி, தலை ஞாயிறு. இப்படி சுற்று வட்டாரத்திலுள்ள மாடுகள் எல்லாம் அங்கே வரக்கூடிய ஒரு சூழ்நிலை இருப்பதால் அந்த மருந்தகத்தை கால்நடை மருத்துவமனை அந்தஸ்துக்கு உயர்த்துவதற்கு அடுத்த ஆண்டாவது அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1.00)

அதைப்போலவே கோட்டூரில் இன்றைக்கு கால்நடை அரசு மருத்துவ மனை இருக்கிறது. ஆனால் கோட்டூர் என்று சொன்னால் கிராமப்புற பகுதிக்கு உட்பட்ட பகுதி. கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய மாடுகளுக்கு நோய் வந்தால் இன்றைக்கு மழைக் காலங்களில் மருத்துவமனைக்குப் போக வேண்டிய கஷ்டம் இருக்கிறது. அப்படி வருகிறபோது இடையில் ஆறுகள் வாய்க்கால்கள் குறுக்கிடுவதால் மாடுகளை கொண்டு போக முடியாத நிலை ஏற்படுகிறது. இதனால் நூற்றுக்கணக்கான மாடுகள் இறக்க நேரிடுகின்றன. ஆகவே கிராமங்களில் அரசு மூலமாக வழங்குகின்ற மாடுகள், அவர்கள் சொந்தமாக வாங்கியிருக்கக்கூடிய மாடுகள் சேதம் இல்லாமல் பாதுகாக்கவேண்டும் என்று சொன்னால் மாதம் ஒரு முறை அந்த டாக்டர்கள் கிராமங்களுக்குச் சென்று மாடுகளை பரிசோதனைச் செய்து அதன் மூலமாக மாடுகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் நீர்முளை, கடியாச்சியில் உள்ள கிளை நிலையங்களில் நிரந்தரமாக டாக்டர்கள் இல்லாமல் மருந்தும் இல்லாமல் வாரம் ஒருமுறை டாக்டர்கள் செல்லுகிறார்கள். இதனால் கிராமத்தில் இருக்கக்கூடிய கிளை நிலையங்களுக்கு டாக்டர்களை போடுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சென்னையில் மாதவரம் பால் பண்ணையில் 1980ஆம் ஆண்டு கோரிக்கைக்காக ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்த 1,500 தொழிலாளர்கள் இன்று வரை 6 ஆண்டுகள் முடிய போகிறது அதற்கு பிறகும் கோர்ட்டுக்குச் சென்றார்கள். கோர்ட் மூலமாக ஆலோசனை வழங்கப்பட்டது. லேபர் கோர்ட்டுக்கு அனுப்பினார்கள். லேபர் கோர்ட்டில் அதிகாரிகள் கிடையாது. ஆனால் மறு பரிசீலனைச் செய்யவேண்டும் என்று கோர்ட்டில் சொன்னார்கள். ஆனால் பரிசீலனைச் செய்யவில்லை. லேபர் கோர்ட்டுக்குச் சென்று அங்கேயும் 8 மாதமாக விசாரணை இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இன்றைக்கு 1,500 தொழிலாளர்களில் 51 பேர் இறந்து விட்டார்கள். இப்படி ஒரு





பால் உற்பத்திச் செய்யக்கூடிய தமிழக அரசின் ஒரு நல்லதிட்டத்தில் பணி ஆற்றக்கூடிய 1,500 தொழிலாளர்கள் 6 ஆண்டு காலமாக தங்கள் குழந்தைகளுடனும், மனைவிமார்களுடனும் பட்டினிக் கிடப்பதை பார்த்து அரசு அவர்களுடைய கோரிக்கையை பரிசீலனைச் செய்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அவர்களுக்குப் பதிலாக ஆயிரம் பேர் இன்றைக்கு போடப்பட்டு இருக்கிறார்கள். பெரும் பகுதி ஆளும் கட்சியினரையும் சேத்ந்து போட்டார்கள். அவர்கள் நிலை என்ன? தொழிற்சங்கங்களை நசுக்கவேண்டும், தொழிலாளர்களுடைய ஒற்றுமையை உடைக்க வேண்டும் என்று செய்து இன்றைக்கு அரசு மூலமாக ஆயிரம் பேர்களை போட்டார்கள். அவர்களும் கோரிக்கை வைத்து அடிப்படை சம்பளம் 20, பஞ்சப்படி 270, நகர ஈட்டிப் படி 20 ஆக மொத்தம் 310 ரூபாய் சம்பளம் கிடைக்கிறது. இன்றைக்கு உள்ள விலைவாசிக்கு தகுந்த படி. அவர்களுக்கு சம்பளம் இல்லை. அவர்களை நிரந்தரம் ஆக்குவதற்கும், சம்பளத்தை உயர்த்துவதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மாதவரம் பக்கத்தில் எண்ணூரில் 800 ஏக்கர் நிலத்தை பால் பதப்படுத்தும் தொழிற்சாலைக்காக எடுக்கப்பட்டு கட்டிடங்கள் கட்டப்பட்டு இருக்கின்றன. அதற்கான தயாரிப்புகள் எல்லாம் செய்யப்பட்டு இருக்கின்றன. ஆனால் இன்றைக்கு மற்ற மாவட்டங்களில் உள்ள பால் பதப்படுத்தும் நிலையங்களில் செய்யப்பட்ட பொருட்களை இங்கே கொண்டு வந்து நகரத்தில் விநியோகம் செய்கிறார்கள். ஆனால், இங்கே 800 ஏக்கரில் ஏற்படுத்தப்பட்டு ஆனால் வேலைகள் துவங்கப்படாமல் அது தேக்க நிலையில் இருக்கிறது. இன்றைக்கு அது ஒரு குப்பை மேடாக மாறியிருக்கிறது. ஆகவே மக்கள் வரிப் பணம், கோடிக் கணக்கான ரூபாய் வீணாகாமல் இருப்பதற்கு அதை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சென்னை நகரத்திலும் மற்ற மாவட்டங்களிலும் இன்றைக்கு கலப்படம், சர்க்கார் வாங்கக்கூடிய பால்களில் இடைத்தரகர்கள் தண்ணீர் விட்டு கலப்படம் செய்வதாக சென்னை நகரத்திலும் மற்ற மாவட்டங்களிலும் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. தரமான பாலை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோட்டையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நகரத்தில் வழக்கூடிய, பால் வாங்கக்கூடிய மக்கள் கோரிக்கை மனுவை கொடுத்து இருக்கிறார்கள், எதிர்காலத்தில் இப்படி இடையில் இருக்கக்கூடிய அதிகாரிகள். இடைத்தரகர்கள் அதில் தண்ணீர் விடாமல் நல்ல தரமான, பாலை விநியோகம் செய்வதற்கு நல்ல பால் கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பொ. உத்திராபதி] [1986 ஏப்ரல் 8

அதேபோல் பால் பண்ணை சொசைட்டிகள் இன்றைக்கு தமிழகத்தில் பெரும்பாலான சங்கங்களில் தேர்தல் இல்லாமல் தனி அதிகாரிகள் இன்றைக்கு நிர்வாகம் செய்து கொண்டிருக்கிறார்கள். தனி அதிகாரிகள் நிர்வாகம் செய்வதால் இன்றைக்கு கிராமங்களில் அல்லது நகரங்களில் உள்ள ஒரு சில பிரமுகர்களுக்கு ஆட்பட்டு அவர்கள் இஷ்டத்திற்கு நிர்வாகத்தை நடத்துகிறார்கள். பல சங்கங்களில் இன்றைக்கு லட்சக்கணக்கான ரூபாய் ஊழலும் அல்லது நஷ்டமும் ஏற்படுகிறது. இதை தடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரிதமாக பால் பண்ணை அனைத்திற்கும் தேர்தலை நடத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அந்த அமைப்புகளுக்கு, அந்த பால் வளச் சங்கங்கள் எல்லாம் திறமையாக நடைபெறுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு மான்யம் இந்தச் சங்கங்களுக்கு வழங்கப்பட வேண்டும். இடைக்காலத்தில் ஏனோ தெரியவில்லை அவர்களுக்கு கொடுத்து வந்தது படிப்படியாக குறைத்து, நிறுத்தப்பட்டிருக்கிறது. இதனால் இன்றைக்கு பெரும்பாலான சங்கங்கள் முடமாக்கப்பட்டு செயல் இழந்து இருக்கின்றன. இதை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர்காலத்தில் கணக்கில் எடுத்துக்கொண்டு பால் உற்பத்தியை அதிகமாக்க சங்கங்களுக்கு மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்குக் கால்நடைப் பண்ணைகள் தஞ்சாவூர், புதுக்கோட்டை போன்ற பல்வேறு இடங்களில் கால்நடைப் பண்ணைகள் இருக்கின்றன. புதுக்கோட்டைக்குச் சென்றிருந்தேன். ஆனால் இன்றைக்கு தனியார்கள் வைத்திருக்கக் கூடிய ஆடுமாடுகளை விட கால்நடைப் பண்ணைகளில் வைத்திருக்கக் கூடிய மாடுகள் உண்மையிலேயே மெலிந்து, இளைத்துப் போய் இருக்கின்றன. அங்கே வாங்கக் கூடிய தீவனம், புல், வைக்கோல் போன்றவைகளை மாடுகளுக்குத் தேவையான அளவில் வாங்குவது கிடையாது. ஆனால் வாங்குவதாகக் கணக்கு மட்டும் காட்டப்படுகிறது. மாடுகளுக்கான தீவனம் முழுமையாக போடப்படாததால் மாடுகளின் தரம் குறைந்திருக்கிறது. ஒரத்தநாடு, புதுக்கோட்டை போன்ற பகுதிகளில் இருக்கக் கூடிய கால்நடைப் பண்ணைகளில் பணியாற்றக் கூடிய தொழிலாளர்கள் பல்லாண்டுகளாக தினக்கூலியாக ரூ. 7, 8, 10 என்று வாங்கிக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் பணியில் நிரந்தரமாக்கப்படவில்லை. புதுக்கோட்டையிலும் மற்ற இடங்களிலும் வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களை நிரந்தரத் தொழிலாளர்களாக்கி, அரசு ஊழியர்களுக்கு என்னென்ன பாதுகாப்புக் கொடுக்கப்படுகிறதோ, அந்தப் பாதுகாப்பு கொடுப்பதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 8] [திரு. பொ. உத்திராபதி]

அதுபோல் கிராமங்களில் அரசு மூலமாகவும், வங்கிகளின் மூலமாகவும் கடன் பெற்று, மாடுகளை வாங்கி பால் கறக்கிறார்கள். ஆனால் அந்தப் பால் முழுவதும் எடுத்துக்கொள்ளப்படுவது கிடையாது. அதனால் பாலை விற்க முடியாத காரணத்தினால், வாங்கிய கடனை திருப்பிக் கட்ட முடியாத நிலை இருக்கிறது. அரசு மூலமாகக் கடன் வாங்கி மாடுகள் வாங்கிக் கறக்கக் கூடிய அந்தப் பால் முழுவதையும் அரசு மூலமாகப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல் ரூ. 1,500 இன்றைக்கு மாடுகள் வாங்கக் கொடுக்கப்படுகிறது. இன்றைக்கு ஹரிஜனங்களுக்கு 33½ சதவீதம் மான்யமாக கொடுக்கப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே சொல்கிறேன். இந்த மான்யம் என்பது யார் மாடு வாங்குகிறார்களோ, அவர்களுக்குப் போய்ச் சேருவது கிடையாது. அவர்கள் எங்கே வாங்க வேண்டுமென்று சொல்கிறார்களோ அங்கே போய்த்தான் வாங்க வேண்டிய நிலை இருக்கிறது. இடைத் தரகர்கள், அதிகாரிகள் சேர்ந்து மாடு வாங்குபவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய மான்யத் தொகையை அவர்கள் இடையிலே பறித்து விடுகிறார்கள். ஆகவே மாடுகளை வாங்கிய விவசாயிகளுக்கு மாடுகள் வாங்குவதற்கான மான்யம் கிடைக்காத சூழ்நிலை அங்கே ஏற்படுகிறது. இதையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

திருச்சியில் மாடுகள் வாங்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். எப்படி வாங்கியிருக்கிறார்கள் என்றால், காஞ்சுர இழை என்று ஒன்று இருக்கிறது. அதை மாட்டினுடைய மடியில் பூசிவிட்டால், காலையிலே மடி பெரிதாகிவிடுகிறது. இந்த மடியைக் காண்பித்து, இன்னும் 8 நாட்களில், அல்லது 20 நாட்களில கன்று போட்டுவிடும் என்று சொல்லி, அந்த விவசாயிகளை ஏமாற்றி, மாட்டை விற்றுவிடுகிறார்கள், அந்த மாட்டைப் பெற்றுக் கொண்டு போய், மறுநாள் பார்த்தால், அந்த மடி வெறும் தட்டையாக மாறிவிடுகிறது. இப்படி இடைத் தரகர்களும், அதிகாரிகளும் பால் வழங்கக்கூடிய விவசாயிகளை ஏமாற்றிவிடுகிறார்கள். இதையெல்லாம் எதிர்காலத்தில் கண்காணித்து, இந்தப் பால் வளத் துறையை வளர்ச்சிப்படுத்த வேண்டும். தவறு செய்யும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

கிராமங்களில் மாடுகளை வாங்குகின்ற விவசாயிகளுக்குத் தீவனம் கிடைப்பது கிடையாது. இயற்கை மாறிவிட்டது. விவசாயம் பாதித்து விட்டதால், வைக்கோல் கிடைக்கவில்லை. விவசாயத் தொழிலாளர்கள் ஒரு மாடுகூட வைத்துக் கொள்ளாமல் பாதி விலைக்கு விற்பதால்தான் இன்றைக்கு கேரளாவிலிருந்து மாடுகள் வாங்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் கிராமத்தில் இருக்கக்கூடிய மாடுகளுக்கு, மான்ய விலையில் வைக்கோல் போன்ற

தீவனங்களைக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. கு. ரமணி : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 4 மானியக் கோரிக்கைகளிலே சிலவற்றின் மீது சில விஷயங்களைக் குறிப்பிட நான் விரும்புகிறேன்.

பால் உற்பத்தி சம்பந்தப்பட்ட வரை பெருகி உள்ளது. ஆனால் விலையும் உயர்ந்துள்ளது. இது இன்றைக்கு நாம் நாட்டில் இருக்கிற பொருளாதாரத்தினுடைய நெருக்கடியான மற்றொரு பிரச்சினை. எந்த அளவிற்கு பால் உற்பத்தி அதிகமாகிறதோ, அந்த அளவிற்கு மக்களுக்கு அதிகப்படியான பால் விநியோகம், நியாயமான விலையில் அவர்களுக்கு கொடுக்கப்படவேண்டும். ஆனால் பால் உற்பத்தியும் பெருகும், விலையும் எட்டிப் பிடிக்கமுடியாத இடத்திற்குப் போகும் என்று சொன்னால், இந்த முரண்பாட்டை அரசு எப்படி தீர்க்கப்போகிறது? இதற்கு ஒரு வழி கண்டுபிடித்தாகவேண்டும். அப்படியானால் பாலுக்கு இருக்கும்படியான அதனுடைய விலையில் இலாபத்தின் அளவு கணக்கு மீறி போகக் கூடாது. எல்லாவிதமான செலவுகளையும் ஈடுகட்டக் கூடிய அளவிற்கு அந்த லாபத்தை எதிர்பார்த்தால், அரசு நாட்டு மக்களுக்கு நல்ல பால் விநியோகம் செய்தும், அது லட்சோபலட்சக் கணக்கான ஏழை எளியவர்கள், நடுத்தர மக்கள்கூட தேவையான அளவிற்கு வாங்கி உபயோகப்படுத்த முடியாமல் போகும். இதை அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். இந்த விலையைக் குறைப்பதற்கு அரசு முயற்சிகளை எடுக்கவேண்டும். (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி சொல்லிய கருத்தைக் கொஞ்சம் அவர்களே கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வழங்குகின்ற விவசாயிகளுக்கும் கொஞ்சம் அதிக விலை கொடுக்கவேண்டுமானால், அதனுடைய விலை உயர்ந்து தான் தீரும்.

(பிற்பகல் 1-10)

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்தச் சொல் இருக்கிறதே அமைச்சர் அவர்கள் கோபித்துக் கொள்ளமாட்டார் என்று நான் எண்ணுகிறேன். it is a stock in trade argument. எந்த இடத்திலே சொன்னாலும் சரி கொள்முதல் விலையை உயர்த்தி இருப்பதால் இஷ்யூ பிரைஸை இன்கிரீஸ் பண்ணியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அரிசி வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கு அப்படிச் சொல்லவில்லையா? நான் இரண்டிற்கும் மத்தியில் உள்ள....





மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதிலே உண்மை இருக்கிறதா இல்லையா என்று பார்க்கவேண்டும். நாம் விலையை உயர்த்துகிறபோது அதைக் கொடுக்கிறவர்களுக்கும் உயர்த்தித்தான் கொடுக்கிறோம்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, உண்மை அதில் ஒரு துளி இருக்கிறது. தீமை அதற்குள் மலைபோல் அடங்கியிருக்கிறது. பால் ஒரு லிட்டர் இன்றைக்கு 4 ரூபாய்க்கு வாங்கப்படுகிறது. கிராம விவசாயிகள் பால் கறந்து சப்ளை செய்கிறார்கள், அவர்களுக்கு என்ன விலை கொடுக்கிறீர்கள்? நேற்றைக்கு பால் விநியோக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இப்போது அவர்கள் இங்கே உட்காரவில்லை. பாலித்தீன் பைகளில் பாலை அடைக்கிறோம், விலை ஏற்றம் அல்ல அது, ஒழுங்குபடுத்த அதை பாலிதீன் பைகளிலே பேக்டரியிலே அடைக்கிறபோது அதற்கான முதலீடு, செலவு, எல்லாவற்றையும் சேர்த்து வாங்கி உபயோகிப்போர்களுடைய, கன்ஸ்யூமர்கள் தலையிலேதான் சுமத்துகிறார்கள். ஆகவே வேறு பதில் சொல்லி இதிலிருந்து தப்பிக்க முடியாது. என்னுடைய கோரிக்கை, பால் விலையை குறைக்கவேண்டும். அதற்காக ஒரு துளி கூட விலை ஏற்றக்கூடாது என்பதல்ல. ஜனங்களுக்கு வழங்கப்படுகிற பால் விலை நியாயமானதாக இருக்கவேண்டும். இப்போது அதிகமான விலையாக இருந்து கொண்டிருக்கிறது.

அதேமாதிரி இன்றைக்கு நாட்டிலே நல்ல இறைச்சி கிடைக்க வேண்டுமென்ற முயற்சிகளை அரசு எடுத்து பெரிய திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே பிரச்சினை என்னவென்றால் இறைச்சியின் விலை இன்றைக்கு என்னவாக இருக்கிறது. கோவை போன்ற நகரங்களிலே ஆட்டிறைச்சி இன்றைக்கு ஒரு கிலோ ரூபாய் 28 வரைக்கும் விற்கப்படுகிறது. ஆனால் கிராமத்திலே விவசாயிகள் விற்கிற ஆடுகளுக்கு என்ன விலை கிடைக்கிறது என்பதை அரசு எண்ணிப்பார்க்க வேண்டும். அதையும் கணக்கிலே எடுத்துக் கொள்ள வேண்டும். விலை உயர்வு என்பதற்கே லிமிட் இல்லாமல் போய்விட்டது. காய்கறிகளின் விலை, பாலின் விலை, இறைச்சியின் விலை இப்படி அத்தியாவசியப் பண்டங்களின் விலைகளை கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் அரசுக்கு இருக்கிறது.

அடுத்து கால்நடை பராமரிப்பு. இங்கே அதைப்பற்றி பல மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். இன்றைக்குப் பல்வேறு இடங்களிலே ஆயிரக் கணக்கான கால்நடைகள் எலும்பும் தோலுமாக இருப்பதை நாம் பார்க்க முடியும். ஏற்கெனவே பேசிய டாக்டர் இராமலிங்கம் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

மேய்ச்சல் நிலங்கள் எங்காவது கிராமங்களிலே இருக்கிறதா? எத்தனையோ இடங்களிலே அப்படிப்பட்ட நிலங்கள் பூராவும் இன்றைக்கு ஆக்கிரமிக்கப்பட்டாகிவிட்டது. எவ்வளவோ காசுகளைக் கொடுத்து வேறுவிதமாக ஊழல்செய்து அந்த நிலங்களை கிராமங்களிலே இருக்கிற சில பணக்காரர்கள் தங்களுக்குச் சொந்தமாக்கிக்கொள்ள முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏராளமான மேய்ச்சல் நிலங்கள், அரசாங்கத்திற்குச் சொந்தமான காலி நிலங்கள் மேய்ச்சல் நிலங்களாக இருந்தன. சாதாரணமாக ஆடுமாடுகள் மேய்வதற்காக அத்தகைய நிலங்கள் கிடைத்துக் கொண்டிருந்த நிலை இன்றைக்குப் போய்விட்டது. இதையும் அரசு கணக்கிலே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே கால்நடைகளுக்கு இன்றைக்கு இயற்கைத் தீவனத்திற்கு எந்தவிதமான வழியும் இல்லை. செயற்கைத் தீவனத்தைக் கால்நடைகளுக்குக் கொடுத்து சமாளிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்குப் பெரியார் மாவட்டத்திலே செயற்கைத் தீவனங்கள் தயாரிக்கும் அந்தத் தொழிற்சாலை கட்டப்பட்டது என்னவாயிற்று? எவ்வளவு தீவனம் தயாரிக்கப்பட்டது? எத்தனை இடங்களுக்கு தீவனங்கள் விநியோகப்பட்டன? நகர்ப்புறங்களிலே சாதாரணமாக 1, 2 மாடுகள் வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் சிரமங்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்களுக்கு இயற்கை தீவனங்கள் கிடைக்கிறதா? வைக்கோல், சோளத்தட்டை போன்ற தீவனங்கள் அவர்களுக்குக் கிடைக்க வழியிருக்கிறதா ஆர்டிபிஷியலாக உற்பத்தி செய்யக்கூடிய செயற்கைத் தீவனங்களாவது கிடைக்கிறதா என்றால் கிடைக்கவில்லை. அதையும் கணக்கிலே எடுத்துக் கொள்ள வேண்டும். தீவனங்கள் எதுவும் கிடைக்காத பஞ்சம் என்ற நிலைமை. அதனால் கால்நடைச் செல்வம் இன்றைக்கு எந்த அளவுக்குச் சீரழிந்து போய்க்கொண்டிருக்கிறது என்பதையும் கணக்கிலே எடுத்துக்கொள்ளவேண்டும். அதைத் தடுக்கவேண்டும். அரசு பஞ்சாயத்து யூனியன்களிலே தீவனத்திற்காக டெப்போக்களை ஏற்படுத்தியோ அல்லது மற்ற வசதிகளை ஏற்படுத்தியோ இதற்கு வழிவகை செய்யவேண்டும். இலட்சோபலட்சம் மக்களுக்கு அது வரப்பிரசாதமாக இருக்கும். இல்லையென்றால், கால்நடைப் பராமரிப்பு என்று என்ன பேசினாலும், ஏராளமான கால்நடைகள் தீவனமின்றி வாடி வதங்கிச் சாகும். அதை வெட்டுகின்ற விலைக்கு விற்று அவைகளை எங்கேயோ கொண்டு போகக் கூடிய நிலைமை ஏற்பட்டு விடும்.

ஆடு மாடுகளுக்கு உண்டாகக் கூடிய நோய்களைத் தடுப்பதற்காக உள்ள கால்நடை மருத்துவப் பிரிவைப் பற்றிக் கூறவேண்டுமென்றால் அதற்குத் தேவையான அளவிற்கு இன்றைக்கு மருந்தகங்களையும் ஆஸ்பத்திரிகளையும் பலயிடங்களில் ஏற்படுத்த வேண்டும். அவைகள் இன்றைக்கு மிகக்குறைவாகத்தான் இருக்கின்றன. இது எப்படி இருக்கிறது என்றால், பெரிய கடலிலே ஒரு துளி பெருங்காயத்தைக் கரைத்ததைப்போல்தான் உள்ளது.



அதிலே வேலை செய்கின்ற ஊழியர்கள் மிகவும் மனவேதனையோடு இன்றைக்கு இருக்கிறார்கள். அதிலே வேலை செய்யும் மருத்துவர்கள் தங்களுடைய கிரேடிங், வேலைக்கேற்ற அந்தஸ்து, மதிப்பு, ஊதியம் ஆகியவற்றில் மன நிறைவு கொள்ளாமல் இருக்கிறார்கள். அத்துடன், அதிலே கடினமாக வேலை செய்யக்கூடிய கீழ் மட்டத்திலே உள்ள ஊழியர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டிருக்கின்றது. ஏராளமான பதவிகள் காலியாகவே வைக்கப்பட்டிருக்கின்றன; காலியான இடங்களில் புதியவர்களைக் கொண்டு நிரப்புவது இல்லை. அவர்களுக்குப் போதுமான ஊதியமும் இல்லை. இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். அவர்களின் கோரிக்கைகள் கவனிக்கப்பட வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பத்திரப் பதிவு சம்பந்தப்பட்ட வரையில், இந்த ரிஜிஸ்ட்ரேஷன் கட்டணம் உயர்ந்துகொண்டே போகிறது. ஒட்டுமொத்த விலைவாசியேற்றத்தில் அதுவும் ஒரு பகுதியாக இருக்கிறது. இதனால் இலட்சக்கணக்கான சாதாரண, ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஒரு சாதாரண கிராம விவசாயி அரை ஏக்கர், அல்லது கால் ஏக்கர் அல்லது பத்து சென்ட் நிலத்தைக் கைமாற்றம் செய்வது என்றால் அவர்களின் நிலை என்ன? அவர்கள் முத்திரைத் தாளுக்காக எவ்வளவு பணம் செலவழிக்க வேண்டியிருக்கிறது. அதே மாதிரி ரிஜிஸ்தருக்குச் செல்ல வேண்டுமென்றாலும்கூட செலவழிக்க வேண்டும்,

ஆனால், வசதி படைத்தவர்கள் இன்றைக்கு அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய கோடிக்கணக்கான ரூபாய் பணத்தைச் செலுத்தாமல் ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுக்க வேண்டியது மிகவும் அவசியம். சொத்தின் மதிப்பைக் கணக்கிட்டுச் செய்தாலும், அதையெல்லாம் தாண்டி உண்மை நிலை என்ன என்று உலகத்திற்குச் சொல்லாமல், ஒரு பகுதியைப் பணமாக கையிலே தனியாக கேஷாகக் கொடுத்துவிட்டு, பாக்கியிருப்பதைத் தான் மதிப்பாகப் போட்டுச் செய்கின்ற காரியங்கள் நடக்கின்றன. அப்படிப்பட்ட தவறுகளை, ஊழல்களைக் களைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் நடுத்தர, சாதாரண ஏழை எளியவர்கள் தங்கள் குடியிருப்பு மனைகளை விலைக்கு வாங்கி கட்டுவதாக இருந்தாலும், ஐந்து செண்ட், பத்து செண்ட் நிலத்தை விலைக்கு வாங்கி வைத்துக்கொண்டு விவசாயம் செய்வதாக இருந்தாலும் அப்படிப்பட்ட சிறு நில விவசாயிகளுக்கு, ஏழை எளியவர்களுக்கு இந்தக் கட்டணம் உயர்ந்துகொண்டே போவதைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், அதற்குச் செய்ய வேண்டிய நடவடிக்கைகளைப்பற்றிய ஆலோசனைகள் அரசின் கவனத்தில் இருக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

வசதியுள்ளவர்கள் ஏமாற்றாமல் கவனித்துக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, அரசாங்கத்தின் நடவடிக்கைகளிலே, சமுதாயத்தின் மறுமலர்ச்சிக்காக, மாற்றத்திற்காக சீர்திருத்தங்களைக் கொண்டு வருகின்ற நேரத்தில், அந்தச் சீர்திருத்தங்கள் கண்துடைப்பு சீர்திருத்தங்களாகப் போகக் கூடாது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பால் சொசைட்டிகள் எல்லாம் பல சொசைட்டிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதில் இன்றைக்கு எவ்வளவு சொசைட்டிகள் மூடப்பட்டுக் கொண்டிருக்கின்றன? ஏன் அவை மூடப்பட வேண்டும்? அந்த சொசைட்டிகளை ஏற்படுத்துகின்றபொழுது, அவர்கள் போட வேண்டிய ஷேர் கேப்பிடலுக்காக நம் அரசாங்கம் பணம் கொடுத்து போட வைக்கிறார்கள். ஆனால் அவர்கள் உற்பத்தி செய்கின்ற பாலை எடுத்து வருவதற்கான வசதி இல்லை, நியாயமான விலை இல்லை, இப்படி போதிய வசதிகள் இல்லாமல் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ப்ரொக்யூர் செய்வதற்காக இருக்கின்ற ஊழியர்கள், கவனமாக இருந்து, அந்தச் சங்கங்களைத் தகுந்த கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொண்டு, ஏழைகளுக்கு உதவியாக இருக்க வேண்டும். ஏழைகளுக்கு உதவி செய்ய, நாட்டுப்புறங்களில் உள்ள விவசாயக் கூலித் தொழிலாளர்கள் உட்பட பங்கெடுத்து நடத்துகிற அனைத்து ஸ்தாபனங்களுக்கும் அந்த ஊழியர்கள் உதவியாக இருக்கவேண்டும். ஆனால் இன்றைக்கு அப்படிப்பட்ட ஒத்துழைப்பு இல்லை.

(பிற்பகல் 1—20)

கோவை மாநகரம் போன்ற மாநகரங்களில்கூட இன்றைக்குப் பால் விநியோகம் என்பது மிகக் குறைவாக இருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே கூட நான் சொல்லியிருக்கிறேன். ஏழு இலட்சம், எட்டு இலட்சம் மக்களைக் கொண்ட அந்த மாநகராட்சியில் பெருவாரியான மக்கள் பயன்படுத்துகின்ற விதத்தில் பால் சப்ளை இல்லை. அது சம்பந்தப்பட்ட போக்குவரத்து ஏற்பாடுகள் சரியாக இல்லை. அங்கே பெரிய பால் விநியோக கூட்டுறவு அமைப்பு இருக்கிறது. ஆனால் அந்தப் பால் முழுவதும் நகரத்தில் விநியோகிக்கப்படவில்லை என்ற நிலைமை இருக்கிறது. மூன்று கோடி ரூபாய்க்கும் மேலாக செலவு செய்து பெரிய பால் உற்பத்திப் பண்ணை கோவை மாநகரத்திற்கு அருகில் உருவாக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. 1986-இல் முடியும் திட்டம் என்று குறிப்பிலே கொடுக்கப்பட்டுள்ளது. அது ஏற்பட்ட பின் என்ன நிலை இருக்குமென்று தெரியவில்லை திட்டம் பெரிய திட்டம். ஏராளமான பால் அதிலே வந்து சேகரிக்கப்படும். ஆனால், அந்தப் பால் முழுவதும் நகரத்திலே இருக்கிற மக்களுக்கு பால் கிடைக்க வேண்டிய இடங்களிலே





கிடைக்கவில்லை. பால் உற்பத்தி நேரடியாக கிராமங்களிலே, மற்ற இடங்களிலே செய்யப்பட்டு, மக்களுக்கு விநியோகிக்கிற இடங்களிலே, ஒழுங்காக விநியோகிக்கிற திட்டம் கிடையாது. நூற்றுக்கணக்கான ஊழியர்களைப் போட்டு, இந்த ஸ்தாபனங்களிலிருந்து நேரடியாக, அவர்களுக்கு மாத கணக்கில் கட்டணம் பெற்று, பூராவும் விநியோகிக்க உடனடியாக முடியாவிட்டால், நகரங்களினுடைய வார்டுகளிலேயும், அல்லது வீதிகளிலேயும் சில சென்டர்களை ஏற்படுத்தி, அங்கே பால் நேரடியாக விற்று, அப்பொழுதே விற்பவர்கள் நேரடியாக விலையைப் பெற்றுக்கொள்ளும்படியான நிலையை ஏற்பாடு செய்யலாம். அப்படி ஏற்பாடு செய்தால் ஏராளமான, இலட்சக்கணக்கான மக்களுக்கு நியாய விலையில் பால் சப்ளை செய்ய முடியும், பால் முழுவதும் செலவாகும். அப்படிப்பட்ட முறையிலே அரசாங்கம் திட்டமிட வேண்டும். ஆகவே, சொசைடிகளுடைய எண்ணிக்கையை மட்டும் சொன்னால் போதாது. உற்பத்திக்காக உண்டாக்கப்பட்டிருக்கிற சொசைட்டிகளிலே எத்தனை மூடப்படுகிறது, ஏன் மூடப்படுகிறது. அதிலே ஏற்படுகிற ஊழல்களை, தவறுகளைத் தடுத்து நிறுத்துவதற்கு என்ன ஃபூல்ப்ரூப் திட்டத்தை அரசு உருவாக்குகிறது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அப்போதுதான் அதன் பலன் மக்களுக்குக் கிடைக்கும். ஆகவே, பால் பெருக்கமும், இறைச்சி அதிகமாகக் கிடைப்பதற்கான அபிவிருத்தியையும், கால்நடைகளைப் பராமரிப்பதும், அதற்கு வேண்டிய ஏற்பாடுகளும், அதில் இருக்கிற ஊழியர்களும் இத்தனையும் சேர்த்து ஒன்றிணைந்த ஒரு ஏற்பாட்டுக்கு அரசாங்கத்தினுடைய திட்டத்தைச் சரியாக நடைமுறைக்குக் கொண்டு வந்தால், அது மக்களுக்குப் பயன்படும். அப்படிப்பட்ட முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஆநிறைகளைக் காக்கும் கிருஷ்ணசாமியைத் தனது கணவனாக வரித்துக் கொள்வதாக பாட்டுப் பாடிய ஆண்டாள் தேங்காதே பொக்கிருந்து சீர்த்த முலை பற்றி வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள் என்று பாடினாள். வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள் என்று பசுக்களை வள்ளல்கள் என்று சொன்னது தமிழ்நாடு, ஆசு, மடியைப் பற்றி, பற்றி, குடத்திலே வாங்கி, வாங்கி, மீண்டும் கொடுத்துக் கொண்டிருக்கும், நிறைந்து கொண்டிருக்கும் குடம் என்று சொன்ன ஒரு நிலைபோக, இப்பொழுது சிறு குடத்திலே பாலைக் கொண்டு வந்து விற்பதற்கு வைத்து விட்டு மக்கள் வாங்க, வாங்க வேறு வகையிலே குடத்தை நிறைத்து, அதை விற்றுக் கொண்டிருக்கிற நிலையினை, ஆவின் பால் வந்ததற்குப் பிறகு தவிர்த்திருக்கிறோம். ஆனால், அந்த ஆவின் பால் வந்ததற்குப் பிறகு எல்லா இடங்களிலும் அதனை விநியோகிக்க முடியவில்லை நம்மாலே.

வாணிகம் செய்கின்றவர்கள் சில நேரங்களிலே ஒரு குறிப்பிட்ட அளவுக்காவது பொய் சொல்லத்தான் செய்வார்கள் என்ற பாமரத்தனமான நம்பிக்கை உண்டு. வள்ளுவன் அப்படிச் சொல்லவில்லை, வாணிகம் செய்வோரும் உண்மையைச் சொல்லித்தான் வாணிகம் செய்யவேண்டுமென்று நமக்கு வற்புறுத்தியிருக்கிறார். அதனை ரெயில் நிலையங்களிலும் பஸ் நிலையங்களிலும் மட்டுமே பின்பற்றுகிறார்கள். வெள்ளையாக ஒன்றைக் கொண்டு வந்து, பாழ், பாழ் என்றே சொல்வார்கள். அதை வாங்கினால் காசு பாழ், பாழ் என்று சொல்வதைப் போலவே, உண்மையான பால் இல்லாத ஒன்றை, அவர்கள் மறைக்காமல் வெளியே சொல்வது போல, பாழ், பாழ் என்றே விற்றுக் கொண்டிருப்பார்கள், பாருங்கள் அந்த இடங்களில் எல்லாம் இனிமேல் ஆவின் பால் விற்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே வெளியே போகிறபொழுது பல இடங்களிலே மாடுகள் குறுக்கும் நெடுக்குமாகத் திரிவதை நாம் பார்க்கலாம். ஒரு மாட்டைப் பார்க்கின்றபொழுது நாம் எல்லோருமாகச் சேர்ந்து அதற்கு ரூ. 12 ஒதுக்கியிருக்கிறோம் என்று நினைவு இன்றிலிருந்து நமக்கு வரவேண்டும். 2½ கோடி கால்நடைகள் இருக்கின்றன என்று சொன்னால், ரூ. 29 கோடி அவற்றைப் பராமரிக்க என்று நாம் ஒதுக்கியிருக்கிறோம். அப்படியென்றால், ஒரு கால்நடையின்மீது நாம் ரூ. 12 ஒதுக்கி, அதற்கு நோய் வராமலும், வந்தால் அதனைப் போக்கவும், அதனை சினை உண்டாக்குவது போன்ற முயற்சிகளிலே ஈடுபடவும் ரூ. 12-ஐ ஒரு கால்நடையின்மீது நாம் வைத்திருக்கிறோம். நாம் வைத்திருக்கிறோம் என்று சொல்வதற்குக் காரணம் எல்லோருமே காலாலேதான் நடக்கிறோம். ஆனாலும் அதற்கு மட்டும்தான் கால்நடை என்று பெயர் வந்ததற்குக் காரணம், அதற்குக் கால் நடை மட்டுமே உண்டு. மனிதனுக்கு மன நடையும் உண்டு.

அந்த மன நடையின் அடிப்படையிலேதான் வெறும் கால் நடைகளாக இருந்து கொண்டிருக்கின்றவைகளுக்கு இந்த மன நடையும் உள்ளவர்கள் 12 ரூபாய் ஒதுக்கி, அதைச் செம்மைபடுத்த வேண்டுமென்று செய்திருக்கிறார்கள்.

**திரு என். எஸ். வி. சித்தன் :** உரைநடையும் நன்றாக இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** அது நல்ல தமிழ்நடையாக இருப்பதால்.

**திரு குமரி அனந்தன் :** நீங்கள் எனக்கு ஒரு வெண்கொற்றகுடை கொடுப்பதாகவே நினைக்கிறேன் இந்த பாராட்டை. மடை திறந்த வெள்ளமென வந்த பாராட்டுக்கு நன்றி. (குறுக்கீடு) இடையிலே தடை வாராது.





தனியார்கள் மாட்டை வைத்து தங்களுடைய வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக்கொள்ள எப்படி முயல்கிறார்கள் என்பதனை தெரிந்துகொள்ள இன்று காலையிலே ஒருவரைச் சென்று பார்த்தேன். அங்கே அவர் 'பரீசியம்' என்று சொல்லுகின்ற கலப்பினத்தில் உள்ள ஒரு பசுவினை 5600 ரூபாய்க்கு வாங்கினேன், அரக்கோணத்திற்கு அப்பாலே சென்று 200 ரூபாய் லாரி சத்தம் கொடுத்து வாங்கிவந்தேன்; அது என்னுடைய வீட்டில் இருக்கிறது என்று சொல்லி ஆரம்பித்தார். அதனுடைய வரலாற்றைக் கேட்போம் என்று அவர் சொல்ல, கேட்டேன்.

அப்படிக் கேட்கும்போது, வைக்கோல் ஒரு நாளைக்கு மூன்று வேளைக்கு 4 1/2 ரூபாய் ஆகிறது. அதற்கு கோதுமைத் தவிடு, பொட்டு, கம்பு, எள்ளுப் புண்ணாக்கு, துவரை, நொய் போன்றவைகள் எல்லாம் போடுவதற்கு 8 ரூபாய் ஆகிறது. ஆக, 12½ ரூபாய் அந்த மாட்டுக்கு ஒரு நாளைக்கு செலவு ஆகிறது. ஆனால் அது 3½ லிட்டர் பால் தருகிறது; அது 14 ரூபாய்க்கு விற்கிறது. இப்படி 5600 ரூபாய் முதல் முடக்கி 12 1/2 ரூபாய் செலவு செய்து, 14 ரூபாய் பால் விற்பனை மூலம் கிடைக்குமானால் 1 1/2 ரூபாய் இலாபம் கிடைக்கிறது. இதற்கு மேலே அதற்கு உழைக்கின்ற உழைப்பு எல்லாம் இந்தக் கணக்கிலே வரவில்லை. அந்த குடும்பமே உழைக்கிறது. வீட்டின் ஒரு பகுதியிலே மாட்டைக்கட்டி, வீட்டை தொழுவமாக வைத்துக்கொண்டு அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதனைப் பார்க்கும்போது இந்தத் தீவனம், வைக்கோல் இவை எல்லாம் நகரில் இருக்கிறவர்களுக்கு கட்டுப்படியாகவில்லை. கிராமத்திலே இருக்கிறவர்களுக்கு ஓரளவுக்கு மேய்ச்சல் நிலம் இருந்தால் கட்டுப்படியாகும். மேய்ச்சல் நிலம் இருப்பதாக நினைத்துச் சொல்கிறேன்; பெரும்பாலும் இப்போது மேய்ச்சல் நிலம் இல்லை. மேய்ச்சல் நிலம் இருந்த இடம் எல்லாம் இன்றைக்கு வெறும் கட்டாந்தரையாகக் கிடக்கிறது. கட்டாந்தரையாகக் கிடப்பதற்குக் காரணம் பக்கத்திலே இருக்கிற குளம், குட்டைகளில் தண்ணீர் இல்லை. அந்த குளம் குட்டைகளுக்கு தண்ணீர் வருகின்ற பாதைகளிலே குடிசைகளைப் போட்டுக் கொண்டிருப்பதால்—நிறைய வீடுகளைக் கட்டி விட்டோம்—குளம் குட்டைகளுக்கு தண்ணீர் வரவில்லை. அதனால் பக்கத்திலே இருக்கிற இடத்தில் புல் முளைப்பதில்லை. எனவே ஒரு காலத்தில் மேய்ச்சல் நிலமாக இருந்தது இப்போது இல்லை. ஆகையால் கிராமங்களிலும் இந்த பசு மாடுகளை வளர்க்கின்றவர்களுக்கு இலாபம் கிடைக்கவில்லை.

நகரத்திலே இருப்பவர்களுக்கு வேறு வழியில்லை. ஆகவே, அரசாங்கம் மாடு வளர்ப்புக்கு மானியம் கொடுக்க உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, இந்த யாடு கன்றுகளை வைத்து இருப்பவர்களுக்கு எல்லாம் அவற்றை பராமரிப்பதற்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். அதற்கு மாட்டு ஆஸ்பத்திரி இருக்கிறது என்று சொல்கிறார்கள். அந்த ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் வந்து மருத்துவம் பார்ப்பது என்னவோ காலையில்தான். மாலையில் யாரும் அங்கே வருவதில்லை. ஆகவே, அந்த மாலை நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு, இரண்டாயிரம் யாடுகள் இருக்கின்ற இடத்தை ஒரு வட்டாரமாக, ஒரு யூனிட்டாக எடுத்துக்கொண்டு அங்கே இருக்கிற இளைஞர்களுக்கும் மற்றவர்களுக்கும் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் இன்றைய விஞ்ஞான ரீதியில் மாடுகளைப் பராமரிப்பது எப்படி என்று சொல்லிக்கொடுப்பது நல்லது. வீடியோ போன்றவைகளை இன்றைக்கு வீடியோ கேம்ஸ் ஆடுவதற்கும் இளைஞர்களுடைய மனதைக் கெடுப்பதற்கும் எங்கோ 'புளூ ஃபிலிம்' போட்டுக்கொண்டு இருப்பதற்கும் பயன்படுத்துகின்றார்களே தவிர இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்காகப் பயன்படுத்துவதாகத் தெரியவில்லை. ஆகையினாலே மாட்டு ஆஸ்பத்திரிகளில் இருக்கின்ற டாக்டர்களை வைத்து மாலை நேரத்தில் ஏழை எளிய மக்களுக்கு தங்களுடைய கன்று காளைகளை எப்படி வளர்ப்பது என்று சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மாலை நேர வகுப்புகளை நடத்துவதைப்போலவே இந்த வகுப்புகளையும் நடத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

இன்று காலையிலே நண்பர் நடேசனை பார்க்கச் சென்றிருந்தபோது 5,600 ரூபாய்க்கு வாங்கிய இந்த மாடு இரண்டு தடவை கன்று போட்டது; இப்போது நான்கு வருடங்களாக சினையாக மாட்டேன் என்கிறது என்று சொன்னார். மாட்டைப்பற்றி நன்கு தெரிந்த ஒருவரை என்னுடன் அழைத்துச் சென்றிருந்தேன். உடனே அவர் சொன்னார். ஒரு தடவை கன்று ஈன்ற இரண்டு அல்லது மூன்று மாதத்திற்குள் மீண்டும் உறை விந்து செலுத்தப்பட்டால் சினை ஆகும்; இல்லை என்றால் சினையாவது கடினம் என்றார். ஆனால் மாட்டுக்குச் சொந்தக்காரர் ஒரு கன்றை ஈன்றவுடனே சினைக்கு விட்டால்; அந்தப் பசு 3 அல்லது 4 மாதங்களுக்குள் சினைப்பட்டால் பால் வற்றிவிடும் என்ற நம்பிக்கையின் காரணமாக சினைக்கு விடாமல் இருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது,

திரு. குமரி அனந்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று நான்கு மாதங்கள் கழித்து சினைக்கு விடுவதால் சினை உண்டாவதற்குரிய தாது உப்புச் சத்துக்கள் குறைந்துவிடுகிற காரணத்தால் சினைப்படுகிற வாய்ப்பு அனேகமாக வற்றி, வரண்டு



இல்லாமல் போகிறது என்று சொல்கிறார்கள். இவைகளைப்பற்றி எல்லாம் அவர்களுக்கு சொல்லிக்கொடுக்காத காரணத்தால்—அவர்களிடம் சென்று பேசிக்கொண்டிருக்கும்போது வீட்டிற்குள்ளே சமையல் கட்டிலே இருந்த அவருடைய மனைவி ஓடிவந்து சொன்னார், ஐயா, இதை அறுவைக்குத்தான் அனுப்பவேண்டும். 100 ரூபாய் கொடுக்கிறேன் என்று சொல்கிறார்கள் என்று வருத்தத்தோடு சொன்னார். ஆக 5,600 ரூபாய்க்கு வாங்கி ஒரு நாளைக்கு 12½ ரூபாய் செலவு செய்து 14 ரூபாய் மட்டுமே ஊதியமாகப் பெற்று அதற்குப் பிறகு 100 ரூபாய்க்கு விற்கிற சூழ்நிலை வருகிறது என்று சொன்னால் என்ன காரணம்? எந்த நேரத்தில் சினைப்படுத்த வேண்டும் என்பதைக் கூட சரியாக சொல்லிக்கொடுக்காமல் இருக்கிறோம். இதை எல்லாம் வளர்க்கிற பொறுப்பு இந்தச் சமுதாயத்தைச் சாரும் என்று சொன்னால் அரசாங்கத்தைச் சாரும் என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன்.

பயிற்சி பெற்றவர்களும், துறைமையாளர்களும் இப்போது பொறுப்போடு இருக்கிறார்கள். முன்பெல்லாம் சில நேரங்களிலே என்ன செய்வார்கள் என்று சொன்னால் டென்மார்க் போன்ற இடங்களுக்கு பெரிய, பெரிய அதிகாரிகளை அனுப்புவார்கள். அனுப்பி பால் பண்ணைகளைப் பற்றித் தெரிந்து வாருங்கள் என்று சொல்வார்கள். அப்படி ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை நாம் அனுப்பினோம். பாலைப்பற்றித் தெரிந்து வாருங்கள் என்று சொல்லி படித்து முடித்து வந்த உடனே டெக்ஸ்டைல் கார்ப்பரேஷனில் போட்டுவிட்டோம். பாலைப் படித்து வந்தவரை நீ நூலைப் போய் படித்துப் பார் என்று சொல்கிற அளவுக்கு அவர் நூலுக்குப் போய்விட்டார். ஆகவே அங்கே கற்றதை இங்கே பயன்படுத்த முடியாமல் போகிறது என்ற நிலைமை இல்லாமல் இருக்கவேண்டும். இதைக் கூர்ந்து கவனித்து, உற்று நோக்கி, நுணுக்கிச் செயல்படுகிற அதிகாரிகள் இருப்பதாக நான் அறிகிறேன். அப்படிப்பட்ட அதிகாரிகள் இருப்பதால் இப்படிப்பட்ட விவசாயப் பெருமக்களுக்கு நன்மை செய்கிற காரியங்களை உடனே செய்யவேண்டும்.

பாலின் தேவை பற்றியும், வெண்மைப் புரட்சி என்றும் நாம் சொல்கிறோமே. நமக்குத் தேவைப்படுகிற பால் 250 கிராம் என்று சொன்னால், ஒரு நாளைக்கு 161 கிராம்தான் கிடைக்கிறது. எனவே பாதிக்கு மேலே தேவைப்படுகிறது. முட்டை ஒரு நாளைக்கு ஒன்று வேண்டும்; ஒரு மனிதனுக்கு முட்டை ஒன்று வேண்டும். ஆனால் நமக்கு இப்போது கிடைப்பது 22 முட்டைதான். சில மாணவர்களுக்கு, மோசமாக படிப்பவர்களுக்கு மட்டும்தான் அதிகமாக முட்டை கிடைக்கிறதே தவிர வாழ்க்கையில் அவர்கள் முன்னேற வேண்டுமென்றால்—உடல் வலிமை பெறவேண்டும் என்று சொல்கிறோம், சத்துணவு என்று சொல்கிறோம். அது எல்லோருக்கும் கிடைக்கவேண்டும் என்று சொன்னால்—ஒரு நாளைக்கு ஒரு முட்டை கிடைக்கவேண்டும்.

அதுதான் கலப்படம் செய்ய முடியாதது என்று சொல்கிறார்கள். 365 நாட்களுக்கும் தேவை; ஆனால் கிடைப்பது 22 தான் 40 கிராம் ஒருவருக்குத் தேவை என்று சொன்னால் 26 கிராம்தான் கிடைக்கிறது என்று அரசாங்கக் குறிப்பிலேயே கொடுக்கப்பட்டு இருக்கிறது. இப்படி குறைந்துகொண்டிருக்கிற நேரத்தில் நாம் ஒலிம்பிக் பந்தயத்திலே பதக்கமே வாங்கவில்லை என்று மட்டும் குறைபட்டுக் கொள்கிறோம். மூலத்தை விட்டுவிட்டு வேறு எங்கோ தேடிக் கொண்டு இருக்கிறோம் என்பதற்காகத்தான் இதையெல்லாம் சொல்கிறோம். அடிப்படையாக இருந்துகொண்டிருக்கிற தேவைகளை எப்படி செம்மைப் படுத்துவது என்ற முயற்சியிலேதான் அரசாங்கம் ஈடுபட்டுக்கொண்டு இருக்கிறது.

எல்லோருக்கும் மாடு வாங்குவதற்குக் கடன் கொடுக்கிறார்கள். ஐ.ஆர்.டி.பி. என்பதன் கீழ் கடன் கொடுக்கிறோம். அவ்வாறு கடன் கொடுப்பதில் மூன்றில் ஒரு பகுதியை மானியமாகக் கொடுக்கிறோம். ஆனால் அந்தக் காளையை, மாடுகளை எங்கே வேண்டுமானாலும் வாங்கலாம் என்று இல்லாமல் இங்கேதான் வாங்கவேண்டும் என்று சொல்கிறார்கள். குறிப்பிட்டு யாரோ ஒருவர்—எல்லோரும் அல்ல—சிலர் சொல்கிறார்கள். 10½ ரூபாய் மட்டுமே கட்டிவிட்டு உறுப்பினர் ஆனால் போதும், அதாவது அந்த விவசாயிக்கு நாம் தெளிவாகச் சொல்லவேண்டியது வெறும் 10 ரூபாய் 50 பைசா கட்டினால் இந்தச் சங்கத்திலே உறுப்பினர் ஆகிவிடலாம்; உனக்கு ஒரு மாடு வாங்கிக் கொள்கிற உரிமை தானே வந்துவிடுகிறது என்பதை நாம் சொல்லிக் கொடுத்தால் அது நடை முறையில் இல்லாத ஒரு நிலைமை இருக்கின்ற காரணத்தாலே ஒருவர் 10½ ரூபாய் கட்டி உறுப்பினர் ஆனாலும் அங்கே இருக்கிற அந்த வட்டாட்சி என்று சொல்கிறோமே, அந்த ப்ளாக் டெவலப்மென்டிலே இருக்கிற அந்த மருத்துவர் என்று சொல்கிறோமே, அவர் சான்றிதழ் கொடுத்தால்தான் அதாவது ஒரு மாடு வாங்கிக் கொடுப்பேன் என்று சொல்லி அவர் பேரம் பேசப்படுகிறார். 3,000 ரூபாய்க்கு வாங்கவேண்டிய மாட்டை நாமகிரிப்பேட்டை, அல்லது நாமக்கல் பக்கத்தில் வாங்கவேண்டும் என்று சொல்கிற காரணத்தால் ஆயிரம் ரூபாய்க்கு மாடும், கன்றுமாக வாங்கப்படுகிறது. ஆயிரம் ரூபாய்க்கு மாடும், கன்றும் வாங்கி 3000 ரூபாய்க்குள்ள பாலை ஆயிரம் ரூபாய் மாட்டிலே எதிர்பார்க்கிறோம். அந்தப் பால் வரமாட்டேன் என்கிறது. அப்படி பால் வராது இருக்கிற சூழ்நிலையில் அவன் என்ன செய்வது என்று தெரியாமல் திண்டாடிப் போகிறான். அந்த நேரம் பார்த்து இந்தச் சங்கங்களை எல்லாம் மூடிக்கொண்டு இருக்கிறார்கள். நாலாயிரத்திற்கு மேற்பட்ட சங்கங்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் 40 சங்கமாவது உருப்படியாக நடக்கிறதா என்றால் இல்லை, இதைச் செம்மைப்படுத்துவதற்குரிய வழி இருக்கிறதா என்று பார்க்க ஒரு குழுவை உடனடியாக அமைத்து எங்கெங்கே





அவர்கள் தவறான பாதைக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள், அவர்கள் எப்படி ஏமாற்றப்படுகிறார்கள் என்று கவனிக்கவேண்டும். அப்படிப்பட்ட நடவடிக்கை உடனடியாகத் தேவை.

ஆடு வளர்ப்பவர்களுக்கும் இதுதான் நிலைமை. 20 பெண் ஆடு, ஒரு மறியாடு ஆக 21-ஐக் கொடுக்கவேண்டும். அவ்வாறு கொடுத்ததற்குப் பிறகு மாதத்திற்கு ஒரு தடவை வயிற்றில் குடல் பூச்சிக்கு மருந்து கொடுக்க வேண்டும். குடல் பூச்சிக்கு மருந்து கொடுக்க ஆள் இல்லை என்று சொன்னால் அது கொஞ்சம் தலையைத் தலையை ஆட்டும். தலையை தலையை ஆட்டிய உடனேயே அந்த விவசாயி முடிவு செய்துவிடுவார், இதனை இன்றே வெட்டி சாப்பிட்டு விடலாமா என்று. பிறகு எங்கே கடனை தீர்ப்பது, எங்கே முயற்சியை செய்வது, எப்படி இறைச்சிப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்து கொண்டு வந்து குவிப்பது?

ஆகவே இதைப்போன்ற இடங்களில் எல்லாம் நடமாடச் சென்று அவர்களுக்கு உதவ வேண்டும் என்று சொன்னால் கிளைகளை அதிகப்படுத்த வேண்டும். எதற்காக இருப்பதையும் குறைக்க வேண்டும். கால்நடை விவசாயிகளுடைய பயிற்சியே எல்லாம் போய்விட்டது. 1954-55லே பெரும் தலைவர் காமராஜர் அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்த நேரத்திலே ஓசூரிலே, ஒரத்த நாட்டிலே, புதுக்கோட்டையிலே, செட்டிநாட்டிலே, அபிஷேகப்பட்டியிலே என்று அங்கேயெல்லாம் கால்நடைப் பண்ணைகளை நடத்தி, ஆய்வாளர்களுக்கு பயிற்சியும் கொடுக்கப்பட்டது. ஒரு பெரிய டாக்டருக்கு என்னவெல்லாம் தெரிந்திருக்க முடியுமோ அவை அத்தனையும் அவர்களுக்கு சொல்லிக் கொடுக்கப்பட்டது. அவர்கள் கிராமங்களுக்குச் சென்று மற்றவர்களுக்கு பயிற்சி கொடுத்தார்கள். அதன் மூலம் விவசாயிகளுக்கு பயன் ஏற்பட்டது. ஆனால் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே இருந்ததை 1968லே திராவிட முன்னேற்ற கழக ஆட்சிக் காலத்தில் மூடப்பட்டது. ஆனால் அது தேவை என்ற காரணத்தைக் கருதி, மீண்டும் அதை 1975லே அந்த ஆட்சியே கொண்டு வந்தது. 1976லே இந்த ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. பிறகு இந்த ஆட்சி வந்தது. இந்த ஆட்சியும் கொண்டு வந்திருக்கிறது அந்தப் பயிற்சியை, ஆனால் ஓரே ஒரு இடத்திலே மட்டும் கொண்டு வந்திருக்கிறது என்று நான் அறிகிறேன். அது ஒரத்தநாட்டிலே மட்டும். ஆக இதனை நான் உரத்த குரலிலே சொல்வதற்குக் காரணம். மாடு என்பதுதான் தமிழனுடைய செல்வம். ''மாடல்ல மற்றயவை'' என்று வள்ளுவர் பெருந்தகை சொல்லிய அந்த மாடு என்கிற செல்வத்தை செம்மையான முறையிலே வளர்க்க வேண்டுமே தவிர, ஏதோ பணம் கொடுத்தோம் ஆனால் அது வீணாகிப் போய்விட்டது என்று சொல்லுவதிலே பயன் இல்லை.

அதைப்போலவேதான் கோழி. கோழியை நல்ல முறையில் வளர்த்துக் கொண்டு வந்தால் தேவைப்படுகிற முட்டைகள் நமக்குக் கிடைக்கும். ஒவ்வொரு வீட்டிலும் 10 கோழிகள் வளர்க்கலாம். அதற்கு தனியாக தீவனம் கூட தேவையில்லை. கோழி, எங்காவது தேடி, கிண்டி, குத்தி தின்றுக் கொள்ளும். நாம் முட்டைகளை மட்டும் எடுத்துக் கொண்டிருந்தால் போதும். அந்த அளவுக்கு பத்து கோழிகளை ஒவ்வொரு வரும் வளர்க்கலாம். ஒரு கோழி 20 ரூ. என்று வைத்தால் கூட, 200 ரூபாய்க்கு என்று சொன்னால், 10 கோழி வரும். 10 கோழிகளில் 5 கோழி முட்டையிட்டால் கூட ஒரு நாளைக்கு 5 ரூபாய் ஆகிறது. ஒரு மாதத்திற்கு 150 ரூபாய் ஆகிறது. 200 ரூ. முதலீடு செய்து, 150 ரூ. அதிலிருந்து மாதத்திற்கு வருவது ஒன்றும் மோசம் இல்லை. ஆனால் அந்தக் கோழிக்கு நோய் வராமல் பார்த்துக் கொள்ளவேண்டும். அந்தக் கோழிக்கு நோய் வருவதை தடுக்கின்ற அந்தப் பயிற்சியைத்தான் நான் சொல்கிறேன். ஆகவே இப்படிப்பட்ட விஞ்ஞான முறைகளில் அக்கறை எடுத்து நடத்த வேண்டும். இப்போது கோழி தீவனத்திற்கு எல்லாம் கொஞ்சம் வழி வகைகள் கூட செய்திருப்பதை பாராட்டி மாநாடு கூட போட்டிருக்கிறார்கள். ஆனால் அந்தக் கோழிப் பண்ணை வைத்திருப்பவர்களுக்கு, மின்சாரத்தைக் கொடுக்கும்போது, விவசாய மின்சாரம் என்று சொல்லுகிற அளவுக்கு விவசாயிகளுக்கு கொடுக்கின்ற அளவுக்கு அதனைக் கொடுக்காமல், ஒரு இண்டஸ்ட்ரீக்கு—தொழிற்சாலைக்கு கொடுக்கின்ற அளவுக்கு கொடுக்கின்ற காரணத்தினாலே பாவம் முட்டைகள் உடைபட்டுப் போகின்றன. ஆகவே அந்த முட்டைகள் எல்லாம் நல்ல முறையில் உற்பத்தியாக வேண்டும் (மணியடிக்கப்பெற்றது குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடித்துவிடுங்கள்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கோழி வெகுதூரம் போனால் பக்கத்து வீட்டுக்காரர்கள் திருப்பிக் கொள்வார்கள் என்ற எண்ணத்திலே தாங்கள் முடிக்கச் சொல்லியிருக்கலாம் என்று நினைக்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, நான் அப்படி நினைக்கவில்லை. ஒருவேளை சபாநாயகர் அவர்களுக்கு இது மதிய நேரமாகிவிட்டக் காரணத்தினால் கோழியை சமைப்பது எப்படி என்று சொல்வதை விட்டு விட்டு, அதனை வளர்ப்பது பற்றி பேசுகிறாரே என்று நினைக்கிறாரோ என்றுதான் நான் நினைத்தேன். (சிரிப்பு)

ஆக இப்போது 1264 ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன என்று சொன்னால், அதில் ஒன்றிரண்டு கூட செம்மையாகச் செயல்படுவதில்லை. அவைகளை கவனிக்க வேண்டும். கால்நடை துறையிலே ஆய்வாளர்கள் பதவிகள் ஆயிரம் பதவிகள் காலியாக இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். அந்தப் பதவிகள் எல்லாம் நிரப்பப்பட வேண்டும் என்று





கேட்டுக் கொள்கிறேன். காலத்தை நானே எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. இன்னும் சொல்லவேண்டியது நிரம்ப இருந்தாலும் கூட, இன்னும் சிலருக்கு வாய்ப்புகளை கொடுத்துதான் அதிகமாக கருத்துக்களைப் பெறவேண்டும் என்று இந்த அவைத்தலைவர் அவர்களும், மற்றவர்களும் விரும்புவார்களேயானால், நான் என்னை சுருக்கிக் கொள்வதற்கு தயாராக இருக்கிறேன். ஐந்து ஐந்து ரூபாய் கொடுத்து, உறை விந்தை மாடுகளை உற்பத்தி செயவதற்காக கொடுப்பதற்கு, கட்டணம் வசூலிப்பதை நிறுத்திவிட்டு, அவைகளையெல்லாம் இலவசமாகக் கொடுக்க வேண்டும். அத்தோடு பயிற்சி பெற்று நல்ல முறையிலே வந்து கொண்டிருப்பவர்களுக்கெல்லாம் பதவி உயர்வு கொடுப்பதற்கும் வழி பார்க்க வேண்டும். ஒரு மாஸ் பிராபகேண்டா என்று சொல்லுகிற அளவுக்கு பரவலாக அவைகளைப் பற்றியெல்லாம் சொல்லவேண்டும் என்று சொல்லி, காலையிலேயே வரும் வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த என்னுடைய வாய்ப்பு இந்த நேரத்திற்கு வந்தும், இன்று அவர்கள் பதிலைச் சொல்லவில்லை நாளைத்தான் சொல்லுவார்கள் என்று சொன்னதற்குப் பிறகும், நேரம் இல்லாத காரணத்தினால் இப்போது என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண். 5, 6, 10, 22 ஆகியவைகளின் கீழ் முத்திரைத் தாள்கள், நிர்வாகம், பத்திரப்பதிவு, பால் வழங்கு திட்டங்கள், மற்றும் கால்நடை பராமரிப்பு என்ற வகையின் கீழ் பேசுகின்ற வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி கூறி இங்கே பத்திரப் பதிவுக்கான 1983—84 ஆம் ஆண்டு, 1984-85 ஆம் ஆண்டும், 1985—86 ஆம் ஆண்டும் முறையே, 82.7 கோடி, 94 37 கோடியும், 108 கோடி என்றும் இங்கே புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 1—40)

அடுத்து பத்திரப் பதிவு மூலமாக கிடைக்கிற வருமானங்கள் ஊராட்சி மன்றங்களுக்கு, பேரூராட்சிகளுக்கு நகராட்சிகளுக்கு இது அடிப்படையான வருமானமாக இருக்கிறது. வருடந்தோறும் பத்திரப் பதிவு மூலமாக இந்த அமைப்புகளுக்கு 100 கோடி ரூபாய்க்கு மேலாக கிடைக்கிறது. இதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு இந்த மன்றத்தின் வாயிலாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்திரப் பதிவு பிரிவுகளை மாநிலத்தில் நான்காக பிரித்து முறைப்படுத்தி செம்மையாக நடந்து கொண்டிருக்கிற இந்த நிலையில் ஏறக்குறைய 8 ஆய்வாளர்கள் இருந்து வருகிறார்கள். அந்த எட்டு ஆய்வாளர்கள் இருப்பது ஒரு மாவட்டத்திற்கு ஒரு ஆய்வாளர் என்ற நிலை கூட இல்லாமல் இருக்கிறதால், பத்திரப் பதிவுகளை செம்மையாக செய்திட வேண்டுமென்ற காரணத்தால்

ஆய்வாளர்களின் எண்ணிக்கையை 16-ஆக உயர்த்தி தரவேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை இந்த மன்றத்தில் வைக்க விரும்புகிறேன்.

பத்திரப் பதிவு என்று சொன்னாலே விவசாயிகள் நிலங்களை வாங்குகிற போதும், விற்கிற போதும் மிகவும் உறுதுணையாக இருக்கிற ஒன்றாகும். 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் மதிப்பு போனால் அதற்கு இன்கம்-டாக்ஸ் சர்டிபிகேட் வாங்க வேண்டுமென்ற சூழ்நிலை இருப்பதால் சங்கடமாக இருக்கிறது. என்றோ அமைக்கப்பட்டிருக்கிற இந்தச் சட்டத்தை மறுபரிசீலனை செய்து அதனை 2 லட்சம் ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

பத்திரப் பதிவு மாவட்டங்களாக 46 மாவட்டங்களை உருவாக்கி மிகச் செம்மையாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது இந்தத் துறை. இந்தப் பத்திரப்பதிவு மாவட்டங்களை மேலும் பிரித்து ஒவ்வொரு உட்கோட்டத்திற்கும் ஒரு பத்திரப் பதிவு மாவட்டமென்ற வகையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அரக்கோணம் பத்திரப் பதிவு மாவட்டம் வாலாஜா, ஆற்காடு, வேலூர் ஆகிய பகுதிகளைக் கொண்டதாக இருக்கிறது, அரக்கோணத்திலிருந்து 100 கி.மீ. தூரத்தில் இருக்கும்படியாக இந்த மாவட்டம் பிரிக்கப்பட்டிருக்கிறது. இதனை மையப் பகுதியாக இருக்கிற இராணிப்பேட்டைக்கு மாற்றி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து துணைப் பதிவாளர்கள் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்திற்கும் இரண்டு அல்லது நான்கு என்ற வீதத்தில் தான் கூட்டிக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் துணைப் பதிவாளர்கள் அலுவலகங்களில் சிறு விவசாயிகள் கடன் வாங்குகிற போதும், அவர்களுக்கு தேவையான வில்லங்கச் சான்றிதழ்களை வாங்குகிற போதும், அந்த அலுவலகங்களிலிருந்து பெற முடியவில்லை. ஆகவே இந்த அலுவலகங்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு நான்கு சார்பதிவாளர் அலுவலகங்களை புதியதாக ஏற்படுத்துவதாக அறிக்கையில் தந்திருக்கிறார்கள். இந்த நான்கு அலுவலகங்களில் ஒன்றை என்னுடைய தொகுதியில் இருக்கிற வாழைப்பந்தல் பகுதிக்கு தந்திட வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதியில் இருக்கிற மக்கள் 30 கி.மீ. தூரம் சென்று பதிவு செய்ய வேண்டிய சூழ்நிலை இருப்பதாலும், ஆற்றைக் கடந்து செல்ல வேண்டியிருப்பதாலும், சரியான போக்குவரத்து வசதிகள் இல்லாமல் இருப்பதாலும் அந்தப் பகுதி மக்கள் பயன்பெறுகிற வகையில் அந்த அலுவலகத்தை அங்கே ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து பத்திரப் பதிவுத் துறையில் ஏழை எளிய விவசாயிகள் குறிப்பாக ஆதிதிராவிட மக்கள், நிலமற்றவர்களுக்கு எல்லாம் பத்திரப் பதிவு கட்டணம் இல்லாமல் செய்து தருவதை பாராட்டி மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

கால்நடைப் பராமரிப்புப் பொறுத்தவரையில் இந்தத் துறையில் கிராம மக்களின் வசதிகளை அடிப்படையாகக் கொண்டு கிராம முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு, கிராமப்புறங்களை முன்னேற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு, மாநில அரசு பல்வேறு முனைப்பான சங்கங்களை ஒருங்கிணைத்து ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கி, இந்தச் சங்கங்கள் இன்று மிகச் சிறப்பாக செயலாற்றிக் கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கையை மேலும் உயர்த்திட வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

1983—84 ஆம் ஆண்டில் ஆடு உற்பத்தித் திட்டத்தின் கீழ் 1,500 ஆட்டுப் பிரிவுகளும், 1984—85 ஆம் ஆண்டில் 992 ஆட்டுப் பிரிவுகளும், 1985—86 ஆம் ஆண்டில் 209 ஆட்டுப் பிரிவுகளும் மானியம் வழங்கப்பட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

படிப்படியாக அந்த ஆடுகளுக்கு வழங்குகின்ற மானியங்கள் குறைந்து வந்து கொண்டு இருக்கின்றன. அப்படி குறைந்து வருவதன் காரணமாக ஏழை எளிய விவசாயிகள், அவர்களுக்குத் தேவையான, மானியத் தொகையைப் பெற்று, அவர்கள் விரும்புகின்ற வகையில், அவர்களுக்குத் தேவையானவற்றைப் பிடிப்பதற்கு உண்டான வாய்ப்புகள் மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தால் இந்த மானியத் தொகையை உயர்த்தி, அவர்கள் தேவையான அளவிற்குப் பயன்படுத்திக் கொள்வதற்கு உண்டான வாய்ப்புகளை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று கிராமங்களில் இருக்கக்கூடிய அந்த 'லைவ் ஸ்டாக் அசிஸ்டென்ட்' என்று சொல்லக்கூடிய அந்த ஆய்வாளர்கள் கிராமப்புறங்களில் இருந்தால்தான், கால்நடைகளுக்குக் குறிப்பாக ஆடுகளுக்கும் மாடுகளுக்கும் நோய் ஏற்படுகின்றபோது அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் இந்த ஆய்வாளர்களை அணுக வசதியாக இருக்கும். தற்போது அந்த ஆய்வாளர்கள் எல்லாம் 10 மைல், 20 மைல் என்று கிராமப்புறங்களுக்கு அப்பால் இருக்கிற நகரங்களில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். எனவே, ஆடுகளுக்கோ, அல்லது மாடுகளுக்கோ நோய் ஏற்பட்டால், அவைகளை விவசாயிகள் உடனடியாகத் தூக்கிச் சென்று வைத்தியம் பார்க்க முடியாத நிலைமை இருக்கிற காரணத்தால்தான், சப்-சென்டர்களை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித்

தலைவர் அவர்கள் பல்வேறு இடங்களில் உருவாக்கியிருக்கிறார்கள். அப்படி உருவாக்கப்பட்டு இருக்கிற பகுதிகள் மிகச் சிறப்பான பகுதிகளாக இருந்தாலும் கூட, அங்கே நிரந்தரமாக இந்த ஆய்வாளர்கள் தங்குவதற்கு வேண்டிய கட்டிடங்கள், குடியிருப்புகள் இல்லாத காரணத்தால், அந்த லைவ்ஸ்டாக் இன்ஸ்பெக்டர்கள் பல்வேறு நகர்ப்புறங்களில் தங்களுடைய வாழ்க்கையைத் தேடி அங்கே தங்கிக் கொண்டு இருக்கிறார்கள். அப்படி இருக்கிறபோது, இங்கே ஆடுகளுக்கும், மாடுகளுக்கும் கோழிகளுக்கும் பல்வேறு கால்நடைகளுக்கும் உடல் நலம் சரியில்லை என்று சொன்னால், விவசாயிகள் அந்த ஆய்வாளர்களை உடனடியாக கண்டுபிடிக்க முடிவதில்லை. எனவே விவசாயிகளுடைய இந்த பிரச்சனையைக் கருதி, கால்நடைகளுக்கு ஏற்படுகின்ற இந்த நோய்களைத் தடுப்பதற்கு அந்த லைவ்ஸ்டாக் இன்ஸ்பெக்டர்களுக்கு அந்தந்த இடங்களில் அவர்களுக்கு குடியிருப்புகளைக் கட்டிக்கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக விவசாயிகளுக்கு உதவுகின்ற அந்த அலுவலர்களுக்கு ஏ. ஓ. குவார்ட்டர்ஸ் என்று நிரந்தரமாகக் கட்டிக் கொடுத்திருப்பது போல், இந்த லைவ்ஸ்டாக் இன்ஸ்பெக்டர்களுக்கும் நிரந்தரமாக குடியிருப்புகளைக் கட்டித்தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பால் உற்பத்தியிலே தன்னிறைவு பெறுகின்ற அளவிற்கு, குஜராத்திற்கு அடுத்தபடியாக தமிழ்நாடு இருக்கிறது என்றாலும் மாவட்டங்களைப் பொறுத்தவரையிலும், சேலத்திற்கு அடுத்தபடியாக உள்ள மாவட்டமாக வட ஆற்காடு மாவட்டம் இருக்கிறது என்று சொன்னாலும், அங்கேயிருக்கிற பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் பால் உற்பத்தியை மிக அதிகமான அளவில் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறது. அப்படி இருந்தாலும், இந்த வளங்களை மேலும் மேலும் சிறப்புடையதாக ஆக்குவதற்கு, உயரினக்காளைகளை அங்கே அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பால் உற்பத்தியில் ஈடுபட்டு இருக்கின்ற பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், பால் பண்ணைகள், பால் வள ஒன்றியங்கள், ஆகியவைகளின் பால் உற்பத்தி அதிகமாக இருக்க வேண்டும் என்று சொன்னால், உயர் இன காளைகளை நாம் உற்பத்தி செய்து தேவையான காளைகளை அந்தச் சங்கங்களுக்கு வழங்கினால், அந்தந்தப் பகுதியில் இருக்கின்ற மாடுகளுடைய தரத்தினையும், கிராமங்களில் இருக்கக்கூடிய பொருளாதாரத்தின் தரத்தினையும் உயர்த்துவதற்கு இது வாய்ப்பாக அமையும் என்று கூறி என் உரையை நிறைவு செய்து, மானியக் கோரிக்கையை வரவேற்று முடிக்கிறேன், வணக்கம். (மணியடிக்கப்பெற்றது.)



## 7. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப் பெறவேண்டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ நாளை (9–4–1986) தளர்த்தவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (9–4–1986) காலை 9·00 மணிக்கு பேரவை மீண்டும்கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–49 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

**(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்—எதுவுமில்லை**

**(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்**

75. கோரிக்கை எண் 5 - முத்திரைத்தாள் நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1986–87 (தமிழ், ஆங்கிலம்).

76. கோரிக்கை எண் 6 - பத்திரப் பதிவுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1986–87 (தமிழ், ஆங்கிலம்).

77. கோரிக்கை எண் 10 - பால் பண்ணை வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1986–87 (தமிழ், ஆங்கிலம்).

78. 1985ஆம் ஆண்டில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் பற்றிய ஆய்வுரை (தமிழ், ஆங்கிலம்).

79. 1985ஆம் ஆண்டில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் சிறப்பு கூறுகள் பற்றிய குறிப்பு (தமிழ்).

80. கோரிக்கை எண் 22 - கால்நடைப் பராமரிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1986–87 (தமிழ், ஆங்கிலம்).

81. கால்நடைப் பராமரிப்புத் துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம் 1986–87 (தமிழ், ஆங்கிலம்).

82. தமிழ்நாடு இறைச்சிக் கழகத்தின் 1985–86 ஆம் ஆண்டு பணிகள் விவரம் பற்றிய குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

83. தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் 1985–86 ஆண்டு நடவடிக்கைகள் பற்றிய குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

## இணைப்பு I.

[27-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 431 (7203)க்கான விடையைக் காண்க].

விவர அறிக்கை.

| வருடம். | வாங்கிய விதம். | வாங்கப்பட்ட அளவு மெட்ரிக் டன். | மெட்ரிக் டன் னுக்கு விலை. | குவிண்டால் ஒன் றுக்கு விலை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1982—83 | ஆந்திரப் பிரதேச மாநிலத்தி லிருந்தும் தமிழ்நாட்டிலிருந் தும் டெண்டர் மூலம் பெறப் பட்டது. | 604 | 2,280 | 228 |
| 1983—84 | பஞ்சாப், ஹரியானா, புது டில்லியிலுள்ள தனிவர்த்தகர் களிடமிருந்து டெண்டர் மூலம் பெறப்பட்டது. | 19,719 | 3,230 | 323 |
| ,, | ஆந்திரப் பிரதேசம் மாநில உணவுப் பொருள் வழங்கல் கழ கத்திடமிருந்து நேரடியாகப் பெற்றது. | 1,709 | 3,400 | 340 |
| ,, | ஆந்திரப்பிரதேச கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து பெறப் பட்டது. | 7,227 | 3,475 | 347 |
| 1983—84 | ஆந்திரப்பிரதேச மாநிலத்தி லிருந்து டெண்டர் மூலம் பெறப்பட்டது. | 30,274 | 3,512 | 351 |
| ,, | ஆந்திரப்பிரதேச உணவுப் பொருள் வழங்கல் கழகம் மூலமும் ஆந்திரபிரதேச அரிசி ஆலையாளர்களிடமிருந்தும் பெறப்பட்டது. | 43,199 | 3,601 | 360 |
| ,, | ஆந்திரப்பிரதேச மாநில ஆலையாளர்கள் சங்கத்திட மிருந்து பெறப்பட்டது. | 1,380 | 3,675 | 367-50 |
| ,, | டில்லி, பஞ்சாப் மத்தியப்பிர தேச மாநிலங்களிலிருந்து டெண்டர் மூலம் பெறப் பட்டது. | 20,584 | 2,850 | 285 |
| ,, | உத்திரப்பிரதேச மாநில விற் பனை இணையம் மூலம். | 34,904 | 2,900 | 290 |
| ,, | டில்லி, மற்றும் பஞ்சாப்பி லிருந்து நேரடியாகப் பெறப் பட்டது. | 9,791 | 2,900 | 290 |

## இணைப்பு II.

(..61..ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

வணிக வரிகள் மற்றும் அறநிலையத்துறை.

மானியக் கோரிக்கை எண். 5.

முத்திரைத்தாள் நிர்வாகம்.

1. பொது.—சொத்துக்களை வாங்குதல் விற்பனை செய்தல் குறித்த பத்திரங்கள் மீது முத்திரைத் தீர்வை விதிப்பதற்கு 1899 ஆம் ஆண்டின் இந்திய முத்திரைத்தாள் சட்டம் (மத்திய சட்டம் 2/1899) வகை செய்கிறது. 1 டிசம்பர் 1980 முதல் பதிவுத் துறைத் தலைவர் தலைமை கட்டுப்பாட்டு வருவாய் அதிகாரி என்ற முறையில் இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் மூலம் கிடைக்கும் வருவாயினை மேற்பார்வை செய்கிறார்.

2. முத்திரைத்தாள்களின் தேவையைக் கணித்தலும் முத்திரைத் தாள்களை வழங்குதலும்.—அஞ்சல் சாரா முத்திரைத்தாள்களான நீதித் துறையைச் சார்ந்த மற்றும் நீதித் துறையைச் சாரா முத்திரைகளை தமிழ்நாடு முழுவதும் வழங்குவதற்குரிய தேவைக் குறிப்புகளை முத்திரைத்தாள் கண்காணிப்பாளர், நாசிக்கில் உள்ள இந்திய பாதுகாப்பு அச்சகத்தின் முத்திரைத்தாள் கட்டுப் பாட்டு அதிகாரிக்கு அனுப்பி வைக்கிறார். சென்னை வட்டார துணை கருவூலம் மற்றும் கணக்குத்துறை இயக்குநர் அலுவல் வழி முத்திரைத்தாள் கண்காணிப்பாளராக உள்ளார். இவருக்கு உதவி முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் உதவி புரிகிறார். முத்திரைத்தாள்களுக்கான தேவைக் குறிப்புகளை மாவட்ட கருவூல அதிகாரிகளும், உதவி முத்திரைத்தாள் கண்காணிப்பாள ரும் ஆண்டுக்கு ஒரு முறையும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையும் அனுப்பி வைக்கின்றனர். இந்தத் தேவைக் குறிப்புகள் முத்தி ரைத்தாள் கண்காணிப்பாளரால் ஒருங்கிணைக்கப்படுகின்றன. இவ்வாறு தேவைக் குறிப்புகளை ஒருங்கிணைக்கும்போது எல்லா மாவட்டக் கருவூலங்களிலும், துணை கருவூலங்களிலும் போது மான அளவு முத்திரைத்தாள்கள் எல்லா வகை மதிப்புகளிலும் மக்கள் தேவைகளை நிறைவு செய்யவும் அவசர தேவைக்கும் எதிர்பாரா தேவைக்கும் வகை செய்யவும் முத்திரைத்தாள் கண் காணிப்பாளர் கவனித்துக் கொள்கிறார். ஒரு குறிப்பிட்ட வகை மதிப்பு முத்திரைத்தாள் இல்லாவிடில், ஒரு துணைக் கருவூலத்தி லிருந்து மற்றொன்றுக்கு கருவூல அதிகாரியும், மாவட்ட கருவூலம் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு முத்திரைத்தாள் கண் காணிப்பாளரும் மாற்றம் செய்கின்றனர்.



3. முத்திரைத்தாள்கள் உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் மூலம் பொதுமக்களுக்கு விற்கப்படுகின்றன. இந்த முத்திரைத்தாள் விற்பனைக்கேற்றவாறு அவர்களுக்குத் தரகு தொகை அளிக்கப்படுகிறது. நீதித் துறை சாரா முத்தி ரைத்தாள்கள் விற்பனையில் இருப்புகள் ஒரே இடத்தில் குவிந் திருப்பதையும் செயற்கையாக ஏற்படுத்தப்படக்கூடிய தட்டுப் பாட்டையும் கள்ளச்சந்தை விற்பனையையும் தவிர்க்கும் பொருட்டு நீதித் துறை சாரா முத்திரைத்தாள்களை மாநில முழுவதுமுள்ள எல்லா பத்திரப் பதிவு அலுவலகங்களிலும் விற்க அரசு ஏற்பாடு செய்துள்ளது. மேலும், சில குறிப்பிட்ட வகை ஆவணங்களில் செலுத்தப்படவேண்டிய முத்திரைத் தீர்வையை பத்திரப் பதிவு அலுவலகங்களில் ரொக்கமாகச் செலுத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது. இதனால் முத்திரைத்தாள் கட்டுப் பாட்டு அதிகாரி வழங்கும் முத்திரைத்தாள்களை பொதுமக்கள் பெரும் அளவு நம்பியிருக்கத் தேவையில்லை. மேலும், குறிப் பிட்ட வகை மதிப்பு முத்திரைத்தாள்கள் பற்றாக்குறையாக இருக்கும்போது பொதுமக்களுக்கு இன்னல் ஏற்படுவதும் தவிர்க் கப்படுகிறது. உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர் களின் மீதான கட்டுப்பாடு செலுத்தும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பதிவுத்துறைத் தலைவருக்கு மாற்றப்பட்டுள்ளது.

4. வருவாய்.—1983–84 ஆம் ஆண்டில் முத்திரைத்தாள் விற்பனையின் மூலம் அரசுக்குக் கிடைத்த வருவாய் ரூ. 82.07 கோடி. 1984-85 ஆம் ஆண்டில் இது ரூ. 94.37 கோடியாக உயர்ந்தது. 1985–86 ஆம் ஆண்டில் இந்த வகையில் டிசம்பர் 1985 வரை அரசுக்கு கிடைத்த வருவாய் ரூ. 85.68 கோடி. 1985–86-ல் மொத்தமாக ரூ. 108 கோடி வருமானம் எதிர் பார்க்கப்படுகிறது. இயங்காச் சொத்துக்களை மதிப்பிடுவதற் கான திருத்த வழிமுறை குறிப்புகள் 1 செப்டம்பர் 1981 முதல் செயல் முறைப்படுத்தப்பட்டதால் இந்த வருவாய் உயர்வு ஏற்பட்டது.

5. 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச்சட்டம் (மத்திய சட்டம் 2/1899) நிர்வாகம்.—முத்திரைத் தீர்வை வருவாயில் பெரும் பகுதி இயங்காச் சொத்துக்களை விற்பனை செய்தல், உரிமை மாற்றம் செய்தல், உரிமையை விட்டுக் கொடுத்தல், அறுதியாவணம், முடிவடையும் காலம் குறிப்பிடாத குத்தகை மற்றும் சுவாதீன உரிமையுடன் கூடிய அடமானம் ஆகிய கட்டாயமான பதிவு செய்யப்படவேண்டிய ஆவணங்களைப் பதிவு செய்யும்போது செலுத்தும் முத்திரைத் தீர்வையின் மூலம் கிடைக்கிறது. இது போன்ற பத்திரங்களில் சொத்துக்களின் அங்காடி மதிப்பை யொட்டி முத்திரைத் தீர்வை விதிக்கப்படத் தக்கதாகும். இப் பத்திரங்களை எழுதிக் கொடுப்பவர்கள் அப்பத்திரத்தில் சம்பந்தப் பட்ட சொத்தின் அங்காடி மதிப்பைக் குறிப்பிட வேண்டும்.

[1986 ஏப்ரல் 8

பத்திரத்தில் குறிப்பிடப்படும் இயங்காச் சொத்துக்களின் அங்காடி மதிப்பு சரியா என்பதை பத்திரப்பதிவு அதிகாரிகள் நன்கு அறியவும், பத்திரத்தில் குறிப்பிட்ட சொத்து குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளதா, முத்திரைத்தாள் தீர்வை செலுத்துவதினின்று எவரும் தந்திரமாகத் தப்பிக்க முயல்கின்றாரா என்பனவற்றை கண்டறிந்து உறுதி செய்யவும், பத்திரப் பதிவு அதிகாரிகளுக்கு வழிகாட்டிப் பதிவேடுகள் வழங்கப்பட்டுள்ளன. இப்பதிவேட்டில் நில அளவு, அந்நிலங்களின் மதிப்பு ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன. பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள இயங்காச் சொத்தின் மதிப்பு சரியாக குறிப்பிடப்படவில்லை என்று பதிவு அலுவலர் ஐயுறுவதற்கான காரணமிருப்பின் அச்சொத்தின் உண்மையான அங்காடி மதிப்பை நிர்ணயிப்பதற்காக இந்திய முத்திரைச் சட்டத்தின் பிரிவு 47-ஏ-யின் கீழ் ''மாவட்ட ஆட்சியரிடம்'' ஆவணத்தை அனுப்ப இச்சட்டம் அவருக்கு அதிகாரமளிக்கிறது. இச்சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட ''மாவட்ட ஆட்சியரின்'' அதிகாரங்கள் தற்போது சம்பந்தப்பட்ட வருவாய் கோட்ட அலுவலர்கள், மாவட்ட உதவி ஆட்சியர்கள், மாவட்ட சார் ஆட்சியர்கள் ஆகியோரிடமும், சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரிடமும் நிலைபெற்றுள்ளன. சில மாவட்டங்களில் இப்பணியை மேலும் துரிதப்படுத்தும்பொருட்டு 1899 ஆம் ஆண்டின் இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் 47-ஏ பிரிவின் கீழ் இப்பணியைக் கவனிக்க வேலூர், கடலூர், சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களை தலைமை இடங்களாகக் கொண்ட நான்கு மாவட்ட தனித்துணை ஆட்சியர்களை அரசு நியமித்துள்ளது. இத்தனித்துணை ஆட்சியர்கள் செங்கற்பட்டு—வட ஆற்காடு, தென் ஆற்காடு—திருச்சிராப்பள்ளி, சேலம்—தர்மபுரி, பெரியார் மற்றும் கோயம்புத்தூர் வருவாய் மாவட்டங்களின் மீது அதிகார வரம்பு உடையவர்கள். வழிகாட்டிப் பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களின் மீது உயர் மதிப்பு குறிப்பிட்டு ஆவணங்களில் பதிவு செய்யப்படும்போதெல்லாம் வழிகாட்டிப் பதிவேடுகளில் அந்த உயர் மதிப்பு குறிப்பிடப்படுகின்றது. கட்டிடம் அமைந்துள்ள பகுதியையும், கட்டிடத்தின் மதிப்பையும் சரி பார்ப்பதில் பத்திரப் பதிவு அலுவலர்களுக்கு உதவி செய்யவும், கட்டிட அமைப்பு மேற்கூரை முதலியவை தொடர்பாக கட்டிடத்தின் மதிப்பை நிர்ணயிக்கும் வகையில் பொதுப்பணித் துறையுடன் தொடர்பு கொள்ளவும் வகை செய்ய உதவி நிர்வாகப் பொறியாளர் பதவி ஒன்று பத்திரப் பதிவுத் துறைத்தலைவரின் கீழ் பதிவுத்துறைத் தலைவர் அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த உதவி நிர்வாகப் பொறியாளர் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட சொத்துக்களை நில ஆய்வு செய்து மேற்கொண்ட தீவிரமான பணியினால் 1984–85 நிதி ஆண்டில் பதிவுக்கு ஏற்கப்பட்டு இவருக்கு அனுப்பப்பட்ட சில ஆவணங்களில் குறித்த சொத்துக்களின் மதிப்பு ரூ. 37.35 லட்சம் குறைவாக மதிப்பிடப்பட்டிருந்ததைக் கண்டுபிடித்துள்ளார். 1985–86-ல் டிசம்பர் 1985 வரை அவர் கண்டறிந்த குறைவு



1986 ஏப்ரல் 8]

மதிப்பு ரூ. 47.37 இலட்சமாகும். சொத்துக்களின் மதிப்பில் ஏற்படக்கூடிய குறைவு மதிப்பினை கண்டறிய மாதிரி (Random) சோதனையையும் அவர் மேற்கொள்கிறார்.

6. உரிமை மாற்றுத் தீர்வை.—முத்திரைத் தீர்வையுடன் ஆவணங்களைப் பதிவு செய்வதற்காகச் செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வையைத் தவிர விற்பனை, பரிவர்த்தனை, தானம், உடைமை உரிமையுடன் கூடிய அடைமான ஆவணம், முடிவடையும் காலம் குறிக்காத குத்தகைகள் ஆகிய ஆவணங்களில் குறித்த சொத்து மதிப்பில் 5 சதவீதம் உரிமை மாற்றுத் தீர்வையாக வசூலிக்கும் பணியையும் பத்திரப் பதிவுத்துறை மேற்கொள்கிறது. இவ்வாறு வசூலிக்கப்படும் தொகையில் 3 சதவீதத் தொகையை பணிக்கட்டணமாக அரசு எடுத்துக் கொள்கிறது. எஞ்சியுள்ள 97 சதவீதத் தொகை சம்பந்தப்பட்ட ஊராட்சிகள், நகரியங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், மாநகராட்சிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இதர நகராட்சிகளுக்கு 90 சதவீதம் பகிர்ந்தளிக்கப்பட்டு மீதி 10 சதவீதத் தொகையை பணிக்கட்டணமாக அரசு எடுத்துக்கொள்கிறது.

7. வருவாய் :

1985–86 ஆம் ஆண்டில் 'முத்திரைத்தாள் நிர்வாகம்' என்பதன் கீழ் வரவு–செலவு பற்றிய விவரங்கள் :—

வரவுகள்.

| தொடர் எண்ணும் முத்திரைத்தாள்களின் வகைகளும். | 1984 ஏப்ரல் முதல் 1985 மார்ச் வரை. | 1985–86 ஆண்டு (1985 ஏப்ரல் முதல் டிசம்பர் 1985 வரை). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 நீதித்துறை சாரா முத்திரைத்தாள்கள். | 74,19,11,173.00 | 67,45,16,161.15 |
| 2 நீதித்துறை சார்ந்த முத்திரைத்தாள்கள். | 8,72,86,911.00 | 7,04,08,806.96 |
| 3 உண்டியல் முத்திரைத் தாள்கள். | 22,24,950.00 | 21,89,246.00 |
| 4 ஒட்டு முத்திரை வில்லைகள். | 2,89,01,260.00 | 2,56,82,346.95 |
| 5 பல்வகை வரவுகள். | 8,33,81,527.00 | 8,40,31,665.23 |
| பெருமொத்த வரவுகள் | 94,37,05,821.00 | 85,68,28,244.29 |

| தொடர் எண்ணும் முத்திரைத்தாள்களின் வகைகளும். (1) | 1984 ஏப்ரல் முதல் 1985 மார்ச் வரை. (2) | 1985–86 ஆண்டு (1985 ஏப்ரல் முதல் டிசம்பர் 1985 வரை). (3) |
|---|---|---|
| கழிப்பு : | | |
| (i) உள்ளாட்சி மன்றங்களுக்கு செலுத்தியவை உட்பட நீதித்துறை சாரா முத்திரைத்தாள்கள். | 24,82,96,167.00 | 23,97,35,633.05 |
| (ii) நீதித்துறை சார்ந்த முத்திரைத்தாள்கள். | 29,22,574.00 | 25,24,205.15 |
| திருப்பி செலுத்திய மொத்த தொகை. | 25,12,18,741.00 | 24,22,59,838.20 |

செலவுகள்.

| | | |
|---|---|---|
| 1 முத்திரைத்தாள் விற்பனையில் தள்ளுபடி. | 64,01,126.00 | 52,32,476.81 |
| 2 பணியாளர்கள் செலவு | 12,07,307.00 | 10,66,949.40 |
| 3 நாசிக்கிலுள்ள முத்திரைத்தாள் அச்சகத்திற்கு செலுத்தத்தக்க கட்டணம். | 39,21,285.00 | 15,09,291.00 |
| மொத்த செலவு .. | 1,15,29,718.00 | 78,08,717.21 |
| மொத்த வரவுகள் .. | 94,37,05,821.00 | 85,68,28,244.29 |
| மொத்த செலவுகள். திருப்பிக் கொடுக்கப்பட்ட தொகைகளும் உள்ளாட்சி மன்றங்களுக்கு கொடுக்கப்பட்ட தொகைகளும். | 26,27,48,459.00 | 25,00,68,555.41 |
| நிகர வரவுகள் ரூ. | 68,09,57,362.00 | 60,67.59,688.88 |





## இணைப்பு III.

*(61-ம்பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

**மானியக் கோரிக்கை எண் 6.**

**பத்திரப் பதிவுத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு.**

பத்திரப் பதிவுத்துறை, 1871 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகிறது. இத்துறை முக்கியமாக 1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டததை (மத்தியச் சட்டம் 16/1908) செயல்படுத்தி வருகிறது. பதிவு செய்யப்படும் இயங்கும் இயங்காச் சொத்துக்கள் தொடர்பான உடைமை உரிமைப் பத்நரங்களைப் பாதுகாக்கிறது. பத்திரப் பதிவுத்துறை வழங்கும் வில்லங்கச் சான்றிதழின் அடிப்படையிலேயே, வேளாண்மைக் கடன்கள் உட்பட ஏனைய கடன்களும் வழங்கப்படுகின்றன.

2. நிருவாக அமைப்பு முறை.—(i) இந்திய ஆட்சிப் பணித் தரத்தில் உள்ள ஒருவர், பத்திரப் பதிவுத்துறைத் தலைவராவார். பிறப்பு-இறப்பு, திருமணங்கள் ஆகியவை குறித்துப் பதிவு செய்யும் தலைமைப் பதிவாளராகவும் (Regis rar - General) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின் கீழ் சீட்டு நிதிகள் இயக்குநராகவும், மத்தியச் சீட்டு நிதிகள் சட்டத்தின் கீழ் (மத்தியச் சட்டம் 40/1982) சீட்டு நிதிகள் பதிவாளராகவும், 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 2/1899) கீழ் வருவாய்க் கட்டுப்பாட்டுத் தலைமை அதிகாரியாகவும் இவர் இருக்கிறார். அவருக்கு உதவியாகப் பின்வரும் அதிகாரிகள் பணியாற்றி வருகின்றனர் :—

பத்திரப் பதிவுத்துறைக் கூடுதல் தலைவர் ;

துணை பதிவுத்துறைத் தலைவர் பதவித் தரத்தில் சட்ட அதிகாரி ;

பதிவுத்துறைத் துணைத் தலைவர் பதவித் தரத்தில் சீட்டு நிதிகள் கூடுதல் பதிவாளர் ;

பத்திரப் பதிவு அலுவலகங்களின் ஆய்வாளர் பதவித் தரத்தில் நேர்முக உதவியாளர் (பொது) ;

நேர்முக உதவியாளர் (சீட்டு நிதிகள்) ;

கணக்கு அலுவலர் ;

கட்டிடங்களின் அங்காடி மதிப்பை நிர்ணயிப்பதற்காக பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்ட உதவி நிருவாகப் பொறியாளர்;

காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஒழுக்கக் கண்காணிப்புச் சிறப்புப் பிரிவு.

(ii) பத்திரப் பதிவுத்துறை, வேலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களைத் தலைமை இடங்களாகக் கொண்ட நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த மண்டலங்கள் ஒவ்வொன்றும் பதிவுத்துறை துணைத் தலைவர் ஒருவரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| பத்திரப் பதிவுத்துறைத் துணைத் தலைவர், வேலூர். | சென்னை, செங்கற்பட்டு, தென்னாற்காடு, வட ஆற்காடு மாவட்டங்கள். |
| பத்திரப் பதிவுத்துறைத் துணைத் தலைவர், திருச்சிராப்பள்ளி. | திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சை மாவட்டங்கள். |
| பத்திரப் பதிவுத்துறைத் துணைத் தலைவர், கோயம்புத்தூர். | கோவை, பெரியார், நீலகிரி, சேலம், தருமபுரி மாவட்டங்கள். |
| பத்திரப் பதிவுத்துறைத் துணைத் தலைவர், மதுரை. | மதுரை, அண்ணா, காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கம், இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள். |

பத்திரப் பதிவுத்துறைத் துணைத் தலைவர் அலுவலகம் ஒவ்வொன்றுடனும், பத்திரப் பதிவு அலுவலகங்களின் ஆய்வாளர் அலுவலகங்கள் இரண்டு இணைக்கப்பட்டுள்ளன. ஆய்வுப் பணிகள், விசாரணைகள், தங்கள் மண்டலங்களிலிருந்து வரும் முன்னேற்ற அறிக்கைகளை பரிசீலித்தல் ஆகிய பணிகள். பத்திரப் பதிவுத்துறைத் துணைத் தலைவரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. அவர்களின் அதிகார வரம்பிற்குள் உள்ள பத்திரப் பதிவு அலுவலகங்களின் ஆய்வாளர்கள், மாவட்டப் பதிவாளர்கள், சார் பதிவாளர்கள் ஆகியோர் மீது மேலாண்மை ஆதிக்கம் செலுத்தவும், பணிகளை மேற்பார்வையிடவும் அதிகாரமளிக்கப் பட்டுள்ளனர்.

(iii) மதுரை, திருநெல்வேலி, கடலூர், தஞ்சாவூர், சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம் ஆகிய வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் ஒருவர் வீதம் மொத்தம் எட்டு பத்திரப் பதிவு அலுவலகங்களின் ஆய்வாளர்கள் உள்ளனர். சார் பதிவாளர் அலுவலகங்களுக்குத் திடீரெனச் சென்று ஆய்வு செய்தல், முறைகேடு பற்றிய புகார்கள், குற்றச்சாட்டு மனுக்கள்



குறித்து விசாரணை செய்தல், சொத்துக்களின் மதிப்பைக் குறைவாகத் தெரிவித்து எழுதப்பட்டுள்ள பத்திரங்களைக் கண்டறிதல் முதலியவை இந்த ஆய்வாளர்களின் முக்கியப் பணிகளாகும். இந்த ஆய்வாளர்கள், 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவு செய்தல் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கங்கள், சீட்டு நிதி நிறுவனங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்கின்றனர். பொதுவாக, அவர்கள் அந்தந்த மண்டலங்களில் பத்திரப் பதிவுத் துறைத் துணைத் தலைவருக்கு உதவி புரிகின்றனர்.

(iv) மாநிலம், 46 பத்திரப் பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பத்திரப் பதிவு மாவட்டமும், ஒரு மாவட்டப் பதிவாளரின் நிருவாகத்தின் கீழ் இயங்கி வருகிறது. இவரே, நிறுவனங்கள், சங்கங்கள் மற்றும் திருமணங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்யும் பதிவாளராகவும், 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 40/1982) கீழ், சீட்டு நிதிகளைப் பதிவு செய்யும் இணைப் பதிவாளராகவும் உள்ளார். சார்பதிவாளர் அலுவலகங்களை ஆய்வு செய்தல், பத்திரங்களைப் பதிவு செய்வதற்கு மறுப்பு தெரிவிக்கப் படுவது தொடர்பாக வரும் மேல்முறையீடுகள், மனுக்கள் முதலியவை குறித்து விசாரித்தல். சார்பதிவாளர்கள் ஐயம் எழுப்பிய பத்திரங்களின் தன்மையைத் தீர்மானித்தல், புகார்கள் குறித்து விசாரணை செய்தல், சொத்துக்களின் மதிப்பைக் குறைவாகத் தெரிவித்து எழுதப்பட்டுள்ள பத்திரங்களைக் கண்டு பிடித்தல் ஆகியவை இவருடைய முக்கிய பணிகளாகும். மொத் தத்தில், இவர்கள், அந்தந்த பத்திரப் பதிவு மாவட்டத்தில் பதிவுச் சட்டங்களை நிறைவேற்றுவதற்கும், நிருவகிப்பதற்கும் பொறுப்பு வகிக்கின்றனர்.

(v) துறை அளவிலும், மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் நிலையிலும் தெரிவிக்கிற தணிக்கை மறுப்புகளுக்குப் பதிலளித்து, தீர்வு காண பத்திரப் பதிவுத்துறைத் தலைவர் அலுவலகத்தில் பத்திரப் பதிவு கூடுதல் தலைவரின் நிருவாகப் பொறுப்பில் தணிக்கைப் பிரிவு ஒன்று செயல்படுகிறது. மேலும், வருவாய் இழப்பைத் தடுக்கும் நோக்கில் பத்திரப் பதிவு அலுவலகங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்ய இத்துறையில் 24 உள் தணிக் கைப் பிரிவுகளும் உள்ளன. இத்துறையின் கணக்குகளை மாநிலக் கணக்குத் துறைத் தலைவரும் தணிக்கை செய்கிறார்.

(vi) மாவட்டப் பதிவாளர்கள் அலுவலகங்களில் உள்ள 46 பத்திரப் பதிவுக்கிளை அலுவலகங்கள் தவிர, 515 சார்பதிவாளர் அலுவலகங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. இச்சார் பதிவாளர் அலுவலகங்கள் ஒவ்வொன்றும் ஒரு சார்பதிவாளரால் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. பத்திரங்களைப் பதிவு செய்தல், நகல்களுக்குச் சான்றளித்தல் வில்லங்கச் சான்றிதழ்கள் வழங்குதல், இவர் தமிழ்நாடு ஆகியவை இவருடைய முக்கிய பணிகளாகும்.

சீட்டு நிதி சட்டத்தின் கீழ் சீட்டு நிறுவனங்கள், திருமணங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்யும் பதிவாளர் ஆவார். பதிவு செய்யும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு ஒவ்வோராண்டும் சார்பதிவு அலுவலகங்கள் சில தொடங்கப்படுகின்றன. நகர்ப்புறங்களில் பதிவு செய்யவரும் ஆவணங்கள் சிக்கலானதாக இருப்பதாலும், ஏராளமான ஆவணங்கள் பதிவு செயயப்படுவதாலும் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாநகரங்களில் உள்ள சார்பதிவாளர் பதவிகள் மாவட்ட பதிவாளர் பதவிகளாக நிலை உயர்த்தப் பட்டுள்ளன. சீட்டு நிதி நிறுவனங்களையும், பதிவு பெற்ற சங்கங்களையும் ஆய்வு செய்ய சிறப்பு சார்பதிவாளர் அலுவலகங்கள் தொடங்கப்பட்டுள்ளன. 1986–87 ஆம் ஆண்டில் 4 சார்பதிவாளர் அலுவலகங்களைப் புதிதாகத் தொடங்க கருதப்பட்டுள்ளது.

(vii) ஆவணங்களில் குறிப்பிடப்படும் கட்டிடங்களின் மதிப்பைக் குறைத்துப் போட்டு, அதனால் முத்திரைத்தாள் தீர்வை கட்டாமல் ஏய்த்துவிடுவதை தடுக்க வேண்டி, கட்டிடங்களின் பெறுமானத்தை மதிப்பிடுவதில் பத்திரப் பதிவுத்துறை தலைவருக்கு உதவியாகப் பொதுப் பணித்துறையை சேர்ந்த உதவி நிருவாகப் பொறியாளர் ஒருவர் இருக்கிறார். பத்திரப் பதிவுத்துறையில் அலுவலர்கள், பணியாளர் மீதான ஊழல், முறைக்கேடுகள் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரிக்க, பத்திரப் பதிவுத்துறையில் காவல்துறை துணை கண்காணிப்பாளர் ஒழுக்கக் கண்காணிப்பு அதிகாரியாகச் செயல்பட்டு வருகிறார், பத்திரப் பதிவுத்துறைத் தலைவருக்கு இவர் கட்டுப்பட்டவராவார்.

3. பல்வேறு சட்டங்களை நிருவகித்தல்.—(அ) 1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தை செயல்படுத்துவதுடன், பின்வரும் சட்டங்களில் நிருவாகமும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவையாவன :—

(a) 1932 ஆம் ஆண்டு இந்திய கூட்டுப் பங்காண்மைச் சட்டம்.

(b) தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டம்.

(c) 1886 ஆம் ஆண்டு பிறப்பு-இறப்பு, திருமணங்கள் சட்டம்.

(d) (i) 1936 ஆம் ஆண்டு பார்சி திருமணங்கள் விவாக ரத்துச் சட்டம்.

(ii) 1872 ஆம் ஆண்டு இந்தியக் கிறிஸ்துவத் திருமணங்கள் சட்டம்.

(iii) 1969 ஆம் ஆண்டு பிறப்ப. இறப்பச் சட்டம்.



(iv) 1954 ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டம்.

(v) 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம்.

(e) 1961 ஆம் ஆண்டு வரதட்சிணைத் தடுப்புச் சட்டம்.

(f) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம்.

(g) 1972 ஆம் ஆண்டு வணிகம் அல்லாத நிறுவனங்கள் சட்டம்.

(h) 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டம்.

(i) 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம்.

4. சீட்டு நிதிகள் நிருவாகம்.

(1) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம்.—பத்திரப் பதிவுத்துறைத் தலைவர், தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் சீட்டு நிதி நிருவன இயக்குநராக அலுவல் முறையில் செயல்படுகிறார். 31—12—1985 ஆம் நாளன்றுள்ளவாறு தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் சீட்டு நிதி நிறுவனங்களின் எண்ணிக்கை 7,460 ஆகும். 31—12—1985 ஆம் நாளன்றுள்ளவாறு சீட்டு நிதி நிருவனப் பதிவாளர்களிடம் 15.17 கோடி ரூபாய் பெறுமானமுள்ள பிணைய வைப்புத் தொகை இருந்தது.

அரசு அனுமதியின்றி 443 சீட்டு நிதி நிறுவனங்கள் 1984—85ல் செயல்பட்டு வந்தனவாக கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றுள் 406 நிறுவனங்களுக்கு தண்டனையும் அபராதமும், விதிக்கப்பட்டது. ஏனைய 4?8 குற்றங்களில் 426 பேருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. மொத்தம் வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை ரூ. 23,550 ஆகும். இச்சட்டம் 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 40/1982) மூலம் ரத்து செய்யப்பட்ட போதிலும், ஏற்கெனவே செயல்பட்டுவரும் சீட்டு நிறுவனங்களுக்காக இச்சட்டம் செயலில் இருந்து வருகிறது.

(ii) சீட்டு நிதிகள் சட்டம் (மத்தியச் சட்டம் 40/82).—சீட்டு நிதியில் சேருபவர்களின் நலனை பாதுகாக்கும் பொருட்டு, சட்டப்படிக்கான விதித்துறைகளுடன் கூடிய மத்திய சீட்டு நிதிகள் சட்டம் (40/1982) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்திற்குப் பதிலாக 13—4—1984 ஆம் நாளிலிருந்து தமிழ்நாட்டில் கொண்டு வரப்பட்டது. 13—4—1984 ஆம் நாளிலிருந்து 31–1–1985 ஆம் நாள் வரையில் மத்திய சீட்டு நிதிகள் சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்டுள்ள பிணைய வைப்புத் தொகை

மதிப்பு ரூ. 2,00,02,300. 1984—85 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட முன் ஒப்புதல்களின் எண்ணிக்கை 2,089 ஆகும். 31—3—1985 நாள் வரையில் வசூலிக்கப்பட்ட பிணைய வைப்புத் தொகைகளின் மதிப்பு விவரம் வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| குறித்த கால வைப்புத் தொகை | .. | ரூ. | 4,08,80,213.50 |
| அரசு பிணையத் தொகை | .. | ரூ. | 49,500.00 |
| அசையாச் சொத்துக்கள் | .. | ரூ. | 16,60,000.00 |

தமிழ்நாடு சீட்டு நிதி நிறுவனம் :

தமிழ்நாடு சீட்டு நிதி நிறுவனம் 1956 ஆம் ஆண்டு இந்திய கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு ரூ. 1.5 இலட்சம் தொகையுடன் 8 சீட்டு தொகுதிகளைக் கொண்டு, 1—4—1984 ஆம் நாள் முதல் தனது பணியைத் தொடங்கியது. இந்நிறுவனம் தற்போது 130 சீட்டு தொகுதிகளை (சீட்டு தொகை ரூ. 9.3 இலட்சம்) நடத்தி வருகிறது. இதில் 68 சீட்டுத் தொகுதிகள் (சீட்டு தொகை ரூ. 4.30 இலட்சம்) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஏனையவை 1982 ஆம் ஆண்டு மத்திய சீட்டு நிதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்நிறுவனத்தின் வருமானம் திங்களொன்றுக்கு ரூ. 50,000 ஆகும். மத்திய தர வகுப்பினர் கடுமையாக உழைத்து சம்பாதிக்கும் தொகைகளை உறுதியான அமைப்பில் முதலீடு செய்ய இச்சீட்டு நிதி நிறுவனம் வகை செய்கின்றது. தனியார்களின் முறைகேடுகளுக்கு பொது மக்கள் பலியாவதைத் தடுக்கும் நோக்கத்துடன், தமிழ்நாடு அரசு, இந்த சீட்டு நிதி நிறுவனத்தை அமைத்துள்ளது. இச்சீட்டு நிதி நிறுவனத்தின் சிறப்புக் கூறுகளாவன :—

(1) பிணையத்தை ஏற்றுக்கொண்ட மறுநாள் இந்த சீட்டு நிதி நிறுவனம் பரிசுத் தொகையை வழங்குகிறது.

(2) இந்நிறுவனம் அதன் சந்தாதாரர்களிடம் நுழைவுக் கட்டணம் எதனையும் வசூலிப்பது கிடையாது.

(3) சந்தாத் தொகையினைச் செலுத்த தவறியவர்களுக்கு அவர்கள் செலுத்திய தொகையினைத் திருப்பிக் கொடுக்கும் போது, அவர்கள் செலுத்திய தொகையிலிருந்து தொகை எதுவும் கழிப்பதில்லை.

(4) 31—12—1985 ஆம் நாள் வரையில், 130 சீட்டுத் தொகுதிகளில் அரசுப் பணியாளர்கள், நடுத்தர மக்கள் ஆகியோரில் 3,600 பேர் சந்தாதாரர்களாக உள்ளனர். பல்வேறு தரப்பட்ட மக்களின் நலனைக் கருதி இச்சீட்டு நிதி நிறுவனம்



20 திங்கள், 30 திங்கள், 40 திங்கள் கால அளவில் திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 முதல் ரூ. 2,500 வரை தொகை செலுத்தும் (சீட்டுத் தொகை ரூ. 1000-லிருந்து 5,000 ரூபாய் வரை வேறு படுகிறது.) சீட்டுத் தொகுதிகள் உள்ளன. தனியார் சீட்டு நிறுவனங்களில் சந்தாதாரர்களாக உள்ளவர்களுக்கு அவர்கள் முதலீடு செய்துள்ள தொகைகளுக்கு பாதுகாப்பு இல்லை. ஆனால் இச்சீட்டு நிதி நிறுவனத்தில் முதலீடு செய்துள்ள சந்தா தாரர்களின் முதலீட்டுத் தொகை திரும்பப் பெறுவதற்காக உறுதியளிக்கப்படுகிறது.

(IV) ஆவணங்கள் எழுதுவோர் உரிம விதிகள்.

இவ்விதிகள் 14—4—1982 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்துள்ளன. 31—12—1985 ஆம் நாள் வரையில், இவ்விதி களின் கீழ் உரிமம் வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 11,212 ஆகும். விவரம் வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| மாநில உரிமங்களின் எண்ணிக்கை | .. | .. | 1,503' |
| மாவட்ட உரிமங்களின் எண்ணிக்கை | .. | .. | 6,288 |
| துணை மாவட்ட உரிமங்களின் எண்ணிக்கை | | .. | 3,421 |
| | | | 11,212 |

தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டம்.

(தமிழ்நாடு சட்டம் 27/1975).

கல்வி, சமூக, மத, கலாச்சார, பொழுதுபோக்கு, விளை யாட்டு, அறிவியல், ஏனைய நோக்கங்களுக்காக அமைக்கப்படும் சங்கங்களை பதிவு செய்ய தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டம் வழிவகை செய்கின்றது. பத்திரப் பதிவுத்துறைத் தலைவரும், மாவட்டப் பத்திரப் பதிவாளரும் தங்களது ஆட்சி வரம்பெல்லைக்கு உட்பட்ட பகுதியில் இச்சட்டத்தை நிருவகிக் கின்றனர். ஆண்டு வருமானம்-செலவு 10,000 ரூபாய்க்குமேல் உள்ள சங்கங்கள் இச்சட்டத்தின் கீழ் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும். இச்சங்க உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்றாண்டுக்கு மேற்படக்கூடாது. ஒவ்வொரு சங்கமும் அதன் ஆண்டு வருமானம்-செலவு 10,000 ரூபாய்க்கு மேல் இருப்பின், அதன் கணக்குகளை பட்டயக் கணக்கர்களைக் கொண்டு தணிக்கை செய்யவேண்டும். அதன் ஆண்டு வரவு-செலவு 2,500 ரூபாய்க்கு மேலும் 10,000 ரூபாய்க்கு குறைவாகவும்

இருப்பின், அச்சங்கத்தின் பட்டதாரி உறுப்பினர் ஒருவர் இக் கணக்குகளைத் தணிக்கை செய்யலாம். அதன் ஆண்டு வரவு செலவு 2,500 ரூபாய்க்கும் குறைவாக இருப்பின் 10 ஆம் வகுப்பு அல்லது அதற்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட தேர்வில் தேர்ச்சிபெற்ற சங்க உறுப்பினர் ஒருவரால் அதன் கணக்குகள் தணிக்கை செய்யப்படும். இந்த விதுத்துறைகள் இச்சங்க உறுப் பினர்களின் நலன்களைப் பாதுகாப்பதுடன், இச்சங்கங்கள் மேற் கொள்ளும் சமூகப்பணிகளுக்கும் பாதுகாப்பு அளிக்கின்றன. கிட்டத்தட்ட அனைத்து சங்கங்களுமே, அலுவலக அல்லது சொந்தப் பணிகளுடன் சங்கப் பணிகளையும் கவனிக்கும் தனிப் பட்டவர்களால் நிருவகிக்கப்படுவதால் சங்கத்தின் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளையும், ஐந்தொகைக் கணக்கினையும், ஏனைய ஆவணங்களையும் அதன் நிதியாண்டு முடிவடைந்த ஆறு திங்கள் கால அளவிற்குள் ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டத்தில் முன்வைக்கவும் ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டம் நடந்து இரண்டு திங்கள் கால அளவிற்குள் சங்கங்கள் அந்த ஆவணங்களை பதிவாளர் முன் வைக்கவும் அரசு அனுமதித்துள்ளது.

6. வருவாய்.

ஆவணங்களைப் பதிவு செய்வதற்காக செலுத்தப்படும் முத்திரைத்தாள் தீர்வை இத்துறையின் முக்கிய வருவாய் ஆகும். இவை தவிர, 1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தின்கீழ் கட்டண வீத அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வீதத்தில் செலுத்தப்படும் பத்திரப் பதிவுக் கட்டணம் பத்திரப் பதிவுத் துறை ஆற்றும் பணிக்கான பணிக் கட்டணமாக வசூலிக்கப்படு கிறது. மேலும் சீட்டு நிறுவனங்கள், சங்கங்கள், நிறுவனங்கள், திருமணங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்வதற்காகவும், இத்தகைய ஆவணங்களைத் தேடுதல், நகல் எடுத்தல், வில்லங்கச் சான்றிதழ் வழங்குதல் போன்ற பணிக்கட்டணங்கள் மூலமும் சிறிது வருவாய் கிடைக்கிறது. 1—4—1985 முதல் 31—12—1985 ஆம் நாள் வரையில் கட்டணம் விதித்து வாங்குவதன் மூலம் கிடைத்த வருவாய் 8.87 கோடி ரூபாயாகும்.

ஏழைகளுக்கும், அரசுதவி தேவைப்பட்டோருக்கும் உதவும் வகையில் (i) ''உழுபவர்களுக்கே நிலம் சொந்தம்'' என்னும் அமைப்பு மேற்கொண்ட முயற்சியின் பல்னாக, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நிலமற்ற 263 ஏழை விவசாயிகளுக்கு நிலம் வாங்குவதற்கு முத்திரைத்தாள் தீர்வை, பத்திரப் பதிவுக் கட்டணத்திலிருந்து அரசு விலக்கு அளித்துள்ளது. (ii) தமிழ் நாட்டிலுள்ள ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர்கள் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்திடம் வீடு அடமானம் வைக்கும் பத்திரச் செலவுக்கும் விலக்கு அளித்துள்ளது. (iii) சென்னை ஏற்றுமதி செய்முறை மண்டலத்தில், தர வடி வமைப்பு தொழிற் பிரிவுகளை குத்தகைக்கு விடுதல் மனைகளைக்





குத்தகைக்கு விடுதல் ஆகியவற்றுக்கான பத்திரங்கள் ஆகியவற் றிற்கும் முத்திரைத் தீர்வை விதிப்பில் விலக்கு அளிக்கப்பட் டுள்ளது. இவை தவிர அரசின் சார்பில் அல்லது உள்ளாட்சி மன்றத்தின் சார்பில் எழுதி வைக்கப்படும் நிலங்கள் அல்லது கட்டிடங்களின் மதிப்பு பெயரளவு நூறு ரூபாய் எனக்கொண்டு, எழுதப்படும் தானம் அல்லது அறுதி ஆவண பத்திரங்கள் மீது பெயரளவிற்கு முத்திரைத்தாள் தீர்வை செலுத்தவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. வேளாண்மை அல்லது அதனுடன் தொடர்புடைய எந்த ஒரு நடவடிக்கைக்காகவும் பத்தாயிரம் ரூபாய் வரையிலான கடன் தொகை பெறுவதற்காக வணிக வங்கிகள் சார்பில் எழுதிக் கொடுக்கப்படும் அடைமானப் பத்திரங்களுக்குச் செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வை, பத்திரப் பதிவுக் கட்டணத்தையும் அரசு தள்ளுபடி செய்துள்ளது.

## இணைப்பு IV.

*(61-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

**1986–87 ஆம் ஆண்டிற்கான பால்பண்ணை வளர்ச்சித் துறை மற்றும் பால் வழங்கும் திட்டங்கள் பற்றிய கொள்கை விளக்கம்.**

### கோரிக்கை எண் 10.

பால் பண்ணை வளர்ச்சித் துறை 1958 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. 1963 ஆம் ஆண்டு முதன்முதலில் நவீன பால் பதப்படுத்தும் தொழிற்சாலை மாதவரத்தில் தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1967 ஆம் ஆண்டில் மதுரை பால் பண்ணை நிறுவப்பட்டது. பால் பண்ணை வளர்ச்சித் துறையின் வணிக சம்பந்தமான பால் கொள்முதல், பக்குவப்படுத்துதல் மற்றும் விநியோகம் செய்தல் போன்ற நடவடிக்கைகளை தமிழ்நாடு பால் வள நிறுவனத்திடம் 1972 ஆம் ஆண்டில் ஒப்படைக்கப் பட்டன.

1978-ல் அரசு எடுத்த கொள்கை முடிவின்படி கிராம அளவில் டால் உற்பத்தியாளர்கள் சங்கமும், மாவட்ட அளவில் ஒருங் கிணைந்த பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியமும், மாநில அளவில் அவ்வொன்றியங்களின் உறுப்பினர்களை அங்கத்தினர்களாகக் கொண்ட இணையமும் ஆகிய மூன்று அடுக்குமுறை ஏற்படுத்தப் பட்டு பாலுற்பத்தி, பால் பெருக்கம், பால் கொள்முதல், பால் பதப்படுத்துதல் மற்றும் பாலையும் பால் சம்பந்தப்பட்ட பொருட் களையும் விற்பனை செய்தல் ஆகிய அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைக்கும் பொறுப்பு அவைகளிடம் அளிக்கப்பட்டது. இத்திட்டத்தில் பால் பெருக்குவதினால் பெரும்பான்மையான சிறு மற்றும் குறுநில விவசாயிகள் மேலும் விவசாயத் தொழி லாளர்களின் வருமானத்தில் ஏற்றம் ஏற்பட உறுதி செய்கிறது. 198[illegible] ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் தேதியிலிருந்து தமிழ்நாடு பால்வள நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட பால் பண்ணை வளர்ச்சித் துறையின் வணிக சம்பந்தமான அனைத்துப் பணிகளும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பால் பெருக்குத் திட்டம் உட்பட அனைத்து மேம்பாட்டுத் திட்டங்களையும் இந்த இணையம் செயல்படுத்துகிறது.

### பால் பண்ணை வளர்ச்சித் துறை.

பால் பண்ணை வளர்ச்சித் துறை பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல், பதிவு செய்தல் அவைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் ஊரக பால் கூட்டுறவுச் சங்கங் களை கட்டுப்படுத்தும் பணிகளை கவனித்து வருகிறது.



**பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதில் வளர்ச்சி :—**

(அ) தமிழ்நாட்டில் 5,426 ஆரம்ப பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டு செயலாற்றி வருகின்றன. இவற்றில் 1985–86 ஆம் ஆண்டில் புதிதாக அமைக்கப்பட்ட 296 சங்கங்களும் இதில் அடங்கும். 1986–87 ஆம் ஆண்டில் புதிதாக 400 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) 1985-86 ஆம் ஆண்டில், 26 செயல் திறமுடைய மரபு
வழியமைந்த பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள், பால்
உற்பத்தியாளர்கள் கூட்டுறச் சங்கங்களாக மாற்றியமைக்கப்பட்
டுள்ளன. 1986—87 ஆம் ஆண்டில் 30 செயல் திறமுடைய
கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்களை பால் உற்பத்தியாளர்கள்
கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றியமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(இ) 1985–86 ஆம் ஆண்டில் 30 செயல்படாத பால்
வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் புதுப்பிக்கப்பட்டு பால் உற்பத்தி
யாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன.
1986–87 ஆம் ஆண்டில் 70 செயல்படாத பால் வழங்கும்
கூட்டுறவுச் சங்கங்கள் புதுப்பிக்கப்பட்டு பால் உற்பத்தியாளர்கள்
கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றியமைப்பதற்கு உத்தேசிக்கப்
பட்டுள்ளது.

**பால் கூட்டுறவுச் சங்கங்களில் சிறப்பு அம்சங்களும் புள்ளி விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.**

(அ) ஆரம்ப சங்கங்கள் :

| | | |
|---|---|---|
| (1) | தமிழகத்திலுள்ள செயல்படும் ஆரம்ப பால் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை. | 5,542 |
| | ஆரம்ப பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் .. .. .. .. | 5,426 |
| | ஆரம்ப பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் | 72 |
| | கூட்டுறவு பால் பண்ணைகள் — — | 2 |
| | பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் — | 42 |
| | மொத்தம் — | 5,542 |

(இலட்சத்தில்.)

(2) பால் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை .. .. .. 14.82

(3) பால் கூட்டுறவுச் சங்கங்களில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் .. ரூ. 249.57

(ஆ) கூட்டுறவு பால் ஒன்றியங்கள் :

(1) மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களின் எண்ணிக்கை .. .. 15

(2) பால் வழங்கும் ஒன்றியங்களின் எண்ணிக்கை. 7

(3) பால் கூட்டுறவு ஒன்றியங்களிலுள்ள உறுப்பினர்கள் எண்ணிக்கை .. .. .. 18,366

(4) ஒன்றியங்களில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் .. .. .. .. ரூ. 260.79 (இலட்சம்)

(இ) பால் கொள்முதலும் விற்பனையும் :

(லிட்டர் இலட்சத்தில்)

(1) நாளொன்றுக்கு உற்பத்தியாளர்கள் சங்கங்களினால் கொள்முதல் செய்யப்படும் பாலின் சராசரி அளவு .. .. .. — 10.10

(2) நாளொன்றுக்கு ஒன்றியங்களினால் கொள்முதல் செய்யப்படும் பாலின் சராசரி அளவு. 7.30

(3) தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தினால் தினசரி விற்கப்படும் சராசரி பாலின் அளவு (டிசம்பர் 1985ல்) .. 4.50

பால் பண்ணை வளர்ச்சித் துறையால் செயல்படுத்தப்படும் திட்ட வேலைகள்.

(1) பால் சேகரிப்புக் குழு:—பால் பெருக்குத் திட்டத்தில் சேராத காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கம், இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் பால் உற்பத்தி திறனை பெருக்குவதற்கு "பால் சேகரிப்புக் குழுக்கள்" அமைக்கப்பட்டன. திருச்சி, தஞ்சை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் பால் பெருக்குத் திட்டம் II-ன் ழ் கொண்டுவரப்பட்டது. எனவே, இம்மாவட்டங்களில் செயல்



பட்டு வரும் பால் சேகரிப்புக் குழுக்கள் மற்றும் நடமாடும் கால்நடை மருந்தகங்கள் அரசுக்கு எவ்வித கூடுதல் பண செலவின்றி பால் பெருக்குத் திட்டத்தில் சேராத பகுதிகளுக்கு மாற்றப்படும்.

தமிழ்நாட்டில் பால் பண்ணை வளர்ச்சிக்காக ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 5 கோடி நிதி ஒதுக்கீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட நிதி ஒதுக்கீடு பால் பெருக்குத் திட்டம் II-ன் கீழ் சேராத மாவட்டங்களின் உள்ளமைப்பு (Infrastructure) வசதிகள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களுக்கு பங்கு மூலதன உதவியையும் உள்ளிட்டதாகும். கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலுள்ள பால் பண்ணையின் செயலாற்றலை வலிமைப்படுத்த ரூ. 50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(2) பால் பண்ணை நிலையங்கள் நிறுவுதல்:— திருநெல்வேலியில் ரூ. 160 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர் பாலை கையாளும் திறனுடைய பால் பதப்படுத்தும் ஒரு தொழிற்சாலை அமைக்க அரசு இசைவு அளித்துள்ளது. இது சம்பந்தமான முழுப் பணிகளும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்திடம் (Turn Key) முறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட பணிகள் முடிவடைந்து தொழிற்சாலை விரைவில் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(3) குளிரூட்டும் நிலையங்களை நிறுவுதல் : (அ) புதுக்கோட்டை குளிரூட்டும் நிலையம் :—புதுக்கோட்டையில் ரூ. 18.26 இலட்சம் செலவில் நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டர் பாலைக் கையாளும் திறனுடைய ஒரு குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு அனுமதி அளித்துள்ளது. கட்டிடம் கட்டுதல் மற்றும் இயந்திரங்களை நிறுவுதல் ஆகிய பணிகள் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்திடம் (Turn Key) முறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதற்கான வேலைப்பாடுகள் முடிவடைந்தன. இந்நிலையம் விரைவில் செயல்படத் துவங்கும்.

(ஆ) பட்டுக்கோட்டை குளிரூட்டும் நிலையம் :—இதேபோல் 1983–84 ஆம் ஆண்டில் பட்டுக்கோட்டையில் நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டர்கள் (20,000 லிட்டர் வரை விரிவாக்கும் திட்டம்) பால் கையாளும் திறனுடைய ஒரு குளிரூட்டும் நிலையம் ரூ. 19 இலட்சம் செலவில் நிறுவ அரசு ஆணை பிறப்பித்துள்ளது. கட்டிடம் கட்டுதல் மற்றும் இயந்திரங்களை நிறுவுதல் போன்ற பணிகள் (Turn Key) முறையில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதற்கான பணிகள் முன்னேற்றமடைந்து வருகின்றன.

(3) வள்ளியூர் குளிரூட்டும் நிலையம்:—நாள் ஒன்றுக்கு 20,000 லிட்டர் பால் கையாளும் திறனுடைய ஒரு குளிரூட்டும் நிலையத்தினை ரூ. 28 இலட்சம் செலவில் திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் முன்னேற்றமடைந்து வருகின்றன.

(4) கூட்டுறவுச் சங்கங்களுக்கு மானியம்:—1985–86 ஆம் ஆண்டில் 200 பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்களை (செயல்படும் மற்றும் செயல்படாத) பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றியமைக்க அரசு ரூ. 3 இலட்சம் அனுமதியளித்துள்ளது. கூட்டுறவுச் சங்கங்களுக்கான பால் பரிசோதிக்கும் கருவிகள், இரசாயனப் பொருட்கள், கணக்குப் பதிவேடுகள் முதலியவைகளை சங்கங்களுக்கு இலவசமாக வழங்க, ஒவ்வொரு சங்கத்திற்கும் ரூ. 1,500 மானியமாக வழங்கப்பட உள்ளது.

(5) கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் உதவி:—ஊரக பால்பண்ணை விரிவாக்கப் பணித் திட்டத்தின் கீழ் பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பால் குவளைகள், பால் கருவிகள், குளிர்பதனங்கள் மற்றும் போக்குவரத்து வாகனங்கள் வாங்கவும், ஆய்வுக் கூடம் மற்றும் கிடங்குகள் கட்டவும் கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது. 1984–85-ல் இதுபோன்ற கடனுதவியாக ரூ. 4.80 இலட்சம், 18 பால் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 1985–86 ஆம் ஆண்டிற்கு ரூ. 5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1986—87 ஆம் ஆண்டிற்கு இதுபோன்று கடனுதவி அளிக்க ரூ. 10 இலட்சம் அனுமதியளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(6) சென்னை நகரில் உள்ள பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பங்கு மூலதன உதவி மற்றும் நிர்வாகப் பணியாளர் உதவி :—பால் வழங்கும் அமைப்பில், நுகர்வோர்கள் பங்கேற்கவேண்டும் என்ற எண்ணத்துடன் பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கப்பட்டன. சென்னை நகரில் அம்மாதிரியான 31 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செயற்பட்டு வருகின்றன.

துவக்க கட்டத்தில் சங்கங்கள் நிதி இடர்பாட்டிலிருந்து மீளுவதற்காக சங்கங்கள் துவங்கிய நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு சங்கம் ஒன்றிற்கு மாதம் ரூ. 500 வீதம் நிர்வாகப் பணியாளர் அமர்த்த உதவியாக வழங்கப்படுகிறது. இச்சங்கங்கள் உறுப்பினர்களிடமிருந்து பங்கு மூலதனமாக வசூல் செய்த தொகை ரூபாய் ஒன்றுக்கு, அரசின் பங்கு மூலதன உதவியாக ரூ. 2 வீதம் அதிகப் பட்சத் தொகை ரூ. 5,000 வரையில் ஒவ்வொரு சங்கத்திற்கும் வழங்கப்படுகிறது.

1986-87 ஆம் ஆண்டில் நிர்வாகப் பணியாளர் உதவிக்காக ரூ. 30,000 மற்றும் பங்கு மூலதன உதவிக்காக ரூ. 25,000 வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



பால் பண்ணை வளர்ச்சித் துறையினால் செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டங்கள்:—(1) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்—மலைப்பகுதிகளில் பால் பண்ணை தொழில் வளம் பெருக அரசு கடன் உதவி மற்றும் பங்கு மூலதன உதவி முதலியன வழங்கி வருகிறது. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர் பால் கொள்ளளவு கொண்ட ஒரு நவீன பாலாடைக்கட்டி தொழிற்சாலை (Cheese-cum-Dairy Complex) உதகமண்டலத்தில் ரூ. 300 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட தொழிற்சாலை 10—9—1985 அன்று மாண்புமிகு பாரதக் குடியரசு தலைவரால் துவக்கி வைக்கப்பட்டது. நீலகிரி வட்டத்தில் புல் வளர்ப்புப் பண்ணையினை விரிவுபடுத்த ரூ. 8.10 இலட்சமும் பால் கொள்முதல் மற்றும் பால் பண்ணை நிர்வாக முன்னேற்றத்திற்காகவும் அரசு ரூ. 11 இலட்சம் நிதி வழங்கியுள்ளது.

(2) வறட்சியால் பாதிக்கப்படும் பகுதிகள் திட்டம்:—இத்திட்டத்தின் கீழ் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள தேன்கனிக் கோட்டையில் ரூ. 23.20 இலட்சம் மதிப்பீட்டு செலவில் நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டர் பாலைக் கையாளும் திறனுடைய ஒரு குளிரூட்டும் நிலையம் அமைக்க இசைவளித்து 1985—86 ஆம் ஆண்டில் ரூ. 6.21 இலட்சம் நிதியினை விடுத்துள்ளது.

(3) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.—தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறையில் நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டர் பால் கையாளும் திறனுடைய ஒரு குளிரூட்டும் நிலையம் ரூ. 19 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் நிறுவ அரசு இசைவளித்துள்ளது. இந்நிலையத்தை கட்டும்பணி முன்னேற்ற நிலையில் உள்ளது.

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் சிவகெங்கையில் நாளொன்றுக்கு 10,000 லிட்டர் பால் கையாளும் திறனுடைய ஒரு குளிரூட்டும் மையம் ரூ. 18 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் நிறுவுவதற்கு தேவையான கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அக்கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

(4) ஆதி திராவிடர் நலத்திட்ட மற்றும் சிறப்பு மத்திய உதவி:—இத்திட்டத்தின் கீழ் பால் கூட்டுறவுகளில் ஆதி திராவிட அங்கத்தினர்கள், கறவை மாடுகள் வாங்க 1985—86 ஆம் ஆண்டின் ஆதி திராவிடர் நல வரவு செலவு திட்டத்தின் கீழ் மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு அரசு ரூ. 30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மேற்கண்ட தொகை 3,600 ஆதி திராவிடர் அங்கத்தினர்களுக்கு கறவை மாடுகளின் விலையில் 33 1/3 சதவீதம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

சிறப்பு மத்திய உதவியின் கீழ், 1985—86 ஆம் ஆண்டில் 9,400 ஆதி திராவிடர் அங்கத்தினர்கள் கறவை மாடுகள் வாங்கிப் பயன்பெறுவதனை முன்னிட்டு அரசு கறவை மாடு ஒன்றின் விலையில் 33⅓ சதவீதம் மானியமாக ரூ. 78.30 இலட்சம் ஒப்புதல் அளித்து இருக்கிறது.

மேலும், பால் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள கிறித்துவர்களாக மாறிய 120 ஆதி திராவிடர் அங்கத்தினர்களுக்கு ரூ. 1 இலட்சம் மானியமாக வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத் தொகை மார்ச்சு 1986-க்குள் பயன்படுத்தப்படும்.

**(5) பால் பண்ணை வளர்ச்சித் துறை பணியாளர்களுக்கு வழங்கப்படும் பயிற்சித் திட்டம்:** 1984-85 ஆம் ஆண்டில் இரண்டாவது பகுதி திட்டத்தின் கீழ் (Part II Scheme) பால் பண்ணை வளர்ச்சித் துறையில் பணியாற்றும் நிர்வாகப் பணியாளர்களுக்கு " பால் கூட்டுறவுகளின் மேலாண்மை நடப்பு " பற்றிய பயிற்சி அளிப்பதற்கு ரூ. 1 இலட்சம் அரசு நிதி ஒதுக்கீடு செய்தது. 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 1.30 இலட்சம் கூடுதல் நிதி அரசினால் ஒதுக்கப்பட்டு இத்துறையைச் சார்ந்த 75 அமைச்சு பணியாளர்கள் இதுவரை பயிற்சி பெற்றுவர மூன்று அணியில் அனுப்பப்பட்டனர். மூன்றாவது அணியில் பயிற்சி பெற அனுப்பி வைக்கப்பட்டவர்கள் 1986 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் வாரத்தில் பயிற்சியினை முடித்தனர்.

தற்போதுள்ள 19 மாவட்டங்களில், 14 மாவட்டங்கள் (சென்னை உட்பட) பால் பெருக்குத் திட்டம் II-ன் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள ஐந்து மாவட்டங்களான காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கம், ராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகியவற்றில் தற்போது செயல்படுத்த பெருந்திட்டங்கள் ஏதுமில்லை. எனவே அரசு மாநில நிதி மற்றும் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவன நிதி உதவியுடன் பால் பெருக்குத் திட்டம் மாதிரி மேற்கண்ட ஐந்து மாவட்டங்களில் செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத் திட்டத்தின் முதல்படியாக திருநெல்வேலி மாவட்டத்தில் விரிவான பால்வளத் திட்டம் ரூ. 5.54 கோடி மதிப்பீட்டுச் செலவில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அந்நிதியுதவி தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் மற்றும் மாநில அரசினால் 70:30 என்ற விகிதத்தில் ஒதுக்கப்படும். 1986—87 ஆம் ஆண்டில் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து இதற்கான ஒப்பளிப்பு ஆணை பெறப்பட்ட பின்னர் இத்திட்டம் செயற் படுத்தப்படும்.



கோரிக்கை எண் 10.

திட்ட ஒதுக்கீடு :

1984—85 ஆம் ஆண்டின் செலவுக் கணக்குகள், 1985—86 மற்றும் 1986—87 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை விபரம்.

| வரிசை எண்ணும், இனமும். (1) | 1984—85-ம் ஆண்டிற்கான கணக்குகள். (2) | 1985—86-ம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீடு. (3) | 1985—86-ம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு. (4) | 1986—87-ம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | (ரூபாய் ஆயிரத்தில்.) | | | |
| 1. பால் பெருக்குத் திட்டம்—அமுல்படுத்தப்படாத மாவட்டங்களில் பால் சேகரிப்புக்குழு நிறுவுதல். | 873 | .. | .. | .. |
| 2. நடமாடும் கால்நடை மருத்துவ நிலையங்கள் அமைத்தல். | 466 | .. | .. | .. |
| 3. பால் கூட்டுறவுகளுக்கு மானியம் வழங்குதல்—(அ) நிர்வாகம் மற்றும் தொழில் நுட்பப் பணியாளர்கள். | 390 | 417 | 419 | 119 |
| (ஆ) இணைப் பண்ணை பராமரிப்பு .. | 23 | 7 | 7 | .. |
| 4. துறையின் நிர்வாகத் திறனை பலப்படுத்தும் திட்டம். | 600 | 1309 | 1584 | 934 |
| 5. அமைச்சுப் பணியாளர்களுக்கு கூட்டுறவு பயிற்சி. | 77 | .. | .. | .. |
| மொத்தம் .. | 2429 | 1733 | 2010 | 1053 |

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்:

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் பால் பெருக்குத் திட்டம் உட்பட அனைத்து மேம்பாட்டுத் திட்டங்களையும் செயல்படுத்துகிறது. இவ்விணையத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் உள்ள 14 மாவட்டங்களில் சேலம், பெரியார், கோயம் புத்தூர், நீலகிரி மாவட்டங்களில் 1981 ஆம் ஆண்டிலும், தருமபுரியில் 1982 ஆம் ஆண்டிலும், சென்னை-செங்கற்பட்டு, தென் ஆற்காடு, மதுரையில் 1983 ஆம் ஆண்டிலும், வட ஆற்காட்டில் 1984 ஆம் ஆண்டிலும், தஞ்சாவூர், திருச்சிராப் பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் 1985 ஆம் ஆண்டிலும் பால்வள வளர்ச்சிப் பணிகள் மாவட்ட ஒன்றியங் களிடம் மாற்றப்பட்டுள்ளன.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் கீழ் உள்ள மாவட்ட ஒன்றியங்களின் பால் கொள்முதல் விவரம் :

| மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் பெயர். | 1984 (இலட்சம் லிட்டர்களில்.) | 1985 (இலட்சம் லிட்டர்களில்.) | 1986 (மதிப்பீடு) |
|---|---|---|---|
| 1. சென்னை-செங்கல்பட்டு | 103.63 | 146.38 | 101.01 |
| 2. தென்னாற்காடு .. | 135.91 | 194.94 | 214.43 |
| 3. வட ஆற்காடு .. | 303.25 | 432.74 | 476.01 |
| 4. தருமபுரி .. .. | 202.96 | 228.67 | 251.53 |
| 5. சேலம் .. .. | 361.24 | 437.86 | 481.64 |
| 6. பெரியார் .. .. | 308.88 | 371.30 | 408.43 |
| 7. கோயம்புத்தூர் .. | 184.52 | 200.00 | 220.00 |
| 8. நீலகிரி .. .. | 84.52 | 82.79 | 91.06 |
| 9. மதுரை .. | 202.37 | 236.46 | 260.10 |
| 10. திருச்சிராப்பள்ளி .. | .. | 126.81 | 139.49 |
| 11. தஞ்சாவூர் .. | .. | 44.64 | 49.10 |
| 12. புதுக்கோட்டை | .. | 7.47 | 8.21 |
| மொத்தம் .. | 1,887.28 | 2,510.86 | 2,761.01 |



இவ்விணையம் 4.5 சதவீதம் கொழுப்புச்சத்தும், 8.5 சத வீதம் இதர திம்மைச் சத்தும் கூடிய பதப்படுத்தப்பட்ட பாலை சென்னை பால் பண்ணைகளின் மூலம் விற்பனை செய்த விபரங் கள் :—

| விபரங்கள். | 1984 | 1985 | 1986 (மதிப்பீடு). |
|---|---|---|---|
| பால் (இலட்சம் லிட்டர் களில்). | 1507.62 | 1609.00 | 1837.00 |
| நாளொன்றுக்கு சராசரி யான அளவு (இலட்சம் லிட்டர்களில்). | 4.12 | 4.41 | 5.03 |
| வெண்ணெய் (இலட்சம் கிலோ கிராம்களில்). | 8.75 | 9.58 | 10.60 |
| நெய் (இலட்சம் கிலோ கிராம்களில்). | 0.84 | 0.86 | 1.00 |
| பால் தூள் (இலட்சம் கிலோ கிராம்களில்). | 5.68 | 5.92 | 7.00 |

1984 ஆம் ஆண்டில் இவ்விணையத்தின் மொத்த வியாபாரத் தொகை ரூ. 60.75 கோடியாகும். 1985 ஆம் ஆண்டில் மொத்த வியாபாரத் தொகை ரூ. 70.46 கோடியாக இருக்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது. மேலும், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் தயாரிக்கும் பால் பொருட்களை தமிழ் நாட்டிலும் மற்ற மாநிலங்களிலும் விற்பனை செய்வதற்கு இவ் விணையம் உதவி புரிகிறது.

காலநடை தீவன ஆலைகள்.

மாதவரம், ஆம்பூர் மற்றும் ஈரோடு ஆகிய இடங்களிலுள்ள கால்நடைத் தீவன நிலையங்களில் தற்போது மாதமொன்றுக்கு சராசரி 2,086 டன்கள் கால்நடைத் தீவனம் உற்பத்தி செய்யப் படுகின்றன. அவற்றின் ஆம்பூரிலுள்ள நிலையம், ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையினரிடமிருந்து குத்தகையாக எடுக்கப் பட்டு தொடர்ந்து இவ்வாண்டும் செயல்படுகிறது. மேற்படி ஆலைகளில் உற்பத்தியாகும் கால்நடைத் தீவனம் கூட்டுறவு சங்கங்களின் அங்கத்தினர்கள், கால்நடை பராமரிப்புத் துறை யிலுள்ள கால்நடை பண்ணைகள் மற்றும் சென்னை மாநகராட்சி

போன்ற உள்ளாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு வழங்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட்ட கால்நடைத் தீவன அளவின் விபரங்கள் பின்வருமாறு :—

| | 1984 | 1985 | 1986 |
|---|---|---|---|
| | (மெட்ரிக் டன்களில்). | | (மதிப்பீடு). |
| கால்நடைத் தீவனம் .. | 17,875 | 24,470 | 30,000 |

ரூபாய் பத்து இலட்சம் செலவில் குளிகை வடிவில் தீவனம் தயாரிக்கும் ஆலை (Pelletiser Plant) ஒன்று மாதவரத்தில் நிறுவப்பட்டுள்ளது.

ஈரோட்டிலுள்ள கால்நடை தீவன ஆலை, பெரியார் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின்கீழ் இயங்கி வருகிறது. இந்த ஆலையில் தயாராகும் தீவனம், சேலம், பெரியார், கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் வழங்கப்படுகிறது. இதைத் தவிர தென் மாவட்டங்களில் வளரும் தேவையைப் பூர்த்தி செய்ய ஒரு புதிய கால்நடைத் தீவன உற்பத்தி நிலையம் மதுரையில் துவக்கப்படவிருக்கிறது.

## பால் பெருக்குத் திட்டம்.

1972 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் சென்னை-அம்பத்தூரில் நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர்கள் பால் உற்பத்தி செய்யும் திறனுடைய பால் பண்ணை, பெரியார் மாவட்டம் ஈரோட்டில் பால் பதப்படுத்தும் மற்றும் பால் தூள் உற்பத்தி செய்யும் பண்ணை (feeder balancing dairy) ஒரு கால்நடைத் தீவன ஆலை மற்றும் சங்கராண்டான்பாளையம் மற்றும் சத்திய மங்கலத்தில் 2 குளிர் பதன நிலையங்களும் அமைக்கப்பட்டன. வட ஆற்காடு மாவட்டத்தில் ஆம்பூர், தென் ஆற்காடு மாவட்டத்தில் விழுப்புரம், சின்னசேலம் ஆகிய இடங்களிலுள்ள குளிர் பதன நிலையங்கள் மற்றும் மதுரை பால் பண்ணையின் விரிவாக்க வேலையும் முடிவு பெற்றன. நாளொன்றுக்கு 10 டன்கள் பால் தூள் உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்றும் மதுரையில் துவக்கப்பட்டது. நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகமண்டலத்தில் வெளி நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட உயர் ரக கால்நடைகளிலிருந்து தரமான விந்துக்களை வழங்க ஒரு நியூக்ளியஸ் ஜெர்ஸி பண்ணை மற்றும் பொலி காளைப் பண்ணை நிறுவப்பட்டது.





முதலாவது பால் பெருக்குத் திட்டத்தின் தொடர்ச்சியாக இரண்டாவது பால் பெருக்குத் திட்டம் ரூ. 42.87 கோடி மதிப்பீட்டில் 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் துவங்கப்பட்டு ஆறு வருடகாலத்திற்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருமாறு :—

(அ) இத்திட்ட காலத்தின் முடிவில் 4,550 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் கிராமப்புறங்களில் அமைக்கப்படவேண்டும் என்ற குறிக்கோளின் கீழ் 1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய 4,531 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன.

(ஆ) 1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய பால் கொள்முதலுக்காக 7,02,933 கறவை மாடுகள் கொண்டுவரப்பட்டன. பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் மொத்தம் 13 இலட்சம் கறவை மாடுகள் கொண்டு வரப்பட்டு அதில் 50 விழுக்காடு செயற்கைமுறை கருத்தரித்தல் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படும்.

1985 ஆம் ஆண்டில் பால் கொள்முதல் நாளொன்றுக்கு 6.88 இலட்சம் லிட்டர்களாகும். இத்திட்ட முடிவில், நாள் ஒன்றுக்கு பால் உற்பத்தி 10.90 இலட்சம் லிட்டர்களாக அதிகரிக்கப்படும்.

(இ) மாநிலத்திலுள்ள எல்லா முதல்தர, இரண்டாந்தர நகரங்களிலும் பால் விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஈ) மாநிலத்தில், இத்திட்டம் செயல்படுகின்ற முக்கிய நகர்ப்புற பகுதிகளில் நாளொன்றுக்கு 12 இலட்சம் லிட்டர்கள் பாலை விற்பனை செய்வதற்காக தற்போதுள்ள 10.2 இலட்சம் லிட்டர்கள் பாலை பதப்படுத்தக் கூடிய திறன் 16.77 இலட்சம் லிட்டர்களுக்கு உயர்த்தப்படும். மீதி ஆடை நீக்கப்பட்ட பால், பவுடர் மற்றும் வெண்ணையாக மாற்றப்படும்.

(உ) திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் பால் பெருக்குத் திட்டம் 2-ன் கீழ் முறையே ரூ. 620 இலட்சம், ரூ. 684 இலட்சம், ரூ. 105 இலட்சம் செலவில் கொண்டுவரப் பட்டுள்ளது. இத்திட்டம் ஏப்ரல் 1, 1985-ல் இருந்து செயல்படுத்தப்படுகிறது.

(ஊ) இரண்டாவது பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 42.87 கோடி உதவித் தொகையில் 25.90 கோடி ரூபாய்க்கு நிதியுதவி வரப்பெற்றுள்ளது. 31-12-1985 முடிய ரூ. 26.71 பயன்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் (1) நாளொன்றுக்கு 50,000 லிட்டர்கள் பாலைக் கையாளும் திறனுடைய ஒரு புதிய பால் பண்ணை ஒன்றும், (2) செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள திருவள்ளூரில் நாளொன்றுக்கு 50,000 லிட்டர்கள் திறன் கொண்ட ஒரு புதிய பால் குளிரூட்டும் நிலையமும் மற்றும் (3) ஆத்தூரில் பால் குளிரூட்டும் நிலையத்தின் திறன் நாள் ஒன்றுக்கு 30,000 லிட்டர்களிலிருந்து 50,000 லிட்டர்களாக விரிவாக்கப்பட்டு பணிகளும் முடிந்துவிட்டன. (4) மேலும் பெரியார் மாவட்டத்தில் எருமை பொலி காளை உறைவிந்து நிலையம் ஒன்றும், (5) சேலம் மாவட்டத்தில் மணிக்கு 45 லிட்டர்கள் உற்பத்தி செய்யும் திறனுடைய திரவ நைட்ரஜன் நிலையம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.

1986 ஆம் ஆண்டுக்குள் முடிவடையும் தருவாயில் உள்ள திட்டங்கள்.

(1) கோயம்புத்தூரில் ரூ. 352 இலட்சம் செலவில் பால் பண்ணை ஒன்று துவக்கப்பட்டு சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது.

(2) நாளொன்றுக்கு 30,000 லிட்டர்கள் பால் பதப்படுத்தும் திறன் கொண்ட ஒரு புதிய குளிர்பதன நிலையம் அனக்காவூரில் ரூ. 35.61 இலட்சம் செலவில் கட்டப்பட்டு விரைவில் செயல்பட இருக்கிறது.

(3) அம்பத்தூரில் உள்ள பால் பண்ணை மார்ச் 1986-க்குள் இயங்கத் தொடங்கவிருக்கிறது.

(4) திருநெல்வேலியில் நாளொன்றுக்கு 50,000 லிட்டர்கள் பாலை பதப்படுத்தக்கூடிய திறன்கொண்ட ஒரு புதிய பால் பண்ணை ரூ. 160 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது. இயந்திரத் தொகுதியையும் இயந்திர நிலையத்தையும் நிறுவும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது. இப்பண்ணை விரைவில் செயல்படத் துவங்க இருக்கிறது.

(5) வேலூரில் உள்ள பால் பண்ணையின் கொள்திறன் ரூ. 110 இலட்சம் செலவில் விரிவாக்கப்படும் நோக்கோடு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு, அது 1986 ஆம் ஆண்டுக்குள் செயல்படுத்தப்படும்.

(6) ரூ. 13.54 இலட்சம் செலவில் இராமநாதபுரம் மாவட்டத்தில், பரமக்குடியில் உள்ள குளிரூட்டும் நிலையத்தின் கொள்திறன், நாளொன்றுக்கு 6,000 லிட்டர்களிலிருந்து 10,000 லிட்டர்களாக அதிகரிக்கப்படவிருக்கிறது.



(7) ரூ. 103.26 இலட்சம் செலவில் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பட்டுக்கோட்டை மற்றும் மயிலாடுதுறையிலும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வள்ளியூரிலும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கமுதியிலும், மற்றும் புதுக்கோட்டையிலும் புதிய பால் குளிரூட்டும் நிலையங்கள் கட்டப்பட்டு வருகிறது.

புதிய திட்டங்கள்.

1. ரூ. 510 இலட்சம் மதிப்பீட்டில் மூன்றாவது புதிய பால் பண்ணை ஒன்று மாமல்லபுரம் சாலையில் சோளிங்கநல்லூர் அருகில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட கால்நடைத் தீவன ஆலை ஒன்று புதிதாக மதுரையில் கட்டப்பட்டுள்ளது.

3. திருச்சிராப்பள்ளியில் ரூ. 230 இலட்சம் செலவிலும், தஞ்சாவூரில் ரூ. 230 இலட்சம் செலவிலும் நாளொன்றுக்கு 60,000 லிட்டர் திறன் கொண்ட புதிய பால் பண்ணைகள் கட்டப்படும்.

பால் கூட்டுறவுகளுக்கான தணிக்கை வாரியம்.

பால் கூட்டுறவுகளுக்கான தணிக்கை வாரியத்தால் ஆரம்ப பால்கூட்டுறவுகள் மற்றும் ஒன்றியங்களின் தணிக்கை 1—10—83 முதல் மேற்கொள்ளப்பட்டது. சங்கங்களில் 1983–84 ஆம் ஆண்டிற்கான தணிக்கை முடிவடைந்துள்ளது. பால் கூட்டுறவு ஒன்றியங்களின் தணிக்கையும் துரிதமாக நடந்து கொண்டிருக்கின்றன.

பாலின் விலை.

1–8–1984 முதல் பாலின் கொள்முதல் விலை ஒரு கிலோ கொழுப்புச் சத்திற்கு ரூ. 42 ஆகவும், 1–4–1985 முதல் கொள்முதல் விலை ரூ. 44 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. பால் உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்களின் விலையும், கொள்முதல் விலையும் அதிகரித்ததால் பாலின் விற்பனை விலை 1—4—1985 முதல் ஒரு லிட்டருக்கு ரூ. 3.15-லிருந்து ரூ. 3.80 ஆக சென்னை நகரில் உயர்த்தப்பட்டுள்ளது.

## பால் விற்பனை.

சென்னை நகரில் 1984-ல் வாடிக்கையாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு சராசரியாக 4.11 இலட்சம் லிட்டர்கள் பால் விநியோகிக்கப்பட்டதை 1985-ல் நாளொன்றுக்கு 4.41 இலட்சம் லிட்டர்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும் இதனை 1986 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 5.0 இலட்சம் லிட்டர்களாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது 511 பால் சாவடிகள், 61 தானியங்கி விற்பனை இயந்திரங்கள், 26 ஃபைபர் பிளாஸ்டிக் தொட்டிகள் மற்றும் 53 பாலகம் மூலமாக சென்னை மாநகரில் நுகர்வோர்கள் பால் பெறுகின்றனர். தானியங்கி விற்பனை இயந்திரங்களின் எண்ணிக்கை 100 ஆக அதிகரிக்கப்படும். நுகர்வோரினை பால் விற்பனையில் ஈடுபடுத்தும் பொருட்டும், பால் விநியோகிக்கும் முறையினை செயல்படுத்தும் பொருட்டும் 31 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.



# இணைப்பு V

*(61ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## கோரிக்கை எண் 22.

### கால்நடைப் பராமரிப்புத் துறை.

### கொள்கை விளக்கம்.

*1986—87.*

I முன்னுரை :

(1) கால்நடைவளம், நமது கிராமப்புற பொருளாதாரத்தின் ஒருங்கிணைந்த அம்சமாக விளங்குகிறது. மற்றும் மாநிலத்தி லுள்ள கிராமப்புற மக்களின் நல்வாழ்வுக்குக் கால்நடைச் செல்வ வளர்ச்சி ஓர் அறிகுறியாக உள்ளது கிராமப்புற மக்களில், குறிப்பாக சிறு, குறுநில வேளாண்பெருமக்கள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், பழங்குடியினர் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மக்கள் ஆகியோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த கால்நடை வளர்ச்சி பெரிதும் உதவி புரிகிறது. கால்நடை வளர்ச்சிக்கான முயற்சிகள், கால்நடை இனங்களான ஆவினங்கள் ஆட்டினங்கள், பன்றி மற்றும் கோழி இனங்களின் தரம், மற்றும் அவற்றின் உற்பத்தித் திறன் ஆகியவற்றை உயர்த்தி, பால், பால்பொருட்கள், முட்டை, இறைச்சி மற்றும் வேலைத் திறன், தோல் மற்றும் தோல் பொருட்கள் முதலியவற்றின் தேவை களை நிறைவு செய்யும் அளவில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

(2) கால்நடைகளைத் தரம் உயர்த்த இத்துறை எடுத்துக் கொண்ட தீவிர முயற்சிகளினால், தமிழ்நாட்டில் 1977—78-ல் 1,680 ஆயிரம் மெட்ரிக் டன்னாக இருந்த பால் உற்பத்தி, 1984—85-ல் 2,846 ஆயிரம் மெட்ரிக் டன்னாக, குறிப்பிடத்தக்க அளவில், அதிகரித்துள்ளது. அவ்வாறே, 1977—78-ல் இம் மாநிலத்தில் 682 மில்லியனாக இருந்த முட்டை உற்பத்தி, 1984—85-ல் 1,063 மில்லியன்களாக உயர்ந்துள்ளது. அதன் பயனாக தனி நபர் ஒருவருக்கு 1977—78-ல் கிடைத்த பாலின் அளவு 98 கிராமிலிருந்து, 1984—85-ல் 161 கிராம் ஆக உயர்ந் துள்ளது. அவ்வாறே 1977—78-ல் தனி நபர் ஒருவருக்குக் கிடைத்த முட்டைகளின் எண்ணிக்கை 16 ஆக இருந்தது. அது 1984—85-ல் 22 ஆக உயர்ந்துள்ளது.

*(3) 1985–86ஆம் ஆண்டின் திட்டப்பணிகளும், சாதனையும்:*

1. 100 கிளை நிலையங்களில் உறைவிந்து மூலம் செயற்கை முறைக் கருவூட்டலுக்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2. உடுமலைப்பேட்டையில் கால்நடை மேம்பாட்டு முனைப்புத்திட்டம் ஒன்று துவங்கப்பட்டு, நன்முறையில் செயலாற்றி வருகிறது.

3. இனவிருத்திக்குப் பயன்படாத பசுக்களையும், பால் வற்றிய பசு மற்றும் எருமைகளையும் தனித்தனியே பராமரித்துக் கவனிக்க, மாதவரம் பால்பண்ணையில் வசதிகள் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4. பத்து கால்நடை மருந்தகங்கள் பின்வரும் இடங்களில் துவங்கப்பட்டுள்ளன:

1. செருக்காளை புதுப்பாளையம், சேலம் மாவட்டம்.
2. கோட்டையூர், காமராசர் மாவட்டம்.
3. சுரண்டை, திருநெல்வேலி மாவட்டம்.
4. எண்ணாயிரம், தென்னாற்காடு மாவட்டம்.
5. ஆத்தூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
6. சாக்கோட்டை பிர்களைக்காடு, பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்.
7. சேத்தியா தோப்பு, தென்னாற்காடு மாவட்டம்.
8. பட்டுக்கோட்டை காசாங்காடு, தஞ்சாவூர் மாவட்டம்.
9. கொக்கராயன்பட்டி, சேலம் மாவட்டம்.
10. மாரப்பகவுண்டர் புதூர், கோயம்புத்தூர் மாவட்டம்.

5. கோபிச்செட்டிப்பாளையம் மற்றும் மயிலாடுதுறையிலுள்ள கால்நடை மருத்துவமனைகள் பிரதம கால்நடை மருத்துவ நிலையங்களாக நிலை உயர்த்தப்பட்டன.

6. 2,000 புறக்கடை கோழிப்பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

7. 'ஸ்பிரிங்' கோழிக்குஞ்சு பிரிவுகள் 500 நிறுவப்பட்டுள்ளன.

8. அத்தியாவசியமான விளம்பரம் மற்றும் பிரச்சாரப்பிரிவு தலைமையகத்தில் துவக்கப்பட்டுள்ளது.



(4) 1986—87-ம் ஆண்டுக்கான செயல் திட்டங்கள் :

1. 250 நிலையங்களில் உறைவிந்து மூலம் செயற்கை முறைக் கருவூட்டல் வசதிகள் செய்து கொடுத்தல்.
2. விவசாயிகளுக்கு மானிய விலையில் தீவனப் பயிர், புல், தீவன விதைகள் மற்றும் செடிகள் வழங்குதல்.
3. 500 தீவனப் பயிர் விளக்க பாத்திகள் ஏற்படுத்துதல்.
4. 50 புல்வெட்டும் கருவிகள் (கையினால் இயக்கக்கூடியது) மானிய விலையில் விநியோகம் செய்தல்.
5. கால்நடை மருந்தகம் ஒன்றை கால்நடை மருத்துவமனையாக நிலை உயர்த்துதல்.
6. திருச்சிராப்பள்ளியில் ஒரு மண்டல மருந்து கிடங்கு நிறுவுதல்.
7. இராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பு மருந்து உற்பத்திப் பகுதி ஒன்றை ஏற்படுத்துதல்.
8. 2,000 கிராமங்களில் மக்கள் தொடர்பு முகாம் நடத்துதல்.

## II. வளர்ச்சித் திட்டங்கள்.

1. கால்நடை மேம்பாடு.

1982-ம் ஆண்டின் கால்நடைக் கணக்கெடுப்பின்படி, தமிழகத்தில் 52.08 இலட்சம் இனப்பெருக்கத்திற்கேற்ற பசுக்களும், எருமைகளும் உள்ளன. அவற்றில் 26.54 இலட்சம் பசுக்களும் எருமைகளும் பால்தந்து கொண்டிருக்கின்றன. தீவிரக் கலப்பின விருத்தி மூலம், உள்ளூர் ஆவினங்கள் மற்றும் எருமை இனங்களின் தரத்தை உயர்த்தி, அவற்றின் பால் உற்பத்தியைப் பெருக்கப் பல திட்டங்கள் இத்துறையின் மூலம் செயலாக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் முக்கியமானவை :

### 1. (1) கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டம்.

1. சமநிலப்பகுதிகளில் ஜெர்சி என்னும் உயரினக் காளைகளைக் கொண்டும், மலைப்பகுதிகள் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் ஆகியவற்றில் பிரிசியன் இனக் காளைகளைக் கொண்டும் திட்டமிட்ட வகையில் கலப்பின முறையை மேற்கொண்டு, பால் உற்பத்தியைப் பெருக்குவதே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். மேலும் இத்திட்டத்தின்கீழ் இம்மாநிலம் முழுவதும் உள்ள எருமையினங்களின் தரத்தை உயர்த்த முர்ரா இன ஆண் எருமைகள் பயன்படுத்தப்படுகின்றன.

2. நோய் தடுப்பூசி போடுதல், கன்றுகள் வளர்ப்பு, தேவையற்ற காளைகளின் ஆண்மை நீக்கம் செய்தல், மற்றும் பசுந்தீவன உற்பத்தி வளர்ச்சி ஆகியவையும் இத்திட்டப் பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

3. செயற்கை முறைக் கருவூட்டல், சினைப் பரிசோதனை செய்தல், கன்றுகள் பிறப்பைச் சோதித்தல், கன்றுகளுக்கான மானியத் தொகையை வழங்குதல், பசுந்தீவன வளர்ச்சி போன்ற கால்நடை பராமரிப்பு பணிகளை கால்நடைப் பராமரிப்பு துறையிலுள்ள கால்நடை உதவி மருத்துவர்களும், கால்நடை ஆய்வாளர்களும் செய்து வருகின்றனர். இவை தவிர மக்கள் தொடர்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. அவற்றின் மூலம் தொழில் நுட்பங்கள் கிராமங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு அவற்றைப் பொதுமக்கள் அறியுமாறு செய்யப்படுகிறது.

4. இம்மாநிலத்தில் 11 தீவிர கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டங்கள் தாம்பரம், சிதம்பரம், பண்ருட்டி, திருச்சிராப்பள்ளி தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, உசிலம்பட்டி, வாடிப்பட்டி, திருநெல்வேலி, உடுமலைப்பேட்டை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன,

5. மதுரையிலுள்ள கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டத்தின் கீழ் நான்கு மண்டல செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்களும், 100 கிளை நிலையங்களும் இயங்கி வருகின்றன. அவை 1 இலட்சம் இனப்பெருக்கத்திற்கேற்ற பசுக்கள் மற்றும் எருமைகளுக்கு செயற்கை முறைக் கருவூட்டல் மற்றும் இதர வசதிகளை அளிக்கின்றன. மீதமுள்ள 10 இடங்களில் செயல்படும் திட்டங்கள் ஒவ்வொன்றிலும் இனப் பெருக்கத்திற்கேற்ற 50,000 பசுக்களுக்கும், எருமைகளுக்கும் செயற்கை முறைக் கருவூட்டல் போன்ற வசதிகள் அளிக்கின்றன. இந்த 10 இடங்களில் செயல்படும் திட்டங்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு மண்டல செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களும் 50 கிளை நிலையங்களும் இயங்கி வருகின்றன.

6. 1985-86ஆம் ஆண்டில் (28—2—1986 வரை) செய்யப்பட்ட பணிகளின் விவரங்கள் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | செயற்கைமுறைக் கருவூட்டல்களின் எண்ணிக்கை. | 4,04,987 |
| 2. | பிறந்த கன்றுகள் | 88,417 |
| 3. | பசுந்தீவன நாற்றுகள் விநியோகிக்கப்பட்டது. | 37,90,310 |
| 4. | பசுந்தீவனச் செடிகள் விநியோகிக்கப்பட்டது. | 34,38,194 |
| 5. | பசுந்தீவன விதைகள் விநியோகிக்கப்பட்டது. | 57.86 மெட்ரிக் டன்கள். |





(7) 1986-87 ஆம் ஆண்டில் இத்திட்டப் பகுதிகளில் 50 சதவீத இனப்பெருக்கத்திற்கேற்ற பசு மற்றும் எருமைகளுக்குப் பயனளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த ஆண்டில் இத்திட்டப் பகுதிகளில் கீழ்க்கண்ட பணிகளையும் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| தீவனப்புல் நாற்றுகள் வழங்கல் | 90 இலட்சம் |
| தீவனப் பயிர் விதைகள் வழங்கல் | 45 டன் |
| தீவனச் செடிகள் | 5 இலட்சம் |
| மினிக்கிட்ஸ் (விதைப்பைகள்) | 1,400 |

1 (2) கேந்திர கிராமத் திட்டங்கள் :

சிறந்த, உயரினக் காளைகளின் விந்துவை உபயோகித்து செயற்கை முறைக் கருவூட்டல் மூலம் உள்நாட்டு கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதே கேந்திரக் கிராமத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இனவிருத்திக்கேற்ற சுமார் 10,000 பசுக்களும், எருமைகளும் கொண்ட ஒன்று சேர்ந்த அமைப்பினையுடைய பகுதிகளில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் செயல்படும் பகுதிகளில் ஜெர்சி, பிரிசியன், சிந்தி, முர்ரா போன்ற உயர் ரகக் கறவை இனங்களைக் கொண்டு கலப்பினவிருத்தி செய்து, உள்ளூர் கறவை மாடுகளின் பால் ஈனும் திறனை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அவ்வாறே உள்ளூர்க் கால்நடைகளின் உழைப்புத் திறனை உயர்த்த, காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி ஆகிய இனங்கள் அவற்றின் இருப்பிடமான பகுதிகளில் பயன்படுத்தப்படுகின்றன. உள்ளூர் எருமையினங்களின் பால் உற்பத்தித் திறனை உயர்த்த, முர்ரா எருமையினப் பொலிக்காளைகள் பயன்படுத்தப்படுகின்றன,

(2) இத்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் இதர பணிகள் சினை மற்றும் கன்று பிறப்பு பரிசோதனை பயனற்ற காளைகளுக்கு ஆண்மை நீக்கம் செய்தல், நோய் தடுப்பூசி போடுதல், நோயுற்ற கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தல் மற்றும் பசுந்தீவன உற்பத்தி வளர்ச்சி ஆகியவையாகும்.

(3) இத்திட்டம் திருச்சிராப்பள்ளி, நாகர்கோவில், திருநெல்வேலி, திண்டுக்கல், இராமநாதபுரம், சிவகங்கை, தேனி, மன்னார்குடி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகிறது.

நம் மாநிலத்தில் மொத்தம் 62 கேந்திர கிராம வட்டாரங்களும், அவற்றுடன் இணைந்த 620 கிளை நிலையங்களும் இயங்கி வருகின்றன.

1985-86 ஆம் ஆண்டில் (28—2—1986 வரை) செய்யப்பட்ட பணிவிவரங்கள் பின்வருமாறு :—

| | |
|---|---|
| செயற்கைமுறைக் கருவூட்டல்களின் எண்ணிக்கை | 290,303 |
| பிறந்த கன்றுகள் | 71,208 |

1986-87 ஆம் ஆண்டில் கேந்திர கிராம வட்டாரங்களில் உள்ள இனவிருத்திக்குத் தகுதியான பசுக்கள் மற்றும் எருமையினங்களில் குறைந்தது 40 விழுக்காடு அளவிற்கு செயற்கை முறைக் கருவூட்டல் செய்விக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**1. (3) பொலிகாளை நிலையங்கள் :**

பொலிகாளை நிலையங்களின் நோக்கம் நல்ல வம்சாவழியுள்ள பொலிகாளைகளை இந்நிலையங்களில் பராமரிப்பதும் மற்றும் அவற்றிலிருந்து பெறப்படும் விந்தினை துறை நிலையங்களில் நடைபெறும் செயற்கை முறைக் கருவூட்டலுக்காக வழங்குவதாகும். தற்போது 59 பொலிகாளை நிலையங்கள் இத்துறையின் கீழ் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன, இப்பொலிக்காளை நிலையங்கள் இத்துறையிலுள்ள செயற்கைமுறைக் கருவூட்டல் நிலையங்களுக்கு தரம் உயர்ந்த விந்தினை வழங்க உதவுகிறது.

இம்மாநிலத்தில் மொத்தம் 782 பொலிகாளைகள், பொலிகாளை நிலையங்களிலும், செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களிலும், கேந்திர கிராம நிலையங்களிலும் மற்றும் கால்நடைப் பண்ணைகளிலும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் மொத்தம் 334 அயலினப் பொலிகாளைகளும், 20 கலப்பினப் பொலிகாளைகளும், 86 உள்நாட்டினப் பொலிகாளைகளும் மற்றும் 342 முர்ரா எருமைப் பொலிகாளைகளும் அடங்கும்.

**1 (4) உறைவிந்து முறை விஸ்தரிப்பு :**

திரவ விந்து சேகரிக்கப்பட்ட 72 மணி நேரத்திற்குப் பிறகு வெற்றிகரமாக பயன்படுத்தப்பட இயலாது. அதனால், கணிசமான பயன்படுத்தப்படாத விந்து விரயமாக்கப்பட வாய்ப்புள்ளது. இதனாலும் மற்ற சம்பந்தப்பட்ட பிரச்சினைகளாலும் விந்து விரயம் ஏற்படாமல், திரவ விந்துவுக்குப் பதிலாக உறைவிந்து பயன்படுத்தப்படுகிறது. பல்வேறு கால்நடை வளர்ச்சித் திட்டங்களின் கீழ் படிப்படியான முறையில் உறைவிந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. இம்முறை தற்போது இம் மாநிலத்தில் 707 நிலையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.





(2) இம்முறையைச் செயல்படுத்த ''டானிடா'' நிறுவன உதவியுடன் ஈச்சங்கோட்டை அயலினக் கால்நடைப் பண்ணையில் ஓர் உறைவிந்து வங்கியும் மற்றும் அபிஷேகப்பட்டியிலுள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் திரவ நைட்ரஜன் மற்றும் உறைவிந்து நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன.

(3) உறைவிந்து முறை சிறப்பான தொழில் நுட்பம் கொண்ட வேலையாகும். கால்நடைத் தொழில் நுட்ப அலுவலர்களும், துணைப் பணியாளர்களும் இத்துறையில் போதுமான திறமை பெறுவதற்காக இவ்வுத்தியில் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். 1985-86 ஆம் ஆண்டு, 69 கால்நடை உதவி மருத்துவர்களுக்கும், 328 கால்நடை ஆய்வாளர்களுக்கும் இவ்வுத்தியில் இப்பயிற்சி தரப்பட்டுள்ளது.

**1. (5). வம்சாவழி ஆய்வுத் திட்டம் :**

ஒசூரிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையில் இயங்கி வரும் வம்சாவழி ஆய்வுத் திட்டம், சிந்தியினத்தின் வம்சாவழித் திறனை ஆய்வு செய்யும் நோக்கத்துடன் இயங்கி வருகிறது. இதுவரையிலும் 6 சிந்தி பொலிகாளைகள் கொண்ட ஆறு அணிகள் இத்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளன. நேர்த்தியான இக்காளைகளில் இருந்து சேகரிக்கப்படும் விந்து, உறையச் செய்யப்பட்டு, செயற்கை முறைக் கருவூட்டலுக்காக வழங்கப்படுகிறது. இதே போன்ற ஒரு திட்டம் ஓரத்தநாட்டில் உள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையில், முர்ரா எருமை இனத்தின் வம்சாவழித் திறனை ஆய்வு செய்வதற்காக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**1. (6). கால்நடைக் கண்காட்சிகளும் மற்றும் கன்றுகள் பேரணிகளும் :—**

(1) கால்நடைக் கண்காட்சிகள் மூலம் கால்நடை உரிமையாளர்களும் மற்றும் வேளாண் மக்களும் அறிவியல் முறைப்படி கால்நடைகளைப் பேணுதல், இனப்பெருக்கம் செய்தல், தீவன மிடுதல் மற்றும் நோய் தடுப்பூசிகள் போடுதல் போன்றவை பற்றி நன்கு அறிவுறுத்தப்படுகின்றனர்.

(2) கால்நடை முனைப்புத் திட்டம் மற்றும் கேந்திர கிராமத் திட்டப் பகுதிகளில், கன்றுகளை வளர்ப்பது பற்றி விவசாயிகளுக்கு அறிவுறுத்தி, அவர்களிடையே போட்டி மனப்பான்மையையும், ஊக்கத்தையும் உருவாக்க கன்றுப் பேரணிகள் நடத்தப்படுகின்றன.

(3) 1985-86 ஆம் ஆண்டில் பிப்ரவரி 86 வரை இம் மாநிலத்தில் 31 கன்றுப் பேரணிகளும், 3 கால்நடைக் கண்காட்சிகளும் நடத்தப்பட்டன. இத்திட்டம் தொடர்ந்து நடைபெறும்.

(4) வெகு நாட்களாக இத்துறைக்கு அத்தியாவசியமாகக் கருதப்பட்ட விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பிரிவு ஒன்று 1985-86 ஆம் ஆண்டில் தலைமை அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1.(7). மக்கள் தொடர்புத் திட்டம்:

கிராமங்களில் மக்கள் தொடர்பு முகாம் நடத்தப்படுகிறது. கால்நடை மருத்துவர்கள் மற்றும் கால்நடை ஆய்வாளர்களைக் கொண்ட குழு, ஒரு குறிப்பிட்ட நாளில் ஒரு கிராமத்திற்குச் சென்று இம்முகாமினை நடத்துகின்றது. நோயுற்ற கால்நடைகளுக்கு மருத்துவமும், இனவிருத்திக்குப் பயன்படாத காளைகளுக்கு ஆண்மை நீக்கம் செய்தலும், கால்நடைகளுக்குக் குடற்புழு நீங்க மருந்து கொடுத்தலும், இனவிருத்திக்குத் தயாராக உள்ள பசு மற்றும் எருமைகளுக்குக் கருவூட்டல் செய்வித்தலும் இந்த முகாமில் செய்யப்படும் முக்கிய பணிகள் ஆகும். இவை தவிர நவீன முறையில் கால்நடைகளைப் பராமரித்தல், தீவனம் அளித்தல், இனவிருத்தி செய்தல், நோய் தடுப்பு முறைகள் ஆகியவற்றை விவசாயிகளுக்கு படக்காட்சிகள் மற்றும் கண்காட்சிப் பொருட்கள் மூலம் இம்முகாம்களில் சொல்லித்தரப்படுகிறது.

1985-86ம் ஆண்டில் 5,601 மக்கள் தொடர்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

1.(8). செம்மறியாடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு:

1. வேளாண் மக்களுக்கு, குறிப்பாக சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களான சிறு, குறுநில மற்றும் நிலமற்ற வேளாண் தொழிலாளர்கள் ஆகியோருக்கு ஆடு வளர்ப்பு முக்கியமான துணைத் தொழில்களில் ஒன்றாக உள்ளது.

2. அதிகம் தேவைப்படும் விலங்கின புரதச்சத்து செம்மறியாட்டின் இறைச்சியிலிருந்து கிடைக்கிறது. இதைத் தவிர செம்மறியாட்டினத்திலிருந்து கிடைக்கும் உரோமம், தோல் மற்றும் உரம் முதலியன நாட்டின் பொருளாதாரத்திற்கு உதவுறது.

3. செங்கற்பட்டு மற்றும் சென்னை மாவட்டங்களில் பொதுவாக காணப்படும் உள்ளூர் இனமான ''சென்னை சிகப்பு'' இனமும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ''திருச்சிக் கருப்பு'' இனமும், சேலம் மாவட்டத்தில் ''மேச்சேரி'' இனமும், ''இராமநாதபுரம் வெள்ளை'', ''கிழக்கரிசல்'', ''வேம்பூர்'' இனங்கள் இராமநாதபுரம் மாவட்டத்திலும், ''நீலகிரி'', ''கோயம்புத்தூர்'' இனங்கள் முறையே நீலகிரி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் உள்ளன.





4. இரண்டு செம்மறியாட்டுப் பண்ணைகள், ஒன்று சின்ன சேலத்திலும் மற்றொன்று சாத்தூரிலும் உள்ளன. மேலும் நான்கு செம்மறியாட்டுப் பிரிவுகள் மாவட்ட கால்நடைப் பண்ணைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்நிலையங்களில் ''மேச்சேரி'', ''கீழக்கரிசல்'', ''இராமநாதபுரம் வெள்ளை'' ''வேம்பூர்'', ''மாண்டிய..'' போன்ற முக்கிய இனங்கள் பராமரிக்கப்படுகின்றன. இப்பிரிவுகளின் நோக்கம், தரம் உயர்ந்த செம் மறிக் கிடாக்களை ஆடு வளர்ப்போருக்கு அளிப்பதும், உள் நாட்டு இறைச்சி வகைச் செம்மறி ஆட்டினங்களில் தரத்தை, கலப்பினவிருத்தி மூலம் உயர்த்துதலும் ஆகும்.

1. (9). ஆடு வளர்ப்புக் கூட்டுறவு சங்கங்கள்:

1. ஆடு வளர்ப்போரின் நலனுக்காக, ஆடு வளர்ப்புக் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. தற்போது, இம் மாநிலத்தில் 1,264 ஆடு வளர்ப்புக் கூட்டுறவு சங்கங்கள் பல்வேறு திட்டங்களின் கீழ் இயங்கி வருகின்றன. இவற்றில், 39 சங்கங்கள், வேளாண் மறுநிதி கழகத் திட்டத்தின் கீழும், 382 சங்கங்கள் சிறப்புக் கால்நடை உற்பத்தித் திட்டத்தின் கீழும், 237 சங்கங்கள் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின் கீழும். 4 சங்கங்கள் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும், 3 சங்கங்கள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும், 119 சங்கங்கள் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழும், 480 சங்கங்கள் மற்ற பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ளன.

2. ஆட்டு மந்தைகளின் நலம், குடற்புழு நீக்கம் செய்தல், தடுப்பூசி போடுதல் முதலியவைக் கால்நடைப் பராமரிப்பு விரிவாக்கப் பணியாளர்களால் கவனிக்கப்பட்டு வருகின்றன.

1. (10). செம்மறி ஆட்டின் இறைச்சி உற்பத்தி அதிகரிப்புக்காக தீவிர நோய் நீக்கப் பணிகள் அளிக்கும் திட்டம்:

நபர் ஒருவருக்கு, நாள் ஒன்றுக்குத் தேவைப்படும் இறைச்சியின் அளவு 40 கிராம் ஆகும். ஆனால் தற்போது கிடைக்கக் கூடிய இறைச்சியின் அளவு 26 கிராம்களே ஆகும். எனவே செம்மறியாடுகளின் இறைச்சி உற்பத்தியை அதிகரிப்பது மிகவும் அவசியமாகும். முறையான காலங்களில் செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்வதால் அவற்றின் வளர்ச்சி வீதம் ஆடு ஒன்றுக்கு குறைந்தபட்சம் 2 கிலோ அளவில் எடை கூடி, அதன் மூலம் ஆட்டிறைச்சி உற்பத்தி அதிகரிக்கும். ஆகையால் பெரும் அளவிலான செம்மறி ஆட்டினங்களின் குடற்புழு நீக்கப் பணிகள் சேலம், தென் ஆற்காடு, வட ஆற்காடு, திருநெல்வேலி, செங்கல் பட்டு, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை 1985-86ம் ஆண்டில் (28-2-1986 வரை) 65.09 இலட்சம் ஆடுகளுக்குக் குடற்புழு நீக்கம் செய்யப் பட்டுள்ளது.

1. (11). இளைஞர்களுக்குப் பயிற்சி:

4,900 இளைஞர்களை ஆடு வளர்ப்புத் தொழிலில் பயிற்சி அளிக்க, அரசு ஒரு திட்டத்திற்கு இசைவு தந்துள்ளது. இது வரை, 200 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

1. (12). வெள்ளாடு வளர்ப்பு:

1. வெள்ளாடு, ஏழைகளின் பசுக்கள் எனக் கருதப்படுகின்றன. வெள்ளாட்டுப் பால், உணவுச் சத்துக்களுக்காகப் பெயர் பெற்றது. ஆட்டுப் பாலில் உள்ள கொழுப்புத் துகள்கள் நுண்ணியதாகவும் எளிதில் ஜீரணிக்கக் கூடியதாகவும் இருக்கின்றன.

2. வெள்ளாட்டின் வளர்ச்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சில கால்நடை மருத்துவ நிலையங்களில் ''ஜம்னாபாரி'' மற்றும் 'தலைச்சேரி'' இனக் கிடாக்களைப் பராமரித்து கலப்பின விருத்தி செய்யப்படுகிறது. புதுக்கோட்டையிலுள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையிலும், சின்ன சேலத்திலுள்ள ஆட்டுப் பண்ணையிலும் வெள்ளாடு வளர்ப்புப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

3. 1985-86ஆம் ஆண்டு (28–2–1986 வரை) 61 தலைச்சேரி குட்டிகளும், 59 ஜம்னாபாரி குட்டிகளும் இப்பண்ணைகளில் பிறந்துள்ளன.

4. உள்நாட்டின் ஆடுகளைத் தரம் உயர்த்த இவ்வகை ஆட்டுக் கிடாக்கள் கால்நடை மருத்துவ நிலையங்களில் உள்ளன.

1. (13). கோழி வளர்ப்பு:

1. கடந்த 10 ஆண்டுகளில் கோழி வளர்ப்பு, விரைவான முன்னேற்றத்தை பொதுவாக இந்தியாவிலும், குறிப்பாகத் தமிழ் நாட்டிலும் அடைந்து வருகிறது.

2. கோழி வளப்பவர்களுக்கு தரமான கோழிக் குஞ்சுகளை வளர்ப்பதற்கு வழங்கவும், சரியான தொழில் நுட்ப வழிமுறைகளை அவர்களுக்குச் சொல்லித் தரவும், கால்நடைப் பராமரிப்புத் துறையின் கீழ், 2 குஞ்சு பொரிக்கும் நிலையங்களும், 29 கோழி விரிவாக்க நிலையங்களும் இயங்கி வருகின்றன. இந்நிலையங்கள் வேளாண் மககளுக்குப் பயிற்சி அளிக்கவும் அவர்கள் புறக்கடைக் கோழிப் பிரிவுகளை அமைக்கவும் உதவுகின்றன.

கோழி வளர்க்கும் தனியாருக்கும் துறைப் பணியாளர்களால் தக்க அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. தற்போது, இம்மாநிலத்தில் ஏறக்குறைய 1 கோடி உயரினக் கோழிகள் உள்ளன. கோழிப் பிரிவுகளின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.



1. (14). கோழி நோய் கண்டறியும் கூடம் :

கோழி நோய்களை கண்டறியும் கூடம் ஒன்று, ஈரோட்டில் நிறுவப்பட்டுள்ளது.

1. (15). பன்றி வளர்ப்பு :

1. பன்றி வளர்ப்பு, இம்மாநிலத்தில் சீரான முன்னேற்றத்தை அடைந்து வருகிறது. பன்றி இறைச்சி மலிவான விலங்கினப் புரதச் சத்தை அளிக்கிறது. பன்றிகள் அதிக எண்ணிக்கையில் குட்டிகள் ஈனும் திறன் கொண்டன. உள்ளூர்க்கருப்புப் பன்றிகள், பன்றி இறைச்சியை மிகக் குறைவாகவே தருகின்றன. பன்றிகளில் கலப்பின முறையைக் கையாள்வதன் மூலம் சிறந்த தரமான பன்றிகளைப் பெற முடியும். அவற்றின் எடையும் அதிகமாக இருக்கும்.

2. பன்றி வளர்ப்பை அபிவிருத்தி செய்வதற்காக 5 பன்றி வளர்ப்புப் பிரிவுகள் முறையே, ஓசூர், புதுக்கோட்டை, செட்டிநாடு, திருநெல்வேலி மற்றும் உதகமண்டலம் ஆகிய இடங்களில் உள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் இயங்கி வருகின்றன. மேலும், சைதாப்பேட்டையில் உள்ள கால்நடை மருத்துவமனையிலும் ஒரு பன்றி வளர்ப்புப் பிரிவு இயங்கி வருகிறது. இப்பிரிவுகளில் பெரிய வெள்ளை யார்க்ஷயர் என்னும் அயல் இனப் பன்றிகள் பராமரிக்கப்படுகின்றன. 1985–86–ம் ஆண்டில் (28–2–1986 வரை) பல்வேறு கால்நடைப் பராமரிப்பு திட்டங்களின்கீழ், மொத்தம் 337 பன்றிகள் உள்ளூர்ப் பன்றிகளைத் தரம் உயர்த்துவதற்காக விற்கப்பட்டுள்ளன. சென்னை நகரத்தின் விற்பனைத் தேவைக்காக இறைச்சி விற்பனைக் கடை ஒன்று சைதாப்பேட்டையில் இயங்கி வருகிறது.

1. (16). நாய் வளர்ப்பு :

சைதாப்பேட்டையில் நாய் வளர்ப்புப் பிரிவு ஒன்று இயங்கி வருகிறது. இப்பிரிவின் நோக்கம், இம்மாநிலத்திற்குரிய இராஜ பாளையம் மற்றும் கோம்பை ஆகிய நாய் இனங்களைப் பாதுகாதது அவற்றைப் பிரசித்தப்படுத்துவதேயாகும்.

தற்போது, 8 இராஜபாளையம் நாய்களும், 6 கோம்பை நாய்களும் இப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 1985-86-ம் ஆண்டு வரை, 129 இராஜபாளையம் நாய்க்குட்டிகளும், 41 கோம்பை நாய்க்குட்டிகளுமாக, மொத்தம் 170 நாய்க்குட்டிகள் பொது மக்களுக்கு இப்பிரிவின் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

[1986 ஏப்ரல் 8

1. (17). பசுந் தீவனப் பயிர் வளர்ப்பு :

1. நல்ல பசுந்தீவனத்தை அளிப்பதால்தான் தரம் உயர்த்தப்படும் கால்நடைகளினால் தேவையான பலன் கிடைக்கும். நமது கால்நடைப் பண்ணைகளின் பசுந்தீவனத் தேவையை பூர்த்தி செய்யவும், மேலும் இம்மாநிலத்தில் பசுந்தீவன உற்பத்தியைப் பெருக்கவும், பல்வேறு பசுந்தீவன வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

2. நகராட்சி கழிநீரகப் பண்ணைகளில், பசுந்தீவனப் புற்கள் வளர்க்கப்படுகின்றன. மேலும், பசுந்தீவனப் பயிர்களான மக்காச்சோளம், சோளம் மற்றும் காராமணி ஆகியவை சிறு மற்றும் பெருநிலக்காரர்களின் நிலங்களில் வளர்க்கப்படுகின்றன. இம்மாநிலத்தில் எட்டு பசுந்தீவன விதை உற்பத்திப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. 1985-86 ஆம் ஆண்டில் (28-2-1986 வரை) 74.32 இலட்சம் பசுந்தீவனப் புல் நாற்றுகள், 11.72 மெட்ரிக் டன் பசுந்தீவன விதைகளும், மற்றும் 1.06 இலட்சம் பசுந்தீவனச் செடிகளும் வேளாண் மக்களுக்கு அவர்களின் நிலங்களில் பயிர் செய்ய வழங்கப்பட்டன.

3. மேலும், கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டம் மற்றும் கேந்திர கிராம வட்டாரப் பகுதிகளில் பசுந்தீவனப் புல் நாற்றுகள், பசுந்தீவன விதைகள் மற்றும் பசுந்தீவனச் செடிகள் ஆகியவை மானிய விலையில் வேளாண் மக்களுக்கு அளிக்கப்படுவதுடன், அவர்களுக்கு பசுந்தீவன உற்பத்தி பற்றி இலவசமான தொழில் நுட்பமும் அளிக்கப்படுகிறது. கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டத்தின்கீழ், பசும்புல் வளர்ப்பு, செய்முறைப் பாத்திகள் அமைக்கவும் மற்றும் புல்வெட்டும் கருவிகள் வழங்குவதிலும் மானியங்கள் அளிக்கப்பட்டு விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர். 1985–86 ஆம் ஆண்டில் (28–2–1986 வரை) உயர்ரகத் தீவனப் பயிர் வகைகளைப் பிரபலப்படுத்த பசுந்தீவன விதைகள் கொண்ட 1,200 சிறு பைகள், சிறு மற்றும் குறுநில விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

1. (18). சிறப்புத் திட்டங்கள் :

சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், கிராமப்புறங்களில் கூடுதல் வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதும், சத்துணவுகளாகிய பால், பால் பொருட்கள் இறைச்சி மற்றும் முட்டை போன்றவற்றை உற்பத்தி செய்வதும் சிறப்புத் திட்டங்களின் நோக்கமாகும். இவற்றில் முக்கியமான திட்டங்கள் பின்வருமாறு :—



1986 ஏப்ரல் 8]

1. சிறப்புக் கால்நடை உற்பத்தித் திட்டம்.

சிறப்புக் கால்நடை உற்பத்தித் திட்டம், நான்கு கூறுகளைக் கொண்டுள்ளது. அவை வெவ்வேறு நிறுவனங்கள் மூலம் பல மாவட்டங்களில் கீழ்க்கண்டவாறு செயல்பட்டு வருகின்றன.

| திட்டம். | செயல்படுத்தும் அமைப்பு. | செயல்படுத்தப் படும் மாவட்டங்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. ஆடு உற்பத்தி | கால்நடைப் பராமரிப்புத் துறை. | வட ஆற்காடு, சேலம், திருநெல்வேலி. |
| 2. பன்றி உற்பத்தி | கால்நடைப் பராமரிப்புத் துறை. | மதுரை, வட ஆற்காடு. |
| 3. கன்று வளர்ப்பு | தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம். | வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், கோயம்புத்தூர், மதுரை. |
| 4. கோழி உற்பத்தி | தமிழ்நாடு கோழி வளர்ச்சிக் கழகம். | செங்கல்பட்டு, வட ஆற்காடு, சேலம் மற்றும் மதுரை. |

2. ஆடு உற்பத்தித் திட்டம்.

மொத்தம் ரூ. 4,500 மதிப்பீட்டில் 20 பெட்டை ஆடுகளும், 1 கிடாவும் கொண்ட ஆட்டுப் பிரிவுகளை நிறுவ மானியத் தொகை அளிக்கப்படுகிறது. இந்த மானியம், சிறு விவசாயிகளுக்கு ரூ. 1,125 என்ற அளவிலும், குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு ரூ. 1,500 என்ற அளவிலும் அளிக்கப்படுகிறது. 1976–77 ஆம் ஆண்டிலிருந்து 1984–85 ஆம் ஆண்டு வரை, 17,994 ஆட்டுப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. மானியமாக ரூ. 191.61 இலட்சம் வழங்கப்பட்டுள்ளன. 1985–86 ஆம் ஆண்டில் 745 ஆட்டுப் பிரிவுகள் சேலம், வட ஆற்காடு, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ளன.

3. பன்றி உற்பத்தித் திட்டம்.

இத்திட்டத்தின்கீழ், ரூ. 5,000 மூலதனத்தில் பன்றி வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்த உதவி அளிக்கப்படுகிறது. அதில், சிறு விவசாயிகளுக்கு ரூ. 1,250-ம் குறு விவசாயிகள் மற்றும்

வேளாண் தொழிலாளர்களுக்கு ரூ. 1,665-ம் மானியமாக வழங்கப்படுகின்றன. 1981–82 முதல் 1984–85 வரை 175 பன்றிப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு, ரூ. 2.64 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 1985–86 ஆம் ஆண்டிற்கு, 25 பன்றிப் பிரிவுகள் மதுரை மாவட்டத்தில் ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4. கன்று வளர்ப்புத் திட்டம்.

இத்திட்டத்தின்கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட வேளாண் மக்களுக்குக் கலப்பினக் கன்றுகளை வளர்க்கும்பொருட்டு, கால்நடைத் தீவனம் மானியமாக வழங்கப்படுகிறது. 1977–78 முதல் 1984–85 வரை, 37,949 கன்றுகள் இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டு, ரூ. 430.12 இலட்சம் மானியத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

### 5. கோழி உற்பத்தித் திட்டம்.

(1) இத்திட்டத்தின்கீழ், ரூ. 4,580 முதலீட்டில் 100 கோழிகள் கொண்ட பிரிவுகள் ஏற்படுத்தப்படுகின்றன. இதற்காக சிறு விவசாயிகளுக்கு ரூ. 1,145 மானியமாகவும், குறு விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்களுக்கு ரூ. 1,526 மானியமாகவும் வழங்கப்படுகின்றன.

(2) இதுவரை, 3,098 புதிய கோழிப் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன. மேலும், 1,841 கோழிப் பிரிவுகள் மீண்டும் நிறுவப்பட்டன. 1976–77 ஆம் ஆண்டிலிருந்து 1984–85 ஆம் ஆண்டு முடிய ரூ. 85.27 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### 6. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்.

1. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், மதுரை, பெரியார், இராமநாதபுரம் காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டப் பகுதிகளில் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், கன்றுகள் வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்குக் கால்நடைத் தீவனம் மானியமாக அளிக்கப்படுகிறது. கன்று ஒன்றைப் பேணி வளர்க்க தீவனச் செலவு ரூ. 2,523 ஆகும். இதில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ரூ. 1,261 மானியமாகவும், வேளாண் தொழிலாளர்களுக்கு ரூ. 1,682 மானியமாகவும் அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் 1985–86 ஆம் ஆண்டில் 25 வட்டங்களில் பசும்புல், நாற்றுகள் மற்றும் விதைகள் ஆகியவற்றை பாதி விலையில் வழங்க ரூ. 1 இலட்சத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.





### 7. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

(1) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் இம்மாநிலத்தில் நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், இம்மாவட்டத்தின் வளர்ச்சிக்காக உள்ளுரைக் கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

(2) 1984–85 ஆம் ஆண்டில் உறை விந்து முறை, உதகமண்டலம் மற்றும் குன்னூர் கால்நடை மருத்துவமனைகளிலும் மற்றும் 5 கால்நடை மருந்தகங்களிலும் ரூ.1.92 இலட்சம் செலவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 1985–86 ஆம் ஆண்டில் குருத்துக் குழிப்பண்ணை மற்றும் கூடலூர் கால்நடை மருந்தக முன்னேற்றத்திற்காக, ரூ. 6.39 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 8. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்.

இத்திட்டம், மலைப் பகுதிகளிலுள்ள பழங்குடியினரின் பொருளாதார மேம்பாட்டிற்காகச் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம், சேலம், வட ஆற்காடு, தென் ஆற்காடு, தருமபுரி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் உள்ள 9 பழங்குடியினர் வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் கீழ், பழங்குடியினருக்கு கறவை மாடுகள், செம்மறி மற்றும் வெள்ளாடுகள், கோழிகள், பன்றிப் பிரிவுகள், உழைக்கும் எருதுகள் முதலியவை வழங்கப்படுகின்றன.

1985–86 ஆம் ஆண்டில், பழங்குடியினரின் நலன்களுக்காக கீழ்க்கண்ட பணிகளுக்கு ரூ. 35.86 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| (1) கறவை மாடுகள் வழங்கல் | 95 |
| (2) செம்மறி ஆட்டுப் பிரிவுகள் அமைத்தல் | 231 |
| (3) உழைக்கும் மாடுகள் வழங்கல் | 181 ஜோடிகள் |

### 9. வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டம்.

தொடர்ந்து ஏற்படும் வறட்சியினால் உருவாகும் நலிவைக் குறைக்கும் நோக்குடன், 50 விழுக்காடு மத்திய நிதி உதவியுடன், வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டம் ஒன்று இராமநாதபுரம், காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கம், தர்மபுரி, புதுக்கோட்டை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. கால்நடைப் பராமரிப்புப் பணிகள் இத்திட்டத்தில் முக்கிய பங்கை வகிக்கின்றன. இத்திட்டத்தின் கீழ், தேவையான உள்ளுரைக் கட்டமைப்பு வசதிகள் இந்த மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டு உள்ளன.

1985–86 ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் கோமாரி நோய் தடுப்பூசி போடுதல், பசுந்தீவனம் வளர்த்தல் மற்றும் உறைவிந்து நிலையங்கள் அமைத்தல் ஆகியவற்றிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 1985–86 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டம் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு, ஒரு நடமாடும் கால்நடைப் பிரிவும் மற்றும் குளிர்பதன நிலையமும் நிறுவ அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 10. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.

இது, மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படும் திட்டமாகும். இத்திட்டம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின்கீழ் கால்நடைப் பராமரிப்புத் துறையின் தொழில் நுட்ப உதவியுடன் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. கறவை மாடுகள், செம்மறி ஆடுகள் மற்றும் காளைகள் வழங்கல் போன்றவை இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் மானியத்தில் பெரும் பங்கைப் பெறுகிறது. வறுமை கோட்டிற்குக் கீழ் உள்ள பல குடும்பங்களுக்கு இந்தத் திட்டத்தினால் பெரும் நிதி ஆதாயங்கள் கிடைக்கின்றன.

1985–86 ஆம் ஆண்டில் (28—2—1986) வரை, கீழ்க்காணும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| (1) கறவை மாடுகள் வழங்குதல் | 25,174 |
| (2) செம்மறி ஆட்டுப் பிரிவுகள் அமைத்தல் | 1,905 |
| (3) வெள்ளாட்டுப் பிரிவுகள் அமைத்தல் | 761 |
| (4) கோழிப் பிரிவுகள் அமைத்தல் | 177 |
| (5) வாத்துப் பிரிவுகள் அமைத்தல் | 43 |
| (6) உழைக்கும் மாடுகள் வழங்குதல் | 10 (ஜோடிகள்) |
| (7) பன்றிப் பிரிவுகள் அமைத்தல் | 3 |

### 11. சிறப்பு மத்திய உதவித் திட்டம்.

(1) 1983–84 ஆம் ஆண்டு ஆதி திராவிட மக்களின் நலன்களுக்காகவே ஒரு திட்டம் ரூ. 50.28 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டம், சமுதாயத்தின் நலிந்த பிரிவினரிடையே ஆடு உற்பத்தி, பசுந்தீவன உற்பத்தி மற்றும் இறைச்சிக் கோழி உற்பத்தி ஆகியவற்றை அதிகரிக்கும் வகையில் உருவாக்கப் பட்டுள்ளது. இவற்றில் முதல் இரண்டு பணிகள் கால்நடைப் பராமரிப்புத் துறையினரால், செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இறைச்சிக் கோழி உற்பத்தித் திட்டம், தமிழ்நாடு கோழி வளர்ச்சிக் கழகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.





(2) 1983–84 ஆம் ஆண்டில் ஆடு உற்பத்தித் திட்டத்தின்கீழ் 1,500 ஆட்டுப் பிரிவுகள், ரூ. 31.65 இலட்சம் மானியத்துடன் துவக்கப்பட்டன. 1984–85 ஆம் ஆண்டில் 992 ஆட்டுப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு, ரூ. 20.94 இலட்சம் மானியமாக வழங்கப் பட்டது. 1985–86 ஆம் ஆண்டில் இதுவரை 209 ஆட்டுப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

(3) பசுந்தீவன உற்பத்தித் திட்டத்தின்கீழ் ஈச்சங்கோட்டையிலுள்ள அயலினக் கால்நடை வளர்ப்புப் பண்ணையிலும், படப்பையிலுள்ள பசுந்தீவன விதைகள் உற்பத்திப் பண்ணையிலும் பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்படுகிறது. அவை ஆதி திராவிட குடும்பங்களுக்கு ஒரு கிலோ 0.10 பைசா வீதம் வழங்கப்படுகிறது.

### 12. ஒருங்கிணைந்த மாதிரி அளவீடுத் திட்டம் (மாநில அளவில்).

1977–78 ஆம் ஆண்டிலிருந்து இம்மாநிலத்தில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. இதன்கீழ் முக்கியமாக கால்நடை உற்பத்திப் பொருட்களான பால், முட்டை, கம்பளி மற்றும் இறைச்சி ஆகியவற்றின் ஆண்டு உற்பத்தி அளவை மதிப்பீடு செய்யவும், மற்றும் கால்நடைகளைப் பேணி வரும் முறைகளை ஆய்வு செய்யவும் வகை செய்யப்பட்டுள்ளது. 1977–78 லிருந்து 1984–85 ஆம் ஆண்டு முடிய 1,845 கிராமங்களில் இந்த அளவீடு முடிக்கப்பட்டுள்ளது. 1983–84 மற்றும் 1984–85 ஆம் ஆண்டிற்கான இந்த அளவீட்டின் முடிவுகள் பின்வருமாறு :

| | 1983–84. (1) | 1984–85. (2) |
|---|---|---|
| 1. பால் உற்பத்தி ('000 மெட்ரிக் டன்னில்) | 2,561.6 | 2,846.13 |
| 2. முட்டை உற்பத்தி (மில்லியன்) | 996 | 1,068.95 |
| 3. இறைச்சி உற்பத்தி (மில்லியன் கிலோக்களில்) | 31.73 | 31.31 |

இந்த அளவீடுத் திட்டம் 1985–86 ஆம் ஆண்டிலும் தொடரப் படுகிறது.

### 13. மாதிரி அளவீடுத் திட்டம் (மாவட்ட அளவில்).

(1) 1983–84 ஆம் ஆண்டிலிருந்து மாவட்ட அளவிலான மாதிரி அளவீடுத் திட்டம் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகிறது.

(2) இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், பால், முட்டை, கம்பளி மற்றும் இறைச்சி உற்பத்தி ஆகியவற்றைத் தேர்ந்தெடுக்கப் பட்ட மாவட்டங்களில் சிலவற்றில் மதிப்பீடு செய்து அதை மாநில அளவிலான மதிப்பீடுகளுடன் ஒப்பீடு செய்வதாகும். மேலும், சில தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில், பால் மற்றும் முட்டை உற்பத்தி செய்ய ஆகும் செலவினத்தை ஆய்வு செய்வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

(3) தற்போது இத்திட்டம் வட ஆற்காடு, பெரியார், மதுரை மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 14. தோல் மற்றும் பதனிட்ட தோல் பற்றிய மதிப்பீடு செய்யும் முன்னோடி மாதிரி அளவீடு.

மத்திய அரசின் உதவியுடன், 30-12-1984 முதல் இத்திட்டம் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் நோக்கம், தோல் மற்றும் பதனிடப்பட்ட தோல் பொருட்களின் உற்பத்தியையும் அதிலிருந்து இறுதியாக பெறப்படும் தோல் மற்றும் தோல் பொருட்களின் அளவையும் மதிப்பீடு செய்வ தாகும். தோல் மற்றும் தோல்சுளைச் சுத்திகரித்தல், பாது காத்தல், தரம் பிரித்தல் மற்றும் அவற்றின் விலையை நிர்ணயம் செய்தல் போன்ற விபரங்கள் இத்திட்டத்தின்கீழ் சேகரிக்கப்பட் டுள்ளன. அவ்விபரங்கள் மேற்கண்ட பொருள்கள் உற்பத்தியாகும் இடங்கள், விற்பனை செய்யப்படும் இடங்கள் மற்றும் கொண்டு செல்லப்படும் இடங்கள் ஆகிய பல முனைகளிலிருந்து சேகரிக்கப் படுகின்றன.

கோடைக்காலம், குளிர்காலம் மற்றும் மாரிக்கால அறிக்கைகள் மதிப்பீட்டிற்காக பெறப்பட்டுள்ளன.

### III. கால்நடைப் பண்ணைகள் :

(1) தரமான கால்நடைகளைப் பராமரிக்கவும், பசுந்தீவன விதைப் பொருட்களை உற்பத்தி செய்யவும், கால்நடைப் பண்ணைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவை, கால்நடைப் பராமரிப்பு பற்றிய மாதிரிப் பண்ணைகளாகவும், அதன் மூலம் பொதுமக்களுக்கு கால்நடை வளர்ச்சி நடவடிக்கைகளில் ஆர்வம் ஊட்டுவனவாகவும் இயங்கி வருகின்றன. இப்பண்ணைகள் தரமான பொலிகாளைகள், கறவை மாடுகள், ஆட்டுக் கிடாக்கள் மற்றும் பன்றிகள் ஆகியவற்றை விவசாயிகளுக்கு அளித்து உதவு கின்றன. மேலும் அவற்றை பல்வேறு கால்நடை வளர்ச்சித் திட்டங்களுக்கும் அளித்து உதவுகின்றன. மேலும், இப்பண்ணைகள் வேளாண் மக்களுக்கு தீவன விதை, பசும்புல் நாற்றுக்கள் மற்றும் பசுந்தீவனச் செடிகள் ஆகியவற்றை வழங்குகின்றன.



(2) கால்நடைப் பராமரிப்புத் துறையின்கீழ், தற்போது 9 கால்நடைப் பண்ணைகளும், 2 செம்மறியாட்டுப் பண்ணைகளும் ஒரு கோழிப் பண்ணையும் இயங்கி வருகின்றன.

(3) பல்வேறு கால்நடைப் பண்ணைகள் அமைந்துள்ள இடங்கள் பின்வருமாறு :—

1. மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஓசூர், தர்மபுரி மாவட்டம்.
2. மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம்.
3. மாவட்டக் கால்நடைப் பண்ணை, கொருக்கை, தஞ்சாவூர் மாவட்டம்.
4. மாவட்டக் கால்நடைப் பண்ணை, செட்டிநாடு, பசும் பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்.
5. மாவட்டக் கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை, புதுகோட்டை மாவட்டம்.
6. மாவட்டக் கால்நடைப் பண்ணை, அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்.
7. மாவட்டக் கால்நடைப் பண்ணை, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்.
8. அயலினக் கால்நடை வளர்ப்புப் பண்ணை, ஈச்சங் கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.
9. அரசு பால் பண்ணை, மாதவரம், செங்கற்பட்டு மாவட்டம்.

செம்மறி ஆட்டுப் பண்ணைகள், சாத்தூர் மற்றும் சின்ன சேலம் ஆகிய இடங்களிலும், கோழியினப் பண்ணை, காட்டுப் பாக்கத்திலும் உள்ளன.

கால்நடைப் பண்ணைகளிலிருந்து 1985-86 ஆம் ஆண்டில் (28-2-1986 வரை) 10.99 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 826 கன்றுகள் இப்பண்ணைகளில் பிறந் துள்ளன. 13,318 மெட்ரிக் டன்கள் பசுந்தீவனமும் இந்தப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. 1985-86 ஆம் ஆண்டில் 1,325 ஆட்டுக் குட்டிகள் பிறந்துள்ளன ; 718 செம்மறி ஆடுகள், வளர்ப்பதற்காக விநியோகிக்கப்பட்டுள்ளன ; பன்றிப் பிரிவுகளில் 597 பன்றிக் குட்டிகள் பிறந்துள்ளன ; 337 பன்றிகள் பொதுமக்களுக்கு விற்கப்பட்டுள்ளன.

(அ) அயலினக் கால்நடை வளர்ப்புப் பண்ணை, ஈச்சங்கோட்டை.

இப்பண்ணை, தஞ்சாவூரிலிருந்து 16 கி.மீ. தொலைவில் ஈச்சங்கோட்டை என்னுமிடத்தில் உள்ளது. செயற்கை முறைக் கருவூட்டல் மூலம், கலப்பினத்தை உண்டாக்க தரமுள்ள அயலின

[1986 ஏப்ரல் 8

ஜெர்சி பொலி காளைகளை முதலில் தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களுக்கும், பின்னர் மாநிலத்தில் அனைத்துப் பகுதிகளுக்கும் வழங்குவதே இப்பண்ணையின் முக்கிய நோக்கமாகும். தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கால்நடை மருத்துவ நிலையங்கள் மற்றும் கிளை நிலையங்கள் ஆகியவற்றில் உறைவிந்து தொழில் நுட்ப முறையை அளிப்பதற்குத் தேவையான திரவ நைட்ரஜன் மற்றும் உறைவிந்து குச்சிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்கு "டானிடா" நிறுவன உதவியுடன் ஓர் உறைவிந்து நிலையம் நிறுவப்பட்டு, இந்திய அரசு உதவியுடன் வலுப்படுத்தப்பட்டுள்ளது. ஈச்சங்கோட்டையிலுள்ள அயலினக் கால்நடைப் பண்ணையிலும், அபிஷேகப்பட்டியிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையிலும் 20,000 லிட்டர் திரவ நைட்ரஜன், 2,81,000 உறைவிந்து குச்சிகள் ஆகியவை உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

(ஆ) ஓங்கோல் கால்நடை வளர்ப்புப் பிரிவு, மாதவரம்.

பால் மற்றும் வேலைத் திறன் ஆகிய இரு தேவைகளை நிறைவு செய்யும் ஓங்கோல் இன ஆவினத்தை உற்பத்தி செய்து, வேளாண் மக்களுக்கு அளிப்பது இப்பண்ணையின் நோக்கமாகும். அடிப்படை இருப்பதாக 20 ஓங்கோல் இன ஆவினத்துடன் ஆரம்பிக்கப்பட்ட மந்தை தற்போது 57 ஆக உயர்ந்துள்ளது.

IV. கால்நடை நலப் பணிகள் :

1. கால்நடை மருத்துவ நிலையங்கள் :

கால்நடை வளர்ச்சி மற்றும் உற்பத்தி ஆகியவற்றில் பயனுள்ள விளைவுகளை ஏற்படுத்த, தரமான நலப்பணிகள் அளிப்பது முதல் தேவையாகும். பல்லாயிரக்கணக்கான நமது கால்நடைகளுக்கு தரமான கால்நடை நலப் பணிகளை அளிக்கும் பொருட்டு கால்நடைப் பராமப்புத் துறை கால்நடை மருத்துவ நிலையங்கள் மூலம் நலப்பணி வசதிகள் பலவற்றை அளித்து வருகிறது. தற்போது இம்மாநிலத்தில் மொத்தம் 782 கால்நடை மருத்துவ நிலையங்கள் உள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:—

| | |
|---|---|
| அ. கால்நடை மருத்துவமனைகள் | 53 |
| ஆ. கால்நடை மருந்தகங்கள் | 632 |
| இ. கால்நடை மருந்தகம் மற்றும் கேந்திர கிராம நிலையங்கள். | 72 |
| ஈ. கால்நடை மருத்துவமனைகள் மற்றும் கேந்திர கிராம நிலையங்கள். | 2 |
| உ. பிரதம மருத்துவ நிலையங்கள் | 23 |
| மொத்தம் | 782 |



1986 ஏப்ரல் 8]

1985—86 ஆம் ஆண்டில் 10 கால்நடை மருந்தகங்கள் புதிதாகத் திறக்கப்பட்டன. மேலும், 2 கால்நடை மருத்துவமனைகள் கால்நடை பிரதம மருத்துவ நிலையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டன.

1985—86 ஆம் ஆண்டு (28—2—1986 வரை) 85.87 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. 3.82 இலட்சம் கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கம் செய்யப்பட்டது. 125.99 இலட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

நோயுற்ற கால்நடைகளுக்கு முதல் உதவி அளிக்கும் பொருட்டு, 2,226 கிளை நிலையங்கள் கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டம், கேந்திர கிராமத் திட்டம் மற்றும் இதரப் பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன.

மாநிலததில் ஏற்படும் கால்நடைத் தொற்று நோய் பற்றிய விவரங்களை கள நிலையங்களுக்குத் தெரிவிக்க 11 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. மேலும் மதுரையில் எக்ஸ்ரே கதிர் பிரிவு ஒன்றும் நோய் கண்டறிவதற்காக நிறுவப்பட்டுள்ளது.

மேலும், கால்நடைப் பராமரிப்புத் துறையின் பல்வேறு திட்டங்களின்கீழ் 51 நடமாடும் கால்நடைப் பிரிவுகள் கிராமத்திலுள்ள மக்களின் கால்நடைகளுக்கு அவர்களது இல்லம் சென்று மருத்துவம் செய்து வருகின்றன.

2. வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம் :

வெக்கை நோய் ஒரு கொடிய தொற்று நோயாகும். இந்நோயினால் பெருமளவில் கால்நடைகள் இறக்கின்றன. வெக்கை நோய் மாவட்டக் குழு, கண்காணிப்புக் குழு, சோதனைச் சாவடி ஆகியவற்றின் மூலம் அவ்வப்போது தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றன.

3. மாவட்டக் குழு, தடுப்புச் சாவடி மற்றும் கண்காணிப்புக் குழு ஆகியவற்றின் பணி விவரங்கள்.

(அ) வெக்கை நோய் மாவட்டக் குழுக்கள் :

மாவட்டக் குழுக்கள், கால்நடைகளுக்கு, முக்கியமாக மாடு, செம்மறியாடு, வெள்ளாடு மற்றும் இதர இனங்கள் போன்ற வற்றிற்கு, தடுப்பூசி போடுவதின்மூலம் நோய் எதிர்ப்புத் திறனை உயர்த்தி, இந்நோயைக் கட்டுப்படுத்தும் பணியைச் செய்கின்றன. இக்குழுக்களின் தலைமையிடம் அந்தந்த மாவட்டத் தலைநகரே ஆகும். ஒவ்வொரு மாவட்டத்திலும் திட்டமிட்ட வகையில் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை அம்மாவட்டத்திலுள்ள அனைத்துக்

[1986 ஏப்ரல்

கால்நடைகளுக்கும் விடுபடாமல் தடுப்பூசி போடப்படுகிறது. இவ்வாறு தடுப்பூசி போடப்பட்ட இடங்களுக்கும் கண்காணிப்பு குழு தடுப்பூசி போடும் இடங்களுக்கும் இடையே இணக்க விடுபடாமல் பாதுகாக்கப்படுகிறது.

**(ஆ) வெக்கை நோய் கண்காணிப்புக் குழுக்கள் :**

வெக்கை நோய் கண்காணிப்புக் குழுக்களால் இரண்டு மாநிலங்களுக்கு இடையே உள்ள எல்லைக்கு 15 கி.மீ. சுற்றளவில் உள்ள இடங்களில் தடுப்பூசி போடப்பட்டு நோய் தடுப்பு முறைகள் கையாளப்படுகின்றன. இதன் மூலம் நோய் இல்லா நிலை உண்டாகி நோய் பரவுதல் தடுக்கப்படுகிறது.

**(இ) வெக்கை நோய் சோதனைச் சாவடிகள் :**

மாநிலத்தின் நெடுஞ்சாலைகள் மற்றும் முக்கியமான வழிப் பாதைகள் மூலம் மாநிலத்திற்கு உள்ளே வரும் மற்றும் மாநிலத் திலிருந்து வெளிச்செல்லும் கால்நடைகளுக்கு வெக்கை நோய் தடுப்புச் சாவடிகளில் தடுப்பூசி போடப்படுகிறது. இதன்மூலம் அருகாமையிலுள்ள மாநிலங்களிலிருந்து வரும் தடுப்பூசி போடாத கால்நடைகள் மூலம் வெக்கை நோய் பரவுவது தடுக்கப்படுகிறது.

தற்போது கீழ்க்கண்ட பிரிவுகள் மூலம் வெக்கை நோய் தடுப் பூசி மேற்கொள்ளப்படுகின்றது:—

| | | | |
|---|---|---|---|
| மாவட்டக் குழுக்கள் | .. | .. | 18 |
| கண்காணிப்புக் குழுக்கள் | .. | .. | 10 |
| தடுப்புச் சாவடிகள் | .. | .. | 10 |

1985–86 ஆம் ஆண்டில் (28—2—1986 வரை) துறைப் பணி யாளர்கள் மூலமும், குழுக்கள் மூலமும் 38.17 இலட்சம் கால்நடை களுக்கு வெக்கை நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

**4. கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம், இராணிப்பேட்டை.**

1932 ஆம் ஆண்டிலிருந்து இந்நிலையம் படிப்படியாக வளர்ந்து கடந்த 50 ஆண்டுகளில் பல்வேறு நிலைகளில் வளர்ச்சி யுற்றுள்ளது. இந்நிலையத்தில் தற்போது தடுப்பூசிகள் (நச்சு ஊநீர் மற்றும் நுண்கிருமிகள்) கலக்கு மருந்துகள் மற்றும் கண்டு பிடிப்பு மருந்துகள் ஆகியவை உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன.

இந்நிலையத்தின் நோக்கமாவது, கால்நடைகளுக்கு வரும் தொற்று நோய்களை எதிர்த்து போராடும் மருந்துகள் தயாரிப்பதாகும்.



1986 ஏப்ரல் 8]

இந்நிலையம், கோமாரி நோய் பற்றிய ஆராய்ச்சியை மேற் கொள்ள அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சி 1972-லிருந்து நடை பெற்று வருகிறது. இதற்கு இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தின் நிதி உதவி அளிக்கப்படுகிறது. இந்நிலையத்தில் பணி புரியும் அலுவலர்கள், தடுப்பூசி மருந்துகள் தயாரிக்க உதவு வதுடன், தற்சமயம் இருக்கும் தடுப்பூசி மருந்துகள் மற்றும் புதிய மருந்துகள் தயாரிப்பது குறித்த ஆராய்ச்சிகளையும் செய்து வருகின்றனர்.

**5. கோமாரி நோய் தடுப்புத் திட்டம் :**

கோமாரி நோய் வரும் முன்பே தடுப்பூசி போடப்படுதல் வேண்டும். நோய் வெளிப்பட ஆரம்பித்துவிட்டால், அது விரைவில், அருகில் உள்ள எல்லா மாடுகளுக்கும் பரவி விடும். தடுப்பூசி ஆறு மாதங்களுக்கே தடுப்புச் சக்தியைத் தரவல்லது. எனவே தொடர் தடுப்பூசி போடுதல் தடுப்புச் சக்தியை வெகு காலம் கொண்டிருக்க உதவுகிறது. கலப்பினக் கால்நடைகள் மற்றும் இளங்கன்றுகள் ஆகியவை பெரும்பாலும் இந்நோயினால் வருந்துகின்றன. இந்நோய் கால்நடைகளின் உடல் நலனையும், பால் உற்பத்தித் திறனையும் பாதிக்கிறது. கால்நடைகளின் மரபுத் தன்மையை நிலை நிறுத்தவும், தேசியப் பொருளாதார இழப்பை தவிர்க்கவும், கால்நடைகளுக்கு தடுப்பூசி போடுதல் இன்றியமை யாதது.

சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்கள் ஆகியோரின் கால்நடைகளை கோமாரி நோயி லிருந்து பாதுகாக்க 1976–77 ஆம் ஆண்டிலிருந்து, மத்திய அரசின் நிதி உதவியுடன் ஒரு திட்டம் செயல்பட்டு வருகிறது. பாலிவேலண்ட் மருந்தின் விலையில் 50 சதவீதத்தை மத்திய அரசும் மாநில அரசும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன. மீதியை கால்நடை உரிமையாளர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். மானோ வேலண்ட் மருந்தின் விலையை மத்திய அரசும் மாநில அரசும் சமபங்காக ஏற்கின்றன.

**6. தேசிய பால்வள அபிவிருத்தி வாரியத் திட்டம் :**

தேசிய பால்வள வாரியம் இம்மாநிலத்தில் கோமாரி நோய் பரவுவதைத் தடுக்க ஏழாண்டுக் காலத் திட்டம் ஒன்றை மேற் கொண்டுள்ளது. இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு ரூ. 20 கோடி ஆகும். இத்திட்டம் 1983–84 முதல் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. 1989–90 வரை இது தொடர்ந்து செயல் படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் இலவசமாக தடுப்பூசி போடப் பட்டு வருகிறது.

[1986 ஏப்ரல் 8

மாநில அரசு தேசிய பால்வள அபிவிருத்தி வாரியத்தின் இத்திட்டத்தை அங்கீகாரம் செய்து, அதற்காக ரூ. 1.73 கோடிக்கு அனுமதி வழங்கியுள்ளது. 1984–85 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்கள் கொண்டு வரப்பட்டன.

1985–86 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் மதுரை மற்றும் அண்ணா மாவட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

1986–87 ஆம் ஆண்டில் இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் இத்திட்டத்தைத் தொடர்வதுடன், கோயம்புத்தூர், பெரியார் மற்றும் மதுரை மாவட்டங்களின் எல்லைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

7. கால்நடை நோய்த் தீவிரக் கண்காணிப்புத் திட்டம் :

இம்மாநிலத்தில் இத்திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசு அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் நோய் பரவுவதை கண்காணிக்கும் பிரிவு ஒன்று சென்னையில் 1983–84 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. நோய் தீவிரக் கண்காணிப்பு மூலம் பல்வேறு வகையான நோய்கள் பரவும் தன்மை, நோய் ஆரம்பம், நோய் தொற்றும் வழிகள் போன்றவை கண்டறியப்படுகின்றன. மேலும், நோய் தாக்கக்கூடிய கால்நடைகளும் இதன்மூலம் கண்டறியப்படுகின்றன.

1971–72 முதல் 1984–85 வரை இம்மாநிலத்தில் பரவிய நோய்களைப் பற்றிய விவரங்கள், 1983–84-லிருந்து 1985–86 முடிய மேற்கண்ட பிரிவால் சேகரிக்கப்பட்டன. இதுபற்றிய வரைபடங்கள் தயாரித்தல், சேகரிக்கப்பட்ட விவரங்களை ஆராய்தல் போன்றவை தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

8. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கால்நடை நோய்களின் கட்டுப்பாடு :

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கால்நடை நோய்கள் கட்டுப்பாடு மற்றும் அதன் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திட்டம் ஒன்று, மத்திய அரசின் நிதி உதவியுடன் ரூ. 24 இலட்சம் செலவில் 1985–86 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான செலவினத்தை மத்திய, மாநில அரசுகள் சமமாகப் பங்கிட்டுக் கொள்கின்றன. இத்திட்டப் பணிகள் பற்றிய விவரம் பின்வருமாறு :

(1) நாகர்கோவிலில் நோயற்ற மண்டலம் ஏற்படுத்துதல் :

(அ) பெருமளவில், வெக்கை மற்றும் கோமாரி நோய் தடுப்பூசி போடுதல்.



1986 ஏப்ரல் 8]

(ஆ) சோதனைச் சாவடிகள் ஏற்படுத்துதல்.

(இ) நோய் கண்காணிப்பு, கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை ஏற்படுத்துதல்.

| | | குறியீடு. | சாதனை. | |
|---|---|---|---|---|
| 1. நோயற்ற மண்டலம். | (தடுப்பூசி போடப் பட்டவைகள் எண்ணிக்கை.) | 1.62 இலட்சம் | 1ம் சுற்று<br>2ம் சுற்று | 76,029<br>98,754 |
| 2. இடைப்பட்ட மண்டலம் | .. | 2.05 இலட்சம் | 1ம் சுற்று<br>2ம் சுற்று | 52,522<br>26,984 |
| 3. சோதனைச் சாவடி. | .. | | | 15,094 |
| | | | மொத்தம் | 2,69,383 |

(2) கோயம்புத்தூரில் நாய்களுக்கு வெறி நோய் தடுப்புப் பிரிவு ஏற்படுத்துதல் :

தடுப்பூசி போடப்பட்ட நாய்கள் .. 3,003

(3) ஈரோட்டிலுள்ள கோழி நோய் கண்டறியும் பரிசோதனைக் கூடத்தை வலுப்படுத்துதல் :

இந்நிலையம் பின்வரும் பணிகளை மேற்கொண்டு வருகிறது:—

(அ) அப்பகுதியிலுள்ள கோழிப் பண்ணைகளில் நோய்கள் கண்டறியும் பணியை மேற்கொள்ளுதல்.

(ஆ) கோழி நோய்கள் வராமல் தடுப்பது மற்றும் சிகிச்சை பற்றி தேவையான தொழில் நுட்ப அறிவு வழங்குதல்.

(இ) அப்பகுதியிலுள்ள கோழிகளுக்குத் தேவையான மருந்துகள் அளித்தல்.

[1986 ஏப்ரல் 8

9. ஈரோடு, கோழி நோய் கண்டறியும் ஆய்வுக் கூடத்தில் செய்யப்பட்ட பணிகளின் விவரம் :

| | |
|---|---|
| (1) நோய் கிளர்ச்சிப் பற்றி பெறப்பட்ட அறிக்கைகள் | 36 |
| (2) நோய் கிளர்ச்சி அறிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் | 36 |
| (3) பிணப் பரிசோதனை செய்யப்பட்டவை | 306 |
| (4) மாதிரிகள் சோதனை செய்தது : | |
| கழிச்சல் (டிராப்பிங்ஸ்) | 600 |
| இரத்த மாதிரிகள் | 124 |
| இரத்தப் பரிசோதனை | 64 |
| (5) இரத்த பரிசோதனை (பாசிடிவ்) | 4 |
| (6) பண்ணைகளைப் பார்வையிட்டது | 764 |
| (7) பார்வையிடப்பட்ட கிராமங்கள் | 457 |
| (8) பயணம் செய்த நாட்களின் எண்ணிக்கை | 169 |

10. வெக்கை நோய் தீவிரக் கண்காணிப்பு மற்றும் தடுப்பூசி போடும் பணி :

இம்மாநிலத்தில் கால்நடைப் பராமரிப்பு அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்படாத வெக்கை நோய் தோன்றும் இடங்களைக் கண்டு பிடித்து அந்நோயை மாநிலத்தில் இருந்து அறவே நீக்குதல், நோயுற்ற கால்நடைகளை பிரித்து அவற்றிற்கு வைத்தியம் செய்தல், அவை இறந்த பிறகு அவற்றைப் புதைக்கும் வரை கண்காணித்தல், தீவனங்களுக்கு ஓரளவு மான்யம் வழங்குதல், பாதிக்கப்பட்ட கிராமங்களில் நோயைத் தடுப்பதற்கு தடுபபூசி போடுதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இதுவரை ஆறு ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள் கீழ்க்கண்டவாறு மேற்கொள்ளப்பட்டுள்ளன :—

முதல் ஆராயச்சிக் கண்டுபிடிப்பு 1980-81 : 15—2—1981 முதல் 15—3—1981 வரை.

2 ஆம் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பு 1981-82 : 1—1—1982 முதல் 30—1—1982 வரை.

3 ஆம் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பு 1982-83 : 1—11—1982 முதல் 31—12—1982 வரை.

4 ஆம் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பு 1983-84 : 1—2—1984 முதல் 29—2—1984 முடிய.

5 ஆம் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பு 1984-85 : 1—11—1984 முதல் 31—12—1984 வரை.

6 ஆம் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பு 1985-86 : 10—2—1986 முதல் 28—2—1986 வரை.



1986 ஏப்ரல் 8]

V. கால்நடைப் பராமரிப்புத் துறையின் நிர்வாக அமைப்பு :

(1) கால்நடைப் பராமரிப்புத் துறை மண்டல அடிப்படையில் இயங்குகிறது. இயக்குநர் தலைமையில் சென்னையில் செயல் படும் இந்த இயக்குநரகத்தில் துறை நடவடிக்கைகள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்படுகின்றன. தொழில் நுட்பம், திட்டக் கண் காணிப்பு மற்றும் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்தல் ஆகிய பணிகளில் இயக்குநருக்கு உதவி புரிய இரண்டு கூடுதல் இயக்குநர்களும், 3 இணை இயக்குநர்களும், 2 துணை இயக்குநர் களும் பணிபுரிகின்றனர். அலுவலர்கள் நிர்வாக விஷயங்களில் இயக்குநருக்கு உதவி புரிய ஒரு முதன்மை பணியாளர் அதிகாரி யும், நிதி சம்பந்தப்பட்ட விஷயங்களில் உதவி புரிய நிதி ஆலோசகர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலரும் பணிபுரி கின்றனர்.

(2) கால்நடைப் பராமரிப்புப் பணிகளுக்காக, இம்மாநிலம் 13 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டல மும் ஒரு கால்நடைப் பராமரிப்பு இணை இயக்குநரின் பொறுப்பி லுள்ளது. ஒவ்வொரு மண்டல இணை இயக்குநருக்கும் உதவி புரிய ஒரு வல்லுநர் உள்ளார். மண்டல அளவிற்குக் கீழ 63 கால்நடை பராமரிப்புக் கோட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு காட்டமும், ஒரு கால்நடை பாரமரிப்பு உதவி இயக்குநர் பொறுப்பிலுள்ளது. இவர்கள் ஒவ்வொரு கோட்டத்திலுமுள்ள கால்நடை பராமரிப்புத் துறை நடவடிக்கைகளை மேற்கொள்ளு இன்றனர்.

(3) இது தவிர, இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம், கூடுதல் இயக்குநர் நிலையிலுள்ள ஒரு இயக்குநர் தலைமையில் இயங்குகிறது.

(4) மாநிலத்தில் ஒன்பது கால்நடைப் பண்ணைகளும் இரண்டு ஆட்டுப் பண்ணைகளும் உள்ளன. அவற்றில் நீச்சங்கோட்டை யில் உள்ள அயலினக் கால்நடைப் பண்ணையும், புதுக்கோட்டை மாவட்டக் கால்நடைப் பண்ணையும் தனித்தனியே ஒரு கூடுதல் இயக்குநரின் தலைமையில் இயங்கி வருகின்றன. மாத்தவரத்தி லுள்ள அரசுப் பால் பண்ணை, ஓர் இணை இயக்குநரின் தலைமை யிலும், இதர கால்நடைப் பண்ணைகளும், ஆட்டுப் பண்ணைகளும் ஒவ்வொரு துணை இயக்குநரின் தலைமையிலும் இயங்குகின்றன. காட்டுப்பாக்கத்திலுள்ள கோழிப் பண்ணை ஓர் உதவி இயக்கு நரின் தலைமையில் இயங்குகிறது.

(5) மாநிலத்திலுள்ள 11 கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டங்களும் மற்றும் 8 கேந்திர கிராமத் திட்டங்களும் ஒவ்வொரு துணை இயக்குநரின் தலைமையில் இயங்குகின்றன.

[1986 ஏப்ரல் 8

## VI. 1986-87-க்கான புதிய திட்டங்கள்.

கீழ்க்கண்ட புதிய திட்டங்களை 1986-87ஆம் ஆண்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| திட்டத்தின் பெயர். | எண்ணிக்கை. | ஒதுக்கீடு. (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. உறைவிந்து முறையை விஸ்தரிப்பு செய்தல் .. | 250 நிலையங்கள் | 23·42 |
| 2. வெறிநாய் கடி நோய் தடுப்பு மருந்து (BPL) உற்பத்தி பிரிவினை இராணிப் பட்டை நோய் தடுப்பு நிலையத்தில் ஏற்படுத்துதல் .. | | 2.42 |
| 3. இராணிப்பேட்டை நோய் தடுப்பு நிலையத்தில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல் .. | | 7.00 |
| 4. கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவ மனையாக நிலை உயர்த்துதல் .. .. | | 2.46 |
| 5. மண்டல அளவில் மருந்து கிடங்குகள் ஏற்படுத்துதல் .. .. | 1 | 1.52 |
| 6. (அ) தீவனப்புல், விதைகள் மற்றும் மரக் கன்றுகள் பாதி விலையில் விநியோகம் செய்தல் .. .. .. | 41 இலட்சம் புல் தூர்கள். 5 டன் விதைகள் 16,000 மரக் கன்றுகள். | 1.75 |
| (ஆ) தீவன செயல் விளக்கப் புல்பாத்திகள் .. | 500 | 1.25 |
| (இ) கையினால் இயக்கும் தீவனம் வெட்டும் கருவிகள் வழங்கல் .. | 50 | 0·5[illegible] |



1986 ஏப்ரல் 8]

| திட்டத்தின் பெயர். | எண்ணிக்கை. | | ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| (1) | (2) | | (3) |
| 7. உறைவிந்து முறையில் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல்— | | | |
| (அ) கால்நடை உதவி மருத்துவர் .. .. | 100 | | |
| (ஆ) கால்நடை ஆய்வாளர்கள் .. .. | 250 | | 0.10 |
| 8. கால்நடை பராமரிப்புப் பணியாளர்களுக்குப் பயிற்சி— | | | |
| (அ) மலட்டுத் தன்மை நீக்கம் .. .. | 50 | | |
| (ஆ) கால்நடைகளிலிருந்து மனிதனுக்கு பரவும் நோய் .. .. | 10 | | |
| (இ) செம்மறி ஆடு வளர்ப்பு .. .. | 5 | 115 | 0.86 |
| (ஈ) வெள்ளாடு வளர்ப்பு | 5 | | |
| (உ) பிரச்சாரம் மற்றும் விளம்பரம் .. .. | 10 | | |
| (ஊ) கூட்டுறவு .. | 35 | | |
| 9. தீவன உற்பத்தியில் 100 விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல் .. .. | 100 | | 0.39 |
| 0. கால்நடைப் பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நிர்வாகத்தை வலுப்படுத்துதல் .. .. | | | 2.33 |
| 11. கால்நடைத் துணைப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல் .. | 125 நபர். | | 1.13 |
| 12. தீவனப் பகுப்பாய்வு ஆய்வுக்கூடம் .. .. | 1 | | 1.96 |
| | மொத்தம் .. | | 47.[illegible] |

## VII. நிறுவனங்கள்.

### (அ) தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம்.

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் (டாப்கோ) 12—7—1973 ஆம் நாளன்று கோழி வளர்ப்பினை மேம்படுத்தி பல வளர்ச்சித் திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தவும் வணிக முறையில் இத்தொழிலினை விரிவாக்கவும் ரூபாய் 100 இலட்சங்களை மூலதனமாகக் கொண்டு ஓர் அரசு நிறுவனமாகத் துவக்கப்பட்டது. தலைமை அலுவலகத்தை சென்னையில் கொண்டுள்ள இந்நிறுவனம் பரவலாக மாநிலம் முழுவதிலும் கீழ்கண்ட அலகுகளைப் பெற்றுள்ளது.

1. தீவனக்கலவை நிறுவனம்.—நந்தனம், திருப்பூர் மற்றும் கப்பலூர்.

2. குஞ்சு பொரிப்பகம்.—அரசூர் மற்றும் கப்பலூர்.

3. விற்பனை மையம்.—சென்னை, செங்கல்பட்டு, வேலூர், சேலம், நாமக்கல், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி.

4. கோழி வளர்ப்பு மற்றும் விரிவாக்க மையம்.—செங்கற்பட்டு, சேஷன்சாவடி, பெருந்துறை மற்றும் கொட்டப்பட்டு.

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம், கோழித் தீவனம், வீரிய இன முட்டையிடும் கோழிக் குஞ்சுகள் மற்றும் பிராய்லர் இறைச்சிக் கோழிக் குஞ்சுகள் இளம் பெட்டைக்கோழி வளர்ப்பு மற்றும் முட்டைகள், கோழி இறைச்சி, ஆட்டிறைச்சி, பன்றி இறைச்சி, பன்றி இறைச்சியின் துணைப் பொருட்கள் ஆகியவற்றின் விற்பனையிலும் ஈடுபட்டுள்ளது.

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் நோக்கங்களை ஈடேற்ற 1986–87-ல் இப்போதுள்ள திட்டங்களுக்கு கூடுதலாக கோழிக் குஞ்சு மற்றும் கோழித் தீவனத்தின் உற்பத்தியை விரிவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக தீவன பகுப்பாய்வு சார்ந்த ஆய்வுக்கூடம் ஒன்றை ரூ. 1,96 இலட்சம் செலவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### தமிழ் நாடு இறைச்சிக் கழகம்.

இறைச்சிக்காக கால்நடைகள் சுகாதார முறையில் வெட்டப்படுவதற்கு நவீன இறைச்சிக்கூடம் கட்டப்படுவதற்காக தமிழ்நாடு இறைச்சிக் கழகம் ஏற்படுத்தப்பட்டது. இதன் ஒரு பகுதியாக இந்நிறுவனம் நல்ல சுகாதார நிலையில் இறைச்சியை பாலிதீன் பைகளில் அடைத்து சில்லறை விற்பனை செய்வதற்கு முன் வந்தது. நல்ல தரமான இறைச்சியை தமிழ்நாடு இறைச்சிக் கழகம் அளிப்பதால் இதற்கு நல்ல வரவேற்புள்ளது.



இத்திட்டத்தின் வெற்றியை கணிப்பதற்காக இறைச்சியை சில்லறையில் விற்பனை செய்யும் திட்டத்தை சென்னை நகரில் சோதனையாக நடத்தப்பட்டது. தொடக்கத்தில் இதன் ஆரம்ப செயல்முறைச் செலவுகளினால் சிறிது நட்டம் ஏற்பட்ட போதிலும் இத்திட்டம் வெற்றிகரமாய் நடைபெறுகிறது. தமிழ்நாட்டில் ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்கள் அதிகமாக உள்ளன. இச்சங்கங்களில் வளர்க்கப்படும் ஆடுகளை, சங்க உறுப்பினர்கள் தனியா[illegible]யாபாரிகளுக்கு விற்பனை செய்கின்றனர். இதனால் இச்சங்[illegible]றுப்பினர்களுக்கு நல்ல ஆதாயமான விலை கிடைப்பதில்[illegible] இக்கூட்டுறவு சங்க ஆடுகளை வாங்கி அவற்றை முக்கியமான நகரங்களில் சில்லறை விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்ய தமிழ்நாடு இறைச்சிக் கழகம் உத்தேசித்துள்ளது. பாலிதீன் பைகளில் அடைக்கப்பட்ட இறைச்சியை முக்கியமான நகரங்களில் சில்லறையில் விற்பனை செய்திட அறிமுகப்படுத்தப்படும். இதனால் சரியான விற்பனை ஏற்பாடுகள் அமைவதோடல்லாமல் ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு நல்ல ஆதாயமான விலையும் கிடைக்கும். பொது மக்களுக்கும் [illegible]காதார முறையில் பாலிதீன் பைகளில் அடைக்கப்பட்ட தரமான இறைச்சி கிடைக்க ஏதுவாகும். எனவே, தமிழ்நாடு இறைச்சிக் [illegible]ழகம் இறைச்சி சில்லறை விற்பனைத் திட்டத்தை ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்க ஒத்துழைப்புடன் 1986-87 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களுக்கு விரிவுபடுத்த விரும்பியுள்ளது.

ஆவணக்காப்பக
134468
சென்னை-600 008
V211,31 N86
N86.21.2